IIIT

முஹம்மத் அக்ரம் கான்







# இஸ்லாமிய பொருளியல்

## ஓர் அறிமுகம்

# இஸ்லாமிய பொருளியல்

## ஓர் அறிமுகம்

**முஹம்மத் அக்ரம் கான்**

மொழிபெயர்ப்பு: பின்த் ஹஃபீஸ்

# Islamiya Poruliyal

## Oor Arimugam

***Tamil edition of***
***An Introduction to Islamic Economics***

By
Muhammad Akram Khan

Tamil translation by
Binth Hafeez

English edition
published by
The International Institute of Islamic Thought
P.O. Box 669. Herndon,VA 20172, USA
www.iiit.org
and
Institute of Policy Studies
Islamabad, Pakistan

ISBN 978 955 8398 54 8

2019 reprint
Published by
Fuzin Texts
23/3, Market Road, Dharga Town-12090, Sri Lanka
Layout & Cover design by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama
©Abd-al-Jabbar Muhammad Zaneer (2013)

# பொருளடக்கம்


அணிந்துரை ix

முன்னுரை xv

மொழிபெயர்ப்பாளர் உரை xxiii

நன்றியுரை xvii


---

## அத்தியாயம் ஒன்று -
## இஸ்லாமிய பொருளியல் ஒரு சுருக்கப் பார்வை

---


*1.* பொருளியல் மற்றும் இஸ்லாமிய பொருளியல் *01*

*1.1* பொருளியல் *01*

*1.2* பொருளாதாரக் கொள்கைகள் *02*

*1.3* இஸ்லாமிய பொருளியல் *02*

*2.* உலகம் பற்றிய இஸ்லாமிய பார்வை *06*

*3.* அடிப்படை எடுகோள்கள் *08*

*3.1* மனிதப் பண்பு *08*

*3.2* பொருள் முதல் வாதம் *10*

*3.3* உரித்துடைமை *11*

*3.4* பிரபஞ்ச வாதம் *12*

*4.* பொருளாதார ஒழுங்கமைப்பு *14*

*4.1* பொருளாதார அதிகாரம் *14*

*4.2* நிறைதொழில் மட்டத்தை விட குறைந்த மட்டத்தில் சமநிலை *15*

*4.3* இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கமைப்பு *16*

*5.* பணத்தின் வகிபாகம் *21*

*5.1* வட்டி மற்றும் பொதுப் படுகடன் *21*

*5.2* வட்டி மற்றும் உறுதியற்ற வெளிநாட்டு நாணய பரிமாற்றம் *22*

| | | | |
|---|---|---|---|
| | 5.3 | வட்டி மற்றும் சுற்றாடல் | 22 |
| | 5.4 | வட்டி மற்றும் பணவீக்கம் | 23 |
| | 5.5 | பணத்தின் இஸ்லாமிய எண்ணக்கரு | 24 |
| | 5.6 | இஸ்லாமிய பொருளாதாரத்தில் வங்கித் தொழில் | 26 |
| 6. | நுகர்வோர் நடத்தை | | 28 |
| | 6.1 | நுகர்வுச் சார்பு வாதம் | 28 |
| | 6.2 | எளிய வாழ்க்கை மற்றும் வளங்களின் உற்பத்திப் பெருக்கப் பயன்பாடு | 29 |
| | 6.3 | இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் நுகர்வோர் நடத்தை | 30 |
| | 6.4 | இஸ்லாத்தின் பார்வையில் நுகர்வுப் பொருள் | 31 |
| | 6.5 | வளங்களைப் பாதுகாத்தல் | 32 |
| 7. | வறுமை | | 32 |
| | 7.1 | சமகால பொருளாதார ஒழுங்கு | 32 |
| | 7.2 | சமூக மற்றும் அரசியல் குறைவிருத்தி | 33 |
| | 7.3 | மேலதிக சனத்தொகை | 35 |
| | 7.4 | நகரமயமாக்கம் | 36 |
| | 7.5 | தொழில்நுட்பம் | 36 |
| | 7.6 | சமூகக் காப்பு முறைமை | 37 |
| | 7.7 | இஸ்லாமிய வரைசட்டத்துக்குள் வறுமைக்கெதிரான போராட்டம் | 37 |
| 8. | அரச நிதி முகாமைத்துவம் | | 41 |
| | 8.1 | வரி விதிப்பின் இஸ்லாமிய தத்துவங்கள் | 41 |
| | 8.2 | பற்றாக்குறை நிதியீட்டம் | 42 |
| 9. | அறிவின் பரவல் | | 43 |
| 10. | முடிவான கருத்துக்கள் | | 45 |

## அத்தியாயம் இரண்டு -
## இஸ்லாமிய பொருளியலின் தன்மை


| | | | |
|---|---|---|---|
| *1.* | அண்மைய திடீர் எழுச்சி | | *49* |
| *2.* | இஸ்லாமிய பொருளியலின் வரைவிலக்கணம் | | *56* |
| | *2.1* | ஃபலாஹ் | *57* |
| | *2.2* | வளங்கள் | *73* |
| | *2.3* | ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல் | *75* |
| *3.* | இஸ்லாமிய பொருளியலின் மூலங்கள் | | *81* |
| *4.* | இஸ்லாமிய பொருளியலின் அணுகுமுறை | | *85* |


## அத்தியாயம் மூன்று -
## இஸ்லாமிய பொருளியலின் முறையியல்


| | | | |
|---|---|---|---|
| *1.* | அறிமுகம் | | *92* |
| | *1.1* | ஏன் அனைத்திற்குமே முறையியல் அவசியம்? | *93* |
| | *1.2* | இஸ்லாமிய பொருளியலின் முறையியலை வரை விலக்கணப்படுத்துவதற்கான தேவை | *94* |
| *2.* | இஸ்லாமிய பொருளியலின் முறையியல் | | *99* |
| | *2.1* | பிரதான மைய வெளிப்பாடு | *99* |
| | *2.2* | அறிவின் வகிபாகம் | *103* |
| | *2.3* | தொகுத்தறியும் அல்லது ஆராய்ந்தறியும் நியாயங்கள் | *105* |
| | *2.4* | எடுகோள்கள் மற்றும் முறை | *108* |
| | *2.5* | பிரச்சினைத் தீர்த்தல் | *110* |
| | *2.6* | கோட்பாட்டுச் செயன்முறை | *112* |
| *3.* | இரு முறையியலினதும் ஒப்பீடு | | *114* |

| | | | |
|---|---|---|---|
| *4.* | தொடர்புடைய சில விவகாரங்கள் | | *117* |
| | *4.1* | வஹியின் வகிபாகம் | *117* |
| | *4.2* | ஓர் இலட்சிய இஸ்லாமிய சமூகத்தின் எடுகோள் | *119* |
| | *4.3* | இஸ்லாமிய பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாடு | *121* |
| *5.* | முடிவான சில கருத்துக்கள் | | *126* |


---

## அத்தியாயம் நான்கு -

## நடைமுறையில் இஸ்லாமிய பொருளியல்

---


| | | |
|---|---|---|
| *1.* | இஸ்லாமிய வங்கிகள் | *128* |
| *2.* | ஸகாத் | *132* |
| *3.* | காப்புறுதி | *134* |
| *4.* | வக்ஃப் | *135* |
| *5.* | அல்-ஹிஸ்பாஹ் | *136* |


---

## அத்தியாயம் ஐந்து -

## எதிர்காலத்துக்கான எதிர்ப்பார்ப்பு

---


| | | | |
|---|---|---|---|
| *1.* | அறிமுகம் | | *138* |
| *2.* | சமகால பொருளாதார பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய அணுகுமுறை | | *140* |
| | *2.1* | வேலையின்மை மற்றும் பணவீக்கம் | *140* |
| | *2.2* | பொருளாதார அபிவிருத்தி | *145* |
| | *2.3* | தொழில்நுட்பம் | *158* |
| | *2.4* | பொருளாதார அதிகாரம் | *160* |
| | *2.5* | நுகர்வோர் இறைமை | *165* |
| | *2.6* | பொதுக் கொள்கையின் வகிபாகம் | *168* |
| *3.* | முடிவான கருத்துக்கள் | | *170* |

## அத்தியாயம் ஆறு -
## எதிர்கால ஆய்வின் திசை


| | | |
|---|---|---|
| *1.* | முழுதளாவிய அணுகுமுறை | *174* |
| *2.* | வட்டியில்லா ஓர் உலக பொருளாதார ஒழுங்குக்கான தேடல் | *176* |
| *3.* | தொழில்நுட்பம் | *177* |
| *4.* | பொருளாதார அதிகாரம் | *178* |

| | |
|---|---|
| இணைப்பு - *1* பங்குடைமையாளர்களின் பொறுப்பு | *180* |
| இணைப்பு - *2* கருத்திட்ட மதிப்பீட்டுக்கான கழிவிடல் | *185* |
| இணைப்பு - *3* ஸகாத் விதியாகும் பொருட்களின் நிஸாபும் அது வழங்கப்பட வேண்டிய விகிதமும் | *194* |

- உசாத்துணைகள் *198*

## வாசகர் கடன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ் வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப் படும்போது ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

# அணிந்துரை

இஸ்லாமிய பொருளியல் இன்று ஒரு கற்கைசார் பாடவிதானம் என்ற வகையில் அதன் அபிவிருத்தி ஆரம்ப நிலையிலேயே இருந்தாலும், இஸ்லாத்தின் பொருளியல் போதனைகளுக்கு சார்பானதும் அதன் வேறுபட்ட தோற்றப்பாடுகள் மீது பயனுள்ளதும் பெறுமதியானதுமான ஆக்கங்கள் தொடர்ந்து எழுதப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. மேலும், வளர்ந்து வரும் இக்கற்கை நெறியானது ஒரு அறிவுசார் மரபிலிருந்தே உருவானதாகும்.

எல்லாக் காலங்களிலும் முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாத்தின் பொருளியல் போதனைகளை எழுதி வந்துள்ளார்கள். எவ்வாறிருப்பினும், இந்த நூற்றாண்டில் இது குறிப்பிடத்தக்களவில் விருத்தியடைகின்றது. சமய சிந்தனையாளர்கள், சட்ட வல்லுனர்கள் (ஃபுகஹாக்கள்) மற்றும் சீர்த்திருத்தவாதிகள் என்போர் பொருளாதார போதனைகள் பற்றி தாராளமாக எழுதியுள்ளதோடு இஸ்லாமிய மூலாதாரங்களான அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாஹ், ஃபிக்ஹ், சமூக சிந்தனைகள் மற்றும் வரலாற்று அனுபவங்கள் என்பவற்றிலிருந்து வழிகாட்டல்களை அடையாளப்படுத்த முயற்

சித்துள்ளனர். வட்டியின் மீதான தடை, ஸகாத் ஏற்படுத்தும் சமூக நீதி, சொத்து மற்றும் நிறுவன எண்ணக்கரு மற்றும் அரசின் வகிபாகம் போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்கள், சமூகத்தில் ஏற்படுத்தும் பயங்கரமான விளைவுகளை இல்லாமலாக்குகின்றன. இதன் பிரதிபலிப்பு மற்றும் கலந்துரையாடலானது நுண்பாக மட்டத்திலிருந்து உலக விவகாரங்கள் வரை தொடர்கின்றது. முஸ்லிம் பொருளியலாளர்கள் அதிக புலமைசார் பின்னணியை உள்ளடக்கியே 'இஸ்லாமிய பொருளியல்' என்ற கற்கைநெறியினை விருத்தி செய்ய முனைகின்றனர்.

அதேநேரம், இஸ்லாமிய பொருளியல் தனியே கற்கப்பட முடியாது என்பதும் இன்று அதிகம் உணரப்பட்டு வருகின்றது. அது ஒட்டுமொத்த சமூக முறைமையின் உள்ளடக்கத்தில் மட்டுமே மலர முடியும். சமகால முஸ்லிம் பொருளியலாளர்கள் ஒரு புறம் இஸ்லாமிய இலக்குகள் மற்றும் இலட்சியங்களை விளங்கிக் கொள்வதற்கு இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களுக்குள் ஆழமாக சென்றனர். மறுபுறம், முஸ்லிம் சமூகம் கடந்து வந்த பிரதான வரலாற்றுப் பரம்பரையிலுள்ள அடையாளங்களின் ஒரு தொகுதி காலனித்துவ வாதிகளால் மாசுபடுத்தப்பட்டுள்ளது. இதன்போது வெளிநாட்டுப் பண்புகள், சட்டங்கள், நிறுவனங்கள் மீது திரிபுபடுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன. அத்தகைய நிலை மாற்றத்தின் பிரச்சினைகள் ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர்களின் கவனத்தை மென்மேலும் ஈர்க்க ஆரம்பித்தன.

கிறிஸ்டோவம் போர்க் (Cristovam Buarque) என்பவர் நன்கறியப்பட்ட பிரேசில் பொருளியலாளர் மற்றும் பிரேசிலியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் முதல்வராவார். இவரது 'பொருளியலின் ஒழுக்கவியலும் முன்னேற்றத்தின் ஒழுங்கீனமும்' என்ற அண்மைய ஆக்கம் பொருளியலின் இந்த புதிய அணுகு முறைக்கான ஒரு அமைதியான கோரிக்கையாக உள்ளது. இது மார்க் ரிட் (Mark Ridd) என்பவரால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது (லண்டன், ஸெட்புக்ஸ், 1993). பொருளியலின் தோல்வியானது சமூக மற்றும் ஒழுக்க விழுமியங்களை புறக்கணிப்பதிலேயே தங்கியுள்ளது.

*'சமூக குறிக்கோள்கள்' என்பது 'ஒரு நாகரிகத்தின் நோக்கம் என்பதை விட தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தொடர்ச்சியான ஒன்றாக பார்க்கப்படுகின்றது. இடைப்பட்ட காலத்தில் ஒழுக்க விழுமியங்கள் விலக்கப்பட்டிருந்தன' என அவர் உறுதியாகக் கூறு கிறார். இங்கு அணுகுமுறையின் ஓர் அடிப்படையான மாற்றம் மற்றும் முன்னுரிமைகளின் ஒட்டுமொத்த மீளொழுங்கு என்ப னவே தேவையாக உள்ளவையாகும். அவர் பின்வரும் முடிவுக்கு வருகிறார்:*

> பெரும் அழிவு நடைபெறும் போது விழிப்பாக இருப்ப தற்குத் தேவைப்படும் ஒழுக்கங்கள் விடயத்தில் பௌதீகம் பொய்த்து விடும் போது பொருளியல் ஒழுக்கங்களை மீளக் கண்டெடுக்க வேண்டிய தேவையுள்ளது. இன்றுள்ள பிரச்சி னைகள், கருத்திட்ட மதிப்பீட்டில் சாதனங்கள் மற்றும் மேலெ ழும் புதிய செலவுகளை வெறுமனே மீள்மதிப்பீடு செய்வதால் மட்டும் இல்லா மலாகிவிடாது. மாறாக, கடந்த இரு நூற்றாண்டு களின் குறித்த எல்லைக்குள்ளேயே செயற்படும் பொருளிய லாளர்களின் சமூக செயன்முறையினுடைய பிரதான குறிக் கோள்கள் மாற்றமடை வதே அவசியமாகும்.
>
> முன்னேற்றத்தின் மரபுசார் கருத்து அழிக்கப்படாமல், வளர்ந்து வரும் வறுமை, வருமான சமமின்மை மற்றும் சூழற் சமமின் மைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது சாத்தியமில்லை. பொருளாதார அபிவிருத்தியானது மூன்று தூண்களின் மீது உருவாக்கப்பட்ட ஒரு புதிய கோட்பாட்டு அணுகுமுறைக்கே கேள்வி ஏற்படுத்துகின்றது: நாகரிகத்தின் முக்கிய குறிக்கோள் களை மீள்வரையறுப்பதற்கான ஒழுக்கங்கள்; கற்றலின் களம், குறிக்கோள் மற்றும் சூழல் வளங்களை பயன்படுத்த முடியு மான அளவு பற்றிய ஒரு புதிய வரைவிலக்கணம்; பொருளியல் ஒரு பாட விதானமாவதற்கான ஒரு புதிய காரண-காரிய அடிப் படையிலான வரைவிலக்கணம் என்பனவே அவையாகும்.

இவ்வணுகுமுறையின் பெறுபேறானது 'ஒழுக்க விழுமியங்க ளால் உருவாக்கப்பட்ட சமூக குறிக்கோள்களுக்கு ஒரு பொருளாதார காரண-காரிய அடிப்படையிலான துணையுடன் தான் தொழில் நுட்பத் தெரிவுகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். பணிக்குழு ஒழுங்கமைப்பு, தொழில்நுட்பப் பண்புகள், பொருளாதார காரண-காரிய அடிப்படை, சமூக குறிக்கோள்கள் மற்றும் ஒழுக்கப் பண்புகள் என்பன இவ்வாறு மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்' எனக் கூறுகின்றது.

உலக பொருளாதாரத்தின் ஆரம்ப மட்டத்துக்கு வருவோ மானால் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப மாற்றங் களில் நீண்ட அடிகளை எடுத்து வைத்த முதலாளித்துவ பொரு ளாதாரங்களில் ஒரு தீவிர நெருக்கடியால் பெரும் துன்பம் ஏற் பட்ட போதும் சமவுடமை வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பரி சோதனை துரதிஷ்டவசமாக தோல்வியடைந்ததென்பதை குறிப் பிட்டாக வேண்டும். நவீன பொருளாதாரம் சமூக நீதி, நிலைத்து நிற்கும் அபிவிருத்தி மற்றும் சமூக ஒருமைப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது.

மேலும், தேசங்களுக்குள்ளே காணப்படுவது போலவே தேசங் களுக்கிடையேயும் நீண்டகால மந்தம், தொடர்ந்திருக்கும் வேலை யின்மை, தேக்கவீக்கம், கட்டுப்படுத்தப்படாத பண விரிவாக்கம், மலையளவு உயர்ந்து செல்லும் உள்நாட்டு-வெளிநாட்டு படுகடன் கள் மற்றும் ஏக காலத்தில் செழிப்பும் மோசமான வறுமையும் காணப்படல் என்பவற்றை இந்த நவீன பொருளா தாரம் எதிர் கொண்டு வருகின்றது. ஒழுக்க விழுமியங்கள் மற்றும் பொருளா தார நீதி, பொருளாதார நடத்தை என்பவற்றுக்கிடையிலான தொடர்பானது தனிநபர் போலவே அரசாங்கம் என்ற இரு மட்டங்களிலுமே மதச் சார்பற்ற முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இல்லாமலாக்கப்பட்டது. எனவே, பொருளியலாளர்கள் மட்டு மல்லாது சாதாரண மனிதர்களும் கூட இடைநிரப்பப்பட வேண் டிய ஒழுக்கத் தொடர்பை மீளக் கண்டெடுக்க முயற்சிக்கின்றனர்.

‘இஸ்லாமிய பொருளியல்’ ஒட்டுமொத்த பொருளாதாரத் துக்குமான பிரச்சினை மற்றும் முறையியலை ஒரு புதிய உருவில் வார்த்து, தொடர்ந்திருக்கும் பழைய பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளைக் காண முஸ்லிம் பொருளியலாளர்களால் மேற்கொள் ளப்பட வேண்டிய ஒரு முறைசார் முயற்சியை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. முஸ்லிம் பொருளியலாளர்கள் அதிக தூரம் போக வேண்டியிருந்தாலும் இத்திசையில் அவர்கள் தமது பயணத்தை ஆரம்பித்துவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாரம்பம் எதிர்காலத்துக்கான ஒரு பெரும் வாக்குறுதியைக் கொண்டுள்ளது எனலாம்.

சகோதரர் முஹம்மத் அக்ரம் கான் இஸ்லாமிய பொருளியலில் அதிக ஆர்வத்தைக் காட்டிய அறிஞர்களில் ஒருவராவார். அவர் ஏற்கனவே இஸ்லாமிய பொருளியல் தொடர்பாக அதிக நூற்களை வழங்கியவராவார். அவர் கணிசமான விடயங்களைப் பற்றி பரந்தளவில் எழுதியுள்ளார். குறிப்பாக, வங்கியியல், கணக்காய்வு செயலாற்றம் மற்றும் கிராமிய நிதி தொடர்பாக எழுதியுள்ளார். அவரது தற்போதைய கற்கையானது அடிப்படை பொருளாதார எண்ணக்கருக்கள் முதல் பல்வேறுபட்ட கொள்கை விடயங்கள் வரை இஸ்லாத்தின் அகிலத்துவப் பார்வையில் விளக்குவதாக இருக்கின்றது.

பல்வேறுபட்ட பொருளாதார எண்ணக்கருக்கள், விவகாரங்கள் மற்றும் பிரச்சினைகள் மீதான இஸ்லாத்தின் பார்வையை விருத்தி செய்வதற்கு அது ஆரம்ப மூலாதாரங்கள் மீது கொண்டிருக்கும் நம்பகத் தன்மை, எளிமைத் தன்மை, அதன் திசை மற்றும் சிறந்த அணுகுமுறை என்பவற்றிலேயே புத்தகத்தின் பெறுமதியானது தங்கியுள்ளது. ‘இஸ்லாமிய பொருளியலுக்கு ஓர் அறிமுகம்’ நூல் இது பற்றி அறியாத வாசகர்கள் குறிப்பாக, பொருளியல் மாண வர்களுக்குப் பெரும் துணையாக அமையும் என உறுதியாக நம்பு கிறேன். இது இஸ்லாமிய பொருளியலின் தற்போதைய நிலையை மெருகூட்டுவற்குத் தேவையான அநேக விடயங்களுடன் வாசகர் தனது பரிச்சயத்தை விருத்தி செய்துகொள்ள உதவி புரியும்.

சுருக்கமான ஆனால், பயனுள்ள இப்புத்தகத்தை வரலாற்றில் ஒரு புதிய கட்டமாக இஸ்லாமிய சிந்தனைகளின் சர்வதேச நிறுவனம், வொஷிங்டன் மற்றும் கொள்கை கற்கைகளின் நிறுவனம், இஸ்லாமாபாத் இணைந்து வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இஸ்லாமாபாத், குர்ஷித் அஹ்மத்
அக்டோபர் 1994

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் அடைவுகளோ ஏராளம். எவ்வா றெனினும், இந்த நூற்றாண்டின் பொருள்சார் முன்னேற்றமானது மனித கலாசாரத்தின் அடிப்படை ஒழுக்க விழுமியங்கள் மற்றும் மனிதப் பண்புகளை அழிப்பதில் விடாப்பிடியாக உள்ளது என் பதை உலகம் எமது கண்களிலிருந்து மறைத்துவிட்டது. முன் னெப்போது மில்லாத பொருள்சார் சுபீட்சமானது தொழில்நுட்ப அபிவிருத்திகளின் ஊடாக ஒரு சாதாரண நபரும் கூட சென்ற நூற்றாண்டுகளில் உயர் குடிகள் மற்றும் மன்னர்களது தனிச் சிறப்புமிக்க வாழ்க்கை முறையை தாமும் பெற்றுக்கொள்ளச் செய்துள்ளது. இது இங்கு பணத்தின் உதவியுடன் மட்டுமே சாத் தியமாகின்றது. அதாவது, இது நிதியை விஞ்ஞான ஆய்வு மற்றும் பெரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு கிடைக்கச் செய்துள் ளது. ஆனால், துரதிஷ்டவசமாக பொருள் உடைமையை கண்டறி வதனை அதிகரிப்பதற்கான முழு முயற்சியானது அதன் பிரதான அம்சத்தை தவறவிட்டுள்ளது. அதுதான் - மனிதன்!

அனைத்து நூற்றாண்டுகளிலும் உலகின் அனைத்து தேசங்களி னதும் திரட்டப்பட்ட முயற்சியைப் பார்க்கும் போது, அது மனித இனத்தின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கான ஒரு பெரும்

அபிவிருத்திப் பொறியில் வெறுமனே ஒரு சிறு பகுதியாக மட்டுமே பங்காற்றியுள்ளது. ஏனெனில், இங்கு அனைத்து அபிவிருத்தி முயற்சிகளினதும் கிரீடமாக (பிரதான நோக்கமாக) மனிதன் கருதப்படவில்லை. உயர்ந்தபட்சமாக அவன் 'மனித மூலதனமாக' மட்டுமே கருதப்பட்டுள்ளான். இதன் ஒரு விளை வாக, ஒரு சிலர் மனிதனின் கல்வி மற்றும் அபிவிருத்திக்கான முயற்சிகளை மேற்கொண்டதோடு, அவனது கலாசார முன் னேற்றங்களை வெளிக்கொணர்வதற்கும் அவனில் தோழமை உணர்வை ஏற்படுத்தவும் முயற்சித்தனர். மனித இன சமத்துவத் துக்கான சேவைகள் காணப்பட்டாலும் வறிய மற்றும் செல்வந்த நாடுகளுக்கிடையில் மற்றும் கிராம, நகர பிரதேசங்களுக்கிடை யில் குடிக்கத் தகுந்த நீர், உடல் நல மேம்பாடு, மருத்துவ வசதி, எரிபொருள் வாயு, மின்சாரம் மற்றும் தொலைபேசி போன்ற அடிப்படைச் சேவைகளில் காணப்படும் கட்டுப்பாடுகளால் பெரும் ஏற்றத்தாழ்வுகள் நிலவவே செய்கின்றன. இதற்குக் கார ணம் அவை வெறுமனே உதட்டளவினவாக இருப்பதேயாகும்.

மேலும், வளங்களின் ஒதுக்கீடானது பெரும்பாலும் பொருளா தார மற்றும் நிதியியல் தகுதிவிதிகளால் வழிநடாத்தப்படுகின்ற தேயன்றி, மனித தேவைகளால் அல்ல. அதேபோல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் வியாபார நிறுவனங்களுக்குரிய சாத்தியமான மீளச் செலுத்தும் காலம் அல்லது அரசுக்கான பொருளாதார அதிகாரம் என்பவற்றால் தான் வழிநடாத்தப்படுகின்றன. அடுத்து, மூலதனம். அது எங்கு காணப்பட்டாலும் அதற்கு அனைத்து விதமான பாதுகாப்பை வழங்கக்கூடியதும் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட வருவாயை பெற்றுத் தருகின்றதமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மட்டுமே அது பாய்ச்சப் படும். எனவே, இங்கு நிதியியல் முக்கியத்துவங்களே மீயுயர் ஆட்சியைக் கொண்டுள்ளன. அபிவிருத்தி செய்யப்படாத புவி, சமுத்திரங்களின் வீச்செல்லை மற்றும் அபிவிருத்தியின் எல்லை யற்ற சாத்தியங்கள் என்பன இப்புவியிலுள்ள அனைவரையும் வளம் பெறச் செய்ய போதுமானவை. வழங்கப்படும் நிதியானது இச்சாத்தியங்களை கண்டறியச் செய்ய வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக நிதியானது ஒரு குறித்த வட்டி வீதத்தில் மட்டுமே கிடைக்கக்கூடியதாகவுள்ளது. மேலும், கருத் திட்டங்களாலும் வட்டி வீதத்தை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. மில்லியன் கணக்கான மனிதர்கள் வேலையில்லாதவர்களாக இருக்கக் காரணம் பணம் கொடுப்பவர்களது வட்டி மீதான வற் புறுத்தலாகும். மனித அபிவிருத்தி, கல்வி, பயிற்சி, விஞ்ஞான ஆய்வு மற்றும் உட்கட்டமைப்பு கட்டுமானம் என்ற அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் கோருகின்ற நிதியானது ஒரு செலவைக் கொண்டு மட்டுமே கிடைக்கக்கூடியதாகவுள்ள நிலைமையானது ஒரு பெரும் அநீதியாகும்.

இருபதாம் நூற்றாண்டு எமக்குக் கற்றுத்தரும் பாடம் யாதெனில், நிறைதொழில் மட்டமானது 'முதலீட்டாளர் வகுப்பினரின் கருணைக் கொலை' அடையப்படும் வரை சாத்தியமில்லை என்பதாகும். இதனால், 21ம் நூற்றாண்டின் சவாலானது, வட்டி யற்ற அடிப்படையில் நிதியை வழங்குவதற்கான ஒரு பொறி முறையை கண்டறிவதிலே தான் தங்கியுள்ளது. மனிதன் அத்த கைய ஒரு பொறிமுறையை கண்டறிய முடியுமானால், அவனுக்கு பணத்தின் பிணைப்பிலிருந்து தன்னை காத்துக்கொள்ள முடியும் இது மனித இனத்துக்கு மேலாக பணம் இருப்பதை விட பணத்துக்கு மேலாக மனித மேலாண்மை இருக்கும் ஒரு யுகத்திலேயே காணப்படும்.

வேறுபட்ட சிந்தனையையுடைய சிந்தனையாளர்களாலும் அனைத்து மதங்களாலும் எல்லாக் காலங்களிலுமே நிதியின் மீதான வட்டி வெளிப்படையாகக் குற்றம் சாட்டப்பட்டாலும், வட்டியில்லா பொறிமுறையில் நிதியை நிறுவன ரீதியாக வழங்கு வதற்காக நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஒரு பொறிமுறையை கண்டறிவதற்கு மிகச் சொற்ப அளவே ஆழமான முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, 21 ஆம் நூற்றாண்டு, மனிதனை நிதிப் பிணைப்புக்களிலிருந்து விடுவிப்பதற்கான சவாலை கட் டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்தகைய பேராவலுக்காக வேண்டி, பலவழிகளில் முன்னேற்றப் படிகள் அமைக்கப்படுகின்றன. கடன் பொறி, தேக்கவீக்கம், வேலையின்மை மற்றும் வறிய மற்றும் செல்வந்த நாடுகளுக்கிடையில் வளர்ந்துவரும் ஏற்றத்தாழ்வுகள் என்பன 20 ஆம் நூற்றாண்டில் பொருளாதார முன்னணி மீது அழுத்தங்களைக் கொண்டு வரும். மிகக் கொடூரமான வட்டி வீதத்தின் விழிப்பூட்டல் அதிகரிக்கின்றதோடு, வட்டியில்லா நிதிக்கான தேவையும் உணரப்படும். அரசியல் முன்னணி மீது கம்யூனிச நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட நாடகத் தனமான மாற்றங்கள் மற்றும் உள்ளகக் கருத்து முரண்பாடுகள் என்பவற்றின் நீண்டகால அச்சமானது முதலாளித்துவ உலகில் சில பெரிதுபடுத்தல்களுக்கு இட்டுச்செல்கின்றதோடு, இது ஒரு சுரண்டலற்ற வரைசட்டத்தை வெளிப்படுத்துவதற்கும் எம்மை கட்டாயப்படுத்துகின்றது. இதனால் 21 ஆம் நூற்றாண்டு மனிதனுக்கான எதிர்ப்பார்ப்பை கொண்ட ஒரு நூற்றாண்டாக உருவாகும்.

மனித அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதில் வேறுபட்ட பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் மற்றும் ஐ.நா.சபையில் ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றது. ஆனால், இந்நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமான ஒரு விடயத்தை தவற விட்டுவிட்டன. மனிதன் நிதிக்குத் துணையாக தொடர்ந்திருக்க வேண்டுமானால் ஒருபோதும் அபிவிருத்தியடைய முடியாது. அவன் அதனுடைய இறுக்கமான பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும். வட்டியில்லா நிதியின் கிடைப்பனவானது மனிதன் நிலத்தின் பல பகுதிகளை பயன்படுத்த முடியுமானதாக்குகின்றது.

இதனால், அது வேலையின்மை மற்றும் கீழுழைப்பை ஒரு பரப்பு வரை அழிக்க முடிகின்றது. அது பாதீட்டுப் பற்றாக் குறையை இல்லாமல் செய்ய முடிவதோடு, பணவீக்கத்தை நிறுத்துவதற்கு உதவியாகவும் உள்ளது. சர்வதேச முன்னணி மீது வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்கு வளங்களின் நிகழ்கால வெளிப்பாய்ச்சல் வட்டியின் தடையமைப்பினால் நிறுத்தப்படும். இதன் போது வறிய நாடுகள் பணம் கொடுனர்களின் முன்னேற்

றத்துக்காகவன்றி, தமது சொந்த முன்னேற்றத்துக்காகவே கடுமை யாக உழைப்பதாக இருக்கும். இது 'கெயின்ஸ்' (Keynes) இன் வார்த்தைகளில் சொல்வதானால் மனித இனத்துக்கான ஒரு 'கடலளவு மாற்றமாக' இருக்கும்.

நிதியை செலவில்லாமல் கிடைக்கக் கூடியதாக ஆக்குவதற்கு ஒரு நடைமுறை ரீதியான பொறிமுறையை விருத்தி செய்வதற் கான முடிவுடனேயே நாம் 21 ஆம் நூற்றாண்டுக்குள் நுழைய வேண்டும். நிதி போதுமான அளவில் கிடைக்கக் கூடியதாக இல்லாவிடின், உலக சுபீட்சம், சமாதானம் என்பவற்றை முன் னேற்றுவதற்கான ஏனைய எல்லா உபாயங்களும் தோல்வியடை யலாம். இதனால் நாம் முதலில், வெல்ல முடியாத அனைத்துத் தடைகளையும் வெற்றிகொள்ள முயற்சிக்க வேண்டும். இது அனைவரையும் ஒரு சுபீட்சமிக்க யுகத்துக்கு இட்டுச் செல்லும்.

இக்கருத்து ஒரு கற்பனாவாதமாகத் தோன்றலாம். ஆனால், வரலாறானது எமக்கு எதிர்ப்பார்ப்பு மற்றும் துணிவைத் தருகின் றது. ஒரு காலத்தில் அடிமைத் தனத்தை நீக்குதல், வளர்ந்தோருக் கான வாக்குரிமையை அறிமுகம் செய்தல், அனைவருக்குமான கல்வி, ஆண்-பெண் இருவரிடையேயான சமத்துவம் போன்றன கற்பனையாளர்களின் பரந்த கனவுகளாக இருந்தன. சில தசாப் தங்களுக்கு முன் சில நாடுகள் தனியே விடப்பட்டு இவ்வனைத்து கருத்துக்களும் நடைமுறைக்குப் பொருத்தமற்றதாக கருத்திலெடுக் கப்பட்டன. அதேபோல், இன்று வட்டியற்ற ஓர் உலகம் பற்றிய பார்வையானது நடைமுறைக்கு பொருந்தாததாக கருதப்படுகின் றது. மனிதனின் விருப்பம் மற்றும் திறமை எவ்வாறிருப்பினும், இக்கனவும் உண்மையாக முடியும். இது 21ம் நூற்றாண்டில் மதிப்பு மிக்க வாழ்க்கையை உருவாக்கும். இது ஏறத்தாழ புவியிலுள்ள அனைவரையும் சுவர்க்க வாழ்வுக்கு இட்டுச் செல்லும்.

இப்புத்தகம் ஓர் இஸ்லாமிய பொருளாதாரத்தின் எல்லை வரை எம்மைக் கொண்டு செல்ல முனைகின்றது. அதன் முக்கிய தொனிப் பொருளானது இன்றைய உலகம் பின்பழம்

பொருளியலின் பயனையும் தாண்டி வாழும் நாகரிகமாக உள்ளது என்பதாகும். ஏனெனில், அதன் அணுகுமுறை குறுகியது; அதன் எடுகோள்கள் யதார்த்தத்துக்கு பொருத்தமற்றன. மேலும், அதன் உபாயங்கள் மனிதத் தன்மையற்றவை. அது மனித இனத்தை பிரச்சினைகளின் படுகுழிக்குள் இறக்கிவிடும். மனிதன், பின்பழம் பொருளியலின் அடிப்படை வரை சட்டம் மேம்பாடுடையதல்ல எனக் கருதுவானானால் இவ்வுலகில் மனிதனின் எதிர்காலம் அழகானதாக பளிச்சிடும்.

இந்த பின்னணியிலேயே இஸ்லாமிய பொருளியல், மக்க ளுக்கு எதிர்ப்பார்ப்பின் சுடரினை வழங்குகின்றது. இப்புத்தகம் வாசகர்களை இஸ்லாமிய பொருளியலின் தத்துவங்களில் ஒரு குறிக்கோளை வார்ப்புச் செய்யவும் அவர்களது இயலுமையை புரிந்து கொள்ளவுமே அழைக்கின்றது. இப்புத்தகம் மேற்கில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்சார் பொருளியலாளர்கள் மற்றும் பொதுவான வாசகர்கள் என இருவரையும் விழித்துப் பேசுகின்றது. எவ்வாறெனினும், இது இஸ்லாமிய பொருளியல் விடயத்துக்கு மிக விவரமாக அன்றி, வெளிப்படையான அறிமுகத்தையே வழங்க முனைகின்றது.

அத்தியாயம் ஒன்று ஒரு பரந்த சுருக்கப் பார்வையை வழங்கு கின்றது. அது முழு புத்தகத்தையும் வாசிக்க நேரமற்றோருக்கு சுருக்கமாக விளக்கத்தை வழங்குகின்றது. அது விடயத்தின் முக்கிய தலைப்புக்களை விரைவாகப் பார்த்துச் செல்கின்றது.

அத்தியாயம் இரண்டு மற்றும் மூன்று என்பன இஸ்லாமிய பொருளியலின் அடிப்படை கட்டளைகளை அதிகார பூர்வமாக்கு வதிற்குரிய விளக்கங்களை வழங்கியுள்ளன. அவை விடயத்தை வரைவிலக்கணப்படுத்துவதோடு, அதன் பரப்பு மற்றும் முறை யியலையும் விளக்குகின்றன. மேலும், பல்கலைக்கழக மட்டத் தில் இஸ்லாமிய பொருளியல் மாணவர்கள் மற்றும் தொழில்சார் பொருளியலாளர்களை கருத்தில் கொள்கின்றன.

அத்தியாயம் நான்கு இன்றைய உலகில் இஸ்லாமிய பொரு ளியலின் நடைமுறை பற்றிய ஒரு சுருக்கத் தொகுப்பை வழங்கு

கின்றது. முஸ்லிம் நாடுகளில் இஸ்லாமிய பொருளியலின் நடைமுறை போதியதாக இல்லாமல் இருந்தபோதிலும், இது இஸ்லாமிய பொருளியலின் அடிப்படை தத்துவங்களை அங்கு நடைமுறைப்படுத்துவதற்கான பேராவலைக் காட்டுகின்றது.

கடைசி இரு அத்தியாயங்கள் இஸ்லாமிய பொருளியலே எதிர்காலப் பொருளியலாக இருக்கும் என்பதோடு, பின்பழம் பொருளியலும் கூட அதன் தத்துவங்கள் மற்றும் முறையியலிலிருந்து நலன் பெற முடியும் என வாதிடுகின்றது.

இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள இரு பின்னிணைப்புகளும் முக்கிய பகுதிகளைக் கொண்டிருக்கின்றன. முதலாவது, பின்னிணைப்பானது ஒரு இணைந்த பங்குக் கம்பனியில் பங்குடைமையாளர்களின் பொறுப்புப் பற்றி கலந்துரையாடுகின்றது. இரண்டாவது பின்னிணைப்பானது, கருத்திட்ட மதிப்பீட்டுக்கான கழிவிடலுடன் தொடர்புபட்டது. இஸ்லாத்தை முதலாளித்துவத்துடன் ஒப்பிட்டு, இஸ்லாம் இவ்விவகாரங்களில் தனிப்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என நாம் தெளிவாக விளங்கிக் கொள்கின்றோம்; நம்புகின்றோம். ஆனால், புத்தகத்தின் முக்கிய பகுதியில் அக்கலந்துரையாடலை கொடுக்க முடியாததற்குக் காரணம் புத்தகத்தின் தொடர்ச்சி மற்றும் எஞ்சிய பகுதிகளுக்கு அது இடைஞ்சலாக இருக்கும் என்பதாகும். இதனாலேயே, நாம் அதனை பின்னிணைப்புக்குள் சேர்த்துள்ளோம்.

நாம் இஸ்லாமிய பொருளியல் பற்றிய அண்மைய ஆக்கங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உசாத்துணைகளை விடயம் தொடர்பில் மேலதிக விளக்கத்தைத் தேடுவதற்காக ஆர்வமுள்ள வாசகர்களுக்கு உதவியாகச் சேர்த்துள்ளோம். இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் நடத்தை நியமங்களுடன் ஒரு வட்டியில்லா உலக பொருளாதாரத்தை நிலைநாட்டுவதனை நோக்கிய மேலதிக சிந்தனையை இப்புத்தகம் தூண்டும் என நம்புகின்றோம். மதத்துக்கெதிரான நவீன உலகின் தப்பெண்ணங்கள் சமகால மனிதனின் குறிக்கோள் மற்றும் பகுத்தறிவை குறைத்து விடாது.

இன்றைய நூற்றாண்டிற்கு அண்மிய காலத்தில், நம்பிக்கையிழக்கப்பட்ட ஒரு அரசில் வாழும் மக்கள் இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கின் தத்துவங்களிலேயே தமது எதிர்ப்பார்ப்பின் சுடரினை காண்பர் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

***பெப்வரவரி 28, 1993*** ***முஹம்மத் அக்ரம் கான்***

# மொழிபெயர்ப்பாளர் உரை

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

*இன்றைய உலகம் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றமை நாமனைவரும் அறிந்ததே. உலகம் முதலாளித்துவ மற்றும் சோஷலிச சிந்தனைகளையே இதுவரை பூஜித்து வருகின்றது. அதன் குழப்பமான கலவைகளையும் நடைமுறைப்படுத்திப் பார்க்கின்றது. ஆனால், இவற்றால் உலகம் நிறைவான ஒரு பொருளாதார அடைவை அடைந்து கொள்ள முடியவில்லை.*

*உலகம் இன்றைய பொருளியலின் தந்தையாக 'அடம் ஸ்மித்'தையே காண்கின்றது. அவர் கி.பி.1776 இல் எழுதிய 'தேசங்களின் செல்வம்' நூலே பொருளியலை தனி இயலாக மாற்றிய நூலாகக் கருதப்படுகின்றது. ஆனால், 'அல்-குர்ஆனே' பொருளாதாரம் பற்றி பேசும் உயர்ந்ததோர் நூலாகும். வாழ்ககைக்கான சகல வழிகாட்டல்களையும் உள்ளடக்கிய இதில் பொருளாதாரம் பற்றியும் பரந்தளவில் பேசப்பட்டுள்ளது. அது மனிதர்களாலன்றி முக்காலத்தையும் அறிந்தவல்ல 'அல்லாஹ்'வால் முழு உலகுக்கும் யாராலும் மாற்றப்படவோ, மாற்றுக் கருத்து தெரிவிக்கவோ*

முடியாதவாறு அருளப்பட்டது. ஆனால், அடம் ஸ்மித்தின் 'தேசங்களின் செல்வம்' நூல் உட்பட பொருளியல் அறிஞர்களால் எழுதப்பட்ட நூற்களிலுள்ள குறைபாடுகள் பின்னால் வந்த அறி ஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டு மாற்றுக் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன. தெய்வீக மூலங்களைப் புறக்கணித்து குறுகிய மனித அறிவுக்கு எட்டியவற்றைக் கொண்டு மட்டுமே இவை எழு தப்பட்டிருப்பதாலேயே உலகம் இன்று வரை பொருளாதார ரீதி யாக 'உண்மையான' சுபீட்சத்தை கண்டுகொள்ள முடியாதுள்ளது.

அல்-குர்ஆனிற்கு முன்னரே ஈஸா (அலை) அவர்களுக்கு அரு ளப்பட்ட இன்ஜீல் வேதத்திலேயே வட்டியின் தடை காணப்படு கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், அல்-குர்ஆனுக்கு அடுத்த மூலாதாரமான நபியவர்களின் (ஸல்) சொல், செயல் மற்றும் அங்கீகாரத்தை உள்ளடக்கிய 'ஹதீஸ்'களிலும் பொருளா தார விடயங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன; நடைமுறைப் படுத்திக் காட்டப்பட்டுள்ளன. இவ்விரண்டு மூலாதாரங்களிலும் அடிப்படையான பொருளாதார சட்டதிட்டங்கள் தெளிவாகவே விளக்கப்பட்டுள்ளன. அதனோடு நேரடியாக தொடர்புபடாதவை சட்ட வல்லுனர்களால் (ஃபுகஹாக்கள்) அவற்றைக் கொண்டு இஜ்திஹாத் அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன. மேலும், பொரு ளியல் தொடர்பாக முஸ்லிம் முன்னோடிகள் பலரும் பங்காற்றி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவை யாவும் உலகம் பொருளாதார ரீதியாக 'உண்மையான' சுபீட்சைத்தை அடையச் செய்ய போதுமானவை; அதற்கே இவை வழிகாட்டிச் செல் கின்றன.

எனினும், அநேகர் இவ்வுண்மைகளை அறிவதில்லை. விஞ் ஞானிகள் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்காக அல்-குர்ஆனை ஆராய்வது போல் பொருளியலாளர்கள் இதனை ஆராய்வதில்லை; அறிவதுமில்லை. இன்றைய உலகம் எதிர்நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு இஸ்லாம் கூறும் பொருளாதார முறையே ஒரே தீர்வாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இஸ்லாம் எல்லாக் கால, சூழ்நிலைக்கும் பொருத்தமான மார்க்க மாகும்.

வர்த்தக சகடோட்டத்தினால் உலகம் காலத்துக்குக் காலம் எதிர்நோக்கும் மந்த நிலைக்குக் காரணம் மேற்கின் வட்டியின் வழியிலமைந்த பிழையான பொருளாதாரக் கொள்கைகளேயாகும். அதேபோல், சமூக நீதி என்பது சரியான முறையில் அடையத் தக்க விதத்தில் அதன் நடைமுறைகள் இல்லை. எனினும், வட்டியின் தடையைப் போலவே கட்டாயப்படுத்தப்பட்ட 'ஸகாத்' சமூக நீதிக்கான ஒரு சிறந்த கருவியாகும். அனைத்துக்கும் மேலாக ஈருலகிலும் வெற்றி பெறுவதற்காக வேண்டி, தான் ஈடுபடும் பொருளாதார நடத்தை உட்பட அனைத்துக்கும் பொறுப்புக் கூற மனிதனை கடமைப்படுத்துவதானது மேற்கின் பொருளியலில் எங்குமே காண முடியாத ஒன்றாகும்.

பொருளியலில் எடுகொள்களே தூண்களாகும். உலகப் பொருளாதாரங்கள் பின்பற்றும் பொருளியல் பெரும்பாலும் ஆய்வின் இலகு கருதி எடுக்கும் எடுகோள்கள் நடைமுறை சாத்திய மற்றவையாகவேயுள்ளன; உண்மைக்குப் புறம்பானவையாகவுமுள்ளன. எனவே, தூண்கள் பலமில்லாத ஒரு பொருளாதார முறையை நம்பிக் கொண்டிருக்கும் உலகம் வட்டியின்றிய பொருளாதாரம் சாத்தியமாகாது எனக் கூறுவதை எவ்விதம் ஏற்க முடியும்? முஸ்லிம்கள் பலரும் கூட இது பற்றிய உண்மை நிலையினை அறிவதில்லை.

எனவே, முஸ்லிம்கள் உட்பட அனைத்து மக்களும் இஸ்லாமிய பொருளியல் பற்றிய அறிமுகத்தையேனும் அறிந்திருப்பது அவசியமாகும். மேலும், இஸ்லாமிய பொருளாதார முறையைப் பற்றிய விடயங்களை அறிந்துள்ளவர்களில் பலர் அதனை விரும்பினாலும், அதன் 'இஸ்லாமிய' என்ற அடைமொழி பலரையும் இதிலிருந்து பின்வாங்கச் செய்கின்றது. எனினும், இது தொடர்பான தெளிவான அறிவும் சிறந்த சிந்தனையும் காணப்படின் இதை ஏற்பதில் பின்னிற்க மாட்டர். அனைவரும் இஸ்லாமிய பொருளியல் பற்றிய அறிமுகத்தைப் பற்றிய அறிவை யேனும் பெற வேண்டுமென விரும்புகின்றேன்; அதற்கு இந்நூல் உதவியாக இருக்கும் எனவும் நம்புகிறேன்.

எனது இச்சிறிய கன்னி முயற்சியில் நிறைகளைப் போல்; குறைகளும் தாராளமாகவே இருக்க முடியும். நிறைகள் அல்லாஹ் விடமிருந்து வந்தவை; குறைகள், பிழைகள் என்னிடமிருந்து வந்தவை. எனவே, வாசகர்கள் அதை சுட்டிக் காட்டுவது எம்மை வளர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும் என நம்புகிறேன். அல்ஹம்துலில்லாஹ் இந்நூலினை மொழிபெயர்ப்பதன் மூலம் நானும் பல விடயங்களை கற்றுக்கொள்ள முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

*''(யா அல்லாஹ்!) நீயே மகா தூயவன். நீ எமக்குக் கற்றுத் தந்ததைத் தவிர வேறு எந்த அறிவும் எங்களுக்கில்லை. நிச்சயமாக நீயே முற்றிலும் அறிந்தவனும் ஞானமுள்ளவனுமாய் இருகக் கின்றாய்.'' (அல்-குர்ஆன் 2:32)*

# நன்றியுரை

இம்முயற்சியை செவ்வனே நிறைவேற்றி வைத்த எல்லாம் வல்ல அல்லாஹுதஆலாவுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும். அல்ஹம்துலில்லாஹ்! இச்சிறிய முயற்சியை அவன் பொருந்திக் கொள்வானாக!

மேலும், இதனை செய்து முடிப்பதற்கான ஒத்துழைப்பை நல்கிய அன்புப் பெற்றோருக்கும், சகோதர உறவுகளுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நான் ஆர்வத்துடன் தேடியெடுத்த இந்நூலை மொழி பெயர்ப்பதற்கான அனுமதியைத் தந்த Internationl Institute of Islamic Thought (IIIT) நிறுவனத்துக்கும் (இஸ்லாமிய சிந்தனை களுக்கான சர்வதேச நிறுவனம்), இதற்கான வசதிகளை ஆரம்பம் முதல் செய்து தந்த ஊக்கத்தோடு, பொறுப்பாகவுமிருந்து இறுதி மேற்பார்வையையும் செய்துதவிய அப்த்-அல்-ஜப்பார் முஹம்மத் ஸனீர் அவர்களுக்கும் மொழிபெயர்ப்பை பார்வையிட்ட பேராத னைப் பல்கலைக்கழக பொருளியல் துறை முன்னாள் உதவி விரிவுரையாளர் சகோதரி திருமதி. முஹம்மத் ஹனீபா அனீஸா

அவர்களுக்கும் மொழிபெயர்ப்பில் எழுந்த சந்தேகங்கள் தொடர்பில் உதவி புரிந்த திருமதி எம்.ஐ. ரியாஸனுன் நிஸா அவர்களுக்கும், மொழிபெயர்ப்பில் எழுந்த பல சந்தேகங்கள் தொடர்பிலும் பக்க வடிவமைப்பிலும் மனமுவந்து உதவி புரிந்த 'அல் மதீனா' ஆசிரியர் அல்ஹாஜ் முஹம்மத் பழீல் முஹம்மத் ஹனீப் அவர்களுக்கும், அரபுப் பதங்கள் தொடர்பில் தெளிவாக விளக்கத்தைத் தந்து உதவி புரிந்த எனது உஸ்தாதான மினன் அஹதிய்யா அதிபர் அஷ்ஷெய்க் அல்ஹாஜ் முஹம்மத் இர்ஷாத் ஸவாஹிர் (பாரி) அவர்களுக்கும், கணினிப் பதிவினை இலகுவாக்கிக் கொள்ள தாராள மனதுடன் உதவி புரிந்த சகோதரர் ஜனாப் ஹாஷிம் முஹம்மத் நாஸர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். வல்ல அல்லாஹ் அவர்களுக்கு நிறைவான நற்கூலியை வழங்கி, அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பொருந்திக் கொள்வானாக!

ஜஸாகுமுல்லாஹு கைரன் வகைரல் ஜஸா.

அத்தியாயம்

01

# இஸ்லாமிய பொருளியல்:

## ஒரு சுருக்கப் பார்வை

## *1.* பொருளியல் மற்றும் இஸ்லாமிய பொருளியல்

### *1.1* பொருளியல்

*இஸ்லாமிய பொருளியல் பற்றி அறிய முன்னர் பொருளியல் பற்றிய உலகின் கருத்தை தெரிந்து கொள்வதும் அவசியமானது. பொருளியல் என்பது காலத்திற்குக் காலம் வாழ்ந்த பல்வேறு அறிஞர்களால் அவ்வக்கால சூழ்நிலைகளுக்கேற்ப பல்வேறு வரைவிலக்கணங்களினால் விளக்கப்பட்டது.*

*அந்தவகையில், பொருளியலை 'செல்வக்கலை' என வர்ணிக்கும் அடம் ஸ்மித் (1723-1790), ''மனித சமூகங்களை செல்வச்செழிப்புமிக்கவர்களாக மாற்றுவதற்குத் தேவையான வழிவகைகளை விவரிக்கின்ற இயலே பொருளியலாகும்'' என்று தெரிவிக்கின்றார்.*

*''தனி மனிதனின் அன்றாட வாழ்க்கையில் காணப்படுகின்ற செயற்பாடுகள் குறித்த கல்வியே பொருளியல்'' என இங்கிலாந்து பொருளியல் நிபுணர் அல்ஃபிரட் மார்ஷல் (1842-1924) கருதுகின்றார்.*

மேற்கூறியவாறு, பொருளியலுக்கு தெரிவிக்கப்பட்ட வரைவிலக்கணங்களில் குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக பொருளியலுக்கான புதியதோர் வரைவிலக்கணம் வழங்கப்பட்டது. இதன்படி பொருளியல் என்பது ஒரு சமூக விஞ்ஞானமாகும். இதன் கருப்பொருளாக சுதந்திர மனிதன் கருதப்பட்டான். மனிதனின் எண்ணிறைந்த தேவைகளுக்கும், பற்றாக்குறையாகக் காணப்படும் வளங்களுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதையே இந்த இயல் நோக்காகக் கொண்டிருந்தது. பின்னர் இவ்வரைவிலக்கணமும் கூட விரிவடைந்து சென்றது.

## *1.2 பொருளாதாரக் கொள்கைகள்*

பொருளியல் பற்றிய வரைவிலக்கணங்களும், தெளிவுகளும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதிலே மக்களை பொருளாதாரக் கொள்கைகளை நோக்கி வழிப்படுத்தின. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மனிதவாழ்க்கையில் பொருளாதாரத்தின் தாக்கம் தீவிரமடைந்ததோடு, பொருளாதார ஆய்வுகளும் பரிணமிக்கத் தொடங்கின. பொருளாதாரம் அறிவியல் ரீதியான தகுதியை அடைந்ததோடு, கொள்கை ரீதியான நிலையையும் பெற்றது. பொருளாதாரம் தொடர்பான சில சிக்கல்களுக்கு தீர்வு காண்பதோடு நின்றுவிடாமல், பொருளாதார வாழ்வுக்குரிய நோக்கங்களை வகுக்கவும், அந்நோக்கங்களை எட்டுவதற்கான வழிவகைகளை வரையறுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் பொருளாதாரக் கோட்பாடுகள் உருவாக வழி பிறந்தது. இக்கோட்பாடுகளில் முதலாளித்துவம் (Capitalism) மற்றும் பொதுவுடமைக் கொள்கை (Socialism) ஆகிய இரண்டும் இரு பெரும் சித்தாந்தங்களாக வளர்ந்தன.

xf;

## *1.3 இஸ்லாமிய பொருளியல்*

திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியில் இருந்து கண்டறியப்பட்ட பொருளாதாரம் தொடர்பான வரைவுகளின் தொகுப்பே இஸ்லாமியப் பொருளியலாகும். அதாவது, இந்தப் பொது வரையறையின் அடிப்படையில் அந்தந்தக் காலத்திற்கும்

சூழ்நிலைக்கும் ஏற்ப நாம் வகுத்துக்கொள்கின்ற பொருளாதார அமைப்பே இஸ்லாமிய பொருளாதாரமாகும் (டாக்டர் ரஹ்மத் முஹம்மத் அப்துல்லாஹ் அரபி). இஸ்லாமிய பொருளியல் தொடர்பான விரிவான வரைவிலக்கணத்தை அத்தியாயம் இரண் டில் பார்க்கலாம்.

இப்புத்தகத்தின் பிரதான குறிக்கோளாவது இஸ்லாமிய பொரு ளாதாரங்களின் பொதுச்சட்ட வரைவிற்கான ஒரு சுருக்கத்துடன், இன்றைய பொருளாதார ஒழுங்கிற்கான அதனுடைய பொருத்தப் பாட்டைக் காட்டும் ஒரு பார்வையையும் அறிமுகப்படுத்துவ தாகும். மனித இனத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப் பதில் சமகால பொருளாதார முறைமைகள் தோல்வி கண்டுள்ள துடன், பொருளாதார பிரச்சினைகளிலிருந்து மனித இனம் மீட்சி பெறுவதற்கான எதிர்பார்ப்பினை இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கு மட்டுமே வழங்குகின்றது.

கடந்த சில தசாப்தங்களில் கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவி யத் ஒன்றியம் ஆகியவற்றில் நடந்த நிகழ்விற்குப் பிறகு சம வுடமை தோற்கடிக்கப்பட்ட விடயம் மிகத் தெளிவாகிவிட்டது. அதேபோல், முதலாளித்துவத்தின் வழியிலமைந்த வரலாற்றுக் குறிப்புக்களும் கூட மிக உறுதியானதாக இல்லை. குறைந்தள விலான சிறுபான்மையினர் அதியுயர் வாழ்க்கைத்தரத்தை அடைந் திருந்தாலும் உலகில் பரந்து காணப்படும் அதிகளவான மக்கள் மிக மோசமான வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக் கின்றனர். கைத்தொழிலில் முன்னேறிய நாடுகள் கூட வேலை யின்மை, பணவீக்கம், செல்வச் செழிப்புக்கு மத்தியிலான வறுமை, சமமற்ற வருமானப் பங்கீடு, அடிக்கடி நிகழ்கின்ற பொருளாதார மந்தம், சுற்றாடல் மாசடைதல் மற்றும் சூழற் சமநிலை சீர்குலைதல் போன்ற பிரச்சினைகளைக் குறைவில்லா மல் அனுபவித்து வருகின்றன. இதனால் இன்றைய மனித வாழ்வு அவலப்பட்டுக் கொண்டிருப்பதோடு, எதிர்காலமும் கூட அச்சு றுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மேலும், இந்நாடுகள் அனைத்தி னதும் சுபீட்சத்தின் மையம் தனியொரு திசையை நோக்கியே

உள்ளது என்பதை குறிப்பிட்டுத் தெரிந்தாக வேண்டியதில்லை. ஆன்மீக, ஒழுக்க, சமூகப் பண்புகள் மற்றும் விழுமியங்களை முழுமையாக புறந்தள்ளிவிட்டு, வாழ்க்கையின் பொருள் அள வினை கூட்டிக்கொள்வதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்து கின்றது என்பதே அத்திசையாகும்.

சமவுடமையின் பின்னடைவுடன் முன்னாள் சமவுடமை நாடு கள் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னால் அவர்களால் நிராகரிக் கப்பட்ட முதலாளித்துவ சந்தை முறைமையையே மீண்டும் நடை முறைப் படுத்துவதற்கு ஆர்வம் காட்டினர். ஆகவே, சமவுடமை நிராகரிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் ஒரு பொருளாதார முறை மையை ஆர்வத்துடன் தேடியபோது கிடைத்த முதலாளித்துவம், ஒரு சுரண்டலற்ற மனித பொருளாதார ஒழுங்கை நிலை நாட்டுமா என்பதில் அவர்களுக்கே சந்தேகம் தான். இந்நாடுகள், கைத் தொழிலில் முன்னேறிய மேற்கு ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளுக்கான சந்தையாக தாம் மிக விரைவில் உருவாக முடியும் என நம்பின. உண்மையில், அவர் களுடைய சந்தைகள் ஏற்கனவே முதலாளித்துவ உற்பத்திகளால் நிரம்பி வழிந்தன. இதனால் தான், முதலாளித்துவ நாடுகளின் செல்வச் செழிப்புமிக்க வாழ்க்கை முறைமையை முன்மாதிரி யாகக் கொள்ள அவர்கள் ஆர்வம் காட்டினர். அதற்காக, கைத் தொழிலில் முன்னேறிய நாடுகள் பின்பற்றிய அதே பொருளாதார உத்திகளை நடைமுறைப்படுத்தவும் வேண்டியிருந்தனர்.

பொருட்களை அளவுக்கதிகமாக பின்தொடர்ந்து செல்லும் பொருள் கவர்ச்சிக்கு அடிமைப்பட்டுள்ள இவ்வாழ்க்கை முறை மையானது ஒரு திரிபுபடுத்தப்பட்ட சுபீட்சத்துக்கே இட்டுச் செல்லும். 'உலக முதலாளித்துவத்தின் நிதி நிறுவனங்கள் ஏற் கனவே அவர்களுடைய வலையமைப்பை இந்நாடுகளுக்கு பரப்பி யுள்ளதுடன், இன்னும் சில ஆண்டுகளில் இந்நாடுகளிலுள்ள மக்கள் வட்டியின் நிதிச் சுமையெனும் பொறிக்குள் அகப்படுவர் எனவும், அவர்கள் செல்வந்த நாடுகளிலுள்ள நிதி நிறுவனங் களுக்கு, இக்கடன்கள் மீதான வட்டி மற்றும் கடனை மீளச்

செலுத்துவதற்காக கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு, முன்னாள் சமவுடமை நாடுகள் சமவுடமையிலிருந்து பெற்ற புதிய சுதந்திரத்தால் மகிழ்ச்சியடைந்து விடாத நிலையில், இவ்வாறு நிகழப்போகும் அந்த நாளும் மிக தூரத்திலில்லை' என அப்போதே முஸ்லிம் அறிஞர்கள் அறிந்து வைத்திருந்தனர். அதேபோல், இன்று முழு உலகுமே வட்டியினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

முதலாளித்துவ மற்றும் சமவுடமை பொருளாதார முறைமைகளை விட மனித மகிழ்ச்சிக்கு சாத்தியமான வழியினை காட்டிச் செல்லும் ஒரு பொருளாதார முறை காணப்படுகின்றது. அது, இஸ்லாத்தால் மட்டுமே வழங்கப்பட்ட பொருளாதார ஒழுங்காகும். இஸ்லாமானது மனித பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் ஒரு பரந்த பார்வையையே கொண்டுள்ளது. அது பூமியிலுள்ள அனைவருக்கும் சுதந்திரமான, நீதியான, பொறுப்பு வாய்ந்த ஒரு உலகை வாக்களிக்கின்றது. மேலும், அது அனைத்து மனிதர்களையும் ஒரே முறையில் நடாத்துவதோடு, பூமியிலுள்ள வளங்கள் மீது ஒருசில தேசங்களுக்குள்ள தனியுரிமையையும் நிராகரிக்கின்றது.

இந்த அத்தியாயமானது, இஸ்லாமிய பொருளியலின் அடிப்படை எடுகோள்களையே ஆராய முனைகின்றது. அது பொருளாதார ஒழுங்கமைப்பு, பணத்தின் வகிபாகம், நுகர்வோர் நடத்தை, வறுமைப் பிரச்சினை, இறைத்தொழிற்பாடு, ஆய்வும் அபிவிருத்தியும் மற்றும் மாற்றத்துக்கான உபாயம் என்பவற்றில் கேள்விகளை எழுப்பும். தெளிவாக சிறியதொரு அத்தியாயத்தில் இவையனைத்தையும் உள்ளடக்கிவிட முடியாதவாறான பரந்ததொரு பரப்பாக காணப்படுவதால் அதனை சுருக்கமாக குறிப்பிடுவதை இது நோக்காகக் கொண்டுள்ளது. எனவே, மொத்த விளக்கத்தைப் பெறுவதற்காக நாமே இதன் உள்ளடக்கத்துடன், மேலதிகமான கருத்துக்களை உருவாக்க வேண்டும். இதன் ஒவ்வொரு பகுதியும் விரிவான விளக்கத்திற்காக அதே போன்றதொரு பகுதியை வேண்டி நிற்கின்றது. எனினும், அது இப்புத்தகத்தின் பரப்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். (இவ்விடயம் தொடர்பான மேலதிக

கருத்துக்களுக்கு பார்க்க: எம்.யூ. சப்ரா, இஸ்லாம் மற்றும் பொருளாதார சவால், இஸ்லாமிய நிறுவனம் மற்றும் இஸ்லாமிய சிந்தனைக்கான நிறுவனம், 1992).

இன்னும், இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கானது முதலாளித்துவத்துடன் அதற்கு வெளியேயும் காணப்படும் பண்புகளை, அதாவது தனியார் சொத்து, சுதந்திர சந்தை என்பவற்றுடன் சமூகக் காப்பு முறைமை போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே, இதன் ஒவ்வொரு பிரதான பகுதியிலும் இஸ்லாம் மற்றும் முதலாளித்துவத்துக்கிடையிலான வித்தியாசத்தை விவரிக்க முனைகின்றோம்.

## 2. உலகம் பற்றிய இஸ்லாமிய பார்வை

இஸ்லாத்தின் பார்வையில் அல்லாஹ், அவன் தான் மனித இனத்தின் நலனுக்காக முழுப் பிரபஞ்சத்தையும் படைத்தான். அவன் பூமியிலுள்ள வளங்களை மனிதனுக்காகவே படைத்து, அவற்றைத் தமது தேவைக்காகப் பயன்படுத்தி, வடிவமைத்து உருமாற்றும் பொறுப்பை மனிதனிடமே வழங்கியுள்ளான். அல்லாஹ் மனிதனுக்குத் தேவையான கருவித் தொகுதிகளை அவனது செயற்றிறனை வளர்ப்பதற்கும், அவனைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் விளங்கிக் கொள்வதற்கும், அவனது வருமான வழிகளை விருத்தி செய்வதற்கும் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமே வழங்கியுள்ளான். ஆனால், மனிதன் அவனது சுதந்திரத்தில் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் வரையறைகள் இருப்பதையும் உணர்கின்றான்.

இந்த வரம்புகளுக்குள் அமையும் அவனது அனைத்து செயல்களுமே அல்லாஹ்வுக்கான வணக்கமாகும். ஏனெனில், லௌகீகம் சார்ந்த அல்லது சமய சார்பற்ற என்ற எதுவும் இஸ்லாத்தில் கிடையாது. இந்த நம்பிக்கை மனிதனில் நிரம்பிக் காணப்படும்போது புதிய கண்டுபிடிப்புகளுக்கும், உலக வாழ்வினை விளங்கிக் கொள்வதற்கும், வரம்பு மீறாமல் உலகில் வாழ்வதற்கும், மற்றும் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்குமான ஓர் ஊக்கம் தொடர்ந்து

கொண்டேயிருக்கும். இவ்வாறு, அல்லாஹ்வால் வரையறுக்கப் பட்ட வரம்புகளுக்குள் வாழ்ந்து அவனை திருப்திப்படுத்தவே மனிதன் முயலுகிறான். ஏனெனில், அத்தகைய செயல்களே பாவம் அல்லது அல்லாஹ்வின் நிந்தனைக்குள்ளாவதிலிருந்து மன்னிக்கப்பட்டவைகளாக உள்ளன.

இஸ்லாம் மனிதனிடம் செல்வங்கள் மீதான அதீத ஆசை மற்றும் அவற்றை முற்றாகத் தவிர்க்கும் துறவு நிலை என்பவற்றுக்கிடையே ஒரு சமநிலையைப் பேணுமாறு கோருகின்றது. இப்பொருள் வளங்களை தேடிப் பெற்றுக்கொள்வதில் காணப் படும் இக்கட்டுப்பாட்டுத் திட்டமானது முழு மனித சமூகங்களுக்குமானது. இக்கோரிக்கையின் மூலமாக, பூமியிலுள்ள புதுப்பிக்க முடியாத வளங்களின் அளவு குறைவடைவதில் ஒருபோதும் மனிதன் காரணமாக இருக்க முடியாது. ஒவ்வொரு தலைமுறையும் வளப்பயன்பாட்டு விடயத்தில் தனது எதிர்காலத் தலைமுறையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உலக மட்டத்தில் அனைத்து நாடுகளுமே பூமியிலுள்ள வளப் பயன்பாட்டில் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தாக வேண்டும்.

இஸ்லாமானது பூமியிலுள்ள மனித இனம் முழுவதையும் ஆதமின் மக்களாகவே நடாத்துகின்றது. மனித இனத்தில் அனைவரும் சமமானவர்களே. அது ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்புக்களையே வழங்குகின்றது, தனியுரிமைகளின் உருவாக்கத்தை எதிர்க்கின்றது. ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையுடன் வாழக்கூடிய ஒரு சமூகத்தைப் பற்றியே அது எண்ணிப் பார்க்கின்றது. உலக அளவில், அனைத்து தேசங்களுமே ஒரு மதிப்புமிக்க வாழ்க்கையை வாழ வேண்டுமெனவும் அது எதிர்பார்க்கின்றது. எனவேதான், இன்றுள்ள வறிய நாடுகள் செல்வந்த நாடுகளுக்கு அதிகம் கடன்பட்டிருக்கும் நிலையானது உலகம் பற்றிய இஸ்லாமிய பார்வையுடன் ஒத்துப் போகவில்லை. இஸ்லாத்தின் பார்வைப்படி, அனைவருக்கும், அனைத்து தேசங்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும். மேலும், அது சுரண்டலின் அனைத்து வடிவங்களையும் எதிர்த்து நிற்கின்றது. இஸ்லாம்,

பொருளாதார சக்தி குவிந்து காணப்படும் வகையில் கட்டி யெழுப்பப்படுவதைத் தடுப்பதற்காக, குறிப்பிடத்தக்களவிலான அரசாங்கத் தலையீட்டுடன் கூடிய சுதந்திர சந்தைப் பொருளாதா ரத்தையே ஊக்குவிக்கின்றது.

அல்லாஹ்வின் மேலான பிரதிநிதியாகப் படைக்கப்பட்டுள்ள மனிதன், அவனது அனைத்து செயல்களுக்கும் தீர்ப்புநாளில் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளான். இவ்வாறு, இஸ்லாம் அனைத்து மட்டங்களிலும் மனிதன் தான் செய்யும் அனைத்து செயல்களிலும் பொறுப்புடன் இருக்கும் வகையில் ஓர் உறுதியான கட்டளையை இடுகின்றது. இன்றைய அதிகாரம் மிக்க தேசங்கள் மற்றும் உலக கூட்டமைப்புக்கள் உலகில் யாருக்கும் பொறுப்புக் கூறவோ, தமது செயல்களுக்கு விளக்கமளிக்கவோ தேவை யில்லை என்பதானது சந்தேகமற இஸ்லாம் உலகை பார்க்கும் மெய்யான கருத்தில் இல்லை. இஸ்லாமானது உலகிலுள்ள ஒவ் வொருவரும் தத்தமது செயல்கள் பற்றி விசாரிக்கப்படுவர் எனக் கூறுகின்றது. எந்தவொரு தேசத்தினாலாவது ஏற்படும் பொறுப் பற்ற நடத்தைகளைக் கண்காணிப்பதற்கும், சரிபார்ப்பதற்குமான ஓர் உலக ஒழுங்கமைப்பை உருவாக்க உலகிலுள்ள அனைத்து தேசங்களும் ஒன்றிணைந்து செயற்படும் ஒரு பொருளாதார அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதையும் அது நோக்க மாகக் கொண்டுள்ளது. குறுகிய பொருளாதார இலாபங்களுக்காக வீண்விரயம், அக்கறையின்மை, அளவைக் குறைத்தல் மற்றும் அழித்தல் என்பவற்றில் ஈடுபடுவதை எதிர்த்து புவியிலுள்ள வளங்களை கட்டாயம் பாதுகாத்தாக வேண்டும் என்கின்றது.

## 3. அடிப்படை எடுகோள்கள்

### 3.1 மனிதப் பண்பு

மரபு ரீதியான பொருளாதார ஆய்வானது, மனித இனம் இயல்பிலேயே சுயநலமுடையதாகக் காணப்படுகின்றது எனக் கருதுகின்றது. அவர்களுடைய பிரதான நோக்கம் உச்ச பயனை

அல்லது திருப்தியைப் பெறுவதாக இருப்பதுடன், ஒட்டுமொத்த சமூகத்தின் பயனையும் உச்சப்படுத்துவதாகவும் இருக்கின்றது. முதலாளித்துவத்தின் கீழ், தனிநபர் மற்றும் தேசங்களின் சுயநல நடத்தையானது பகுத்தறிவான ஒன்றாக கருதப்படுவது மட்டு மல்லாமல், அது அனைவராலும் ஊக்குவிக்கவும் படுகின்றது. தனிநபர் மட்டத்தில், முழுமையான சுயநலம் மற்றும் ஏனை யோரின் முன்னேற்றத்துக்காக சிறிதளவு பொறாமைப்படும் மனப்பாங்கு நியாயமானதாகவும் ஏற்கப்படுகின்றது. அதேபோல் தேசிய மட்டத்தில், தனிநபர்கள் மற்றும் தேசங்களின் சுயநல விருப்பங்களைப் பரிமாறும் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதனை முழுமையாகவும், சட்டப்படியாகவும் கருத்தில் கொள்கின்றது. இவ்வெடுகோளானது, ஏனைய சமூக விஞ்ஞான விடயங்களான உளவியல், சமூகவியல் மற்றும் மானிடவியல் முடிவுகளின் படியும், ஏன், எமது நாளாந்த அவதானிப்பின் வெளிச்சத்திலும் கூட முழுமையாக கண்டிக்கப்படுகின்றது என்பதை அறிவோம்.

இஸ்லாம் மனிதனிடம் இரு பண்புகளை அடையாளம் காண் கின்றது. மனித இனம் சுயநலமாக இருப்பதோடு, பொது நலம் காப்பதாகவும் இருக்கின்றது. உதாரணமாக, யர்மூக் யுத்தத்தின் போது இஸ்லாமிய படையில் கலந்துகொண்ட மூன்று ஸஹா பாக்கள் எதிரிகளால் தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மரண வேதனை யில் தண்ணீர் கேட்டுக் கதறுகின்றனர். அப்பொழுது முதலாம வரிடம் நீர் எடுத்துச் செல்லப்பட்ட போது மரண வேதனையிலும் தியாக உணர்வினால் தனது அடுத்த தோழருக்குக் கொடுக்குமாறு குறிப்பிட, இரண்டாமவர் மூன்றாமவருக்கு நீரைக் கொடுக்குமாறு குறிப்பிடுகின்றார். மூன்றாமவரிடம் நீர் எடுத்துச் செல்லப்பட்ட போது அவர் இறந்துள்ளதை அவதானித்து நீர் இரண்டாமவரிடம் எடுத்து வரப்பட, அவரும் இறந்திருக்க மீண்டும் முதலாமவரிடம் நீர் எடுத்துவரப்பட்ட போது அவருமே இறந்து விட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. மரண வேளையிலும் தியாகிகளாகத் திகழ்ந் துள்ளமையை இது எடுத்துக் காட்டுகின்றது.

ஆக, இஸ்லாம் மனித சுயநலத்தை ஊக்குவிக்கவில்லை. மாறாக, மனிதனின் சுயநலப் போக்கை கட்டுப்படுத்தவே முனை கின்றது. இவ்வாறு, இஸ்லாம் பொருட்கள் மீது மனிதன் கொண் டுள்ள சுயநலப் போக்கை நெறிப்படுத்துவதோடு, ஏனையோரைப் புண்படுத்துவதிலிருந்தும் மனிதனைத் தடுக்கின்றது. மேலும், அவர்களுடைய பொதுநல நோக்கத்தை ஊக்குவிப்பதோடு, ஒருவர் மற்றவருக்கு உதவுவதற்கும் தூண்டுகின்றது. இதன் பலனாக, இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கானது தனியார் துறை மற்றும் பொதுத் துறை தவிர்ந்த மூன்றாவது ஒரு துறையையும் அறிமுகப்படுத்துகின்றது. அதுவே, தன்னார்வத் துறை எனப்படு கின்றது. ஒவ்வொரு தனிநபரும் தனது சுயநல விருப்பங்களுக்காக மட்டுமன்றி, ஏனைய மனிதர்களுக்கும் பொருட்களை வழங்கி உதவி செய்வதன் மூலம் சிறந்த ஒரு வகிபாகத்தை ஆற்ற வேண்டி யது அவசியமாகும். இதனால், ஒவ்வொருவரும் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கு தம்மாலான பங்களிப்பினைச் செய்ய முடியும்; மேலும், அவசியம் அவ்வாறு பங்காற்ற வேண்டும் என்ற விடயத்தை இஸ்லாம் எமக்கு வலியுறுத்திக் கூறுகின்றது.

## 3.2 பொருள் முதல் வாதம்

முதலாளித்துவ பொருளாதார ஒழுங்கானது, பொருளை அதிகம் தேடிப் பெற்றுக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துகின்றது. உண்மையில், முன்னேற்றம் மற்றும் பொருள் உடைமை என்பன பல வழிகளில் பார்க்கப்படுகின்றது. வாழ்க்கைக்கான முதலா ளித்துவ அணுகுமுறையின் விளைவாக மீளமைக்க முடியாத வளங்களின் அளவு பரவலாகக் குறைவடைதல், பரந்துபட்ட காடழிப்பு, சூழல் மாசடைதல் மற்றும் சூழற் சமநிலையின்மை போன்றவற்றையே முடிவில் காணக்கூடியதாக உள்ளது.

இஸ்லாம், பொருள் உடைமைகளை வாழ்க்கையின் அலங் காரமாகவே கருதுகின்றது. அதேநேரம், மனித ஆளுமைக்குத் தேவையான ஒழுக்க மற்றும் ஆன்மீக அபிவிருத்திக்கும் வழி காட்டுகின்றது. அது, ஒருவருடைய பொருள் நலனை அதிகரிப்ப தற்கு தொழில் மற்றும் முயற்சியை ஊக்குவிக்கின்ற அதேநேரம்,

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் அவனது பொருத்தத்தை அடைதலுமே இந்த பூமியில் மனித முயற்சிகளின் நோக்கமாக இருக்கவேண்டும் எனவும் கட்டளையிடுகின்றது. இந்நோக்க மானது பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு சமநிலை அணுகு முறையையே அறிமுகப்படுத்துகின்றது. இஸ்லாமிய அணுகு முறை, பொருள் நுகர்வை அதிகரிப்பதற்குரிய மனித முயற்சியில் ஒரு வரையறையைக் காட்டி நிற்கின்றது. மேலும், அது மனித ஆளுமைகளில் விரும்பப்படும் இலக்குகளான ஒழுக்க மற்றும் ஆன்மீக வளர்ச்சிகளுடன் இணைந்த வகையிலேயே பொருள் சேர்ப்பதையும் நிறைவேற்றுமாறு வலியுறுத்துகின்றது.

### 3.3 உரித்துடைமை

முதலாளித்துவமானது தனியார் உரித்துடைமைக்கு முழு உரிமையினை வழங்குவதோடு, அடுத்த நபரினுடைய அதே உரிமையில் பாதிப்பை ஏற்படுத்துவது பற்றி கவலைப்பட வில்லை. இதன் விளைவாக, மக்கள் அவர்களுடைய வளங்களை அவர்கள் விரும்பும் வழியில் சுதந்திரமாக பயன்படுத்துகிறார் கள். இதனால், அவர்களே அவர்களுடைய சில வளங்களை அழித்துவிடும் அல்லது வீணாக்கிவிடும் நிலை உருவாகலாம். அவர்களுக்கு அவர்கள் விரும்பியவாறு நுகர்வதற்கு, சேமிப்ப தற்கு, முதலிடுவதற்கு (அல்லது வட்டியின் மீது கடன் பெறு வதற்கு) முடியும். அவர்களுக்கு எந்தவொரு செயற்பாட்டிலும் அல்லது தொழிலிலும் ஈடுபடுவதற்குரிய வரையறையற்ற சுதந்தி ரம் காணப்படுகின்றது. அவர்களுக்கு அவர்களுடைய பணத்தை எந்தவொரு வர்த்தக அல்லது தொழில் முயற்சியிலும் முதலிட முடியும். அது சமூகத்துக்கு கேடு விளைவிக்கக் கூடியதாக அல்லது அழிவை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தாலும் சரியே.

ஆனால், இஸ்லாமானது முழுமையான உரித்துடைமையின் உரிமை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது என அடையாளப் படுத்துகின்றது. அதேநேரம், மனிதனுக்கு பூமியிலுள்ள வளங்களி லிருந்து நலனைப் பெற்றுக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள் ளது. மனிதன், அவனது வாழ்வாதாரத்துக்குத் தேவையானதை

சட்டத்திற்குட்பட்ட (ஹலால்) வருமான வழிகளின் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். அவனது வருமானத்தை அவன் விரும்பும் எவ்வழிகளிலும் நுகரவோ, சேமிக்கவோ அல்லது முதலிடவோ முழுமையாக சுதந்திரம் வழங்கப்பட வில்லை. பிறருக்கு பாதகம் அல்லது நட்டத்தை ஏற்படுத்தித் தான் வருமானம் உழைக்க முடியாது.

இஸ்லாமானது அவனது வருமானமீட்டல், நுகர்வு, சேமிப்பு மற்றும் முதலிடும் உரிமையின் மீது தெளிவான ஒழுக்க வரம்பு களை இட்டுள்ளது. இஸ்லாம் ஒவ்வொரு தனிநபரும், தனக்குச் சொந்தமான சொத்தினை விற்பதற்கு, உயில் எழுதி வைப்பதற்கு மற்றும் வாரிசுதாரர்களுக்கு விட்டுச் செல்வதற்கான உரிமை யினை வழங்கியுள்ளது. இவ்வாறு, சொத்து பற்றிய இஸ்லாமிய எண்ணக்கருவானது பூமியிலுள்ள வளங்களைப் பயன்படுத்து வதற்குள்ள மனித சுதந்திரத்தின் மீது தெளிவான வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் இஸ்லாம், அவ்வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதில் ஒவ்வொருவரையும் அல்லாஹ் வுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாகவே கருதுகின்றது.

### 3.4 பிரபஞ்ச வாதம்

முதலாளித்துவ பொருளாதாரங்கள், 18 ஆம் நூற்றாண்டில் அதனுடைய ஸ்தாபகர்களால் உருவாக்கப்பட்ட பொதுவான வரை சட்டத்துக்கு வெளியில் தாம் வர முடியாது எனக் கருதின. அடம் ஸ்மித் (1776), ‘தேசங்களின் செல்வம்’ நூலை எழுதிய நேரம் இன்றுள்ள அநேக செல்வந்த நாடுகள் அவர்களுடைய காலனித் துவ இலக்குகளைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தன. அடம் ஸ்மித்தின் கருத்துக்கள் தேசிய அரசுகள் தொடர்பான கருத்தினை யும் பகுத்தறிவானதாக்கின. மேலும், ‘தேசங்களின் செல்வமானது’ உலக பொருளாதார விவகாரங்களுக்குரிய ஒரு குறுகிய அணுகு முறையை ஏற்படுத்துவதற்கான தத்துவார்த்த அடிப்படையையும் வழங்கியது. உலகமானது அனைத்து மனித சமூகங்களுக்குமான ஓர் இடமாகக் கருதப்படுவதற்குப் பதிலாக, அது உலகின் ஏனைய

மக்களிலிருந்து தனிமைப்பட்ட தேசிய கொள்கைகளின் எண்ணக் கருவையே பகுத்தறிவானதாக்கியது.

இவ்வாறு, பொருளாதார பிரச்சினைகளை நோக்கி தேசப்பற்றுடன் கூடிய ஓர் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியதோடு மட்டுமல்லாது, கைத்தொழிலில் முன்னேறிய நாடுகள் அவர்களுக்குப் பொருந்தக்கூடிய எந்தக் கொள்கையையும் பின்தொடர்வதற்கான கட்டுப்பாடில்லாத உரிமையையும் வழங்கியது. இவ்வணுகுமுறையே இன்னும் செயற்பட்டு வருகின்றது. தனிப்பட்ட அரசுகள் அவர்களுடைய சுயநல விருப்பங்களுக்கேற்பவே பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்கின்றன. அவர்களைச் சுற்றியுள்ள நிலைமைகளைப் பற்றி அவை கவலை கொள்வதில்லை. இவ்வாறு, அவர்கள் அவர்களுடைய சுயநல நோக்கங்களுக்கேற்ற கொள்கைகளைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதோடு, அக்கொள்கைகளால் ஏனைய நாடுகளுக்கேற்படும் விளைவுகளையும் புறந்தள்ளி விடுகின்றனர். இச்செயன்முறையினால் உலகிலுள்ள அனைத்து மக்களுமே பாதிக்கப்படுகின்றனர் என்பதே மிகப் பெரும் உண்மையாகும்.

இஸ்லாத்தின் பார்வையில், முழுப் பிரபஞ்சமும் அல்லாஹ்வால் அனைத்து மனித இனங்களின் நலனுக்காகப் படைக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஏனையோரைப் பாதிக்காத பொருளாதாரக் கொள்கைகளைப் பின்தொடரும் வகையில் ஒருவர் மற்றவருடன் கலந்து பேசல் மற்றும் ஒத்துழைப்பு வழங்கல் என்பன உலக மக்களனைவருக்குமான ஒரு விசேட தேவையாக உள்ளது. பாரியளவில் சர்வதேச ஒத்துழைப்புக்கான தேவை காணப்படும் வேளையில் வெறுமனே உதட்டளவு கருணையாக சிறியளவிலான உதவிகளே வழங்கப்படுமாயின், மனித இன நடைமுறையில் எந்தக் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதே கருத்தாகும். எனவே இது, மக்கள் மரபு ரீதியான பொருளாதார கருத்துக்களை மேம்படுத்தி சமத்துவம் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் உலக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நேரமாகும் என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும்.

# 4. பொருளாதார ஒழுங்கமைப்பு

## 4.1 பொருளாதார அதிகாரம்

மிகச் சுருக்கமாகப் பார்ப்பின், இன்று முதலாளித்துவ பொருளாதாரங்கள் என்பவை மூலதனம் மற்றும் கூலித்தொழிலாளி என்ற காரணிகளின் சேர்க்கையிலிருந்து உருவாகும் பொருட்கள், சேவைகளின் உற்பத்தி நடைபெறுகின்ற திறந்த சந்தைப் பொறி முறையின் அடிப்படையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மூலதனமானது, பங்கு மற்றும் வட்டியின் நிதிச்சுமை என்ற இரண்டையுமே வழங்குகின்றது. சந்தையானது கோட்பாட்டு ரீதியாக சுதந்திரமானதாக கருதப்பட்டாலும் விலை மட்டத்தை தீர்மானித்தல், முதலீட்டு மட்டம், சேமிப்பு, உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்தும் அதிகளவிலான காரணிகள், சந்தையிலும் மிகப் பெரியளவில் செல்வாக்கு செலுத்துகின்றன. பழம்பொருளியல் பொருளாதார ஆய்வின் அடிப்படையான ஒரு விடயமாகவுள்ள நிறை போட்டியென்ற எண்ணக் கருவானது, மிகப் பெரிய கூட்டமைப்புக்களின் கரங்களில் பொருளாதார அதிகாரம் குவிவதால் பொருத்தமற்ற விடயமாக மாறுகின்றது.

முதலாளித்துவ பொருளாதாரங்களில், பொருளாதார அதிகாரத்தின் குவியலானது பல காரணிகளால் நிகழ்கின்றது. முதலாவது, நிலையான வருமானம் பெறும் முதலீட்டாளர் வகுப்பின் வட்டி வருவாயானது வறுமையிலிருந்து செல்வநிலைக்கான செல்வத்தின் ஒரு பாய்ச்சலுக்கு வழியமைக்கின்றது. அது, படிப்படியாக ஒரு சிறியளவு மக்கள் தொகையினர் செல்வத்தின் மிகப் பெரியளவை குவிப்பதற்கு வழியமைக்கின்றது. இரண்டாவதாக, கூட்டுத்தாபனங்களின் சட்ட ரீதியான புத்தாக்கங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் என்பன, வரையறுக்கப்பட்ட இடரபாயக் கணக்கின் மீது பெரியளவில் மூலதனத்தைச் சேர்ப்பதற்கு இந்தக் கூட்டமைப்புக்களை இயலச் செய்கின்றது. ஒரு கூட்டமைப்பினுடைய பங்குதாரர்களின் இலாப உரிமையளிப்பானது

வரையறுக்கப்படாத போது, நட்டத்தைத் தாங்குவதற்குரிய இடர பாயமானது அவர்களுடைய சொந்த மூலதனத்தின் பரப்புக்கு வரையறுக்கப்பட்டுக் காணப்படும். மூன்றாவதாக, தொழில்நுட்ப அபிவிருத்திகளின் நலன்களிலிருந்து ஊழியர்களும், நுகர்வோரும் நலனினை பெற்றுக்கொள்ளும் வகையிலான குறைந்த விலைய மைப்பினை இம்முதலாளித்துவ முறைமை அனுமதிக்கவில்லை. மாறாக, தொழில்நுட்ப அபிவிருத்திகளிலிருந்து பெறப்படும் நன்மைகள் பிரதானமாக மிகப் பெரிய கூட்டுத்தாபனங்களையே அடைகின்றன. அவை தனியுரிமைச் சக்தியை அண்மித்துள்ளதால் நிலையான விலைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

## 4.2 நிறைதொழில் மட்டத்தை விடக் குறைந்த மட்டத்தில் சமநிலை

முதலாளித்துவ பொருளாதாரங்களின் மற்றுமொரு பண்பு யாதெனில், அவர்கள் நிறைதொழில் மட்டமல்லா ஒரு சம நிலையை அடைவதாகும். இவ்விடயம் கெயின்ஸிய பொருளிய லில் பரவலாகக் கலந்துரையாடப்படுகின்றது. இதற்கான பிரதான காரணம் மூலதனத்தின் மீதான வட்டியாகும். அது முதலீட்டை யும், அதன் மூலமாக செயற்திறனான கேள்வியையும் கட்டுப் படுத்துகின்றது. இதன் விளைவாக, சந்தை முறைமை தானாகவே நிறைதொழில் மட்டத்தை அடைய முடியாது. எனவே, முத லீட்டை ஊக்குவிக்க செயற்றிறனான பொதுக் கொள்கையை தேவைப்படுத்துகின்றது. அதேநேரம், தனியார் துறையானது அவர்களது பொருட்கள், சேவைகளின் விற்பனையை ஊக்கு விப்பதற்கான கட்டாயத்தினை உணர்கின்றது. இதனால், அவர் களுடைய முதலீட்டு வருவாய் நிச்சயப்படுத்தப்பட்டதாகும். இதற்காக பொருளாதாரமானது தொலைக்காட்சி மற்றும் செய்தி ஊடகங்களில் செய்யும் விளம்பர நடவடிக்கைகளைக் கொண்டு செயற்கையான கேள்வியை உருவாக்குகின்றது. நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளை மேலும் மேலும் நுகர்வதற்கான தூண்டுதலுக்கு ஆட்படுகின்றனர். இவ்வாறு, முதலாளித்துவ

முறைமையானது அதனை தொடர்ந்து இயங்கச் செய்வதற்காக செயற்கையான கேள்வியை உருவாக்கக் கட்டாயப்படுத்தப்படு கின்றது.

மேற்சொன்னவை உண்மையாகவே, சமகால முதலாளித்து வத்தின் கீழுள்ள பொருளாதார ஒழுங்கமைப்பு பற்றிய ஒரு மேலோட்ட வரைபடமாகும். விடயத்தை போதுமானளவு விளங்கிக் கொள்வதற்கு, மேலதிக விளக்கத்தைப் பெறுவதும் தேவையாகின்றது. எவ்வாறெனினும், இந்தக் குறிப்புக்கள் இஸ் லாம் மற்றும் முதலாளித்துவ பொருளாதார ஒழுங்கமைப்புக் களின் மாதிரிகளுக்கிடையே நிலவும் வித்தியாசத்தைக் காட்டு வதற்குப் போதுமானதாகும்.

## 4.3 இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கமைப்பு

இஸ்லாம், கேள்வி மற்றும் நிரம்பல் அடிப்படையிலான ஒரு சுதந்திர சந்தைக்கே கட்டளையிடுகின்றது. அதேநேரம், பொரு ளாதார சக்தியானது குவிக்கப்படாதிருப்பதையும் உறுதிப்படுத்து கின்றது. மற்றும், பின்வரும் வழிவகைகளின் மூலம் அதன் தீவிரத்தையும் குறைக்கின்றது.

(அ) இஸ்லாம் மூலதனத்தின் மீதான வட்டியை தடுப்பதோடு, உழைக்காமல் அல்லது இடரபாயத்தினை ஏற்காமல் செல்வத் தினைத் திரட்டுவதற்குரிய வாசலினை மூடியுள்ளது. எவர் இலா பம் உழைக்க விரும்புகின்றாரோ அவர் இடரபாயத்தினையும் தாங்கியாக வேண்டுமென்பதே பொது விதியாகும். இயங்கு தத்துவமானது, இடரில்லையெனில் நன்மையுமில்லை என்றே கூறுகின்றது.

(ஆ) இஸ்லாம், தனிநபர்கள் ஏனையோரில் தங்கியிருக்காத ஒரு சமூகத்தைப் பற்றியே பேசுகின்றது. அது, ஒவ்வொரு தனி நபர்களினதும் சாத்தியமான இயலுமைகள் உண்மையாக பயன் படுத்தப்பட வேண்டுமென விரும்புகின்றது. எனவே, இதற்கு அவசியமானவை எவையெனவும் இனங்காண்கின்றது. இவ்வாறு,

உயர்ந்தபட்ச எண்ணிக்கையான மக்கள் அவர்களது வருமான மீட்டலிலும், வாழ்விலும் சுதந்திரமாக செயற்படக்கூடிய ஒரு சமூகமாக இருக்க வேண்டுமெனக் கருதுகின்றது. மேலும், இது முழு பிரபஞ்சத்தையுமே பரிபாலிக்கும் ஏக அல்லாஹ்வை நம்பு வதுடன் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அடிமைகளின் அந்தஸ்தினை சகோதரர்கள் மற்றும் பங்காளர்களாக உயர்த்திய போது வாழ்வாதாரத்துக்கான இந்த வடிவம் தொடர்பில் தமது விருப்பத்தை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மரபு ரீதியாக, முஸ்லிம் சமூகத்திலுள்ள வர்கள் குறைந்த பெறுமதியையுடைய கூலித் தொழிலாளர் களாகவே அமர்த்தப்பட்டு வந்துள்ளனர். அதற்குப் பதிலாக, அவர் கள் எப்போதும் சுயதொழில் அல்லது முஷாரகா[1] (பங்குடமை) அல்லது முழாரபா[2] (கூட்டுப் பங்கான்மை) போன்ற வியாபார அமைப்புக்களை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

அதேநேரம், மனித வரலாற்றில் முதன் முறையாக சனத் தொகையில் பெரியளவு தொகையினர், தமது வாழ்வாதாரத்துக் காக முதலாளிகளில் தங்கியிருக்கும் நிலை முதலாளித்துவ உற் பத்தி முறைமையாகவிருந்தது. ஆனால், இஸ்லாமிய பொருளா தாரம், மக்கள் தொழிலாளர்களாகவோ, ஊழியர்களாகவோ அன்றி பங்காளர்களாக கைகோர்க்கும் வியாபாரத்தின் அத்தகைய அமைப்புக்களையே ஊக்குவிக்கின்றது. இத்தத்துவம் எல்லோ ராலும் ஏற்கப்படுமாயின், உலகின் சமூக, பொருளாதார உறவுகள் திருப்திகரமானதாக இருக்க முடியும். இன்னும் ஒரு விடயம் தெளிவானது. அத்தகைய பொருளாதார ஒழுங்கமைப்புக்கள், ஒட்டுமொத்த பொருளாதார உரித்துடைமையைப் பரவச் செய்வ தோடு, பொருளாதார அதிகாரம் சிலரிடம் குவிவதையும் தடுக் கின்றது என்பதே அதுவாகும்.

(இ) இஸ்லாம், திட்டமிடப்படாத தொழில்நுட்பத்தின் அறி முகத்தினை ஊக்குவிக்கவில்லை. ஒருபுறம், தொழில்நுட்பத்தின் அறிமுகம் திட்டமிடப்பட்டதாகவும், கட்டங்களை உடையதாக வும் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்ற அதேவேளை,

புதிய தொழில்நுட்பத்தின் அறிமுகத்தால் உருவாக்கப்படும் ஒழுங்கு கெடுதல் அல்லது பொருளாதார இடர்பாடு ஏற்படல் என்பவற்றின் செலவினைத் தாங்குவதற்கும் அது தொழிலதிபர் களைக் கட்டாயப்படுத்துகின்றது. செலவு மற்றும் நலன் என்பன கரத்துக்குக் கரம் மாறிக்கொண்டிருக்கும் என்ற பொதுத் தத்து வமே அத்தகைய பொதுக் கொள்கைகளுக்கான அடிப்படை யாகும். ஒருவர் இலாபம் உழைக்க வேண்டுமாயின் அவர் கட்டாயம் அதற்குரிய செலவினையும் மேற்கொண்டாக வேண் டும். மேலும், பொருளாதாரமானது தொழிலாளர்களின் உரித் துடைமை தத்துவத்தின் மீது ஒழுங்கமைக்கப்பட்டிருக்குமானால், புதிய தொழில்நுட்பத்தின் நலன்கள் தன்னிச்சையாகவே ஒட்டு மொத்த பொருளாதாரத்துக்கும் பரவிவிடும்.

(ஈ) மேலும், இஸ்லாமிய பொருளாதாரம், கடன் மூலதனத் துக்கான வட்டியை அனுமதிக்கவில்லை. அநேகமாக வட்டி யில்லாக் கடன் பெரியளவில் கிடைக்கக்கூடியதாக இருக்காது. இதன்விளைவாக, ஓர் இணைந்த பங்குக் கம்பனியில் பங்கு டைமையாளர்களின் வரையறுக்கப்பட்ட பொறுப்பானது பல வற்றை இழக்கச் செய்கின்றது. இம்முறையில், இஸ்லாமிய பொருளாதாரமானது பொருளாதார அதிகாரம் குவிவதை மற்று மோர் வாய்க்காலைக் கொண்டு மூடிவிடுகின்றது. (இக்கருத்தி னுடைய கலந்துரையாடலுக்காக இணைப்பு-1 இனைப் பார்க்க)

(உ) இஸ்லாமிய பொருளாதாரமானது, விலையை அதிகரிப் பதற்கான பதுக்கல் (இஹ்திகார்), விலையினை உயர்த்துவதற் காகக் கூட்டுச் சேர்தல் (தனாஜுஷ்), ஏலத்தில் ஏனையோரை விட அதிக விலையை கூறல் (தஸாவும்), விற்பனையாளர்கள் சந் தையை அடைவதை அதைரியப்படுத்தி நேர்மையான போட் டியை தடுத்தல் (பை தலக்கி அர் ருக்பான்) மற்றும் கிடைக்கக் கூடிய சிறந்த விலையில் விற்பனையாளர்களைக் கவர்வதற்காக மதிநுட்பமான நபர்களால் தந்திரமாக மேற்கொள்ளப்படும் தரகர் நிலை (பை அல் ஹதிர் லி பாத்) போன்ற தவறான செய்கை களுடன் கூடிய சந்தைகளை ஊக்குவிக்கவில்லை.

இவை சந்தைகளின் நேர்மையான போட்டியைப் பலவீனப் படுத்த நபி (ஸல்) அவர்களின் காலத்திலிருந்த குறிப்பிடத்தக்க சில நடைமுறைகளாகும். இதற்கு ஒப்பாக, போட்டித் தன்மை பலவீனமடைதல் அல்லது தனியுரிமைக்கு இட்டுச் செல்லுதல் போன்ற இஸ்லாம் ஊக்குவிக்காதவற்றை உள்ளடக்கிய அனைத்து சந்தை நடைமுறைகளிலும் ஒருவர் தனக்கான உரிமையை கோர லாம். எனவே, ஒரு விடயம் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அது, நிகழ்கால இஸ்லாமிய பொருளாதாரம் கொள் வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு சந்தை நிலைமை களைத் தெரியப்படுத்துவதற்கு சந்தை தொடர்பான தகவல் களைப் பெறும் சில புதிய வழிமுறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாயத்திலுள்ளது என்பதாகும். மேலும், இந்தத் தகவல்களை மலிவாகவும், இலகுவாகவும் கிடைக்கச் செய்ய வேண்டும். பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் கிடைக்கப் பெறும் தகவலின் கிடைப்பனவானது பொதுவாக அனைவரா லும் அலட்சியமாக விடப்படும் ஏமாற்றல், மோசடி, சதி மற்றும் சுரண்டல் என்பவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.

(ஊ) ஓர் இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கில் விளம்பரம் மூலமாக செயற்கையாக உருவாக்கப்படும் கேள்வி தொடர்பான பிரச்சினையானது, முதலாளித்துவ முறைமையில் காணப்படு வதைப் போல் தீவிரமானதாகத் தொடர்ந்திருக்காது. வட்டியில் லாத போது முதலீட்டின் விரிவாக்கம் மீதுள்ள தடைகள் அகற்றப்பட்டுவிடும். பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்தில் அல்லது நிறைதொழில் மட்டத்துக்கு அண்மிய இடத்திலேயே தன்னை நிலைப்படுத்த விரும்பும். இப்பொருளாதார ஒழுங்க மைப்புக்கள், விளம்பரங்கள் மூலம் செயற்கையாக கேள்வியை உருவாக்குவதற்கு முதலாளித்துவ முறைமையில் காணப்படு வதை விடவும் குறைந்தளவிலேயே கட்டாயப்படுத்தும். இஸ் லாமிய பொருளாதாரத்தில் விளம்பரங்களின் விரிவு, உள்ளடக்கம், நோக்கம் மற்றும் செலவு என்பன ஒரு புதிய மாற்றத்துக்காகவே சகித்துக்கொள்ளப்படுகின்றது.

கேள்வி உருவாக்கமானது ஒரு சாதாரண செயற்பாட்டில் இருக்காத போது ஓர் இஸ்லாமிய பொருளாதாரம் எவ்வாறு தானாக இயங்கும் என்ற வினாவானது சில முக்கியத்துவங்களை வேண்டி நிற்கின்றது. நாம் கலந்துரையாடியதைப் போல வளங் களின் உரிமை பரவலாக சிதறிக் காணப்படும் போது ஒரு சமூகத்தைத் தெரிவதற்கும், ஓர் உயர் மட்ட செயற்றிறனான கேள்வியை பேணுவதற்கும் இஸ்லாம் விரும்புகின்றது. ஆகவே, அது எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத வளங்களையும் முழுமை யாகப் பயன்படுத்தச் செய்யும். இவ்விறுதி முடிவை அடைவதற்கு இஸ்லாமிய பொருளாதாரம் செல்வந்தரிடமிருந்து வறியோருக்கு செல்வத்தினை உரிமை மாற்றம் செய்யும் பொறிமுறையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அது 'ஸகாத்'தின் எல்லையை (நிஸாப்) வருட நிறைவின் போது குறைந்தபட்சம் உடைமை யாகக் கொண்டுள்ள ஒவ்வொருவரும் தமது மொத்த செல்வத் தில் குறிப்பிட்ட வீதத்தினை (2.5வீதம்)[3] 'ஸகாத்'தாக வறிய மற்றும் தேவையுடையோருக்கு அவர்களது நலனிற்காக வேண்டி செலவிடுமாறு கட்டாயப்படுத்துகின்றது.

மறுபுறம், அது ஒருவருடைய உறவினர், அயலார் மற்றும் அனைத்து சமூகங்களின் நலன்களுக்காக தன்னார்வத்துடன் செல விடுவதை குறிப்பிடும் 'இன்ஃபாக்'கினையும் ஊக்குவிக்கின் றது. வாரிசுரிமையின் இஸ்லாமிய சட்டம் கூட செல்வத்தின் பரவலுக்குப் பரந்தளவில் பங்காற்றியுள்ளதைக் காணலாம். இவ் வாறு, இஸ்லாம் நிறைதொழில் மட்ட சமநிலையை அடைவ தற்குப் போதுமான உயர் செயற்றிறனான கேள்வியைத் தொடர்ந்து பேணுவதற்காக வேண்டி, வறியோருக்கு தேவைப்படும் கொள் வனவு சக்தியினை செல்வந்தரிடமிருந்து உரிமை மாற்றம் செய்து வழங்கியுள்ளது.

# 5. பணத்தின் வகிபாகம்

## 5.1 வட்டி மற்றும் பொதுப்படுகடன்

முதலாளித்துவ உலகு, பணத்தைப் பரிமாற்றுடகமாகவும் கணக்கீட்டு அலகாகவும் மட்டுமன்றி ஒரு பண்டமாகவும் பார்க்கின்றது. எனவே, ஏனைய பண்டங்களைப் போலவே அதற்கும் ஒரு விலை உண்டு என்கின்றது. ஒருவர் அதைப் பெற வேண்டுமாயின், அவர் அதற்கான விலையை செலுத்த வேண்டும். இவ்விலையே வட்டி எனக் கூறப்படுகின்றது. வட்டியானது அநீதியை ஆரம்பித்து வைக்கும் மிகச் சக்தி வாய்ந்த கருவி என்பதற்கு மிக ஆரம்பகாலத்திலிருந்தே தாராளமான சான்றுகள் உள்ளன. இன்றைய காலகட்டத்தில் வட்டியின் சர்வாதிகாரத்தை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பாரிய பொதுப் படுகடனிலிருந்து தெளிவாக விளங்கிக்கொள்ள முடியுமாயுள்ளது.

கடந்த பல வருடங்களின் அனுபவத்தின் படி, குறைவருமானத்தையுடைய பொருளாதாரங்களின் பொதுப் படுகடன் 1991ஆம் ஆண்டாகையில் 426 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலாகக் காணப்பட்டது. 1982 இலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான உதவுத் தொகையின் பாய்ச்சலானது, அந் நாடுகளால் வட்டி மற்றும் வட்டிக்குரிய மூலதனத்தின் (அசல்) அமைப்பில் கொடுக்கப்பட்டதை விடக் குறைவானதாகும். 2011ஆம் ஆண்டில் உலக நாடுகளின் வெளிநாட்டுக் கடனானது 70.02 ட்ரில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. மேலும், கடன் சேவையானது பொதுவாக 50 சதவீதத்தை விட அதிகமான வட்டியை உள்ளடக்கியிருப்பதோடு, வருடா வருடம் அதிகரித்தும் செல்கின்றது. இது வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்கான ஒரு தேறிய வள வெளிப்பாய்ச்சலிருப்பதைக் காட்டுகின்றது. வறிய நாடுகள், வட்டியின் மூலம் நிலையான வருமானம் பெறும் செல்வந்த தேசங்களுக்குக் கடன் தொகைக்கான வட்டியைக் கொடுத்து முடிப்பதற்காகவே கடுமையாக உழைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

## 5.2 வட்டி மற்றும் உறுதியற்ற வெளிநாட்டு நாணய பரிமாற்றம்

*வட்டி வீதத்தில் ஏற்படும் சிறு சிறு வேறுபாடுகள் கூட, எளிதில் மாறுகின்ற வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தையில் ஒரு முக்கிய மான வகிபாகத்தைக் கொண்டுள்ளன. இதன் மூலமே, உலகின் நிதிச் சந்தைகள் ஒவ்வொரு நாளும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சுமார் 200 பில்லியன் அமெரிக்க டொலர்களை நகர்த்துகின்றன. இந்த வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தின் 90 சதவீதமானவை, உத்தேச நோக்கத்துடன் வெறுமனே நாணய மாற்று வீதம் மற்றும் வட்டி வீதம் என்பவற்றின் வேறுபாடுகளின் மூலம் வருமானம் பெற முனைகின்றன.*

*இந்தக் கொடுக்கல் வாங்கலானது கிட்டத்தட்ட ஒரு மணிக் கூட்டின் செயற்பாட்டை ஒத்திருக்கின்றது. இந்நிதியின் உரிமை மாற்றமானது நாணய மாற்று வீதத்தில் தளம்பலுக்கு இட்டுச் செல்வதோடு, நிதியினுடைய நகர்வுக்கு சார்பான போக்கையும் பலப்படுத்துகின்றது. இவ்வாறு, மூலதனத்தின் மீதான வட்டி யானது சர்வதேச நாணய முறைமையின் தளம்பலுக்கான ஒரு பிரதான காரணியாகக் காணப்படுகின்றது. மேலும், அதிகரித்து வரும் சட்டரீதியற்ற நிதிப் பாய்ச்சல்களால் 2001-2010 காலப் பகுதியில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 5.86 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களை இழந்துள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது.*

## 5.3 வட்டி மற்றும் சுற்றாடல்

*வட்டி, சுற்றாடலை மாசுபடுத்தல் மற்றும் சீர்குலைப்பதில் பிரதான பங்காற்றுகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அவர்களுடைய நிலத்தை அளவுக்கதிகமாக பயன்படுத்துகிறார் கள். கடனை வட்டியுடன் மீளச் செலுத்துவதற்கான மிகப் பெரிய அழுத்தம், நல்ல நிலங்களையும் பாலைவனங்களாக மாற்றி வருகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்கொண்டு வரும் இந்தப் பாரிய கடன்கள் மற்றும் சென்மதி நிலுவை பிரச்சி*

னைகள் என்பன அந்நாடுகளை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்களை நோக்கித் திருப்பியுள்ளன. இந்நிறுவனங்களால் சுமத்தப்படும் நிபந்தனைகள், அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளை அவர்களது ஏற்றுமதியை அதிகரிக்க வற்புறுத்துவதோடு, தமது சுற்றாடல் வளங்களை மிக ஆழமாக அகன்றெடுக்கவும் கட்டாயப்படுத்துகின்றன.

## 5.4 வட்டி மற்றும் பணவீக்கம்

வேலைவாய்ப்பு மீதான வட்டியின் எதிர்தாக்கம் மற்றும் அதனுடைய வகிபாகமானது வர்த்தக சகடோட்டத்துக்கும் வழி கோலுகின்றது. எவ்வாறெனினும், மரபு ரீதியான பொருளியல் கள், வட்டி மற்றும் பணவீக்கம் என்பவற்றிடையே ஓர் எதிரான தொடர்பிருப்பதாகவே நம்பியிருந்தன. இதன் விளைவாக, பண வீக்கத்தை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக வட்டி வீதத்தை அதி கரிப்பதற்கு ஆதரவாகவே பொதுக் கொள்கைகள் வடிவமைக் கப்பட்டன. ஆனால், அண்மைய ஆய்வுகள் பணவீக்கம் மற்றும் வட்டி என்பன நேரடியான தொடர்புடையன எனக்கூறுகின்றன. இது ஏனெனில், வட்டியானது உற்பத்திச் செலவுக்குள் உள்ள டங்குவதால், நிறுவனங்கள் விலை அதிகரிப்பினூடாக அதை மீளப் பெறுகின்றமையாகும். நிறுவனங்கள், பொருளாதார சக்தி யினால் நிலையான விலை மட்டத்தை அனுபவித்துக் கொண்டி ருக்க முடிவதால் வட்டிச்சுமையை நுகர்வோருக்கு நகர்த்த முடியும். அரச மட்டத்தில், அரசாங்கங்களின் செலவினப் போக்கு, அவர்களுடைய வருமான வழிகளுக்கும் மேலாகக் காணப்படு கின்றது. மேலும், அவர்கள் அதிகளவான தொகையைக் கொண்ட கடனை 'அபிவிருத்தித் திட்டங்களுக்காக' என்ற பெயரிலேயே பெறுகின்றனர்.

ஆனால், கடன் பெற்ற தொகை மற்றும் அதன் மீதான வட்டித் தொகை என்பவற்றை மீளச் செலுத்துவதற்குப் போதுமான வளங்களை அவர்களால் உருவாக்க முடியாமல் உள்ளது. இது பற்றாக்குறை நிதியீட்டத்துக்கு இட்டுச் செல்வதோடு, தீவிர

பணவீக்கத்திற்கும் காரணமாயமைகின்றது. இதனால், இன்று முழு உலகுமே பணவீக்கத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளது. ஆனால், எவருக்குமே உண்மையான குற்றவாளி மூலதனத்தின் மீதான வட்டியே என்பதை அடையாளப்படுத்தும் துணிச்ச லில்லை.

## 5.5 பணத்தின் இஸ்லாமிய எண்ணக்கரு

முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் இஸ்லாம், பணத்தைப் பரிமாற்றூடகமாகவும் பெறுமானத் திரட்டாகவுமே பார்க்கின்றதே யன்றி, ஒரு பண்டமாகவல்ல. ஏனெனில், பணம் தானாகவே எத்தொழிற்பாட்டையும் நிறைவேற்ற முடியாது. எப்போது பணம் ஒரு மெய்ச் சொத்துக்காக பரிமாற்றப்படுகின்றதோ அல்லது சேவையைக் கொள்வனவு செய்ய பயன்படுகின்றதோ அப்போதே அது பயனுடையதாக மாறுகின்றது. இதனால், அதை கடனிற்கான கொடுப்பனவாகப் பயன்படுத்த முடியாது. நபி (ஸல்) அவர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட பரந்த அறிவின் மூலம் பல உண்மை களை இவ்வுலகுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவர்கள் பணத் தின் மீதான வட்டியை மட்டும் சட்ட ரீதியற்றது என்று கூற வில்லை. பண்டமாகவே பணம் கருதப்படுமானால் பணமான அப்பண்டத்தின் பரிமாற்றம் மற்றும் பிற்கொடுப்பனவு அடிப் படையில் அதன் பெறுமதிக்கு சமமற்ற தொகைகளை வழங்குதல் என்பவற்றையுமே தடுத்துள்ளார்கள். இஸ்லாம் வட்டியைத் தடுத்து, பல ஆகுமான பொருளாதார வழிமுறைகளை எமக்குக் காட்டித்தந்துள்ளது.

முஸ்லிம்கள் உலகில் பல நூற்றாண்டுகள் நிலைத்த ஒரு நாகரீகத்தின் சொந்தக்காரர்கள். சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக உலகின் மிகப் பெரிய நிலப்பிரதேசத்தில் வியாபித் திருந்த இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் வட்டி அமைப்பு காணப்பட வில்லை. ஆயினும், இக்காலப்பிரிவில் பொருளாதார வளமும், சுபீட்சமும் உச்சநிலையில் காணப்பட்டமைக்கு வரலாறு சான்றாக இருக்கிறது.

மாறாக, வட்டியை அடிப்படையாகக் கொண்ட இன்றைய உலகப் பொருளாதாரம் எந்தளவு தூரம் உலக மக்களின் பொருளாதார வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறி இருக்கின்றது என்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. வட்டி பூச்சிய நிலைக்குச் செல்லாத வரை உலக பொருளாதாரம் சீர்பெற முடியாது என்பது பொருளியல் ஆய்வாளர்கள் பலரின் கருத்தாகும். அதாவது, வட்டி அமைப்பு முற்றாக ஒழிக்கப்படுவதனூடாகவே உலகில் ஆரோக்கியமான ஒரு பொருளாதார ஒழுங்கு உருவாக முடியும்.

வட்டி என்பது ஒரு வகையில் நவீன காலனித்துவமாகும். கடனின் கோரப்பிடியில் எவ்வாறு மூன்றாம் உலக நாடுகள் சிக்கித் தவித்துக்கொண்டு இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் நாளை பிறக்க இருக்கும் குழந்தையும் கூட பெருந்தொகைக் கடனுடன்தான் பிறக்கின்றது. இதற்கு நமது நாடும் விதிவிலக்கல்ல. பல நாடுகளால் செல்வந்த நாடுகளினதும், உலக நிதி நிறுவனங்களினதும் கடன்களை அடைக்க முடிவதில்லை. வருடாவருடம் குட்டி போடும் வட்டியைக் கட்டுவதே இந்த நாடுகளுக்குப் பெரும்பாடாக இருக்கின்றது. பழைய கடன்களை அடைப்பதற்காக பல நாடுகள் புதிய கடன் வாங்கும் அவலமும் உலகில் தொடர்கின்றது. சில போது புதிதாகப் பெற்ற கடனால் பழைய கடனை அடைக்க முடிவதில்லை. மாறாக, அதற்கான வட்டியைச் செலுத்துவதிலேயே குறித்த தொகை தீர்ந்துவிடுகின்றது. உதவி என்ற பெயரில் வழங்கும் இத்தகைய கடன்கள் மூலமே மூன்றாம் உலக நாடுகளில் செல்வந்த நாடுகளின் ஆதிக்கம் நிலைநாட்டப்படுகின்றது. இவ்வாறுதான், வட்டி அமைப்பானது கலியுக காலனித்துவத்திற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது.

வட்டிக்கான பிரதியீடு வியாபாரமாகும். இது பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு குறிப்பிடுகிறது:

> ''... அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி உள்ளான்; வட்டியை ஹராமாக்கியுள்ளான்...'' (2:275)

எவர் வர்த்தக, வியாபார நோக்கங்களுக்காக வட்டி அமைப்பை நாட வேண்டியுள்ளதோ அவருக்கு இஸ்லாம் 'முஸாரஆ' எனும் விவசாயப் பங்குடமை, 'முழாரபா' என்ற கூட்டுப் பங்காண்மை, 'முஷாரகா' என்ற கூட்டுறவு வர்த்தகம், 'அஸ்ஸலம்' என்ற முற்பணக் கொடுப்பனவு வியாபாரம், 'அல்பைஉல் முஅஜ்ஜல்' என்ற தவணைக் கொடுக்கல் வாங்கல் முதலான பல்வேறு வியாபார அமைப்புக்களைத் தீர்வாக அமைத்துள்ளது.

வட்டியை அடிப்படையாக வைத்துத் தனது பொருளாதாரத்தை அமைத்துக் கொண்ட சமூகத்தில் உலோபித்தனம், சுயநலம், இறுகிய மனப்பான்மை, பேராசை மற்றும் பணத்தை பூஜிக்கும் தன்மை போன்ற மோசமான குணங்களே மிகைத்து நிற்கும் எனக் கூறப்படுவதில் தவறில்லை.

மேலும், இஸ்லாமிய பொருளாதார ஒழுங்கானது வட்டியைத் தடுப்பது கொண்டு, வேலையின்மை, பணவீக்கம், எளிதில் மாறும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம், வர்த்தக சகடோட்டம் மற்றும் இயற்கை வளங்கள் மிகுதியாக குறைவடைதல் என்ற பிரச்சினை களைக் கவனத்திலெடுக்கின்றது.

## 5.6 இஸ்லாமிய பொருளாதாரத்தில் வங்கித் தொழில்

ஓர் இஸ்லாமிய பொருளாதாரத்தில் வங்கியியல் முறைமை யானது இலாபப் பகிர்வு என்ற எண்ணக்கருவை அடிப்படை யாகக் கொண்டது. அதேபோல் நட்டமும் பகிரப்பட வேண்டும். யாருக்கு அவர்களது சேமிப்பிலிருந்து வருவாய் பெற வேண் டுமோ, அவர்கள் இடரபாயத்தையும் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும் என்றே பொதுத் தத்துவம் கூறுகின்றது. அதாவது, இடரபாயம் கூடிய முதலீட்டிற்கு அல்லது சேமிப்பிற்கு வருவாயும் அதிகம் என்கின்றது. நிறுவனங்கள் அவர்களது மூலதனத்தின் மீதான வருவாயைப் பெற விரும்பின், நட்டத்தையும் பகிர்வதற்கு வங்கிகள் முன்வர வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தியில் பங்கு மூலதனத்தின் முக்கியத் துவமானது நிதியியல் வட்டாரங்களால் வெகுவாகப் பாராட்டப்

படுகின்றது. ஓர் உண்மையான இஸ்லாமிய நிதிக் கட்டமைப் பானது மூலதனமும் ஏனைய உற்பத்திக் காரணிகளைப் போல் இடரினைத் தாங்க வேண்டுமெனக் கோருகின்றது. வட்டியடிப் படையிலான கொடுக்கல் வாங்கல்கள் வங்கி முறைமையிலிருந்து அழிக்கப்படுமானால், மற்றும் மூலதனம் பங்கு அடிப்படையில் கிடைக்கப் பெறுமானால் மூலதனத்தின் எளிதில் மாற்றமடையும் உரிமை மாற்றங்கள் தணிக்கப்படும். எனவே, உலகின் நிதி பல சாலிகள் இதன் பிறகும் தமது பணத்தை மூன்றாம் உலக நாடு களுக்கு வழங்க முன்வரா. மூன்றாம் உலக நாடுகளும் எப் போதுமே தமது உண்மையான தேவைகளுக்காக மட்டுமே கடன் வாங்காது, அதிகளவான கடனை தாமாகவே வருவித்துக் கொள் கின்றன.

மாறாக, செல்வந்த நாடுகளின் நிதி நிறுவனங்கள் முழுவதும் தமது தேவைக்கதிகமான திரவத் தன்மையைப் பேணியதால் (முக்கியமாக 1973 எண்ணெய் நெருக்கடிக்குப் பின்னர்) அவர் களுடைய மிகை நிதியை இலாபகரமாக முதலிடுவதற்குரிய இடமாக வறிய நாடுகளைக் கண்டதோடு, கடன்களை வழங்கு வதன் மூலம் வழிந்தோடும் இத்திரவ நிலையையும் முகாமை செய்தன. நிதி நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களை மேலும் மேலும் சேர்த்துக்கொள்வதற்காக 'அபிவிருத்தி' இலாகாக்களை யும் அமைத்தன. இந்நிறுவனங்கள், அவர்களைச் சார்ந்திருக்கும் அத்தகைய வாடிக்கையாளர் அமைப்புக்களுக்கு அதிகமான ஆய்வுகளின் பொருட்டு இலவச ஆலோசனைகளை வழங்குவ தோடு, சிறந்த கருத்திட்டங்களையும் அடையாளம் காட்டின.

இவ்வாறு, வட்டியுடனான கடனுக்கான கேள்வி வங்கிகளா லேயே உருவாக்கப்படுகின்றன. இஸ்லாத்தைப் போல் ஏதாவது ஒரு முறைமை இருப்பின், வட்டியின் கவர்ச்சி அகற்றப்பட்டு, வங்கிகள் முதலீட்டினது வருவாயைப் போலவே நட்டத்தையும் பகிரும். பொதுப் படுகடனின் அளவும் கூட சுருங்கும். உண்மை யில் உலகின் கடனானது வழங்கப்படும் வர்த்தகக் கடனின் விரிவு வரையே பொதுவாகத் தொடர்ந்திருக்கும். இதன்

விளைவாக, இன்று நடைபெறும் வறிய நாடுகளிலிருந்து செல் வந்த நாடுகளுக்கான வளங்களின் வெளிப்பாய்ச்சல் நிறுத்தப் பட்டு முழு உலகுமே, மக்கள் அனைவருமே வாழ்வதற்கு மிக விருப்பமான இடமாக அமையும்.

## 6. நுகர்வோர் நடத்தை

### 6.1. நுகர்வுச் சார்பு வாதம்

முதலாளித்துவ பொருளாதாரங்களில் நுகர்வோர் நடத்தை யானது நுகர்வோர் இறைமை என்ற சொல்லைக் கொண்டு விளக்கப்படுகின்றது. இது ஒருவர் தான் விரும்பும் எதையும் வாங்கும் சுதந்திரத்தைக் கொண்டுள்ளார் என வாதிடுகின்றது. மேலும், நுகர்வோர் விளம்பரங்களுக்கு அடிமையாகும் நிலையும் காணப்படுகின்றது. நுகர்வோர் மத்தியில் நிலவும் 'புதுமையை அல்லது நவீனத்துவத்தைப் பின்தொடர்வது சமூக அந்தஸ்தின் உயர்மட்ட நிலையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது' என்ற எண்ணமானது புதிய பொருட்களை வாங்குவதற்குத் தூண்டு தலாக அமைகின்றது. உளவியல் ரீதியாக, நுகர்வோர் அவர் களுடைய சமூக வட்டாரத்தில் புதிய பொருட்களை உடைமை யாகக் கொண்டிருப்பது கொண்டு ஏனையோரோடு ஒப்பிட்டுப் பெருமையடைகின்றனர். அத்தகைய ஒரு மதிப்பீட்டு முறைமை யினால், புதிய பொருட்களை உடைமையாகத் தேடிப் பெற்றுக் கொள்வதில் தோல்வியடைபவர் தமது சகபாடிகளாலும், அயலா ராலும் தாழ்வாக நோக்கப்பட நேருகின்றது. இது ஏனையோரைத் தோற்கடிப்பதற்கான தூண்டுதலை வழங்குவதோடு, முடிவடை யாத போட்டா போட்டிப் பந்தயத்துக்கும் இட்டுச் செல்கின்றது. முதலாளித்துவ நாடுகளில் செல்வந்த பொருளாதாரங்கள் பெரு மளவு விரயங்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய மிகப் பெரிய நுகர்வுச் சமூகங்களாக மாறியுள்ளன.

இத்தகைய மனப்பாங்கின் தாக்கமானது, உலக சனத்தொகை யில் 25சதவீதமாக மட்டுமேயுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மக்கள், ஏனைய 75 வீத மக்களை விடவும் மேலதிகமாக

*15 தடவை கடதாசியை, 10 தடவை உலோகங்களை, 12 தடவை சக்தியை நுகரக் காரணமாகின்றது. இது, பூமியிலுள்ள வளங்கள் உலகிலுள்ள அனைவரும் ஒரே வாழ்க்கை முறையைப் பின் தொடர்வதற்குப் போதுமானதாக இல்லை எனக்கூறுகின்றது. எனவே, வளப்பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான மிகப் பெரும் தேவை காணப்படுகின்றது. ஆனால், முதலாளித்துவ முறைமையானது வீணான நுகர்விலிருந்து மக்களைத் தடுப்ப தற்குரிய எத்தகைய பொறிமுறையையும் கொண்டிருப்பதில்லை. மாறாக, அதனுடைய வங்கிகள், ஊடகங்கள், வர்த்தக அமைப் புக்கள் மற்றும் அரசாங்கங்கள் நுகர்வைத் தூண்டுவதில் வட்டியை நிலைப்படுத்தியுள்ளன. ஆகவே, முதலீடு உயர் மட்டத்தை அடைகின்றது. வட்டியை அழிப்பதற்குப் பதிலாக மூலதனத்தின் சுதந்திரமான பாய்ச்சலின் மூலம் உற்பத்தி வழிக் குரிய தடைகளை அகற்றுவதோடு, நுகர்வையும் அதிகரிக்கச் செய்யும் இந்தக் குழப்பமான அணுகுமுறையானது, பொருளா தாரச் சக்கரம் நகர்வதினூடே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.*

## 6.2 எளிய வாழ்க்கை மற்றும் வளங்களின் உற்பத்திப் பெருக்கப் பயன்பாடு

*பொருளாதார வகைகளுள், இஸ்லாமிய பொருளாதாரமானது இஸ்லாமிய பண்பாட்டுடன் கூடிய ஒரு குறை நுகர்வுப் பொரு ளாதாரத்தையே ஏற்கின்றது. இஸ்லாமிய அணுகுமுறையானது, முடியுமானவரை உற்பத்தியைப் பெருக்குவதற்காகவே வளங் களைப் பயன்படுத்துமாறும், அதன் உண்மையான பயனின் எல்லையை அடையும் வரை அதை இடம் மாற்றாதிருக்குமாறும் தனிநபர்களை வேண்டி நிற்கின்றது. நபி (ஸல்) அவர்கள் எளிய வாழ்க்கைக்கு மிகப் பெரிய ஊக்கத்தைக் கொடுத்ததோடு, ஆடம் பரங்களை விட்டும் மக்கள் தவிர்ந்து வாழ்வதையே ஊக்கப் படுத்தியுள்ளார்கள். உயர் வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கு முடியுமானதோர் நிலையிலும், அம்மக்கள் ஏழ்மைக் கோலத் திலும் இடர்பாடுகளுடனுமே வாழ வேண்டும் என இஸ்லாம் பணிக்கின்றது என்பது இதன் அர்த்தமல்ல.*

மாறாக, முதலாளித்துவப் பொருளாதாரங்களில் நாம் அவதானிக்கும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை விடக் குறைவான ஏற்றத்தாழ்வுகளையுடைய ஒரு சமத்துவமான சமூகத்தைப் பற்றியே இஸ்லாம் பேசுகின்றது. வாழ்க்கை பற்றிய இஸ்லாமிய பார்வையானது, யாரிடம் உயர் வாழ்க்கைத் தரத்துக்கான பொருளாதார வசதி காணப்படுகின்றதோ அவர்கள், ஏனையோரும் அதே வாழ்க்கை முறையை அனுபவிப்பதற்காக பொருளாதார உதவிகளைச் செய்யத் தன்னார்வத்துடன் முன்வருமாறு அழைக்கின்றது. இது மட்டுமே, சமூகத்திலுள்ள அனைவரும் ஒப்பிடக்கூடிய வகையில் உயர் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரமட்டத்தை நோக்கி நகர்வதற்கு உதவிபுரிகின்றது.

## 6.3 இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் நுகர்வோர் நடத்தை

இஸ்லாமிய விழுமியங்கள், மேற்கூறப்பட்ட நுகர்வோர் முறைக்கு ஆதரவளிக்கின்றது. இஸ்லாமிய சமூகத்தில் 'தக்வா' (இறையச்சம்) மிக உயர்வான ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஒரு நபரிடம் இறையச்சம் அதிகமாக இருப்பின், அவர் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுகின்றார். தக்வாவானது நீதி (அத்ல்), நல்லது செய்ய விரும்புதல் (இஹ்ஸான்), அல்லாஹ்வுக்காக பரந்த மனப்பான்மையுடன் செலவிடல் (இன்ஃபாக்) மற்றும் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தல் (திக்ர்) போன்ற விழுமியங்களின் ஒரு தொகுதியை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு, தக்வாவானது விழுமியங்களின் பன்மைத்துவப் பரிணாமங்களைக் கொண்ட ஒரு பெறுமதியாகக் காணப்படுகின்றது. யார் அதனை மிகுதியாகக் கொண்டிருக்கின்றாரோ அவரிடம் நல்லொழுக்கக் குணங்கள் பலவற்றைக் காணமுடியும். இஸ்லாமிய சமூகத்தில் சிறந்த அந்தஸ்தைப் பெற விரும்பும் மக்கள் தக்வாவில் மிகை நிலையை அடைய முயற்சிக்கின்றனர். பொருளியல் வார்த்தையில் தக்வா என்பது 'திருப்தியளிக்கக்கூடிய மனநிலையாகும்'. அது, மனித சக்திகளை ஒன்றுபடுத்துவதன் மூலம் ஆன்மீக மற்றும் சமூக முன்னேற்றம் என்ற நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒரு நிலைத்து நிற்கக்கூடிய முயற்சியை மேற்கொள்கின்றது.

## 6.4 இஸ்லாத்தின் பார்வையில் நுகர்வுப் பொருள்

ஷரீஅத் அடிப்படையில் விற்கப்படும் ஒரு பொருளானது சுத்த மானதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். இப் பொருள் விற்பவருக்கு சொந்தமானதாகவும் வாங்குபவருக்கு ஒப்படைக்கும் தகுதி உடையதாகவும் இருத்தல் வேண்டும். விற்பவரின் கையிருப்பில் உள்ளதாகவும், பொருளும் அதன் விலையும் குறிப்பாக அறியப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு விற்பனையாளரால் விற்கப்படும் பொருளே நுகர் வோரால் நுகரப்பட முடியும்.

மக்களுக்குப் பொருள் எப்போதும் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதற்குத் தடையாக உள்ள பதுக்கல் எந்த உருவில் இருந்தாலும் தடுக்கப்பட வேண்டும். பொருட்களைப் பதுக்கி வைத்து, செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்கி, பொருட்தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதிக இலாபம் பெற முயற்சிக்கின்றவர்களை அல்லாஹ் வெறுக்கின்றான்.

வேண்டுமென்றே விலையை ஏற்றுவதற்காகத் தந்திரம் செய் வதை (நஜஷ்) நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளதாக நபித்தோழர் இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: புஹாரி)

மேலும், பொருள் பற்றிப் பொய்யுரைத்தல், அதன் அளவை நிறுவைகளில் மோசடி செய்தல், திருடப்பட்ட பொருட்களை விற்றல் மற்றும் பொருளில் கலப்படம் செய்தலை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அரசு சந்தையில் தலையீடு செய்து நுகர்வோர், உற்பத்தியாள ரைப் பாதுகாப்பதற்காக முறையே உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலையை சமநிலைக்குக் கீழாகவும், குறைந்தபட்சக் கட்டுப் பாட்டு விலையை சமநிலைக்கு மேலாகவும் விதிக்கின்றது. வியா பாரிகள் நுகர்வோருக்கு அநீதி இழைக்கின்ற போதும் கொள்ளை இலாபம் உழைத்து பணம் சேகரிக்க முனைகின்ற போதும் உணவுப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதை இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

### 6.5 வளங்களைப் பாதுகாத்தல்

இஸ்லாம் மார்க்கமானது நுகர்வின் போது வளங்கள் குறைவடைவதைக் கட்டுப்படுத்துவதையும் தாண்டி, அவை சிதைவுறாமல் பாதுகாக்கப்படுகின்ற ஒரு பொருளாதாரத்தைப் பற்றியே பேசுகின்றது. இன்றைய சூழ்நிலையில், இஸ்லாமிய அணுகுமுறையானது புவியிலுள்ள அனைத்து மீளமைக்க முடியாத வளங்களையும் பாதுகாப்பதற்காக உலக நாடுகளிடையே ஒரு நெருக்கமான ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீளமைக்க முடியாத வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் தனிப்பட்ட நாடுகளின் கொள்கைகளைக் கண்காணிப்பதற்கும், மதிப்பிடுவதற்குமான ஒரு முறைக்கு கட்டளையிடுகின்றது. மேலும், அது சர்வதேச கணக்காய்வு சபையைக் கொண்டு, ஒவ்வொரு தனிப்பட்ட நாடுகளினதும் ஒரு சுற்றாடல் கணக்காய்வுக்குப் பரிந்துரை செய்யும். இது, சுற்றாடல் பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குரிய பொறுப்புடன் கூடிய ஒரு சர்வதேச பொறிமுறையின் தேவையை வேண்டி நிற்கின்றது.

## 7. வறுமை

### 7.1 சமகால பொருளாதார ஒழுங்கு

உலகின் வறிய மக்களின் தொகை, ஒரு தசாப்தத்துக்கு முன்பிருந்ததை விட இன்று மிக அதிகமாகவுள்ளது. 2008ஆம் ஆண்டின் கணிப்பீட்டில் 1.29 பில்லியன் மக்கள் முழு வறுமை நிலையிலுள்ளனர். இதில் 400 மில்லியன் மக்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1990-2010 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 663 மில்லியன் மக்கள் முழு வறுமை மட்டுத்துக்கு நகர்ந்துள்ளனர். அதேபோல், பிராந்திய ரீதியாக உப ஸஹாராப் பகுதியிலேயே உலகின் 47 வீதமான வறுமை நிலவுகின்றது. இதனால், உலகின் வறிய மற்றும் செல்வந்த நாடுகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வும் அதிகரித்துக் கொண்டே

செல்கின்றது. உலகில் வறுமையைக் குறைப்பதில் மரபு ரீதியான கோட்பாடுகளில் முக்கியமான ஒன்றாகக் காணப்படும் 'கீழ் நோக்கிக் கசிந்து செல்லும் விளைவு' தோல்வி கண்டுவிட்டது. மாறாக, இன்றைய பொருளாதார முறையானது வறிய நாடு களிலிருந்து செல்வந்த நாடுகளுக்கான வளங்களின் மாற்றத் திற்கே இட்டுச்சென்றுள்ளது. செல்வந்த நாடுகளின் கொள்கை கள் அவர்களுடைய விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதினூ டாகவும், வர்த்தகத் தடைகளை மேற்கொள்வதினூடாகவும் வறிய நாடுகளின் பண்டங்களுக்குப் போட்டியாகச் செயற்படுகின்றன. அதேநேரம், வறிய நாடுகள் தமது படுகடனை மீளச் செலுத்துவதற் கேற்ற வகையில் அந்நிய செலாவணியை உருவாக்குவதற்காக அவர்களது பண்ட வெளியீட்டை அதிகரிக்க முயற்சி செய்கின் றன. இவை 1980களில் பண்டங்களின் விலைகள் கீழ்நோக்கி வீழ்ச்சியடைய ஏதுவாயின. இதன்விளைவாக, இக்காலப்பகுதி யில் சில வறிய நாடுகளின் தலா வருமான வளர்ச்சி வீதங்கள் எதிர்க்கணிய பெறுமதியைக்கூட அடைந்தன. இன்றும் கூட வறிய நாடுகள் தமது தலா வருமானத்தை உயர்த்துவதற்கு இயலாத நிலையிலேயே உள்ளன. 2011ஆம் ஆண்டு உலக வங்கி அறிக் கைப் படி, 905 அமெரிக்க டொலரினை விடக் குறைவான தலா வருமானத்தைக் கொண்ட நாடுகளே குறைவிருத்தி நாடுகளாகும். 2011 இன் படி, உலகிலுள்ள வறிய நாடுகளின் சராசரி தலா வருமானம் 749 அமெரிக்க டொலராகவே காணப்படுகின்றது.

## 7.2 சமூக மற்றும் அரசியல் குறைவிருத்தி

எவ்வாறெனினும், பல நாடுகள் அபிவிருத்திக்கு அவசியமான பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற் கும் தீவிர முயற்சி மேற்கொண்டதை மறுக்க முடியாது. ஆனால், இம்முயற்சிகளால் ஏன் ஒரு சிறந்த அடைவை அடைய முடி யாமல் போனது என்ற கேள்வியும் தொடர்ந்து கொண்டேயிருக் கின்றது. இதற்கு பொருளாதாரத்தை விட சமூக மற்றும் அரசியல் காரணிகளே மிக முக்கிய பங்காற்றியுள்ளன.

(அ) இக்குறைவிருத்தியின் மூலவேர்கள், இந்நாடுகளால் பின்பற்றப்பட்ட அபிவிருத்தித் தத்துவத்துவங்களிலேயே காணப் பட்டன. கோட்பாடுகளின் படி, அபிவிருத்தி என்பது பௌதீக மூலதன இருப்பு மற்றும் உட்கட்டமைப்பில் ஏற்படுகின்ற ஓர் அதிகரிப்பாகும். மொத்த தேசிய உற்பத்தியானது (GNP) அனைத்து அபிவிருத்தி முயற்சிகளையும் மையப்படுத்தியிருந்தாலும், இந்த GNP அதிகரிப்பின் மூலம் பயன் பெறுபவர்கள் யார்? என்பது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இச்செயன்முறையினால், மூன்றாம் உலக நாடுகள் தமது சொந்த மக்களை மிக மோசமாகப் புறக்கணித்ததோடு, மக்களுடைய உற்பத்தித்திறன் இயலுமைகள் விடயத்திலும் குறைந்தளவிலேயே கவனம் செலுத்தின.

(ஆ) பௌதீக மூலதனத்தை உருவாக்குவதற்கும் அதிகரிப் பதற்குமே பலர் முயற்சிகளை மேற்கொள்ளும் போது மனித மூலதனம் மிகக் குறைவாகவே ஊக்குவிக்கப்படும். இந்நாடுகளின் அலுவல்கள், அந்நாடுகளிலுள்ள சாதாரண மக்களின் ஈடுபாடின்றி அரசியல் வாதிகள் மற்றும் பணிக்குழு ஆட்சியினாலேயே நடை பெற்று வருகின்றன. சாதாரண மக்களிடம் பொதுத் தாபனங் களுக்கான அங்கத்துவம் இல்லாததோடு, சட்டப் பாதுகாப்பும் கிடையாது. அவர்களுக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்வ தற்காக முயற்சி செய்வதற்கும் கூட சிறியளவு தூண்டுதலே காணப்படுகின்றது.

(இ) இந்நாடுகளின் வறிய மக்கள், தமது நாட்டு வளங்களைப் பயன்படுத்துவதற்குரிய உரிமை கிடையாது. இங்கு நிலமற்ற ஊழியர்களின் தொகை மிக அதிகமாக உள்ளது. அவ்வாறே சிறியதோர் நிலத்துண்டு இருந்தாலும் கூட அதனைப் பயன் படுத்துவதற்குத் தேவையான நிதி, தொழில்நுட்பம், நீர் வசதி, சந்தை, உரம் மற்றும் பூச்சிக் கொள்ளிகள் போன்ற எந்த வசதியும் அவர்களிடம் காணப்படுவதில்லை. இதனால், அவர்கள் விரை வில் தமது நிலத்தை விற்றுவிட்டு மீண்டும் தொழிலாளர் களாகவே வர விரும்புகின்றார்கள்.

*(ஈ) அனைத்து மூன்றாம் உலக நாடுகளிலும் ஊழல் எந்தத் தடையுமில்லாமல் நடைபெற்று வருகின்றது. இந்நாடுகளின் இராணுவ மற்றும் பணிக்குழு ஆட்சியில் ஊழல் மலிந்து காணப் படுகின்றது. ஊழலானது, வளங்கள் மீதான மக்களின் கவர்ச்சி யாலேயே ஏற்படுகின்ற ஒன்றாகும். சில முன்னணி வகுப்பினர்கள் உரிமைப் பத்திரம்* (Licenses), *அனுமதிச் சீட்டு* (Permits) *மற்றும் மலிவான வெளிநாட்டு நாணய பரிமாற்றம் என்பவற்றைத் தவ றான முறையில் பயன்படுத்துவதன் மூலமே இதனைச் செயற் படுத்திக் கொண்டிருக்கின்றனர். இச்செயன்முறையினால் உலகில் அதிகளவான மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.*

## 7.3 மேலதிக சனத்தொகை

*அனைத்து குறைவிருத்தி பிரச்சினைகளும் சனத்தொகை வெடிப்புக்கெதிராகவே போலியாகக் கூக்குரலிடுகின்றன. ஆனால், உண்மையில் மேலதிக சனத்தொகையென்ற சுலோகமானது கேலிக்கூத்தாகவேயுள்ளது. தென்கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளை வங்காள தேசம் மற்றும் இந்தியா ஆகிய நாடு களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பின், ஒரு நபருக்குரிய தலா பயிரிடக் கூடிய நிலம் வங்காள தேசத்தில் 0.23 ஏக்கரும், இந்தியாவில் 0.45 ஏக்கருமாகும். தென்கொரியா மற்றும் தாய்வானிலே இத்தலா பயிரிடக்கூடிய நிலமானது முறையே 0.12 மற்றும் 0.13 ஏக்கராகக் காணப்படுகின்றது. இருப்பினும், முன்னால் கூறப்பட்ட இரு நாடுகளும் மேலதிக சனத்தொகையைக் கொண்டவையாக கருதப் படும் நாடுகளாகும். எனினும், முன்னால் கூறப்பட்ட நாடுகளின் தலா ஏக்கருக்கான வெளியீடு பின்னால் கூறப்பட்ட நாடுகளின் வெளியீட்டை விட மிகக் குறைவாகவே இருக்கின்றது. காரணம், வெளியீட்டை அதிகரிப்பதற்குரிய தொழில்நுட்பம் காணப்ப டினும் விவசாயிகளுக்கு அதனைப் பயன்படுத்தத் தெரியாத நிலையே காணப்படுகின்றது.*

*வறிய நாடுகளின் அரசாங்கங்கள் மனித இன முன்னேற்றத்துக் கான சாத்தியங்களை மிகப் பெரியளவில் கண்டுகொள்ளவில்லை.*

அந்நாட்டு மக்கள் அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்வதற் குரிய சந்தர்ப்பங்களை வழங்குவதே ஒரு தேசத்தின் பாரிய சொத்தாகக் கருதப்படுகின்றது. இதனால், பொதுக் கொள்கைகள் பின்வருமாறு அமைய வேண்டும் என வலியுறுத்துகின்றது:

- வறியோர் வளங்களைப் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.
- தீர்மானம் மேற்கொள்வதில் வறியோரையும் உள்ளூர் மட்டத்தில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.
- பொருளாதார அதிகாரம் சிலரிடம் மாத்திரம் குவிந்து காணப்படும் தனியுரிமைச் சக்திக்கெதிராக வறியோருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.
- பொது நிர்வாகத்தினை நேர்மையாக நடாத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

### 7.4 நகரமயமாக்கம்

வறிய நாடுகளின் மற்றுமோர் அவலநிலை தான் சமச்சீரற்ற நகரமயமாக்கமாகும். இந்நாடுகளில் காணப்படும் சமூக, பொரு ளாதார அபிவிருத்திகள் கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறங்க ளுக்கான தொடர்ச்சியான வளப்பாய்ச்சலுக்கே இட்டுச் செல் கின்றன. கல்வி, நீர் வசதி, நீர் சுத்திகரிப்பு, தொலைத் தொடர்பு மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற பௌதீக வசதிகள் நகர்ப் புறங்களிலேயே செறிவாகக் காணப்படுகின்றன. இதன் விளை வாக, நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் சனத்தொகை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. இந்நகரங்களில் சேரிப் புறங்கள் அதிகரித்து வருவதோடு, இது குடிசார் சேவைகளை அதிகரிப்பதற்கான கட்டாயத்தையும் ஏற்படுத்துகின்றது.

### 7.5 தொழில்நுட்பம்

புதிய தொழில்நுட்பத்தின் திட்டமிடப்படாத அறிமுகமானது இந்நாடுகளின் அபிவிருத்தி முயற்சியில் மற்றுமோர் வேதனை மிக்க பகுதியாகும். ஏனெனில், தொழில்நுட்ப அபிவிருத்தியினால்

ஏற்படும் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளினாலும் பெருந் தொகையான மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்க நேரிடுவ தோடு, அவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற் கான தேவையும் ஏற்படுகின்றது. ஆனால், புதிய தொழில்நுட்பத் தின் அறிமுகத்தால் தமது தொழிலை இழந்தவர்களுக்கு அவர் களைப் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்குரிய எந்தவொரு முறையான முன்னேற்பாடுகளும் இங்கு காணப்படுவதில்லை.

## 7.6 சமூகக் காப்பு முறைமை

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், வளங்கள் வரையறை யாகக் காணப்படுவதால் அநேகமாக சமூகப் பாதுகாப்பு சேவை களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. மேலும், இத்திசையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் வினைத்திறனற்ற பணிக்குழுவாட்சி, திட்டமிடப்படாத நிர்மா ணங்கள், திறமையற்ற முகாமைத்துவம், ஊழல் மற்றும் 'இலவச சவாரி'[4] போன்ற பிரச்சினைகளால் செயற்றிறனற்றவையாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சமூக சேவைகளின் நிர்வாகத்திற்குள் உள்ளூர் மக்கள் பெரியளவில் ஈர்க்கப்படு வதில்லை. இதன் விளைவாக, இம்முயற்சிகள் வறுமைப் பிரச்சி னையில் எந்தவொரு பங்களிப்பையும் வழங்குவதில்லை.

## 7.7 இஸ்லாமிய வரைசட்டத்துள் வறுமைக்கெதிரான போராட்டம்

வறுமையென்பது ஒரு சிக்கலான விடயமாகும். இஸ்லாமிய அறிஞர்கள் இப்பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்மானிப்ப தற்குமான கொள்கை, கோட்பாடுகளை விருத்தி செய்து வரு கின்றார்கள். அவர்களது அத்தகைய சில கருத்துக்கள் வருமாறு:

(அ) வறுமைக்கெதிராகப் போராடுவதற்குரிய ஓர் இஸ்லாமிய உபாயமானது, மனித இனத்தை நோக்கிய அபிவிருத்தி முயற்சி களில் தனிப்பட்ட கவனம் செலுத்துவதாக அமைய வேண்டும் என்கின்றது. அது, மக்களுடைய உற்பத்தித் திறனுடைய

இயலளவை கல்வி மற்றும் திறன் பயிற்சி என்பவற்றினூடாக விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றது.

*(ஆ)* மக்கள் உள்ளூர் கூட்டமைப்புக்களை ஒழுங்கமைக்க வேண்டும் என்பதோடு, அவர்களுடைய சொந்த அலுவல்களில் பொறுப்புடனும் செயற்பட வேண்டும். அவர்கள், தமக்குச் சார்பான வகையிலேயே அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்ள வேண்டும். இது, அவர்களுக்கு சுயவிருத்திக்கான ஒரு தூண்டுதலை வழங்குவதோடு, ஒட்டுமொத்த அபிவிருத்தி முயற்சியிலும் அவர்களை ஈடுபடச்செய்யும்.

*(இ)* நிதியானது இலாப-நட்டப் பகிர்வின் அடிப்படையில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். மக்கள் பௌதீக வளங்களைப் பயன்படுத்துவதற்கும், அவர்கள் தம்மை உள்ளூரில் ஒழுங்கமைத்துக் கொள்வதை ஊக்குவிப்பதற்கும் பொதுத் தாபனங்களை அமைத்தாக வேண்டும்.

*(ஈ)* இஸ்லாம், ஒரு நேர்மையான அரசாங்கத்தைப் பற்றியே வலியுறுத்திக் கூறுகின்றது. மனித வரலாற்றில் இஸ்லாம் மட்டுமே முதன் முறையாக தனியார் சொத்து மற்றும் பொதுச் சொத்து என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை அறிமுகப்படுத்தியதோடு, ஆட்சியாளர்களுக்கு மக்கள் மீதான பொறுப்பையும் ஏற்படுத்தியது எனலாம். இன்றைய கால கட்டத்தில் ஓர் இஸ்லாமிய சமூகம், தனது செயல்களுக்குப் பொறுப்புடன் இருக்கும் நிலையை உறுதிப்படுத்த வேண்டும். அதிக எண்ணிக்கையிலான புதிய நிறுவனங்கள் இந்நோக்கத்துக்காக நிலைநாட்டப்பட வேண்டியதும் அவசியமாகும்.

*(உ)* அபிவிருத்தியின் இஸ்லாமிய உபாயமானது மனித தேவைகளையே மையப்படுத்தியுள்ளது. அது, மனித நலனுக்குரிய இன்றியமையாத தேவைகளான கல்வி, சுகாதாரம், சுத்தமான நீர், சுத்தமான காற்று, தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்து என்பவற்றை முதலில் மதிப்பீடு செய்வது கொண்டே இவ்வபிவிருத்தி உபாயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும், பின்னர்

இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தேவைப்படும் முத லீட்டை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றது.

(ஊ) இஸ்லாம் மனித இனங்களின் சுதந்திரத்தையே வலி யுறுத்துவதால், ஏனைய நாடுகளிலிருந்து குறிப்பிட்ட எப்பணிக் காகவேனும் வட்டி அடிப்படையில் கடன் பெறுவதை அபிவி ருத்திக்கான இஸ்லாமிய உபாயம் தடுக்கின்றது. எனினும், அது வேறுபட்ட நாடுகளுக்கிடையில் பங்கு அப்படையில் அல்லது நன்கொடையமைப்பில் அல்லது வட்டியற்ற கடன்களின் கூட்ட மைப்பையே ஊக்குவிக்கின்றது.

(எ) குறுங்கால அளவீடாக, இஸ்லாமிய பொருளியலானது நடைமுறையில் வறிய நாடுகள் வட்டி மூலம் நிலையான வருமானம் பெறும் நாடுகளுக்குக் கடன்பட்டிருக்கும் நிலையி லிருந்து வெளியேறுவதற்காக வேண்டி, செலுத்தப்படாத கடன் களுக்குரிய வட்டியை ரத்துச் செய்வதோடு, செலுத்தப்படாத தொகைகள் கடன்பட்ட நாடுகளின் வேறுபட்ட பொது நிறுவ னங்களின் பங்கு மூலதன தத்துவத்திற்கு மாற்றப்படும். இது வறிய நாடுகளின் சுமையைக் குறைப்பதோடு, வறிய நாடு களிலிருந்து செல்வந்த நாடுகளுக்கான வளங்களின் வெளிப் பாய்ச்சலையும் குறைவடையச் செய்யும்.

(ஏ) இஸ்லாமானது மனித இனத்தை ஒரு பொறுப்பாகக் கருதவில்லை. மாறாக, அவர்கள் எந்தவொரு நாட்டினதும் பெறு மதி வாய்ந்த சொத்தாகும். இதனால், இஸ்லாமிய அபிவிருத்தி உபாயமானது கல்வி மற்றும் திறன் பயிற்சிகளின் மூலம் மக்க ளுடைய ஆற்றல்களையும் இயலுமைகளையும் விருத்தி செய்யத் தூண்டுவதோடு, அவர்கள் பொருளாதார வளங்களைப் பயன் படுத்துவதிலுள்ள தடைகளையும் அகற்றுகின்றது.

(ஐ) பொருளாதார நீதி பற்றிய இஸ்லாமிய எண்ணக்கருவா னது நடைமுறையில் காணப்படுகின்ற கிராம -நகரங்களுக் கிடையிலான சமமற்ற அபிவிருத்தியைத் தூண்டும் உபாயங் களுக்கு எதிராகவே செயற்படுகின்றது. 'மனித இனம்' என்று

பார்க்கும் போது, அனைத்து மக்களும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர், மின்சக்தி மற்றும் தொலைத் தொடர்பு போன்ற அடிப்படை வசதிகளைச் சமமாகப் பெற வேண்டியது அவசியமாகும். மரபு ரீதியான முதலீட்டுத் தகுதிவிதியானது பொருத்தமான முதலீட்டைத் தீர்மானிப்பதற்கு செலவு-நலன் ஆய்வினையே பயன்படுத்துவதோடு, மனித இனம் எங்கு வாழ்ந்தாலும் அவர்களை முன்னேற்றும் நோக்குடன் அவை முதலிடப்பட்டிருக்குமானால் அது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்கின்றது. எனவே, இன்றுள்ள கிராம மற்றும் நகர்ப்புறங் களுக்கிடையிலான இடைவெளிக்குப் பாலமாயமையும் வகை யில் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனை வருக்கும் ஒரே மாதிரியான வாழ்க்கை முறையை வழங்குவதற்கு இஸ்லாமிய அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும்.

(ஒ) இஸ்லாமிய பொருளியலானது திட்டமிடப்பட்ட தொழில் நுட்பத்தின் அறிமுகத்தையே வலியுறுத்துகின்றது. செயற்பாட்டு ரீதியாகப் பார்ப்பின், தற்காலத்தில் ஓர் இஸ்லாமிய அரசானது புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதால் பெறப்படும் உயர் இலாபத்தைக் கொண்டு, அதன் முயற்சியாளர்களின் பங்களிப்புடன் ஒரு நிதியத்தை ஆரம்பிக்க முடியும். புதிய தொழில்நுட்பத்தின் அறிமுகத்தால் தமது தொழில்களை இழந்த வர்களது நிலைமைகளைச் சீரமைப்பதற்காக இந்நிதியத்தைப் பயன்படுத்த முடியும்.

(ஓ) இவ்வனைத்து முறைகளிலும் உயர்ந்து நிற்பது, உள்ளூர் மட்டத்தில் சமூகப்பாதுகாப்பை வழங்கும் ‘ஸகாத்’ எனப்படும் இஸ்லாமிய முறைமையாகும். உள்ளூர் மக்கள் அவர்களது செல் வத்தில் ஒரு குறிப்பிட்ட வீதத்தைச் சேகரித்து, அதைத் தேவை யுடையோருக்கு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், அவர்களது வாழ்வை மறுசீரமைக்கும் வகையிலும் வழங்குவதற்காக இதனை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். ஸகாத்தின் சேகரிப்பு மற்றும் விநியோகமானது உள்ளூர் மட்டத் தில் செயற்படுமாறு கோருவதோடு, ‘இலவச சவாரி’ பிரச்சினை

யையும் பெரியளவில் கவனத்தில் எடுக்கின்றது. உதவிப் பங்கீட்டில் தொடர்ந்து தங்கியிருக்கும் ஒரு நபருக்கு, உள்ளூர் மக்களால் வழங்கப்படும் மாற்றல் உதவிகளைப் பெறுவதை விட அரச பணிக்குழுவை ஒத்த ஒரு நிறுவனத்தினால் தாம் நிர்வகிக்கப்படுவது மிகக் கடினமானதாகவே இருக்கும். இஸ்லாமிய ரீதியில் அமையப்பெற்ற சமூகப் பாதுகாப்பில் முதலாவதாக இடம்பெறுவது குடும்பப் பொறுப்பாகும். ஒரு நபருக்கு குடும்பத்திலிருந்து ஆதரவு கிடைக்கவில்லையானால், உள்ளூர் சமூகம் அத்தகையோரைப் பராமரிக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அனைத்து உள்ளூர் அமைப்புக்களும் வளங்களின் குறைவை எதிர்நோக்கும் போதே அரசின் மத்திய திறைசேரியிலிருந்து உதவி கிடைக்கப்பெறும்.

## 8. அரச நிதி முகாமைத்துவம்

### 8.1 வரி விதிப்பின் இஸ்லாமிய தத்துவங்கள்

அரச நிதி முகாமைத்துவம் பற்றிய தெளிவான இஸ்லாமிய தத்துவங்கள் வருமாறு:

(அ) 'ஸகாத்' எனும் வரித் தத்துவம் ஏனைய வரிகளையும் கூட நிர்வாகிக்கு இலகுபடுத்திக் கொடுக்கின்றது. அதன் வீதங்களும் மிகக் குறைவு. ஆனால், உள்ளடக்கமோ பரந்தது. அது ஒருவரிடம் காணப்படும் செல்வத்தின் விகிதாசாரத்திற்கேற்பவே அறவிடப்படும். எனவே, அதிக செல்வமுடையோர் குறைவாக செல்வத்தையுடையோரை விட அதிக பணம் செலுத்த வேண்டும்.

(ஆ) 'ஸகாத்'தானது மத்திய அரசாங்கத்தின் பொருட்டு மக்களால் உள்ளூர் ரீதியாக சேகரிக்கப்பட்டு, அதே மட்டத்திலே விநியோகிக்கவும் படுகின்றது. இத்தத்துவமானது, ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்கு வளங்கள் மாற்றமடைவதற்கு எதிராக எழும் பிராந்திய ரீதியான முறைப்பாடுகள் பற்றிய பிரச்சினைகளையும் கவனத்திற் கொண்டுள்ளதெனலாம்.

## 8.2 பற்றாக்குறை நிதியீட்டம்

இஸ்லாத்தின் நடுநிலையான போதனைகளை அரச பாதீட்டிலும் கூட பிரயோகித்தாக வேண்டும். இஸ்லாத்தின் பொருளியல் அணுகுமுறை, ஒரு சமநிலை வரவு-செலவு திட்டத்தையே உருவாக்க விரும்புகின்றது. பற்றாக்குறை நிதியீட்டத்தின் தீங்குகள் குறித்து இங்கு தெளிவாகக் குறிப்பிட்டாக வேண்டும். நிறைதொழில் மட்டத்தை அடைவதில் பிரதான தடையாகக் காணப்படக்கூடிய வட்டியை இஸ்லாமிய பொருளாதார சூழல் ஒழித்து விடுவதால், இங்கு அரசாங்கத் தலையீட்டைக் கொண்டே செயற்றிறனான கேள்வி உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினை எழாது. எவ்வாறெனினும், பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டுமென மக்கள் விரும்புவார்களாயின், அதற்காக உயர் வரியமைப்பையும் கட்டாயம் செலுத்தியாக வேண்டும். அபிவிருத்திக்கான கடன், வட்டியுடனே பெறப்படுமாயின் அது இஸ்லாமிய தத்துவத்துடனான உறவை முறித்துக் கொள்கின்றது. எவ்வாறெனினும், நீண்டகால கருத்திட்டங்களிலிருந்து பெறப்படும் நலன்கள் பல தலைமுறைகளுக்குப் பரவக்கூடியதாக இருக்கின்றது. மேலும், அரசு வட்டியில்லா கடன்களை அதிகரிக்கவும் கூடும். வேலையின்மைப் பிரச்சினையைக் குறைப்பதற்கான மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான திட்டங்களும் கூட அறிமுகப்படுத்தப்படலாம்.

முதலாளித்துவ பொருளாதாரங்களில் அரச நிதி முகாமைத்துவம், இதற்கு நேர்மாறாகக் காணப்படுகின்றது. அது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்குப் பற்றாக்குறை நிதியீட்டத்தையே தயாரிக்கின்றது. அதன், அனைத்து விடயங்களும் இதைப் போலவே நேர்மாறாக உள்ளன. வட்டியானது மூலதனத்தின் எல்லை வினைத்திறனுடன் எதிரான தொடர்பையே கொண்டுள்ளது. ஆகவே, வட்டிவீதம் உயர்ந்து காணப்படும் போது மூலதனத்தின் எல்லை வினைத்திறனும் முதலீட்டு மட்டமும் குறைவாகக் காணப்படுவதோடு, அது வேலையின்மையில் ஓர் அதிகரிப்பிற்கும் இட்டுச் செல்கின்றது. வரிகள், சமூகப் பாதுகாப்பு

நலன்களை வழங்குவதற்காகவே வசூலிக்கப்படுகின்றன. வரிச் சுமை மக்களால் தாங்க முடியாததாக மாறுகின்ற போது, அரசாங்க மானது வங்கிகள் மற்றும் தனியார் சேமிப்பு நிறுவனங்களிட மிருந்து வட்டியடிப்படையில் கடன் பெற நிர்ப்பந்திக்கப்படு கின்றது. இது பொதுச் செலவினத்தில் படுகடனாகவும் உள்ளடக் கப்படுகின்றது. மேலும், இது பெரியதோர் பற்றாக் குறையை ஏற்படுத்துவதோடு, மீண்டும் மீண்டும் இவ்வாறு நிகழக் கூடிய ஒரு நச்சு வட்டத்தையும் ஆரம்பித்து வைக்கின்றது.

ஓர் இஸ்லாமிய பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இந்நச்சு வட்டம் தோன்றுவதற்குப் பதிலாக இத்தீங்குகள் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன. மூலதனத்துக்குரிய வட்டி அழிக்கப் படுவதால் நிறைதொழில்மட்ட சமநிலையை அடைவது சாத்திய மாகிறது. தன்னார்வமற்ற வேலையின்மை மற்றும் சமூகத்தில் மோசமான நிலையிலுள்ள ஏனைய பிரச்சினைகளை ஸகாத் மற்றும் இன்ஃபாக் என்ற நிறுவனங்கள் திறமையாகக் கையாளு கின்றன. ஆனால், இந்நிறுவனங்கள் உள்ளூர் மட்டத்திலேயே செயற்படும். இதனால், சமூகப் பாதுகாப்பு நலன்களை வழங்கு வதற்காக வேண்டி, மேலதிக வரிகளை விதிக்கத் தேவை யேற்படாததால் அரச பாதீடும் கூட பொதுப் படுகடனில் மேலதிக சுமையைத் தாங்க வேண்டியேற்படாது.

### 9. அறிவின் பரவல்

இஸ்லாம் அறிவைப் பரப்புவதற்கும் அதனை ஏனையோ ருடன் பகிர்ந்து கொள்வதற்கும் அதிக முக்கியத்துவத்தை வழங்கு கின்றது. வரலாற்று ரீதியாக, முஸ்லிம்கள் அனைத்து இன, பிராந்திய மக்களுக்கும் அறிவு மற்றும் தகவல்களை அனுப்பு வதற்கும் பரப்புவதற்கும் பல சாதனங்களைப் பயன்படுத்தி யுள்ளனர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். உண்மையில், இன்று விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றில் மேற்கத்தேய உலகம் கண்டுள்ள பாரிய முன்னேற்றத்திற்குப் பின்னால் முஸ்லிம் விஞ்ஞானிகளே காணப்படுகின்றனர்.

இவர்களைப் பிரதிபண்ணியதாகவே அவர்களது முயற்சிகள் காணப்படுகின்றன. அதேநேரம், அறிவின் மேற்கத்தேய வாத மானது தேசப்பற்றுடன் கூடியது. இதனால் காப்புரிமை பட்டயம் என்ற எண்ணக்கருவோடு, அவ்வறிவினை அறிமுகம் செய்த உரிமையாளர் தொடர்பான உரிமைகளையும் அறிமுகப்படுத் தியது. இதன் விளைவாக, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கைத்தொழில் ரீதியாக முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு அதா வது, அங்குள்ள அவ்வுரிமையாளர்களுக்குரிய பங்கு வீத உரிமை யாக அதிக பணத் தொகையை செலுத்த வேண்டியிருந்தனர். உதாரணமாக, 1980 இல் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கைத்தொழில் நாடுகளுக்கு உரிமையாளர்களுக்கான பங்கு வீத உரிமை மற்றும் கட்டணமாக 2 பில்லியன் அமெரிக்க டொலர் களை செலுத்தியுள்ளன.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தின் படி, அனைத்து அறிவும் இலவசமாகப் பகிரப்பட வேண்டும். இதற்காக, ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பெறுபேறுகள் மட்டுமே பகிரப்பட வேண்டும் என்பது அர்த்தமல்ல; அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் புதிய அறிவினை உருவாக்குவதிலும் கூட அதிகம் ஈடுபாடு காட்ட வேண்டும். உலகின் அனைத்து பகுதிகளிலிருந் தும் மதிநுட்பமான, திறமைமிக்க நபர்கள் ஆய்வுக் கருத்தரங்கு களில் திறந்த மனதுடனும், இலவசமாகவும் பங்காற்ற வேண்டும். மக்கள் பொருத்தமான தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற் குரிய ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும்.

உலகின் அனைத்து நாடுகளிலுமுள்ள சர்வதேச நிறுவனங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், அதன் முடிவுகளைப் பரவச் செய்வதற்கும் நிதி மற்றும் மனித வளங் களைக் கொண்டு பங்களிப்புச் செய்ய வேண்டும். மனிதர்கள் யாவரும் சமமாகப் பங்கேற்கும் ஓர் உலகை உருவாக்குவதற்கான தேவை மேற்கத்தேய தேசங்களுக்கு இருக்குமாயின், இது அவ சியம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அனைத்து பயன்தரக் கூடிய அறிவும் புதிய அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்களை

ஏற்படுத்தி, அதனைப் பகிரவும் வேண்டும். அத்தகைய ஓர் உபாயமே, நல்ல ஒத்துழைப்புடன் கூடிய ஓர் உலகிற்கு அடித்தள மாகும்.

## 10. முடிவான கருத்துக்கள்

நாம் ஓர் இஸ்லாமிய பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்பு களை மேலே சுருக்கமாகக் கலந்துரையாடினோம். அவ்வாறு கலந்துரையாடும் போது சமகால முதலாளித்துவப் பொருளாதார ஒழுங்கின் அம்சங்களுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்தோம். இஸ்லாம் முழுமையாக ஒரு புதிய பொருளாதார ஒழுங்கைக் கட்டியெழுப்ப முயல்கின்றது. அதனுடைய உபாயங்கள் சிறியள விலான மாற்றங்களை உருவாக்குவதை விட மிகப் பெரும் பரிணா மத்தைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தையே கட்டியெழுப்ப முனைகின்றது.

இது நபியவர்கள் (ஸல்), அவர்களது கால சமூகத்தை மாற்று வதற்கு முற்பட்ட வழிமுறைகளிலிருந்து தெளிவாகின்றது. நபி (ஸல்) அவர்கள் வட்டியை ஒரே நாளில் ஒழித்துவிடவில்லை. பொருளாதார நிலைமை அத்தகைய ஒரு மாற்றத்தைத் தாங்கு வதற்குரிய முதிர்ச்சி நிலையை அடைந்தபோதே வட்டியினுடைய அழிவுக்கு உத்தரவிட்டார்கள். முதலில், அவர்கள் ‘ரிபா அல் பஸ்ல்’ (பண்டங்களின் பரிமாற்றத்துக்கான வட்டி)யினையே தடுத்தார்கள். இது, மறைமுகமான ‘ரிபா’வின் (வட்டி) வருகை யையும் தடுத்தது. அத்தோடு அவர்கள் எளிய வாழ்க்கை முறை யையே ஊக்குவித்தார்கள். எனவே, நுகர்வோரிடமிருந்து கட னுக்கான கேள்வி பெரியளவில் உருவாகவில்லை.

அதைத் தொடர்ந்து ‘கனீமத்’ (யுத்தத்தில் பெற்ற பொருட்கள்) மற்றும் ‘ஃபை’ எனப்படும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் அந்நியரிடமிருந்து பெறும் வரி வருவாய்கள் பொருளாதாரத்தில் பொதுவான சுபீட்சத்தின் வாயிலைத் திறந்துவிட்டன. இதனால், மக்கள் மூலதனத்தைக் குறைவாகப் பெறுவதற்குப் பதிலாக அதன் மிகை உடைமையையே கொண்டிருந்தார்கள். இது, கடன்

மூலதனத்துக்கான கேள்வியைக் குறைவடையச் செய்தது. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் ஏகபோக உரிமை, முஷாரகா மற்றும் முழாரபா என்ற அமைப்புக்களில், கடன்களின் மீள் கொடுப்பனவில் நிதி வழங்குனர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாதுள்ளன. இதுவும் கடன் மூலதனத்துக்கான கேள்வியைக் குறைக்கின்றது. ஆக, வியாபாரத்துக்கான (கடன்) மூலதனத்தின் கேள்வி மிக உயர்வாகக் காணப்படுவதில்லை.

எவ்வாறெனினும், இன்னும் இந்நிலை கடன் விற்பனையமைப்பில் நிலவுகின்றதைக் காணலாம். வேறுபட்ட வருமான வழிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிதிப்பாய்ச்சல்கள் உள்ளடங்கலாக, பல்வேறு காரணிகளால் ஏற்படுகின்ற சுபீட்சம் மிக்க ஓர் அரசு காணப்படும் போதே சமூகம் இத்தகைய கேள்வியை சந்திக்க முடியுமாயிருக்கும். இதனால், மூலதனமானது ஓர் அருமையான விலை அல்லது அமையச் செலவினை வழிப்படுத்த முடியாது. இவ்வாறு, கடன் மூலதனத்தின் மீதான வட்டி ஒரு சட்ட ரீதியான உத்தரவால் அழிக்கப்படுவதன் விளைவாக ஒரு பொருளாதார மாற்றத்துக்குரிய கட்டம் ஆரம்பமாகும். அவ்வாறே நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அழிக்கப்பட்டு, அன்னாரின் கடைசி ஹஜ்ஜின் போது (ஹிஜ்ரி-10) முழுமையாக நிறைவேற்றப்பட்டுமிருந்தது.

நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து இங்கு நாம் கற்கும் பாடம், பொருளாதார மாற்றங்களை சட்ட ரீதியான கருவிகளால் மட்டுமே கொண்டுவர முடியாது. அதேபோல், உலகின் ஏனைய மக்களின் ஈடுபாடில்லாமலும் கொண்டுவர முடியாது. அண்மைய தசாப்தங்களில், தொலைத்தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றத்தால் உலகம் வெகுவாகச் சுருங்கிவிட்டது. உலகின் ஒரு பகுதியின் நடத்தை, அதன் அடுத்த பகுதிகளிலும் எதிரொலிக்கின்றது. இதனால், ஏனைய தேசங்களின் விருப்புடன் கூடிய ஒத்துழைப்பு இல்லாமல் செயற்றிறனான ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முடியாது.

இன்றைய உலகின் அநேக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பெறுமதிமிக்க வழிகளை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை உலக ஒழுங்கு உறுதிப்படுத்துகின்றது. எனவே, இது உலக மக்கள் அனைவரும் இஸ்லாம் முன்வைக்கும் குறிக்கோள் களை வார்த்தெடுக்க வேண்டிய நேரமாகும்.

*அட்டவணை 1:*

**முதலாளித்துவம் மற்றும் இஸ்லாமிய பொருளாதார முறைமை**

| முதலாளித்துவம் | இஸ்லாமிய பொருளாதார முறைமை |
|---|---|
| மனித இனம் சுயநலமானது | மனித இனம் சுயநலமுடையதாக இருப்பதோடு, பொதுநலத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. |
| பொருள் உடைமை உயர் பெறுமதியையுடையது. | பொருள் உடைமை கட்டுப்படுத்தப்பட வேண்டும். |
| முழுமையான தனியார் உடைமை | ஒழுக்க வரை சட்டகத்துக் குள்ளான தனியார் உடைமை |
| சிறிய தொகையினரிடம் பொரு ளாதார அதிகாரம் காணப்படு வதற்கான காரணங்கள்<br>• வட்டி<br>• வரையறுக்கப்பட்ட பொறுப்பு<br>• கூலித் தொழிலாளர்<br>• முதல் வாரிசு<br>• நிறைவில் போட்டிச் சந்தை | பொருளாதார அதிகாரம் பரவிக் காணப்படக் காரணங்கள்<br>• சமமான பங்கேற்பு<br>• தொழிலாளர் உரித்துடமை<br>• வாரிசுரிமைச் சட்டம்<br>• சுதந்திர சந்தையின் பாய்ச் சல்கள் |

| | |
|---|---|
| விளம்பரம் மூலமாக கேள்வி உருவாக்கப்படும் | இன்ஃபாக் - நேர்மையான சட்டங்கள் மற்றும் வாரிசுரிமை மூலம் கேள்வி உருவாக்கப்படும். |
| பணம் ஒரு பண்டமாகக் கருதப் படுகின்றது. மறுபுறம் பரிமாற் றூடகமாகவும் பெறுமானத் திரட்டாகவும் பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியம மாகவும் தொழிற்படுகின்றது. | பணம் பரிமாற்றூடகமாகவும், பெறுமானத் திரட்டாகவும், பிற்போடப்பட்ட கொடுப்பனவு களின் நியமமாகவும் தொழிற் படுகின்றது. மாறாக, ஒரு பண்டமாகக் கருதப்படவில்ல. |
| நுகர்வுக்குச் சார்பான வாதம் ஒரு பெறுமதியாகக் கொள்ளப்படுகின்றது. | எளிய வாழ்க்கை ஒரு பெறுமதியாகக் கொள்ளப்படுகின்றது. |
| பொருளாதார அபிவிருத்தியானது, பௌதிக மற்றும் பொருள் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. | பொருளாதார அபிவிருத்தியானது, மனித மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் மூலம் ஏற்படுகின்றது. |
| நகரமயமாக்கம் | கிராம-நகர சமத்துவம் |
| திட்டமிடப்படாத தொழில்நுட்பம் | திட்டமிடப்பட்ட தொழில்நுட்பம் |
| நீண்டகால வரிகளின் மூலம் அரசு சமூகப் பாதுகாப்பு முறைமையை மேற்கொள்கின்றது. | சமூகப் பாதுகாப்பானது பின்வரு வன மூலம் மேற்கொள்ளப்படும்.<br>• குடும்பம்<br>• சமூகம்<br>• அரசு |
| பற்றாக்குறை நிதியீட்டம் | சமநிலை வரவு-செலவுத் திட்டம் |
| அறிவைப் பாதுகாத்தல் மற்றும் புதிரான விடயமாக்கல் | அறிவின் பரவல் மற்றும் பகிர்வு |

அ த் தி யா ய ம்

02

# இஸ்லாமிய பொருளியலின் தன்மை

## *1. அண்மைய திடீர் எழுச்சி*

இஸ்லாமிய பொருளியல் வளர்ந்து வரும் ஒரு கற்கைநெறி யாகும். அண்மைய காலங்களில் இஸ்லாமிய பொருளியலை ஒரு தனியான துறையாக உருவாக்குவதற்காக சில முஸ்லிம் நாடுகளில் இங்குமங்குமாக சில அறிவுசார் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் கூட, அது தொடர்பாக செயற்பாட்டு ரீதியில் இன்னும் அதிகளவில் கவனம் செலுத்தப்படவில்லை என்றே கூறலாம். தற்போது முஸ்லிம் நாடுகளிலுள்ள குறைந்தபட்சம் 40 பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைகள் இஸ்லாமியப் பொருளியலில் மேற்கொள் ளப்படுகின்றன. மேற்குப் பல்கலைக்கழகங்களில் ஒரு சில கலாநிதிப் பட்டத்திற்கான கற்கைகளில், இஸ்லாமியப் பொருளிய லுடன் தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் எழுதப்படு கின்றன. இஸ்லாமிய பொருளியலுடன் தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்காகவும், பரவச் செய்வதற்காகவும் சில சர்வ தேச ஆய்வு நிறுவனங்கள் பிரத்தியேகமாக ஈடுபாடு காட்டி வருகின்றன. பல அறிவுசார் ஆய்வு சஞ்சிகைகள் இஸ்லாமிய பொருளியல் பற்றிய விடயங்களை வெளியிடுகின்றன.

மறுபுறம், இஸ்லாம், மத்திய கிழக்கு மற்றும் பொருளியல் பற்றிய பல்வேறுபட்ட சஞ்சிகைகளிலும் இஸ்லாமிய பொருளியல் பற்றிய ஆக்கங்கள் வெளியிடப்படுகின்றன. இச்சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட ஆக்கங்களும், கடந்த இரு தசாப்தங்களில் எழுதப்பட்ட பல புத்தகங்களும் இஸ்லாமிய பொருளியல் பற்றிய மதிப்புமிக்க கருத்துக்களை வெளிக்கொணர்ந்துள்ளமைக்கு நாம் அவற்றுக்கு நன்றி செலுத்தியாக வேண்டும். தற்போதும் இஸ்லாமிய பொருளியலின் சர்வதேச அமைப்பானது, அதனுடைய தலைமைக் காரியாலயத்தை ஜித்தாவில் கொண்டு இயங்கிவருவதோடு, அது சொந்தமாக ஒரு சஞ்சிகையையும் வெளியிட ஆரம்பித்துள்ளது. மேலும், இன்று பல இணையத் தளங்களும் கூட இப்பணியை செய்துவருகின்றன.

இஸ்லாமிய பொருளியல், மனிதனது பொருளாதார நிலைமைகளை இஸ்லாத்தின் பார்வையில் விளக்குகின்றது. அதன் மூலவேர்கள் அல்-குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் உள்ளதோடு, அது மனித இனத்தின் பொருளாதார நடத்தைக்கான பரந்த வழிகாட்டலையும் வழங்குகின்றது. ஆனால், அதனுடைய பெரும் பகுதி மனிதனின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் ஆராய்வதற்கும் இஸ்லாமிய வரைசட்டத்துக்குள் முயற்சிக்குமாறே மனிதனைக் கோருகின்றது. இதனால்தான், முஸ்லிம் பொருளியலாளர்கள் மனித பொருளாதார பிரச்சினைகள் பற்றி காட்டிய அக்கறை சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

கடந்த 14 நூற்றாண்டுகளாக முஸ்லிம் அறிஞர்கள் தமது காலத்தில் நிலவிய பொருளாதார விவகாரங்களைக் கலந்துரையாடியுள்ளார்கள். அத்தகைய ஒரு சில கலந்துரையாடல்கள் வரலாற்றில் இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆகவே, இஸ்லாமிய பொருளியலானது முஸ்லிம்களின் ஒரு சிறப்பான மரபுரிமையாகக் காணப்படுகின்றது. அதேநேரம், அது மேலதிக ஆய்வுக்கான செழிப்பானதொரு களத்தை வழங்குவதோடு, பிரத்தியேகமான அறிவியல் மற்றும் அறிவாராய்ச்சி முறைகளுக்கான வாயிலைத் திறந்து விடுவதாகவும் உள்ளது.

முஸ்லிம்களிடையே மந்தமான அறிவுசார் நடவடிக்கைகள் காணப்பட்டிருந்த சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அண்மைய காலத்தில் இஸ்லாமிய பொருளியல் மீது ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் ஆர்வத்திற்குப் பல காரணிகள் பின்னணியாகவுள் ளன. முதலாவது, உலக பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய் வதற்கும் தீர்வினை காண்பதற்கும் பின்பழம் பொருளியல் மேற் கொண்ட வழிமுறைகளில் திருப்தி காணப்படாமையாகும். பொருள் உடைமையில் சுபீட்சத்தை அனுபவிப்பதாகப் பெருமை யடிக்கும் இந்த யுகத்தில் கூட, உலகில் பரவலாகக் காணப்படும் சில பிரச்சினைகளுக்கு இவர்களால் இன்னும் தீர்வினை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

பணவீக்கம் மற்றும் பரவலாகக் காணப்படும் வறுமை என்பவற்றுடன் இணைந்த வகையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படுகின்ற வேலையின்மை, செழிப்புக்கு மத்தியிலான துன்பம், பிராந்திய சமமின்மைகள், சூழல் மாசடைதல், தொழில்நுட்ப புத்தாக்கங்களின் கடுந்தாக்கத்தால் ஒழுக்க விழுமியங்கள் சிதறடிக்கப்படுகின்றமை, உலக கூட்டமைப்புக்கள் பொருளாதார சக்தியை நசுக்குகின்றமை, அலட்சியமான நுகர்வின் மூலம் பெறுமதி மிக்க வளங்கள் வீணாகின்றமை, பொருளாதார ‘உதவி’ என்ற பெயரால் சர்வதேச சுரண்டல் இடம்பெறுகின்றமை மற்றும் அநீதியான வர்த்தகக் கட்டமைப்புக்கள் என்பன அத்தகைய சில பிரச்சினைகளாகும். இவையனைத்தும் மனித பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உகந்த அணுகுமுறையை ஆவலோடு எதிர்ப்பார்க்கத் தூண்டின என்பது உண்மையே.

இரண்டாவதாக, முதலாவது அத்தியாயத்தில் கலந்துரையாடியது போல் பின்பழம் பொருளியலானது குறுகிய அடித்தளத்தையும் மனிதத் தன்மை மற்றும் மனித நடத்தை பற்றிய உண்மையற்ற எடுகோள்களையுமே கொண்டுள்ளது. பொருளியலானது அதன் காரணகாரியத்தை நிரூபிப்பதற்குத் தேவையானவற்றை அழுத்தமாகக் கூறுவதன் மூலம் முடிவுகளிலும் அதன் அணுகுமுறையிலும் சிக்கல்கள் ஏற்படுவதைப் பார்க்கின்றோம்.

சுருக்கமாகப் பார்ப்பின், பொருளாதார ஆய்வுகளுக்குரிய சாத்தியமான பதில்களை வழங்குவதற்குத் தேவைப்படும் உண்மையான அடிப்படைகள் இஸ்லாமிய பொருளியலில் மட்டுமே காணப்படுகின்றது.

மூன்றாவதாக, காலனித்துவ ஆட்சியின் போது காலனித்துவ நாடுகளின் சுதேச கலாசார விழுமியங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் தொழில்நுட்பம் போன்றவற்றில் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத ஒரு அணுகுமுறையையே முதலாளித்துவம் நடைமுறைப்படுத்தியது. மேலும், முதலாளித்துவ முறைமையை அதிக வினைத்திறனுடையதாகவும் உற்பத்தித் திறனுடையதாகவும் ஆக்குவதற்காக, காலனித்துவ நாடுகளில் காணப்பட்ட மரபுசார் சமூக அமைப்புக்களையும் விழுமியங்களையும் அழிப்பதற்கு அவை முயற்சித்தன. காலனித்துவ நாடுகளை, காலனித்துவ சக்திகள் விட்டுச்சென்ற போது அந்நாடுகள் அவர்களால் கைப்பற்றப்பட்ட போதிருந்ததை விட அதிக வறுமைக்குரியனவாக மாறின. இதனால், அந்நாடுகளின் உயர் குடிகள் முதலாளித்துவ முறையில் சிந்திப்பதிலிருந்து விலகிக்கொண்டன.

அதேநேரம், இந்நிலைமை அவர்களுள் சிலரை முதலாளித்துவ மற்றும் சோஷலிசத்தின் ஒரு குழப்பமான அமைப்புக்கு இட்டுச் சென்றது. ஆனால், அவர்களிடையே சிலர் இஸ்லாத்தின் விழுமியங்களை உயர்த்துவதற்கும் அவர்களது கடந்துபோன புகழுக்கு புத்துயிரளிக்கவுமே முனைந்தனர். ஆகவே, இம்மக்களின் பல்வேறுபட்ட சிந்தனையில் குறிப்பிட்டளவாவது புதுமைக்கான ஒரு நாட்டம் காணப்பட்டதை மறுக்க முடியாது. இவையும், இஸ்லாமிய பொருளியலில் ஆர்வத்தை வளர்த்த ஒரு காரணியாகப் பார்க்கப்படுகின்றது.

நான்காவதாக, சர்வதேச பொருளாதார ஒழுங்கானது செல்வந்த நாடுகளால் வறிய நாடுகள் நிறுவன ரீதியாக சுரண்டப்படக்கூடிய ஒரு பொருளாதார சிந்தனையை உருவாக்கியது. எத்தகைய நீதியான சேவைகள் காணப்படினும் இவ்விரு சாராருக்கிடையே

ஏற்றத்தாழ்வும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. உலக பொருளாதாரப் பொறிமுறையானது, கைத்தொழில் ரீதியாக முன்னேறிய நாடுகளின் தலைமையைப் பேணுவதற்கு ஏற்றவாறே வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே தான், தற்போதைய பொரு ளாதார ஒழுங்கமைப்பானது அதன் அழிவிற்குரிய தொடக்கத் தையே கொண்டுள்ளது என்ற கருத்து பரவலாக ஏற்கப்பட்டி ருக்கிறது. ஆகவே, இப்பொருளாதார ஒழுங்கானது எல்லாக் காலத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமான ஒரு புதிய முறையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இஸ்லாமிய பொருளியலே இவ்வாக்குறுதியை நிறைவேற்ற முடியும் என்பதை அத்தியாயம் ஐந்தில் கலந்துரையாடுவோம்.

கிழக்கு ஐரோப்பாவில் 1989இலிருந்து ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் உடைவு என்பன ஒரு சிறந்த பொருளாதாரக் கொள்கையை விரைவாகத் தேடின. மனித இனத்துக்கு நீதி மற்றும் சுபீட்சத்தை வழங்கப் போவதாகக் கூறிய சோஷலிச பொருளாதார முறைமையானது இறுதியில் மக்க ளாலேயே தோற்கடிக்கப்பட்டதோடு, அந்நாடுகளிலுள்ள மக்கள் தம்மைக் காப்பாற்றும் இறுதிப் போக்கிடமாக முதலாளித்துவத் தையே மீண்டும் கண்டார்கள். சோஷலிசத்துடனான அவர்களது முரண்பட்ட கருத்து, அதேபோன்ற முதலாளித்துவத்துக்கு அதா வது, அரை நூற்றாண்டுகளுக்கு முன் அவர்களால் கைவிடப்பட்ட அதே முதலாளித்துவத்துக்கு மீண்டும் இலகுவாக இட்டுச் சென்றது.

இதற்குப் பின்னர், அந்நாடுகள் நிலைத்து நிற்கும் அபிவிருத் தியை உடையதும் அதிகம் ஒழுங்கமைக்கப்பட்டதும் மற்றும் நாகரிகம் அடைந்ததுமான சமூகத்தை அடைந்து கொள்வதற்கான தமது உபாயங்களைப் பற்றி மீள்சிந்திக்கக் கடமைப்பட்டிருந்தன. இது, அவர்கள் முதலாளித்துவம் மற்றும் சோஷலிசம் என்ற இரண்டுக்கும் மாற்றீடாக இஸ்லாம் வழங்கும் பொருளாதார முறையில் தமது கவனத்தை செலுத்துவதற்குரிய திருப்புமுனை யாக அமைந்தன. ஏனெனில், இஸ்லாமிய பொருளியல், மனித

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அதிக கருணையுள்ளதும் பொருத்தமான தீர்வுகளை வழங்கக் கூடியதுமான ஓர் உகந்த அணுகுமுறையாக உள்ளது.

எவ்வாறெனினும், இஸ்லாமிய பொருளியற் களத்தில் கோட்பாட்டு ரீதியான பணிகள் குறைவாகவே எஞ்சியிருக்கின்றன. இதற்கு, முதலில் இவ்விடயத்தின் அபிவிருத்தியில் முன்னோடிகளாக இருக்கவேண்டிய முஸ்லிம் அறிஞர்கள், மேற்கின் அரசியல் ஆதிக்கத்தினால் உருவான புலமைசார் சலவையால் பாதிக்கப்பட்டமை முக்கிய காரணியாகும். எனவே அவர்கள், முஸ்லிம் கல்வி நிலையங்களை மட்டும் அழித்துவிடவில்லை. மாறாக, முஸ்லிம் நிலங்களிலே வாழ்ந்த ஆன்மாக்களையும் காயப்படுத்தியுள்ளார்கள். இது முஸ்லிம்கள், அவர்களது சொந்த பார்வையில் சிந்திப்பதையும் அறிவை விருத்தி செய்வதையும் தடுத்ததோடு, மேற்குலகம் எதைச் செய்கின்றதோ அதையே பின்தொடரவும் செய்தது.

இரண்டாவதாக, முஸ்லிம் அறிஞர்களிடையே நிலவிய இடைவெளிப் பிரச்சினையும் இதற்குப் பங்காற்றியுள்ளது. அனைத்து விடயதானங்களிலும் உள்ள அதிகமான ஆக்கங்களின் பதிப்பு மற்றும் விநியோகம் என்பவற்றிலும், அவற்றின் கற்றல் விடயங்களிலும் மேற்குலகமே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. அதன் ஆவணங்களானவை, அத்தகைய தகவல்களையே உலகெங்குமுள்ள பல்வேறுபட்ட விடயங்களில் பரவச்செய்தது. இஸ்லாமிய பொருளியல் அறிஞர்களால் எத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அவை மேற்கில் போதுமானதாக இருக்கவில்லை. மேலும், மேற்கிலிருந்து வெளியிடப்படும் புலமைசார் சஞ்சிகைகள் முஸ்லிம் பொருளியலாளர்களின் ஆக்கங்களை இலகுவில் ஏற்றுவிடுவதில்லை. ஏனெனில், அங்கு மதச்சார்பான அனைத்து ஆக்கங்களுக்கெதிராகவும் ஓர் உறுதியான வெறுப்பு காணப்படுகின்றது.

மூன்றாவதாக, இஸ்லாமிய பொருளியலை ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை, கோட்பாடாகக் கொள்வதற்குரிய அல்லது

தவறென்று நிரூபிப்பதற்குரிய கணித ரீதியான தரவுகள் அதிகம் காணப்படுவதில்லை. இது, முஸ்லிம் பொருளியலாளர்களுக்கு ஒரு வெல்ல முடியாத பிரச்சினையாகவேயுள்ளது.

நான்காவதாக, முஸ்லிம் பொருளியலாளர்கள் எதைப்பற்றி ஆர்வமாகப் பேசுகிறார்கள் என்பது குறித்து தொழில்சார் பொருளியலாளர்கள் அக்கறை காட்டுவதுமில்லை. அதேநேரம், மேற்குலக பொருளியலாளர்களின் ஒரு சிறிய பகுதியினர் இஸ்லாமிய பொருளியல் சிந்தனைகளை நோக்கிக் கவரப்பட்டுள்ளதுடன், பல்வேறுபட்ட அபிப்பிராயங்களையும் கொண்டுள்ளனர். சிலர், இஸ்லாமிய பொருளியல் அறிஞர்கள் மேற்கத்தேய கோட்பாடுகளுக்கு, இஸ்லாமிய கொள்கைகளை மொத்தமாகவே நடைமுறைப்படுத்துவதில் அல்லது பிரதிபண்ணுவதில் ஈடுபட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றனர். இன்னும் சிலர், சமகால பொருளாதார யதார்த்தத்துக்கு இடமளிக்கும் வகையிலான ஒரு பொருளாதார முறைமையை அபிவிருத்தி செய்வதன் சாத்தியம் பற்றி சந்தேகிக்கின்றனர்.

ஐந்தாவதாக, முஸ்லிம்களில் சிலரும் கூட இஸ்லாமிய பொருளியல் பற்றிய மிகப் பெரிய குழப்பத்துக்கு பலியாகியுள்ளனர். முதலாளித்துவ மற்றும் சோஷலிச பொருளாதார முறைமைகளின் தெளிவானதும் சிக்கலானதுமான தன்மைகளால் உந்தப்பட்டு இஸ்லாமிய பொருளாதார முறைமையையும் இஸ்லாத்தின் ஒரு சில நம்பிக்கைகளுடன் கூடிய முதலாளித்துவ மற்றும் சோஷலிச பொருளாதார முறைமைகளின் கலவையாகத் தான் பார்க்கின்றனர். இஸ்லாமிய பொருளியல் பற்றிய இத்தகைய பிழையான கருத்துக்கள், அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டதனையே தெளிவுபடுத்துகின்றன.

இந்த அத்தியாயமானது, இத்தகைய சந்தேகங்கள் மற்றும் குழப்பங்களை நிவர்த்திக்க முனைகின்றது. இது, இஸ்லாமிய பொருளியலின் தன்மை, பரப்பு மற்றும் விடயதானங்களை வரைவிலக்கணப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும். இஸ்லாமிய

பொருளியலானது சமகால உண்மைகளையோ, ஏழாம் நூற்றாண்டில் காணப்பட்ட அரேபிய சமூகத்தைப் போல் ஒரு மாற்றத்துக்கு இட்டுச் செல்ல வேண்டிய நிலைமைகளையோ மறுக்கவில்லை. இது, அடிப்படை பொருளாதாரத் தொழிற்பாடுகளை அடையாளம் காண்பதை மட்டுமே செய்கின்றது. இஸ்லாம், ஒருபோதும் பொருளாதார உறவுகள் மற்றும் தாபனங்களைத் தடைசெய்யவில்லை. ஒருவேளை, அவ்வாறு தடைசெய்திருக்குமானால், பிரபஞ்சத்துக்கான அதன் சுய உரிமை கோரலை அதுவே மறுத்ததாக ஆகிவிடும்.

இவ்வத்தியாயத்தின் எஞ்சிய பகுதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன: முதலாவதாக, மனிதத் தன்மை, புவியில் மனிதனின் நிலை மற்றும் புவி வளங்களுடன் மனிதனுக்குள்ள தொடர்பு என்பன பற்றிய இஸ்லாமிய பார்வை மற்றும் அதன் நிலை பற்றி சுருக்கமாக கலந்துரையாடவுள்ளோம். அடுத்து, இஸ்லாமிய பொருளியலுக்கான வரைவிலக்கணத்தை வழங்கி, அதனுடைய பிரதான எண்ணக்கருக்களை விளங்கப்படுத்துவதன் மூலம் அதனை ஒரு தனித்துறையாக அறிமுகப்படுத்துகின்றது. இது, இஸ்லாமிய பொருளியலின் மூலங்களை சுருக்கமாகவே குறிப்பிட்டுச்செல்லும். மேலும், இதில் இஸ்லாமிய பொருளியலின் அணுகுமுறை மற்றும் இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டத்தில் பொருளாதார முறைமை வகிக்கும் இடம் என்பன பற்றிக் கலந்துரையாடப்படும்.

## 2. இஸ்லாமிய பொருளியலின் வரைவிலக்கணம்

இஸ்லாமியப் பொருளியல், முஸ்லிம் பொருளியலாளர்களால் பல்வேறுபட்ட முறையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து வரைவிலக்கணங்களுமே இஸ்லாத்தின் அறிவியல் மற்றும் ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டன. இஸ்லாமிய பொருளியலின் அத்தகைய வரைவிலக்கணங்களின் சாரமாக இருப்பது, ‘‘இஸ்லாமிய பொருளியலானது ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றலின் ஒட்டுமொத்த கூட்டு நடத்தை (பேரின

மட்டம்) என்பவற்றை அடிப்படையில் புவியிலுள்ள வளங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மனித ஃபலாஹை அடைவதை நோக்காகக் கொண்ட கற்கையாகும்''.

மேற்சொன்ன வரைவிலக்கணத்திலுள்ள பிரதான எண்ணக் கருக்களாவன:

அ. ஃபலாஹ்

ஆ. வளங்கள்

இ. ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல்

## 2.1 ஃபலாஹ்

ஃபலாஹ் என்ற இப்பதத்துக்குச் சமமான ஒரு சொல்லை தமிழில் குறிப்பது கடினமானதாகும். இச்சொல்லானது, ஃபல்ஹ் என்ற அரபி மூலத்திலிருந்து பெறப்பட்டதாகும். இதன் வினை வடிவங்களான அஃப்லஹ், யுஃப்லிஹு என்பதன் கருத்துக்களா வன: செல்வத்தை பெருக்கு, மகிழ்ச்சியாக இரு மற்றும் வெற்றி பெறு என்பனவாகும். ரகீப் அல் இஸ்ஃபஹானியின் கருத்துப் படி, ஃபலாஹ் என்பது ஓர் ஈருலக எண்ணக்கருவாகும். இவ் வுலக வாழ்வில் அது மூன்று விடயங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது: பகா (நிலைத்து நிற்றல்), கினா (தேவையற்றி ருத்தல்) மற்றும் இஸ் (அதிகாரம் மற்றும் மதிப்பு).

மறுமையில், அது நான்கு விடயங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது: பகா பிலா ஃபனா (முடிவற்ற வாழ்வு), கினா பிலா ஃபக்ர் (நிலையான சுபீட்சம்), இஸ் பிலாதுல் (இழிவேயில் லாத மதிப்பு) மற்றும் இல்ம் பிலா ஜஹ்ல் (மடமையே இல்லாத முழு அறிவு). அல்-குர்ஆனின் கருத்துப்படி, மனித வாழ்வின் இறுதி இலக்கு மறுமையில் ஃபலாஹை அடைவதாக இருக்க வேண் டும். இவ்வுலக வாழ்வுடன் ஒப்பிடப்படும் போது மறுமை வாழ்வே உண்மையானதாகவுள்ளது. இவ்வுலக வாழ்வு, வெறு மனே வீண் விளையாட்டாகவும் சொற்ப இன்பத்தைத் தரும் இடமாகவுமே உள்ளதென அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இஸ்லாமிய பொருளியலின் இறுதிக் குறிக்கோள் மறுமையில் ஃபலாஹை அடைவதாக இருந்தாலும், ஒருவர் இவ்வுலகில் வாழும் போது செய்த நற்செயல்களுக்கான வெகுமதியாகவே அது வழங்கப்படும். இவ்வுலக வாழ்வின் ஃபலாஹ் ஆனது, மறுமை யில் ஃபலாஹை அடைவதற்கு இட்டுச்செல்லும். இஸ்லாமிய வாழ்க்கை முறையிலுள்ள பொருத்தப்பாடு யாதெனில், அது இம்மை-மறுமை ஆகிய ஈருலகிலும் ஃபலாஹ் அடையப்படு வதை நோக்காகக் கொண்டுள்ளது. தொடர்ந்து நாம் இதில் ஃபலாஹை இவ்வுலக வாழ்வுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வுள்ளோம்.

இவ்வுலக வாழ்க்கையில் ஃபலாஹ், ஒரு பல்-பரிமாண எண்ணக்கருவாகும். அது, தனிநபர் நடத்தை (நுண்பாக மட்டம்) மற்றும் கூட்டு நடத்தை (பேரின மட்டம்) ஆகியவற்றை உள்ளடக்கியது. பின்வரும் அட்டவணை, ஃபலாஹின் கருத் தினை இவ்விரு மட்டங்களிலும் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

*அட்டவணை: 2* ***ஃபலாஹ்***

| | **நுண்பாக மட்டம்** | **பேரின மட்டம்** |
|---|---|---|
| பிழைத்து வாழல் | உயிரியல் ரீதியாக பிழைத்து வாழல்: உடல் ஆரோக்கியம், நோயிலி ருந்து பாதுகாப்பு | சூழற் சமநிலை, உடல் நலமுடைய சூழல், அனைவருக்குமான மருத்துவ உதவி |
| | பொருளாதார ரீதியாக பிழைத்து வாழல்: வாழ் வாதாரத்துக்குரிய சாத னங்களைக் கொண்டி ருத்தல் | முழு சனத்தொகைக்கு மான வேலை வாய்ப்பு களை உருவாக்குவதற் கான இயற்கை வளங் ளின் முகாமைத்துவம் |

| | | |
|---|---|---|
| | சமூக ரீதியாக பிழைத்து வாழல்: சகோதரத்துவம் மற்றும் நபர்களிடையே இணக்கமான உறவு | சமூகத்திற்குள் ஒன்றித் தல்: வேறுபட்ட குழுக்க ளிடையே ஒருவரை ஒருவர் அழிக்கின்ற முரண்பாடுகள் இல்லாதி ருக்கின்றமை. |
| | அரசியல் ரீதியாக பிழைத்து வாழல்: உதாரணம்: சுதந்திரம் மற்றும் அரச அலுவல கங்களில் பங்கேற்றல் | சுதந்திரம் மற்றும் சுய நிர்ணயிப்பு |
| தேவையற் றிருத்தல் | வறுமையைக் குறைத்தல் | முழு சனத்தொகைக்கு மான முன்னேற்பாடு |
| | தற்சார்பு: சோம்பேறி களாக பிறரை அண்டி வாழ்வதை விட வேலை செய்தல் | எதிர்கால சந்ததியினருக் காக வளங்களை உருவாக்கல் |
| அதிகாரம் மற்றும் நன்மதிப்பு | சுய கௌரவம் | பொருளாதார அதிகாரம் மற்றும் கடனிலிருந்து சுதந்திரம் |
| | சிவில் சுதந்திரங்கள், நன்மதிப்பு மற்றும் வாழ்வின் பாதுகாப்பு | இராணுவ அதிகாரம் |

*மேற்காட்டப்பட்ட அட்டவணையிலிருந்து ஃபலாஹ் என்பது, மனித வாழ்வின் சகல விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு பரந்த எண்ணக்கரு என்பது தெளிவாகின்றது. இது மனிதனை முயற்சி க்கத் தூண்டுகின்றது. இந்த ஃபலாஹை அடைவதற்கான நேர் மற்றும் எதிர்மறையான நிபந்தனைகளைப் பற்றி அல்-குர்ஆன்*

குறிப்பிடுகின்றது. அல்-குர்ஆனில் ஃபலாஹ் என்ற சொல் அல்லது அதன் மூலத்தில் அமைந்த சொற்கள் நாற்பது இடங்களில் உள்ளன. இவ்வசனங்களைக் கருத்தூன்றிப் படிக்கும் போது, அவை பல்வேறுபட்ட மட்டங்களில் ஃபலாஹின் நிபந்தனைகளை நிர்ணயிப்பதற்கு எம்மை இட்டுச்செல்கின்றன.

### *2.1.1 ஃபலாஹின் நிபந்தனைகள்*

ஃபலாஹின் நிபந்தனைகள் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன:

அ. ஆன்மீகம்

ஆ. பொருளாதாரம்

இ. கலாசாரம்

ஈ. அரசியல்

### *அ. ஃபலாஹின் ஆன்மீக நிபந்தனைகள்:*

i. தொழுகையில் பணிவு (குஷூஉ)
ii. இறையச்சம் (தக்வா)
iii. இறை நினைவு (திக்ர்)
iv. பாவ மீட்சி (தவ்பா)
v. உளத் தூய்மை (தஸ்கியா)

இந்த ஒவ்வொரு நிபந்தனையும் ஒவ்வோர் அர்த்தத்தைக் கொண்டுள்ளன. மேலும், இஸ்லாமானது ஃபலாஹின் இத் தோற்றப்பாடுகள் குறித்து விரிவான விளக்கங்களைக் கொண்டிருக்கின்றது. நாம், அவற்றை இவ்விடத்தில் விளக்கமாகக் குறிப்பிடவில்லை.

### *ஆ. ஃபலாஹின் பொருளாதார நிபந்தனைகள்:*

**I. *இன்ஃபாக்:*** இன்ஃபாக்கானது இறை திருப்தியை மட்டுமே நோக்காகக் கொண்டு ஏனையோருக்காகவும், சமுதாயத்தின்

*சமூகத் தேவைகள் மீதும் செலவிடுவதைக் குறிக்கும். இது, வழமையாக எல்லா சமூகங்களிலும் காணப்படும் நன்கொடையமைப்பிலிருந்து வேறுபட்டது. அறியாமைக் கால அரேபிய சமூகத்தில் வாழ்ந்தவர்கள் கூட தர்மம் புரிவதில் விருப்பமுடையவர்களாக இருந்தார்கள். ஆனால், இஸ்லாமானது பல வழிகளில் தர்மம் பற்றிய விரிவான கருத்தினைக் கொண்டுள்ளது.*

*முதலாவதாக, அது யாரிடம் தமது தேவைக்கு மேலதிகமாக வசதியுள்ளதோ, அவர்கள் குறைந்தபட்சம் குறித்ததோர் விகிதாசாரத்துக்கேற்ப அமையும் தொகையைச் சமூகத்துக்கு ஸகாத்தாக வழங்குவது கட்டாயக்கடமையாகும். வேறு வார்த்தையில் சொல்வதானால், இதனை வழங்குவது சுய விருப்பு-வெறுப்புக்கு அப்பாற்பட்டது. ஏனெனில், ஸகாத்தாக அமையும் சொத்து அவருக்குச் சொந்தமானதல்ல; அதனை அவரே நுகர்வது ஹராமாகும்.*

> ‘‘(நபியே!) அவர்களுடைய செல்வங்களிலிருந்து தர்மத்தை (ஸகாத்தை) எடுப்பீராக!...’’(9:103)

*இரண்டாவதாக, பரந்த கருத்தின்படி இன்ஃபாக்கானது ஒருவர் தனது சொந்த குடும்பத்தினருக்காக செலவிடுவதையும் உள்ளடக்கும்.*

> ‘‘(நபியே!) ‘எதை (யாருக்குச்) செலவு செய்வது?’ என்று உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறுவீராக: (நன்மையை நாடி) நீங்கள் பொருளிலிருந்து செலவு செய்வது பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் வழிப்போக்கருக்கும் உரியதாகும். இன்னும், நன்மையிலிருந்து (எதையும்) நீங்கள் செய்தால், நிச்சயமாக அல்லாஹ் அதனை நன்கறிகிறவன்.’’ (2:215)

*மூன்றாவதாக, வறியோரும் தேவையுடையோரும் செல்வந்தர்களின் செல்வத்திலிருந்து ஒரு பங்கினைப் பெறுவதற்கு உரித்துடையோராவர் என இஸ்லாம் அடையாளப்படுத்துகின்றது. வறியோர், இப்பங்கினைத் தாம் பெற்றதற்காக அச்செல்வந்தர்கள் மீது எந்தவொரு கடப்பாட்டையும் கொண்டவர்களல்லர்.*

*நான்காவதாக, இன்ஃபாக்கானது முற்றிலும் அல்லாஹ்வுக் காகவே வழங்கப்படுவதோடு, அதற்கான வெகுமதியும் மறுமை யிலேயே வழங்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டுள்ளது.*

''அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய செல்வங்களை செலவு செய்கின்றார்களே அத்தகையோரின் உதாரணம்: ஒரு வித்தின் உதாரணத்தைப் போன்றிருக்கின்றது. அது ஏழு கதிர்களை முளைப்பித்தது; ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் உள்ளன; இன்னும் அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு (இதை மேலும்) இரு மடங்காக்குகின்றான்; அல்லாஹ் மிக்க விசாலமானவன்; யாவற் றையும் அறிகின்றவன்.'' (2:261)

''தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்து (அப்பொருளைக் கொடுக்கப்பட்டவனுக்குத்) தாங்கள் செலவு செய்ததை அதன் பின்னர் சொல்லிக் காட்டு வதையோ, (வேறு விதமாக) நோவினை செய்வதையோ தொடர மாட்டார்களே அத்தகையோர்- அவர்களுக்கு அவர்களுடைய கூலி இரட்சகனிடத்தில் உண்டு; அவர்களுக்கு யாதொரு பயமு மில்லை; அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்.'' (2:262)

*உலகியல் சார்ந்த சமூகங்களில் தர்மமானது இறை திருப்தி யைப் பெறுவதை விட சமூகத்தின் நன்மதிப்பைப் பெறுவதற் காகவே மேற்கொள்ளப்படுகின்றது. இஸ்லாத்தின் கருத்துப்படி, இன்ஃபாக்கானது ஒருவருடைய ஆன்மீகத்தை வளர்ப்பதற்கான ஒரு கருவியாகும். இதுவே, இன்ஃபாக் மக்களால் பெரிதும் விரும்பப்படுவதன் இரகசியமுமாகும். இது ஏனையோரையும் தர்மத்தின் பால் செலவு செய்யத் தூண்டுகின்றது. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, ஒரே சமூகத்தின் பிரஜைகளாக அனை வரையும் நோக்க வைக்கின்றது.*

*அல்-குர்ஆன், இன்ஃபாக்கை ஃபலாஹினை அடைவதற்கான ஒரு நிபந்தனையாகக் குறிப்பிடுகின்றது. இது ஒருவருடைய மொத்த உடைமையில் ஒரு பகுதியை மட்டுமே குறிக்கின்றது. ஒருவர், அவருடைய செல்வம் முழுவதையும் தர்மத்தின் பால்*

*செலவிட ஒருபோதும் கோரப்படமாட்டார். அல்-குர்ஆன் கூறுகின்றது.*

''அவ்வாறு, அவன் உங்களிடம் அதனைக் கேட்ட பின்னர் உங்களை அவன் வற்புறுத்தினாலும், (அதனைக் கொடுக்காது) நீங்கள் உலோபித்தனம் செய்வீர்கள்; (அந்நேரத்தில்) அவன் உங்களுடைய கபடங்களை வெளியாக்கியும் விடுவான்.'' (47:37)

*மேலும், இதற்கான காரணம் பின்வரும் வசனங்களுடன் தொடர்புபட்டது.*

''... இன்னும் மனிதன் பலவீனமானவனாகவே படைக்கப்பட்டுள்ளான்.'' (4:28)

''இன்னும், நிச்சயமாக (மனிதனாகிய) அவன் செல்வத்தை விரும்புவதில் இயல்பிலேயே மிகத் தீவிர மானவனாக இருக்கின்றான்.'' (100:8)

*அல்லாஹ்வுக்காக அனைத்தையும் தியாகம் செய்யுமாறு அவன் அழைக்கப்படுவானானால் அதை ஒரு பெரும் சுமையாகவே கருதுவான். ஆகவே தான், அல்-குர்ஆன் மனிதத் தன்மைகளுக் கேற்ப கட்டளைகளை இட்டுள்ளது. இன்ஃபாக், மொத்த உடைமையில் ஒரு பகுதியாக மட்டுமே காணப்படுவதால், அது மனித இனத்தின் முயற்சிகளைத் தூண்டுவதோடு, செல்வத்தை மிகையாக உருவாக்கி எதிர்கால சந்ததியினரும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான ஆற்றலை வழங்குகின்றது. இது, ஒருவரது சொந்த தேவைகளுக்கு உயர்ந்த முன்னுரிமையை வழங்குவது போலவே, அவர் தன்னிடமுள்ள மேலதிக செல்வத்தைச் சரியான நோக்கிற்காக ஈடுபடுத்த வேண்டுமெனவும் கூறுகின்றது.*

*அல்-குர்ஆனின் பிரபல விரிவுரையாளர் மஹ்மூத் அலூசி (மறைவு ஹிஜ்ரி 1270) இன்ஃபாக் பற்றிய தனது கருத்தைக் கூறும் போது, இன்ஃபாக் என்பது ஃபலாஹை அடைவதற்குப் போதுமான ஒருவரது உடைமைகளின் ஒரு பகுதி மட்டுமேயாகும். ஒருவருடைய மொத்த செல்வத்தையும் செலவிடுவதை இது*

குறிக்காது. ஏனெனில், அத்தகைய செயல்கள் துறவறத்துக்கு இட்டுச்செல்லக் கூடும். நபி (ஸல்) அவர்கள், தமது தோழர் ஒருவர் இதுபற்றிக் கேட்ட போது அவரது மொத்த செல்வத்தையும் தர்மமாக செலவிட வேண்டாம் என்றே குறிப்பிட்டுள்ளார்கள்.

ஸகாத் என்பது, இன்ஃபாக் என்ற விரிவான எண்ணக்கருவின் ஒரு பகுதியாகும். அல்-குர்ஆன், ஃபலாஹின் ஒரு நிபந்தனையாக ஒருவர் தூய்மையடைவதற்கு ஸகாத்தை எண்ணிக் கணக்கிட்டு வழங்குமாறு குறிப்பிடுகின்றது. இதன் அடிப்படைக் கருத்து யாதெனில், ஸகாத் ஒருவருடைய ஆத்மாவை செல்வத்தின் மீதான அளவு கடந்த ஆசையிலிருந்து தூய்மைப்படுத்துகின்றது.

> ''(நபியே!) அவர்களுடைய செல்வங்களிலிருந்து தர்மத்தை (ஸகாத்தை) எடுப்பீராக! அதனால் அவர்களை நீர் சுத்தப்படுத்தி, அவர்க(ளின் அகங்க)ளை தூய்மையாக்கி வைப்பீராக! மேலும், அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! நிச்சயமாக உமது பிரார்த்தனை அவர்களுக்கு நிம்மதியளிப்பதாகும்; மேலும், அல்லாஹ் செவியேற்கிறவன்; மிக்க அறிகின்றவன்.'' (9:103)

இன்ஃபாக்கானது இன்னும் பல சிறப்புப் பண்புகளையும் பெற்றுள்ளது. பொதுவாக, எளிய வாழ்க்கை முறையை நடை முறைப்படுத்தும் போதே சாத்தியமாகும். பிறருக்குக் கொடுப்ப தற்காக சிரமப்பட்டு செல்வத்தை ஏன் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றுவது இயல்பு. ஏனெனில், மனிதன் செல்வத்தை வேகமாகப் பெருக்கவே ஆசைப்படுகின்றான். ஓர் அறுவடையைப் பெற்று, அடுத்த அறுவடையை விரைவில் பெறும் வரை அவனுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை.

எனவே, இன்ஃபாக் வழங்கப்படும் இவ்வாழ்வு மிக எளிய மற்றும் மன நிறைவளிக்கும் வாழ்வாகும். இதனால் தான், இன்ஃபாக்கின் இயல்பான விளைவுகளாக மனநிறைவு, உளத் திருப்தி, தியாகம், விட்டுக்கொடுப்பு மற்றும் நடுநிலை என்பன கூறப்படுகின்றன. அதேநேரம், பகட்டான மற்றும் வீண் செலவு செய்கின்ற வாழ்க்கையானது இன்ஃபாக்கிற்கு இடையூறாகவும் தடையாகவுமே உள்ளன. எப்போது ஒருவர் இன்ஃபாக்கினுடைய

*பழக்கத்தை வாழ்வில் ஏற்படுத்துகின்றாரோ அப்போது அவர் இஸ்லாத்தின் ஒட்டுமொத்த வாழ்க்கை முறையை நடைமுறைப் படுத்தியவராகிறார்.*

**II. *வட்டியின் தடை:*** *அல்-குர்ஆன், ஃபலாஹை அடைவதற்கு கடன் மூலதனம் மீதான வட்டியை (ரிபா) தடையாக அறிவிக் கின்றது. அறியாமைக் கால அரேபிய சமூகத்தில் கூட கடன் மூலதனத்துக்கான வட்டி வழமையான ஒன்றாகக் காணப்பட்டது. செல்வந்தர்களால், வறியோரும் தேவையுடையோரும் சுரண்டப் பட்டனர். வர்த்தகக் கடன்களுக்காக வட்டியை வழங்குவதும் பெறுவதும் கூட குறைஷிக் குலத்தில் வழக்கமாக அறியப்பட்ட ஒன்றாகவே இருந்தது.*

> ''வட்டியை உண்பவர்கள், ஷைத்தான் தீண்டியதால் எவனை அவன் நினைவிழக்கச் செய்தானோ அத்தகையவன் எழும்புவது போலன்றி, (வேறு வகையாக மறுமை நாளில்) அவர்கள் எழ மாட்டார்கள். அ(ந்த நிலைக்கு அவர்கள் ஆளான)து, நிச்சயமாக 'வியாபாரமெல்லாம் வட்டியைப் போன்றது தான்' எனத் திட்டமாக அவர்கள் கூறியதால் தான். மேலும், அல்லாஹ் வியாபா ரத்தை ஆகுமாக்கி வைத்து, அவன் வட்டியை (ஹராமாக்கி)த் தடுத்து விட்டான். ஆதலால், (உங்களில்) யாருக்குத் தன் இரட்சகனிட மிருந்து (வட்டியைப் பற்றிக் கண்டித்து) உபதேசம் வந்து, பின்னர் (அதை விட்டு) அவர் விலகிக் கொண்டாரோ, (அவர் அதற்கு) முன் (வாங்கிச்) சென்று போனது அவருக்குரியதே; இன்னும், அவருடைய காரியம் அல்லாஹ்வின் பாலாகும்; மேலும், (இக் கட்டளை கிடைத்த பின்) எவர்கள் (வட்டியை எடுப்பதன் பால்) திரும்பி விடுகின்றார்களோ, அவர்கள் நரகவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக(த்தங்கி) விடுவார்கள்.'' (2:275)

*நபி (ஸல்) அவர்கள் வட்டியின் அனைத்து வடிவங்களையும் சட்ட ரீதியற்றது என்றே அறிவித்தார்கள். அவர்கள், இதனைத் தடுப்பதற்கு வேறுபட்ட முறைகளைக் கையாண்டதோடு, மாறு பட்ட வேடங்களில் பொருளாதாரத்திற்குள் நுழையும் வட்டி யையும் முடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.*

இஸ்லாமிய பொருளியல், வட்டியின் தடை பற்றி பேசுவதைப் போல வேறு எதைப் பற்றியும் அதிகம் பேசவில்லை எனலாம். இதற்கான காரணம், வட்டியானது சுரண்டல் மற்றும் அநீதியை ஏற்படுத்தும் பிரதான காரணியொன்றாக உள்ளதேயாகும். பொரு ளாதாரத்திலிருந்து வட்டி முழுமையாக நீக்கப்படும் வரை, ஃபலாஹிற்கான பாதை முன்செல்லாமல் தொடர்ந்து அதே இடத்தில் தடைப்பட்டிருக்கும்.

**III. ஒப்பந்தங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பூரணத்துவம்:** இது ஃபலாஹிற்கான ஒரு கட்டாய நிபந்தனையாகும். ஒவ்வொரு சமூகத்தினரும் தமது வழக்கில் எந்த வாசகங்களைப் பயன்படுத்தி ஒப்பந்தம் செய்து வருகின்றார்களோ, அவற்றைக் கொண்டே ஒப்பந்தம் உருவாகும். மார்க்கத்திலோ, அகராதியிலோ அதற்கு நிரந்தரமான வரையறை கிடையாது. எளிய கருத்தில் இதைக் கூறின், சுய பொறுப்புக்கள் மற்றும் வாக்குறுதிகளுக்கு மதிப்புக் கொடுத்தல் எனலாம். ஆனால், சில அறிஞர்கள் ஒப்பந்தத்தின் பூரணப்படுத்தலுக்கு அல்-குர்ஆனின் கருத்துப்படி பரந்த விளக் கத்தை முன்வைக்கின்றனர். அவர்களது கருத்துப்படி, அது ஒருவ ருடைய அனைத்து சமூக மற்றும் சமயக் கடமைகளுடனும் தொடர்புபடுகின்றது. மனிதன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிபடக் கடமைப்பட்டுள்ளான். அதேபோல், அவ னுக்கு குடும்பம், அயலார் மற்றும் சமூகத்தை நோக்கிய கடமை களும் காணப்படுகின்றன. உதாரணமாக, ஒருவரது தொழில் முயற்சியினால் (ஒழுங்கு விதிகளுக்கு மாறாக) வெளியிடப்படும் கழிவுகள் சூழலை மாசுபடுபடுத்துவது, சமூகத்தை நோக்கிய ஒருவரது கடமைகளையும் மற்றும் ஃபலாஹை நோக்கி சமூகம் செல்கின்ற வேகத்தையும் குறைக்கின்றது. அதேபோல், அரசாங் கத்துக்கு மக்களின் நலனை உறுதிப்படுத்தும் கடமை காணப் படுகின்றது. சமூகத்திலுள்ள அனைவரும் இவ்வொப்பந்தங் களைப் பூரணப்படுத்தாதவரை ஃபலாஹை அடையமுடியாது.

**IV. *நீதி:*** அல்-குர்ஆன் பல இடங்களில் நீதியை வலியுறுத்திப் பேசுகின்றது. அனைத்து விவகாரங்களிலுமே நீதியின் கவனம்

ஃபலாஹுடன் தொடர்புபட்டுள்ளது. அல்-குர்ஆன் நீதியின் எதிர்ச் சொல்லாக ழுல்ம் என்ற பதத்தைப் பயன்படுத்தியுள்ளது. ழாலிம் (ழுல்ம் என்ற குற்றத்தைச் செய்தவர்) ஃபலாஹை அடைய மாட்டார் என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது.

ஒருவர் நேர்மையான முறையில் பெற்றுக்கொண்ட செல் வத்தை ஏனையோர் பரிசாகவோ, இழப்பீடாகவோ அன்றி முறை யற்ற விதத்தில் பெற முயற்சிப்பார்களாயின், அச்சமூகத்தில் பரந்த ஏற்றத்தாழ்வுகள், சமூக விரயங்கள் மற்றும் உழைப்பதற்கான குறைவான தூண்டுதல் போன்றன ஏற்படும். இஸ்லாமிய சட்டம், செல்வத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சட்ட ரீதியான வழிமுறை களைத் தெளிவாகவே வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. இவ்வழி முறைகளிலிருந்து விலகிக் கொள்வது ழுல்மிற்கு இட்டுச் செல்வ தோடு, அது ஃபலாஹின் வழியில் தடையினையும் ஏற்படுத்தும்.

**V. தொழில்:** மனிதன் தொழில் மற்றும் வாழ்வாதாரத்துக்காகப் போராடுவதை அல்லாஹ், அவனது 'அருளைத் தேடுவதாகக்' குறிப்பிட்டுள்ளான்.

வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தொழில் மற்றும் இயற்கை வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதென்பது ஃபலாஹை அடைவதற்கு அவசியமான ஒரு நிபந்தனையாகும். அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

> ''பின்னர் ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டால் பள்ளியிலிருந்து வெளிப்பட்டு பூமியில் பரவிச் சென்று, அல் லாஹ்வுடைய பேரருளைத் தேடிக் கொள்ளுங்கள்; மேலும், நீங் கள் வெற்றியடையும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூருங்கள்.'' (62:10)

மனிதன் 'இறையருளைத் தேடுவதற்கு' இன்னும் பல வசனங் கள் தூண்டினாலும், மேற்கூறப்பட்ட வசனத்தில் ஃபலாஹை அடைவதற்கான எதிர்பார்ப்போடு கூடிய தூண்டுதல் காணப்படு கின்றது. இவ்வசனம், மக்கள் வேலை செய்வதையும் அதன் மூலம் அவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்தைப் பெற்றுக்

கொள்வதையும் கட்டாயப்படுத்திய அதேவேளை, நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கள், சோம்பேறித்தனம் மற்றும் யாசகம் பற்றிய அன்னாரது எச்சரிக்கைகள், நிலம் மற்றும் இயற்கை வளங்களை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் பயன்படுத்து வதை விருத்தி செய்யும் செயன்முறைகள் மற்றும் வணிகர்கள், கலைஞர்களுக்கான அன்னாரது செய்திகள் என்பவற்றுடன் முழு மையாகத் தொடர்புபட்டுள்ளன. ஆகவேதான், பொருளாதார உற்பத்தி நடவடிக்கை, சமூகத்தினதும் தனிநபர்களினதும் ஃபலா ஹிற்கு பங்காற்றுகின்றது என்பது உறுதியான விடயமாகும்.

### இ. ஃபலாஹின் கலாசார நிபந்தனைகள்:

அல்-குர்ஆன், முஸ்லிம்களுக்கென ஒரு தனித்துவமான கலா சார முறையை வகுத்துத் தந்துள்ளது. சமூகம் இம்முறையை நடைமுறைப்படுத்தத் தவறும்போது ஃபலாஹினையும் அடையத் தவறிவிடும். இஸ்லாமிய வாழ்க்கை முறையானது சமூக, பொரு ளாதார அம்சங்களைப் போலவே கலாசார விழுமியங்களையும் கொண்டுள்ளது. எனவே, நாம் இங்கு ஃபலாஹின் கலாசார நிபந்தனைகளைச் சுருக்கமாகப் பார்ப்பது பொருத்தமானது. மேலும், முஸ்லிம் பொருளியலாளர்களின் ஆக்கங்களில் கூட இது பற்றித் தாராளமாக விளக்கப்பட்டுள்ளது.

**I. தொழுகை முறை (இகாமதுஸ் ஸலாத்):** இது பள்ளிவாசல் களை நிறுவுதல், நாளாந்த, வாராந்த கூட்டுச்சேரும் தொழுகை களுக்கான ஏற்பாடுகள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகளின் நியமனம் போன்ற பல விடயங்களை உள்ளடக்குகின்றது. ஒரு நாளைக்கு ஐவேளை தொழ வேண்டுமென்ற கடப்பாட்டுடன் கூடிய முறையானது ஓர் உயர்ந்த ஒழுக்கச்செயல் என்பது தெளி வான விடயமாகும். மக்கள் ஒரு தலைவருக்குப் பின்னால் வரிசையாக நின்று, ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தொழு கையை நிறைவேற்றுகின்றனர். கடமையான தொழுகைகளின் ஏனைய பயன்களும் கூட தனிநபர்களுக்கு ஒழுக்கத்தை மற்றும் ஒழுங்கமைப்பைப் போதிப்பதற்கான ஓர் உயர்ந்த பொறி முறையாகும்.

**II. அறிவு (இல்ம்):** இஸ்லாத்தில் அறிவுக்கு மிகப் பிரதான இடம் வழங்கப்பட்டுள்ளது. ஊகங்களும் பொய்யாக உருவாக் கப்படுபவையும் ஃபலாஹை ஒருபோதும் அடைய முடியாது என அல்-குர்ஆன் மீண்டும் மீண்டும் கூறுகின்றது. இதனால், அறிவைத் தேடிப்பெறல், அதனை விளங்கல் மற்றும் அதன்படி நடத்தல் என்பவற்றை இஸ்லாம் வலியுறுத்திக் கூறுகின்றது. அல்-குர்ஆன் மந்திரத்தை எச்சரிப்பதோடு, மந்திரக்காரர்கள் ஃபலாஹை அடைய முடியாது எனவும் குறிப்பிடுகின்றது. மக்கள் தமது அறிவை விட மூட நம்பிக்கைகள் மற்றும் கட்டுக்கதைகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன்படி நடந்து கொண்ட ஒரு சமூகத்தைப் பற்றி அல்-குர்ஆன் எச்சரிக்கின்றது. அதேபோல், அல்-குர்ஆன் சூதாட்டம் மற்றும் உருவ வழிபாடு என்பவற்றையும் கண்டிக்கின்றது. இதிலிருந்து, அறிவைப் புறக் கணிக்கும் சமூகம் ஃபலாஹை அடைய முடியாது என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

**III. கற்பைப் பேணல்:** நாணம் மற்றும் கற்பைப் பேணல் என்பன ஃபலாஹை அடைவதற்குரிய பண்புகளாக அல்-குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது. சட்டப்படியான பாலுறவு ஒரு நிலையான குடும்ப வாழ்க்கையின் அத்திவாரமாகும். எப்போது, பாலியல் விருப்பங்கள் அதனுடைய சட்டப்படியான வரம்புகளை மீறு கின்றதோ, அப்போது அது ஒழுக்கமின்மை, குடும்பங்களின் சிதைவு, இளைஞர்களின் குற்றச்செயல்கள் மற்றும் கொடிய நோய்கள் என்பவற்றுக்கு இட்டுச் செல்கின்றது.

**IV. மதுபானம் மற்றும் சூதாட்டத்தின் தடை:** மதுபானம் மற் றும் ஏனைய போதையூட்டும், வெறியூட்டும் பானங்களை அருந்துதல் மற்றும் அதிர்ஷ்டத்தை அறியும் விளையாட்டுக்களை விளையாடல் என்பன பல வகையான சமூகத் தீமைகளுக்கு இட்டுச் செல்கின்றது. எனவே, இவற்றைப் பாவிப்பதையும் விற் பதையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. அல்-குர்ஆன், இவற்றை ஃபலாஹை அடைவதற்கான தடைகளாகக் குறிப்பிடுகின்றன.

**V. சுற்றாடலின் தூய்மை:** அல்-குர்ஆன், உளத்தூய்மையை (தஸ்கியா) ஃபலாஹை அடைவதற்கான பிரதான நிபந்தனை யாகக் குறிப்பிடுகின்றது. இது, பெரும்பாலும் செல்வத்திலிருந்து உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதை (ஸகாத்) குறிப்பதாகக் கருத்துக் கொள்ளப்படினும், சில அறிஞர்கள் இது சுற்றாடலின் தூய்மையையும் குறிப்பதாக விரிவுபடுத்துகின்றனர். அல்-குர்ஆன் வலியுறுத்தும் உடல் மற்றும் உடை சுத்தத்தைப் பார்ப்போமென் றால் இவ்விவரிப்பு சரியானதாகவே தோன்றுகின்றது. சூழல் மாச டைதலுக்கு ஃபலாஹ் என்ற இஸ்லாமிய எண்ணக்கருவிற்குள் உள்ளடங்காத, பொருள் அபிவிருத்திக்கான சமகாலப் போட்டியே காரணமாகும்.

**vi. நல்லதை ஏவலும், தீயதைத் தடுத்தலும்:** இஸ்லாமிய பொருளாதாரத்தின் தனிப்பட்ட பண்புகளில் ஒன்று தான், ஒவ் வொரு தனிநபரும் ஏனையோரை நல்ல நடத்தைகளின் பால் வலியுறுத்துவதற்கும் தவறான செயல்களை விட்டும் தடுப்பதற் கும் பொறுப்புடையோராவர் என்ற விடயம். இஸ்லாமிய கண் ணோட்டத்தில் ஒவ்வொருவரும் மேய்ப்பாளராவர். எனவேதான், இதனை அல்-குர்ஆன் ஃபலாஹை அடைவதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாகக் கருதுகின்றது. இஸ்லாமிய சமூகம், மக்களைத் தவறான நடத்தையிலிருந்து தடுத்து சமூக நீதியைக் கட்டியெ ழுப்புகின்றது. ஒருவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத்தைச் சுற்றி வாழும் மக்கள், தனிநபர்களின் விரும்பத் தகாத நடத்தையின் மீது ஒரு கண்ணைத் தொடர்ந்து வைத்தி ருப்பதோடு, அதனைத் தடுப்பதற்கும் முயலவேண்டும். ஏனெனில், அரசாங்கம் தனிநபர்களிலிருந்து நன்நடத்தையை வெளிக்கொணர் வதற்கு எடுக்கும் முயற்சிகளும் அதற்காகச் சட்டத்தைப் பயன் படுத்துவதும் மிகக் குறைவாகவே காணப்படுவதோடு, குறை வாகவே பயனளிப்பவையாகவும் உள்ளன.

**vii. முக்கியமற்றவைகளிலிருந்து விலகியிருத்தல்:** அல்-குர் ஆன், நேரத்தை விரயமாக்கும் முக்கியமற்ற, வீண் விடயங் களைப் பின்தொடர்ந்து செல்வதையும் ஃபலாஹை அடைவதற் கான ஒரு பிரதான தடையாகக் குறிப்பிடுகின்றது. அல்லாஹ்

விசுவாசிகள் திட்டமாக வெற்றிபெற்று விட்டனர் எனக் கூறி விட்டு, அவர்களின் பண்புகளைக் கூறி வருகையில் இரண்டா வதாக இதனையே குறிப்பிடுகின்றான்.

> ''விசுவாசிகள் திட்டமாக வெற்றியடைந்து விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால், தம் தொழுகையில் மிக்க உள்ளச்சமுடை யவர்கள். இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால் வீணான வற்றைப் புறக்கணித்தும் இருப்பார்கள்.'' (23:1-3)

ஒருவருடைய நேரம், முயற்சி மற்றும் வளங்கள் என்பவற் றைப் பயன்தரக்கூடிய மற்றும் விளைதிறன்கூடிய வழிகளில் பயன்படுத்த வேண்டும் என்பதையே இது குறித்துக்காட்டுகின்றது.

## ஈ. ஃபலாஹின் அரசியல் நிபந்தனைகள்

**I. அல்லாஹ்வுக்காகப் போராடல் (ஜிஹாத்):** மனிதர்கள் அல் லது சமுதாயங்கள் அல்லது அரசுகள் சுயநலத்திற்காக நடத்தும் போராட்டம் அறபியில் 'ஹர்ப்' என்றே அழைக்கப்படும். ஆனால், ஃபலாஹிற்கான பிரதான அரசியல் நிபந்தனையாக அமைவது ஜிஹாத் எனப்படும் அல்லாஹ்வுக்காகப் போராடுவதாகும்.

இதனையும் குறுகிய பார்வையில் குறிப்பிடுவதானால், இது சகல விதமான அநீதிகளுக்கெதிராகவும் பலசாலிகளிடமிருந்து பலவீனர்களைக் காப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் ஆயுத போராட்டத்தைக் குறிக்கும்.

ஆனால், உண்மையில் இதன் விரிந்த கருத்தில், அல்லாஹ் ஒருவனின் திருப்தியைப் பெறுவதை மட்டுமே நோக்காகக் கொண்டு அவன் காட்டிய வழிநின்று அவனுடைய மார்க்கத்தை மேலோங்கச் செய்வதற்காகவும் சத்தியத்தை நிலைநாட்டுவதற் காகவும் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் இது குறிக்கும். நீதி, நேர்மை மற்றும் அல்லாஹ்வின் இறைமை என்பவற்றை நிலைநாட்டுவதற்கும் பரப்புவதற்குமான அனைத்து முயற்சிகளையும் இது உள்ளடக்கும். உலகில் எங்காவது கடுந் துயரில் ஆழ்ந்துள்ள மக்களுக்கு ஆறுதல் கூறுவதும் உதவுவதும் கூட இதில் உள்ளடங்கும்.

**II. அரசின் வகிபாகம்:** ஃபலாஹின் மற்றுமொரு அரசியல் நிபந்தனையாக இருப்பது, அரசாங்கம் அதனுடைய மொத்த சனத் தொகைக்கும் அடிப்படை வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுப்பதோடு, மக்களின் உயிர், மதிப்பு மற்றும் சொத்துரிமை என்பவற்றுக்கான பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்ப தாகும். மேலும், மக்கள் அரச அலுவல்களில் பங்கேற்பதற்கு வழியமைப்பதோடு, அதன் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மனிதன் மற்றும் அல்லாஹ்விடம் பொறுப்புக்கூற வேண்டுமென்ற எண்ணத்துடனேயே உருவாக்க வேண்டும். இந்நிபந்தனைகள் மேலே நாம் பார்த்த, ஒப்பந்தங்களைப் பூர்த்தி யாக்கும் பொது நிபந்தனைகளிலிருந்து உருவானதாகும்.

சுருங்கக் கூறின், ஃபலாஹ் என்பது ஒரு பல்-பரிமாண எண்ணக் கருவாகும். அது ஒரு தனிநபருடைய வாழ்வையும் சமூகத் தினுடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. அதனுடைய வேறுபட்ட நிபந்தனைகள் ஒவ்வொன்றும் மற்றொன் றுக்கு வலுவூட்டுவதாகவும் குறை நிரப்புவதாகவுமே உள்ளன. மக்களுடைய ஃபலாஹை முன்னேற்றுவதில் அரசாங்கத்துடைய வகிபங்கும் மிகப் பிரதானமானதாகக் காணப்படுகின்றது. இன் றைய உலகில், இவ்வனைத்து முயற்சிகளுமின்றி சமூகத்தின் அங்கத்தவர்கள் ஃபலாஹை அடைவது மிகக் கடினமானதாகும். உதாரணமாக, சமூகம் ஒன்றிணைந்து வட்டியைத் தடுக்காவிட் டால், தனிநபர்கள் அதிலிருந்து விடுபடுவதற்காக பெரும் பிரச்சி னைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இஸ்லாமிய பொருளியலானது, ஃபலாஹின் பொருளாதார பரிமாணத்தின் மீதே கவனம் செலுத்துகின்றது. அது, ஃபலாஹின் இயக்கப் பரிமாணங்களை விளக்குவதற்கு மத அறிஞர்கள், சமூகவியலாளர்கள், அரசியல் விஞ்ஞானிகள், உளவியலாளர்கள் போன்றோரின் அறிவையும் வேண்டி நிற்கின்றது. எனவே, தனி நபர்களின் பொருளாதார நடத்தைகளை ஆராய்வதால் மட்டுமே ஃபலாஹை முழுமையாக ஆராய்ந்திட முடியாது என்பது தெளி வாகும்.

மேலும், ஃபலாஹ் என்பது வெறுமனே வறுமையைக் குறைத்தல் மற்றும் தேவையற்றிருப்பதை மட்டுமே குறிக்கவில்லை. இவை, அதன் ஒரு அம்சம் மட்டுமேயாகும். ஃபலாஹ் என்பது இஸ்லாமிய சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் ஒளியில் மனித நடத்தையை மீள வடிவமைப்பதோடு, அனைவருக்கும் நியாயமான வாழ்க்கைத்தரம் மற்றும் சுத்தமான சுற்றாடல் என்பவற்றையும் உறுதிப்படுத்துகின்றது. மேலும், இது தனிநபர்களின் தற்சார்பு, சுய கௌரவம் மற்றும் இறையச்சம் என்பவற்றையும் விருத்தி செய்கின்றது. நாளாந்த தொழுகை மற்றும் வணக்கங்களின் மூலமாக உயர்ந்த தனிநபர் மற்றும் சமூக ஒழுக்கங்கள் ஏற்படுவதையும் எதிர்பார்த்து நிற்கின்றது. அறிவின் மீதான ஆசை, அறிவியல் தொடர்பான ஆர்வம் மற்றும் வீணான விடயங்களிலிருந்து விலகியிருத்தல் என்பன ஃபலாஹை முன்னேற்றும் மற்றும் சில சிறப்புப் பண்புகளாகும். இஸ்லாமிய பொருளியல், ஃபலாஹினது ஒரு தோற்றப்பாடான வளங்களின் உற்பத்தி, பங்கீடு மற்றும் பரிமாற்றம் தொடர்பான அம்சத்தை முக்கியமானதொன்றாகக் கருதினாலும், அது மனித நடத்தையின் ஒட்டுமொத்த விடயங்களையும் கற்கின்றது.

## *2.2 வளங்கள்*

இஸ்லாமிய பொருளியலின் வரைவிலக்கணத்துக்குள் காணப்பட்ட இரண்டாவது பிரதான எண்ணக்கருவே புவியிலுள்ள 'வளங்கள்' ஆகும். அல்லாஹ், இவ்வளங்களை அனைத்து மனித இனத்துக்காகவும் படைத்து, மனிதனையே அதற்குப் பொறுப்புதாரியாகவும் ஆக்கியுள்ளான்.

> ''அவனே பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான்...'' (2:29)

> ''வானங்களிலுள்ளவையும் பூமியிலுள்ளவையும், இவ்விரண்டிற்கு மத்தியிலுள்ளவையும் பூமிக்குக் கீழ் (ஈரமான மண்ணுக்கடியில்) உள்ளவையும் அவனுக்கே உரியனவாகும்.'' (20:06)

மனிதன் ஃபலாஹை அடைவதற்காகவே அவ்வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என அல்லாஹ் விரும்புகின்றான். ஃபலாஹிற்கு இட்டுச் செல்லும் இவ்வளங்களை நோக்கிய மனித நடத்தையில், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் மற்றும் அதிலேற்பட்டுள்ள விருத்தி என்பன பற்றியெல்லாம் இந்த இஸ்லாமிய பொருளியல் கற்கின்றது. ஏனெனில், மனிதன் இவ்வளங்களின் உண்மையான உரிமையாளனல்லன்; அவற்றைப் பயன்படுத்துவதில் சுதந்திரமானவனுமல்ல. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப அவற்றை வழிப்படுத்தவே வேண்டப்படுகின்றான். மேலும், அல்லாஹ் இவ்வுலகில் அனைத்தையும் ஒரு நோக்கத்துடனேயே படைத்துள்ளான். புவியிலுள்ள வளங்கள் யாவும் அல்லாஹ்வின் படைப்புகளுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதற்குரிய சாதனங்களாகும். ஆகவே, மனிதன் இவ்வளங்களை அவனைப் போல் ஏனையோரும் பயன்படுத்துவதைத் தடுக்கக் கூடாது. ஒருவர் வளங்களைப் பயன்படுத்தும் போது, அதனை ஏனையோருக்காகவும் விட்டுவைக்க வேண்டும் என்பதும் மிகப் பிரதானமானது.

அல்லாஹ், அவனது படைப்புகளுக்குப் போதுமான வளங்களைப் படைத்திருப்பதாக அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. ஆகவே, தற்போது காணப்படும் வளங்களின் பற்றாக்குறையானது ஒன்றில் தவறான பாவனை அல்லது சமமற்ற பங்கீடு என்பவற்றாலேயே ஏற்பட்டுள்ளது என்பதனை உறுதியாகக் கூற முடியும். இஸ்லாமிய பொருளியலானது வளங்களை 'அருமை' என்பதை விட 'போதிய' என்ற பார்வையிலேயே விளக்குகின்றது. 'அருமை'யான வளங்களின் ஒதுக்கீடு பற்றிய கற்கையானது இஸ்லாமிய பொருளியலின் நோக்கல்ல. மாறாக, அது பின்பழம் பொருளியலின் கவனமாக உள்ளது. இஸ்லாமிய பொருளியலானது மக்களின் ஃபலாஹுடன் பிரதானமாகத் தொடர்புபட்டுள்ளது. ஃபலாஹை அடைந்து கொள்வதற்கு இப்புவியிலுள்ள வளங்கள் போதுமானவை. ஆகவே, பற்றாக்குறை சிறிய அளவில் காணப்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தேவை

*யான போதிய வளங்களை மீளுருவாக்கும் வழிகள் மற்றும் சாத னங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இது உற்பத்தி அடிப் படையில் தொழில்நுட்பத்தை முன்னேற்றல், வளங்களின் மீள்பங் கீடு அல்லது மனித தேவைகளைக் குறைத்தல் என்பவற்றின் மூலமே அடையப்பட முடியும். வளப் பற்றாக்குறை என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு நிலைமை என்பதோடு, இஸ்லாமிய பொருளியல் அதனைத் திருத்தியமைப்பதற்கான வழிகள் மற்றும் சாதனங்களை ஆராய்கின்றது.*

*மேலும், மனிதன், மறுமையில் அவனது செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவனாவான். இவ்வளங்களை அவன் பயன்படுத்திய முறை பற்றியும் பொறுப்புக்கூறக் கடமைப்பட் டுள்ளான். ஏனெனில், இஸ்லாம் வளங்களைச் சேர்ப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் மற்றும் உரிமை மாற்றம் செய்வதற்கும் என அனைத்து ஒழுங்கு விதிகளையும் தெளிவாகக் குறிப்பிட் டுள்ளது. எனவே, இவை உயர் ஒழுக்கப் பண்புகளை உள்ளடக்கி யுள்ளன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.*

## *2.3 ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல்*

*இஸ்லாம் மனித இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஒரு வருக்கொருவர் ஒத்துழைத்து வாழ்வதையும் வலியுறுத்தும் மார்க்கமாகும். உண்மையில் இறை ஏகத்துவத்தின் (தௌஹீத்) ஒரு சான்றாக அல்லாஹ் இதனை குறிப்பிடுகின்றான். அல்-குர்ஆன் கூறுகின்றது,*

> ''நிச்சயமாக, உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்; அவன் எத்தகை யவனென்றால், வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீது இருப்பது எவ்வாறு தகுமோ அவ்வாறே) அர்ஷின் மீது உயர்ந்து (நிலைப்பெற்று) விட்டான்; அவனே இரவால் பகலை மூடுகின்றான். அது தீவிரமாக அதனைப் பின்தொடர்கின்றது; இன்னும் சூரியனையும் சந்திர னையும் நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்கு வயப்பட்டதாகப்

(படைத்திருக்கின்றான்) படைத்தலும் கட்டளையும் அவனுக்கே உரியதெனத் தெரிந்து கொள்ளுங்கள்; அகிலத்தாரின் இரட்சக னாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாகி விட்டான்.'' (7:54)

*பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பகுதியும் அவனது கட்டளைப்படி, மற்ற பகுதியுடன் ஒத்து செயற்படுகின்றன என்பதை இங்கு அல்-குர்ஆன் விவரிக்கின்றது.*

''சூரியன்- அதற்குச் சந்திரனை (அணுகி)ப் பிடிக்க முடியாது; இரவு, பகலை முந்தவும் முடியாது. (இவ்வாறே கிரகங்கள், நட்சத்திரங்கள்) ஒவ்வொன்றும் (தனது) வட்டத்துக்குள் நீந்திச் செல்கின்றன.'' (36:40)

*அல்லாஹ், வளங்களில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தியிருப்பது பரஸ்பர ஒத்துழைப்புக்காகவேயாகும். மனிதன் வேறுபட்ட நிலைகளில் சமமற்று படைக்கப்பட்டுள்ளான். மக்கள் உடல் வாகு, அறிவு, செல்வம், சக்தி, உளவியல் பண்புகள் மற்றும் சிந்திக்கும் பாங்கு என அனைத்திலும் வேறுபட்ட முறையிலேயே உள்ளனர். இந்த தெய்வீகத் திட்டம், எவருமே மற்றவரில் தங்கியிருக்காமல் வாழமுடியாது என்கின்றது. உண்மையில், மக்கள் ஒருவர் மற்றவருடன் ஒத்துழைத்து வாழவில்லையானால் அங்கு நாகரிகமடைந்த ஒரு வாழ்வை எண்ணிப் பார்க்க முடியாது. அல்-குர்ஆன் இதே உண்மையைக் கூறும்போது,*

''(நபியே!) உமதிரட்சகனின் அருளை அவர்களா பங்கிடுகிறார் கள்? இவ்வுலக வாழ்வில் அவர்களுடைய வாழ்க்கை(த் தேவை) யை அவர்களுக்கிடையில் நாமே பங்கிட்டிருக்கிறோம்; அவர் களில் சிலர், சிலரை பணியாளர்களாக வைத்துக் கொள்வதற்காக; அவர்களில் சிலரை (மற்ற) சிலரை விட தரங்களில் நாம் உயர்த்தியுமிருக்கின்றோம்; உமதிரட்சகனின் அருளோ, அவர்கள் சேகரித்து வைத்திருப்பதை விட மிக்க மேலானதாகும்.''(43:32)

*வளங்களின் பரம்பலானது, மனித நடத்தையின் ஒத்துழைப்பு என்ற அம்சத்திற்கும் காரணமாயிருக்கும் விதத்தையே மேலே யுள்ள அல்-குர்ஆன் வசனம் விவரிக்கின்றது. இஸ்லாத்தில்*

நபர்களிடையேயான இடைத்தொடர்புகள் அனைத்தும் மனித இனத்தின் சர்வதேச சகோதரத்துவ எண்ணக்கருவை அடிப்படை யாகக் கொண்டது. மனித இனம் ஓர் உடலின் உறுப்புக்கள் போல் எண்ணப்பட வேண்டும். ஏதாவது ஒருறுப்புக்கு நோய் ஏற்படு மாயின், அதனால் முழு உடலுமே வருத்தத்திற்குட்படும். இதனால்தான், இஸ்லாத்தின் சமூக விதிகள் ஏனையோருக்காக அதிகம் தியாகம் புரிய ஆணையிடுகின்றது. மக்கள் ஒருவருக் கொருவர் உதவுவது இறையச்சம் (தக்வா) மற்றும் சமூக நற் பேற்றை (பிர்) மென்மேலும் அதிகரிக்குமென அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய விழுமியங்களின் படி, சமூக நற் பேறென்பது பல உயர்ந்த செயல்களால் உருவாகின்றது. மக்களுக்கு பொருளாதார உதவிகளைச் செய்தல் என்ற உயர்ந்த பண்பையும் இது உள்ளடக்கியுள்ளது. ஆகவே, முரண்பாடுகளன்றி, ஒத்து ழைப்பே அனைத்து பொருளாதார உறவுகளின் அடிப்படையாக இருக்க வேண்டும். இதனையே அல்-குர்ஆன் கூறும் போது,

> ''அவனே அதில்- அதன் மேல் (பகுதியில்) இருந்து உறுதியான மலைகளை அமைத்தான்; அதில் அபிவிருத்தியை நல்கினான்; மேலும், அதில் அதன் உணவுகளை நான்கு நாட்களில் நிர்ணயம் செய்தான்; (இவ்வாறு செய்ததைப் பற்றிக்) கேட்போருக்கு (பதில்) நிறைவாகிவிட்டது.'' (41:10)

புவியிலுள்ள வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளுக்காகவும் படைக்கப்பட்டிருப்பதோடு, இவ்வளங்க ளிலிருந்து பயனை அடைந்து கொள்வதில் அனைத்து படைப்பு களும் பங்கேற்றாக வேண்டும். இவ்விடயத்தில் மனித சமூகம் ஏனைய ஜீவராசிகளையும் கருத்திற்கொள்ள வேண்டுமென்பது இஸ்லாத்தின் கண்ணோட்டமாகும். நீண்டகாலத்தில் சமூக, பொருளாதார நிபந்தனைகளால் வளங்களின் பாய்ச்சல் உருவாக் கப்படுவதற்கு பொருளாதார நிதி பங்கேற்றாக வேண்டும் என அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது. அது, மக்கள் தமது வளங்களை வறுமையில் உழலும் ஏனையோருக்காகவும் ஒதுக்கி வைக்கத் தூண்டுகின்றது. இஸ்லாத்தின் இச்சிந்தனை முழுக்க முழுக்க

எளிமையானது. அதாவது, யாரிடம் தமது அடிப்படைத் தேவை களை விட மிகையாக வளங்கள் காணப்படுகின்றதோ, அப்பங்கு ஏனையோரைச் சென்றடைய வேண்டும் என்பதே இதன் கருத் தாகும். சமமற்ற வளப்பங்கீட்டைச் சீரமைப்பதற்காக, ஏனை யோருக்கும் அவர்களுக்குரிய பங்கினை விருப்பத்துடன் வழங்க முன்வர வேண்டும். மேலும், ஒரு சிறந்த அரசு எப்போதுமே குறையுள்ள சமூக, பொருளாதார நிபந்தனைகளைத் தடுக்க முனைப்புடன் செயற்படும்.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில், மக்கள் அவர்களிடம் மிகையாகக் காணப்பட்ட உணவு, வீடு மற்றும் நிலங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். அஷ்அர் கோத்திர மக்கள் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரங்களில், தமது உணவுப் பண்டங்களை வழங்கியமையை நபி (ஸல்) அவர்கள் பாராட்டியுள்ளார்கள். மக்களிடையே 'ஃபை' எனப்படும் வரிகள் மற்றும் ஆள்வரிகளைக் கொண்ட நிதியினை விநியோகிப்பதில் நபி (ஸல்) அவர்களின் தீர்மானங்கள் கூட, வளங்களில் மக்களின் 'பங்கேற்புக்கான' அன்னாரது உறுதியான விருப்பத் தெரிவைச் சுட்டிக்காட்டும் ஒன்றாகவேயுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் அரச திறைசேரிக்கு செல்வம் கிடைக்கப் பெற்றால் அதனை விநியோகிப்பதில் காலம் தாழ்த்த மாட்டார் கள். யுத்தத்தில் பெற்றுக்கொண்ட கனீமத் பொருட்களின் விநி யோகம் பற்றிய அல்-குர்ஆனின் உத்தரவுகளும் கூட, அதில் எதிர்த்துப் போரிட்ட, போரிடாத அனைவரின் பங்கேற்பையும் காட்டுகின்றது. நபி (ஸல்) அவர்கள் போரில் பெற்ற இக்கனீமத் பொருட்களில் அரசினுடைய பங்கினை வறிய மற்றும் தேவை யுடைய மக்களுக்கிடையே, அவர்கள் யுத்தத்தில் திறமையாக பங்கேற்காவிட்டாலும் பகிர்ந்தளித்தார்கள். அதேபோல்,

> ''... (நபியே! ''தர்மத்திற்காக) எதைச் செலவு செய்வது?'' என்றும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் (''தங்கள் தேவைக்கு செலவு செய்தது போக) எஞ்சியிருப்பதை'' என்று கூறுவீராக!......'' (2:219)

என்ற அல்-குர்ஆனின் உத்தரவும் கூட மிகையாக காணப்படும் செல்வத்தை ஏனையோருடன் பகிர்ந்துகொள்ளும் உயர்ந்ததோர் குறிக்கோளையே பிரதிபலிக்கின்றது.

இஸ்லாம், பல்வேறுபட்ட பொருளாதார சட்ட விதிகளில் இந்த ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல் என்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது. செல்வந்தரின் செல்வத்திலிருந்து வறியோரும் ஒரு பங்கினை பெறச் செய்யும் ஸகாதின் சட்டவிதிகள் இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும். இஸ்லாத்தின் வர்த்தக சட்டவிதி களின் அடிப்படையானது, நட்டத்துக்கான பொறுப்பைத் தாங்குவதுடன் வரையறுக்கப்பட்டுள்ளது. எந்த வர்த்தகப் பங்கு டைமையாவது இடரபாயத்தினை (நட்டம்) பகிராது இலாபத்தை மட்டுமே பகிருமாயின் அது இஸ்லாமிய சட்டவிதிக்கு முரணா னதாகும். அதேபோல், எந்த ஒப்பந்தங்கள் ஒரு சாராருக்கு இலாபத்தையும் மறுசாராருக்கு நட்டத்தையும் வரையறுத்துள் ளதோ அவையும் தடுக்கப்பட வேண்டும். பரஸ்பர உதவி, இலாபம் மற்றும் பங்குபற்றல் என்பனவே வர்த்தக சட்டவிதியிலுள்ள பிரதான நோக்கங்களாகும். செலுத்த வேண்டியவற்றை அதாவது, உடன்படிக்கையில் ஈடுபடுவோர்களுக்கு பொதுவான அம்சங் களை வரையறுத்துக்கூறாத வர்த்தக உடன்படிக்கைகளையும் அது தடுக்கின்றது. ஏனெனில், அவை ஒரு சாரார் மற்ற சாராரைச் சுரண்டுவதற்கு இட்டுச் செல்கின்றது.

இவை, வட்டி பற்றிய இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்தி லிருந்து உருவானதாகும். வட்டி தடை செய்யப்பட்டுள்ளமைக் கான பிரதான காரணங்களில் ஒன்று, கடன் பெற்றவரிடம் இருக் கும் அக்கடன் மூலதனத்தின் (பணம்) பெறுமதி அதிகரித்திருந் தாலும் அதிகரித்தில்லாவிட்டாலும் கடன் கொடுத்தவருடைய வட்டியைப் பெறும் உரிமையானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை யாகும். வட்டியின் தடை தொடர்பாகவுள்ள வித்தியாசமான கருத்துக்களில், நுகர்வுக் கடன்கள் வறியோரின் சுரண்டலுக்குக் காரணமாகின்றன என்பதும் ஒன்றாகும். ஆனால், சிலர் உற்பத்திக் கடன்கள் மீதான வட்டியானது, கடன் பெற்றவர், தனக்கு

மூலதனத்தை வழங்கியதற்காக கடன் வழங்கியவருடன் தனது இலாபத்தைப் பகிர்ந்து கொள்வதால் இது தடுக்கப்படவில்லை என வாதிடுகின்றனர்.

ஆனால், இவ்வாதத்திலுள்ள பிரதான பிழை யாதெனில், கடன் பெற்றவரிடம் மூலதனம் அதிகரித்தாலும் அதிகரிக்காவிடினும் இன்னும், இலாபத்தின் அளவு கண்டறியப் படாமலேயும் வட்டி வீதம் நிலையாக ஏற்கப்படுகின்றது. மிகப் பொருத்தமானதும் பகுத்தறிவானதுமான அணுகுமுறையின் படி, மூலதனமானது உற்பத்திச் செயன்முறையில் ஒரு சமபங்காளராக (நிலம், உழைப்பு, முயற்சி என்பவற்றுடன்) பங்கேற்க வேண்டுமேயன்றி, மூலதனத்தின் நிலையான வருவாயைப் பெறும் உயர் நிலையிலுள்ளவராக அல்ல. அனைத்து உற்பத்திக் காரணிகளுமே பரஸ்பரம் ஒத்துக்கொள்ளப்பட்ட விகிதாசாரத்துக்கேற்ப தேறிய பங்களிப்புக்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஏனெனில், வட்டி அனுமதிக்கப்படுமாயிருந்தால் அது பொருளாதார முறைமையில் தீவிர உள்முரண்பாடுகளுக்கும் கருத்து மோதல்களுக்கும் இட்டுச் செல்லும்.

பல அறிஞர்கள், இலாபத்தை ஊழியர்களிடையே பகிர்வதை விரும்பத்தக்க ஒன்றாக வலியுறுத்துகின்றார்கள். இது அடிமை-தொழிலாளிகளுக்கு நன்மை செய்வதை காட்டும் ஒன்றாகவும் உள்ளது. நாம், கூலித் தொழிலாளர்களுடன் அடிமைத் தொழிலாளர்களைப் பொருத்தமற்றவர்களாகவும் நெருங்கிய தொடர்பற்றவர்களாகவும் ஒப்புவமை காண்பதை விட்டு விடுவோமாயின், அது நபி (ஸல்) அவர்கள் விரும்பிய ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் அடிப்படையிலான பொருளாதார முறைமையாக இருக்கும். அவர்கள், அடிமைகளின் அந்தஸ்த்தினை கூலித் தொழிலாளர்களாக உயர்த்தக் கருதவில்லை. மாறாக, அதை விடவும் உயர்ந்த உடன்பிறப்பு மற்றும் தோழமை அடிப்படையில் அவர்களை 'சமமாக' மாற்றினார்கள். தொழில் நிறுவனங்கள் மேலதிக செல்வத்தை உழைப்பினும் உழைக்காவிடினும் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கூலிமட்ட எண்ணக்கருவின்

அடிப்படையிலேயே தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப் படுகிறார்கள். இருப்பினும், தேறிய பங்களிப்பில் தொழிலாளர் களின் பங்கேற்பானது ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றல் தத்து வங்கள் மீதான பொருளாதார ஒழுங்கமைப்பையே பிரதிபலிப்ப தாகவுள்ளது.

## 3. இஸ்லாமிய பொருளியலின் மூலங்கள்

இஸ்லாமிய பொருளியலின் தத்துவங்கள் பின்வரும் மூலங்களி லிருந்தே பெறப்படுகின்றன.

அ. அல்-குர்ஆன்

ஆ. நபி (ஸல்) அவர்களது ஸுன்னாஹ்

இ. இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டவியல்

ஈ. முஸ்லிம்களின் வரலாறு

உ. பொருளாதார வாழ்க்கையுடன் தொடர்பான தரவுகள்

### அ. அல்-குர்ஆன்

அல்-குர்ஆன், அது அருளப்பட்டதிலிருந்து இன்று வரை எந்தவொரு மாற்றத்திற்கும் உட்படாது பாதுகாக்கப்பட்டு வரும் ஈருலக வாழ்க்கைக்கான அருட்கொடையாகவுள்ள அல்லாஹ்வின் வார்த்தைகளாகும். அது, மனித இனத்துக்கான பரந்த வழிகாட் டல்களைக் கொண்டுள்ளது. மேலும், பொருளாதார விடயங்கள் உள்ளடங்கலாக, மனித நடத்தைகளை நெறிப்படுத்துவதற்குரிய அடிப்படைத் தத்துவங்களின் ஒரு தொகுதியை அது உள்ளடக்கி யுள்ளது. மாற்றமடையாத இத்தத்துவங்களைக் கொண்டு ஒவ் வொரு கால சூழ்நிலைக்கேற்ப பொருளாதாரத்தைச் சிறந்த முறையில் கட்டியெழுப்ப வேண்டும். அல்-குர்ஆனிலுள்ள விட யங்கள் மாற்றப்பட முடியாததும், எல்லாக் காலத்துக்கும் பொருத்த மானதும் மற்றும் அனைத்து சமூகங்களுக்கும் பிரயோகிக்கக் கூடியனவுமாக உள்ளன. இந்த அல்-குர்ஆனே இஸ்லாமிய பொரு ளாதாரத்தின் அடிப்படை முதல் மூலாதாரமாகும். தனி வியாபார

மாயினும் சரி, கூட்டு அல்லது பங்குடைமை வியாபாரமாயினும் சரி பக்கச்சார்பற்ற முறையில் மூலதனமீட்டும் உத்திகளைத் தெளிவாக விளக்கியிருக்கின்றமை இதன் சிறப்பம்சமாகும். இது சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கலையக்கூடிய பொருளீட்டல் முறை களுக்கான அடிப்படைகளை வழங்கியுள்ளது.

## ஆ. நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாஹ்

ஸுன்னாஹ் என்பது நபி (ஸல்) அவர்களின் சொல், செயல் மற்றும் வாய்விட்டுக் கூறாத அங்கீகாரம் என்பவற்றைக் குறிக் கும். இவை அனைத்தும் திரட்டப்பட்டு, ஆராயப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு மற்றும் விளக்கப்படுத்தப்பட்டு புத்தகங் களாக ஆக்கப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்களின் வழிமுறை யானது (ஸுன்னாஹ்) பொருளாதார விடயங்கள் உள்ளடங்கலாக முழு வாழ்வையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வழிமுறையில் அநேகமானவை எல்லா காலத்துக்கும் பொதுவானதாகவும் எல்லா காலத்திலும் பிரயோகிக்கக்கூடியதாகவும் இருந்தாலும், அவற்றுள் மிகச் சிலவற்றின் பொருத்தம் காலவரையறையைக் கொண்டன வாகவும் உள்ளன. எனவே, ஒவ்வொரு வழிமுறையினதும் உண்மையான நிலை பற்றிய அறிவு, நிகழ்காலத்துக்கான அதன் பொருத்தப்பாட்டை விளங்கிக்கொள்வதற்கு அவசியமானதாகும். இதிலுள்ள பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய உத்தரவுகள் முஸ்லிம் பொருளியலாளர்களைப் பயிற்றுவிக்கும் முக்கிய விட யங்களாக உள்ளன.

## இ. இஸ்லாமிய சட்டவியல்

கடந்த 14 நூற்றாண்டுகளாக முஸ்லிம் சட்டவறிஞர்களால் இத்துறை பரந்தளவில் விருத்திசெய்யப்பட்டுள்ளது. இது, அல்-குர்ஆனின் கருத்துக்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறை என்பவற்றை அதிகாரபூர்வமாக்குகின்றது. இதன் பெரும் பகுதி, நபி (ஸல்) அவர்களின் காலத்தைத் தொடர்ந்து உருவான புதிய புதிய கேள்விகளைப் பற்றியதாகவே உள்ளது. இச்சட்ட அறிஞர் கள் பொருளாதார பிரச்சினைகளுக்கும் கூட விளக்கமளித்தும்

முடிவுகளைப் பெற்றும் உள்ளார்கள். உண்மையில், சட்டவியலின் சில ஆரம்பகால நடவடிக்கைகள் நிதி மற்றும் நில முகாமைத் துவத்துடன் தொடர்புபட்டனவாகவே இருந்தன. ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த சட்ட அறிஞர்கள், தம்மிடம் வரும் கேள்வி களுக்கு வேறுபட்ட நிழலிலும், தமது நுண்திறனையும் கொண்டு பதிலளித்துள்ளார்கள். ஆகவே, வித்தியாசமான சட்டக் கருத்துக் கள் ஏற்பட, அவை வழங்கப்பட்ட சூழ்நிலைக்கேற்ப அக்கருத் துக்கள் விளக்கப்பட்டுள்ளமையே காரணமாகும்.

இந்த மரபுரிமையில் இஸ்லாமிய பொருளியலுக்கும் ஒரு சிறந்த இடம் உண்டு. ஆனால், இங்கு முக்கியமாகக் கவனிக்கத் தக்க ஒன்று யாதெனில், சட்ட அறிஞர்களின் கருத்துக்கள் மீறப் படக்கூடாத ஒன்றல்ல; மாறாக மாற்றமடையும் கால, இட, தொழில்நுட்ப சூழ்நிலைக்கேற்ப திருத்தியமைகக்கப்பட முடியும். இஸ்லாமிய பொருளியலானது, இச்சட்டக் கருத்துக்கள் மக்களின் நடத்தையில் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி ஆராய்கின்றது. முஸ்லிம் பொருளியலாளர்கள், பரந்த இச்சட்டக் கருத்துக்களின் ஒளியிலேயே கொள்கைகளை வகுக்க முனைகிறார்கள்.

முஸ்லிம் பொருளியலாளர்கள், முன்னைய சட்ட முயற்சிகளை விளக்குதல், விரிவுபடுத்தல் மற்றும் மீள ஆய்வுக்குட்படுத்தல் போன்ற பணிகளையே மேற்கொள்கின்றனர். பொருளியலாளர் களுடனான மார்க்க அறிஞர்களின் உறவும் ஒத்துழைப்பும் இஸ்லாமிய பொருளியலின் அபிவிருத்திக்கு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

### ஈ. முஸ்லிம்களின் வரலாறு

முஸ்லிம்களின் வரலாறானது, மக்களின் பொருளாதார வாழ்வு பற்றிய பல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. வரலாற்றின் இப்பகுதிகள் இன்றைய பொருளாதாரத்துக்கான பயன் தரும் முன்மாதிரிகளாக உள்ளன. இஸ்லாமிய பொருளாதார முறைமை யின் முன்னைய முன்மாதிரிகளே, சமகாலத்தில் உருமாற்றப் பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும், ஆரம்ப காலத்தி

லிருந்த சில அடிப்படைகளைத் தவிர முஸ்லிம்களின் பொருளாதார வாழ்வானது இதுவரை காலவரிசையில் ஒழுங்காகத் தொகுக்கப்படவில்லை. எனவே, இஸ்லாமிய பொருளியலின் வளர்ச்சியுடன் வரலாற்று மூலங்களும் கூட விருத்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### உ. உண்மையான வாழ்க்கைத் தரவுகள்

இது, ஒரு முஸ்லிம் பொருளியலாளருக்கான முக்கியமான தொரு மூலமாகக் காணப்படுகின்றது. இவர்கள், மக்களின் உண்மையான வாழ்க்கைத் தரவுகள் மற்றும் நடத்தைகளைக் கற்பதோடு, கொள்கையாக்கத்திற்காகவும் அதன் ஆய்விற்காகவும் கிடைக்கக்கூடிய அத்தரவுகளைப் பயன்படுத்துகின்றனர். இங்கு 'உண்மையான வாழ்க்கைத் தரவுகள்' என்பது ஒரு பொருளாதாரத்தில் நடைமுறையில் (வழமையாக) காணப்படும் உண்மையான நிலைமைகளைக் குறிக்கின்றது. உண்மையாகப் பார்ப்பின், இன்று உலகில் எந்தப் பொருளாதாரமுமே உண்மையான இஸ்லாமிய பொருளாதாரத்தைக் கொண்டில்லை. அவர்கள் முதலாளித்துவ மற்றும் சோஷலிச பொருளாதாரத்தின் வேறுபட்ட வடிவங்களையே நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இஸ்லாமிய பொருளியல், இன்றைய பொருளாதாரங்களின் உருவத்தை மாற்றுவதையே நோக்காகக் கொண்டுள்ளது. ஏனெனில், இஸ்லாத்தின் பார்வையில் உண்மையாக ஓர் 'இஸ்லாமிய' பொருளாதாரம் எவ்வாறு அமைய வேண்டும் எனக் கூறப்படுகின்றதோ, அத்தகைய ஒரு பொருளாதாரத்துக்கான பல குறைகளை இவை கொண்டிருக்கின்றன. எனவே தான், இன்று இஸ்லாமிய பொருளியல் நிலைமாற்ற உபாய அபிவிருத்தி மீது கவனம் செலுத்துகின்றது. இதனால், இன்று சமகாலத்தின் உண்மையான நிலைமைகளைப் பற்றிக் கற்பது அவசியமாகக் கருதப்படுவதோடு, அது இஸ்லாமிய பொருளியலை முழுமையாக்கும் ஒரு பகுதியாகவும் ஏற்கப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், இஸ்லாமிய பொருளியலின் முக்கிய நோக்கு ஃபலாஹினை அடைவதும் அதனைப் பேணுவதுமாகும். இஸ்லாமிய பொருளாதாரத்தின் ஒரு மூலமான உண்மையான வாழ்க்கைத் தரவுகள், வேறுபட்ட பொருளாதார மாறிகள் மீது வேறுபட்ட இஸ்லாமிய உத்தரவுகள் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிக் கற்பதோடு, இஸ்லாமிய சட்ட விதிகளின் ஒளியில் நிலைமாற்றத்திற்கான சிந்தனையை விருத்தி செய்வதற்கும் முயற்சி செய்கின்றது.

## 4. இஸ்லாமிய பொருளியலின் அணுகுமுறை

இஸ்லாமிய பொருளியல் எவ்வாறு அதனுடைய விடயங்களை அணுகுகின்றது? என்ற விடயம் மிகப் பிரதானமானதாகும். நாம் இஸ்லாமிய பொருளியலின் முறையியல் பற்றி அத்தியாயம் மூன்றில் கலந்துரையாடுவோம். இப்போது, இஸ்லாம் பொருளா தார விடயங்களை எவ்வாறு அணுகுகின்றது என்பது பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

இஸ்லாமிய பொருளியலின் முறை, அதனுடைய கருத்தியல் உள்ளடக்கத்துக்கான ஆரம்ப மற்றும் இறுக்கமான விடயங் களைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படை இஸ்லாமிய சட்டத் தாலேயே வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிம் பொரு ளியலாளர்கள், தொழில்சார் காரணங்கள் மற்றும் உண்மையான வாழ்க்கைத் தரவுகள் என்பவற்றைக் கொண்டே தமது ஆய்வு களை விருத்தி செய்கின்றனர். இஸ்லாமிய பொருளியல் இந்த அடிப்படை வரைசட்டத்துக்கு வெளியில் தன்னை நிலைப்படுத்த முடியாது.

இஸ்லாமிய பொருளியல் அதனுடைய மொத்தமாக மனித நடத்தையையே கருதுகின்றது. அது, மனித வாழ்வை அனைத்து விடயங்களும் இணைக்கப்பட்ட ஒன்றாகக் கருதுகின்றது. அதற் குள் உள்ளடங்கும் பல உப-முறைகள் பரஸ்பரம் தமக்கிடையே வலுவூட்டிக் கொள்கின்றவாறு இணைக்கப்பட்டுள்ளன. இத்த கைய உப-முறைகளுள் பொருளாதார உப-முறையும் ஒன்றாகும்.


ஆனால், அதுவே மைய (மத்திய) முறையாக இல்லை. அது மனித நடத்தையை, அதன் விளிம்பிலிருந்தே பாதிக்கின்றது. முறைமை யின் மையமானது, இறை ஏகத்துவம், நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவம் மற்றும் தீர்ப்பு நாளில் மனிதனுடைய பொறுப்புக் கூறல் என்ற அடிப்படை நம்பிக்கைகளால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கைகள் ஒவ்வொரு உப-முறைக்கும் அடிப்படை யானவையாகும்.

இவ்வனைத்து உப-முறைகளுக்குமாக மத்தியில் காணப்படும் பிரதான மையமானது, அனைத்து உப-முறைகளிலும் மனித நடத்தையின் அடிப்படைத் தத்துவங்களை வெளிப்படுத்துவ தோடு, மனித மனப்பாங்குகளையும் வடிவமைக்கின்றது. அனைத்து உப-முறைகளுக்கிடையேயும் இணைந்து செயல்படும் நிலை காணப்படுகின்றது. ஆனால், ஒவ்வொரு உப-முறையும் ஃபலாஹை அடைவதை நோக்காகக் கொண்ட, அதன் சொந்த கூட்டைக் கொண்டுள்ளது. அதேநேரம், பொருளாதார உப-முறை யானது நீதியின் சட்ட நிறுவனம் (அத்ல்) மற்றும் நடுநிலை பேணல் (இக்திஸாத்), நல்லது செய்ய விரும்புதல் (இஹ்ஸான்) என்பற்றுக்கான ஒழுக்க நிறுவனம் என்பவற்றை உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

நீதியின் சட்ட நிறுவனமானது சட்ட மற்றும் ஒப்பந்த உறவு களை நியமிக்கின்றது. இஸ்லாம் முழுமையடைந்த மற்றும் விரி வான சட்ட முறைமையைக் கொண்டிருந்தாலும், இன்னும் சட்ட உத்தரவுகளால் முழுமையாக்கப்பட்ட மனித நடத்தையின் பரப்பு குறைவாகவே உள்ளது. மனித நடத்தையில் மிக அதிகமானவை சுயவிருப்பத்திற்கேற்ப அமைந்த (தன்னார்வ) செயற்பாடுகளையே கொண்டுள்ளது. சுயவிருப்புடனான இச்செயற்பாடுகள், நடுநிலை மற்றும் நல்லது செய்ய விரும்புதலால் செல்வாக்குக்கு உட் பட்டுள்ளன. நடுநிலை என்பது ஒருவர், தன்னை சமநிலையில் கட்டுப்படுத்தி வைப்பதைக் குறிக்கும். நல்லது செய்ய விரும்புதல் என்பது ஒழுக்கக் கட்டளைகளின் ஒரு தொகுதியாக இருப்ப தோடு, நபர்களுக்கிடையேயான இடைத் தொடர்புகளிலும் செல் வாக்கு செலுத்துகின்றது.

*வரைபடம்:1 மனித நடத்தையின் முழுமையான பார்வை மற்றும் அதில் பொருளாதார உப-முறையின் இடம் என்பவற்றை விளக்குகின்றது.*

***வரைபடம்:1 மனித நடத்தையின் முழுதளாவிய பார்வை***




*இஸ்லாமிய பொருளியல், மனிதனின் பொருளாதார நடத்தையை அவனது ஒட்டுமொத்த நடத்தைச் சூழலிற்குள் கணக்கிடுகின்றது. அதனை 'சந்தை' மாறிகளுக்குள் வரையறுக்கவில்லை. மாறாக, அதனுடைய விடயப்பரப்புக்குள் ஏனைய சமூக விஞ்ஞானங்களையும் ஒன்றிணைக்கின்றது. இஸ்லாமிய பொருளியலின் அணுகுமுறை ஏனைய விடயப் பரப்புகளுடனும் தொடர்புபட்டேயுள்ளது.*

இரண்டாவதாக, இஸ்லாமிய பொருளியலின் மிக உயர்ந்த உள்ளடக்கம் நியமமானதாகக் காணப்படுகின்றது. முஸ்லிம் பொருளியலாளர்கள், நல்லதை ஏவி, தீயதைத் தடுக்கும் அல்-குர்ஆனின் கட்டளையை நிறைவேற்றும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். இதனால், இஸ்லாமிய பொருளியலானது ஃபலாஹை அடைவதற்கான வழிகள் மற்றும் சாதனங்களைக் கற்கவும் குறிப்பிடவும் செய்கின்றது. அது, அடிப்படை இஸ்லாமிய வரைசட்டத்துக்குள் இருந்து மனித நடத்தையில் ஏற்படும் விலகலைப் பற்றிக் குறிப்பிடுவதோடு, உயர்மட்ட பொருத்தப்பாட்டை அடைவதற்கான கொள்கைகளையும் உருவாக்குகின்றது. இஸ்லாமிய பொருளியல், சாத்தியமான பொருளாதார நெருக்கடிகளை முன்னறிவிப்பதோடு, இம்முன்னறிவிப்பானது பொருளாதார செயற்பாட்டாளர்களின் பிழையான நடத்தையின் விளைவையும் சரிசெய்யும். இது, அவர்கள் உண்மையாக அபிவிருத்தியைத் தொடங்கு முன்னரே நெருக்கடிகளைத் தடுப்பதற்கான பொருத்தமான கொள்கைகளைப் பரிந்துரைப்பதற்கு உதவியாகவும் அமையும்.

மூன்றாவதாக, இஸ்லாமிய பொருளியல் உயர்ந்த நியமமாகக் காணப்படினும், அது பரந்தளவில் நேரான உள்ளடக்கத்தையும் கொண்டுள்ளது. இது, பொருளாதார மாறிகளின் மீதான வேறுபட்ட சட்ட உத்தரவுகள், ஒழுக்கப் பெறுமானங்களின் தாக்கம் மற்றும் பிரதிபலிப்புப் பற்றி கற்க முனைகின்றது. உதாரணமாக, சேமிப்பு, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் வட்டியின் தடையால் ஏற்படும் விளைவைப் பற்றிக் கற்பதில் ஆர்வம் காட்டலாம். மற்றுமொரு உதாரணமாக, சமூகத்தினுடைய நுகர்வு மட்டத்தில் ஸகாத் ஏற்படுத்தும் விளைவு பற்றிக் கற்கலாம். இஸ்லாமிய பொருளியலின் நேர்க் கருத்துக்கள் கொள்கை உருவாக்கத்தை வெற்றிபெறச் செய்கின்றன.

நான்காவதாக, இஸ்லாமிய பொருளியலானது நவீன பொருளியலால் அபிவிருத்தி செய்யப்பட்ட ஆய்வுக் கருவிகளைப் பயன்படுத்தி, அதிலிருந்தும் சிறந்த பயனையடையக் கூடிய இயலுமையைக் கொண்டுள்ளது. இன்றைய பொருளியல் கருவி

களான கணிதவியல், புள்ளிவிபரவியல், கள ஆய்வு, செயற்பாட்டு ஆய்வு, முறைமை ஆய்வு மற்றும் கணனித் தொழில்நுட்பம் என்பன இஸ்லாமிய பொருளியலை விருத்தி செய்வதற்கும் பயனளிப்பவையாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும், இங்கு ஒரு கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. இஸ்லாமிய பொருளியல், பின்பழம் பொருளியலைப் பிரதிபண்ணிய நிலையிலா உள்ளது? என்பதே அக்கேள்வியாகும். இதற்கு ஓர் இறுதியான பதில் இல்லை. மேற்கிலிருந்து வரும் அனைத்தையும் ஓர் அந்தத்திலிருப்போர் முழுமையாக ஏற்க, மறு அந்தத்திலிருப்போர் முழுமையாக நிராகரிக்கின்றனர். ஆங்கிலச் சொற்களுக்கு இணையான அரபிச் சொற்களைப் பயன்படுத்தி எளிதாக மாற்றங்களை உருவாக்குகின்றனர். இவ் விரு துருவங்களிலுமுள்ள இரு சாராரும் சமநிலையற்ற அணுகு முறைகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அதிகம் மித மான அணுகுமுறையானது, அறிவினை இஸ்லாமிய மயப்படுத்தி யுள்ள வழிகாட்டலின் கீழிருக்கும் அணுகுமுறையே என இஸ் மாயில் ஆர். அல்-பாரூகி அவர்களால் ஆதரித்துப் பேசப்பட்டது.

இவ்வணுகுமுறைப்படி, இஸ்லாமிய பொருளியலைக் கற்ப தற்கு முன்னர் பின்பழம் பொருளியலை, அதனுடைய எடுகோள்கள் மற்றும் பெறுமானங்களைத் தர்க்க ரீதியாக அடையாளம் காண வேண்டுமென்பதோடு, பற்றாக்குறையான ஆதாரத்தினடிப்படை யில் உருவாக்கப்படும் இத்தகைய தற்காலிகக் கருதுகோள்கள் அல்லது கொள்கைகளிலிருந்து பொருளாதார வாழ்வின் உண்மை களை நிலைநிறுத்துவதற்குத் தேவையானதை மட்டும் வடிகட்டி எடுத்து, அவ்வுண்மைகளை மட்டுமே இஸ்லாமிய பொருளியலின் உலகப் பார்வையோடு இணைக்க வேண்டும் என்பதே இதன் இலக்காகும். இதன்போதே, மேற்கினுடைய பொருளாதார முறை களின் குறைபாடுகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, அவற்றுக் கான சரியான தீர்வினை இஸ்லாமிய பொருளியலிலிருந்து எடுத்துக் காட்ட முடியும். பொதுவாக இவ்வணுகுமுறை தூண் டப்பட்டாலும், ஓர் அபாயத்தையும் கொண்டிருக்கின்றது.

அதாவது, இது ஆய்வாளரை மேற்கினுடைய அறிவின் அடிச்சுவட்டைப் பின் பற்றத் தூண்டுவதோடு, அவர் தனது சொந்த வேலைகளையும் அவ்வொளியிலேயே மேற்கொள்ளச் செய்யும். எனவே, இது முஸ்லிம் பொருளியலாளர்கள் எப்போதுமே மேற்கின் மதச்சார் பற்ற பொருளியலின் பின்னாலேயே செல்வார்களோ என அஞ்ச வைக்கின்றது.

மேலும், எமது பார்வையில் அதிகம் பொருத்தமானதாக வாக்களிக்கப்பட்ட ஓர் அணுகுமுறை, பர்வேஸ் மன்ஸூர், ஸியாஉத்தீன் ஸர்தார் மற்றும் முனவ்வர் அஹ்மத் அனீஸ் ஆகிய அறிஞர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய 'இஜ்மாலிஸ்' என்ற குழுவினால் ஆதரித்துப் பேசப்பட்டது. இவர்கள், இஸ்லாமிய விடயங்களின் அபிவிருத்தியை மேற்கினுடைய வணிகமயப்பட்ட விமர்சன ரீதியான அறிவிற்குள் நுழைக்காது, இஸ்லாமிய உலகப் பார்வையினுடைய ஒளியிலேயே கண்டார்கள். எனினும், அவர்களும் அபிவிருத்தியடைந்துவரும் இஸ்லாமிய விடயதானங்களில் உண்மையான வாழ்க்கைத் தரவுகளையே பயன்படுத்த விரும்பினார்கள்.

இந்த இடத்தில், நாம் பெரும்பாலான முஸ்லிம் பொருளியலாளர்கள் ஒரு பொறிக்குள் அகப்பட்டுள்ளமையைக் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, மேற்கினால் அபிவிருத்தி செய்யப்பட்ட பொருளாதார சிந்தனை மற்றும் அவர்களது நியாயங்களை மேன்மைப்படுத்துவதோடு, அவர்கள் அதனுடைய 'உண்மைகளையே' நம்பவைக்கிறார்கள். பிறகு, மேற்கின் மதச்சார்பற்ற பொருளாதார சிந்தனைக்கு இடம்கொடுக்கும் வகையில் அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னாஹ்வின் வசனங்களுக்கு விளக்கம் கொடுக்கிறார்கள். அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னாஹ்வுக்கு விளக்கம் கொடுப்பதில் பொதுவாக எக்காலத்திலும் அதிக கட்டுப்பாடு காணப்படாததனால், அவர்கள் மதச்சார்பற்ற பொருளியலாளர்களின் ஆக்கங்களை இந்த மூலாதாரங்களுக்குள் வைத்து வாசிக்க ஆரம்பித்தனர்.

இதிலுள்ள பெரும் அபாயம் யாதெனில், இவ்வணுகுமுறை முஸ்லிம் பொருளியலாளர்களின் செயற்பாட்டையும், இஸ்லா மிய பொருளியலின் மொத்த விடயங்களையும் குறைக்கக் கூடிய தாக இருக்கின்றது. தெளிவாக, அவர்களையே முழுமையாகப் பின்பற்றி அவர்களைப் போலவே செய்வதென்பது அல்லது குறைந்தபட்சம் மதச்சார்பற்ற பொருளியலின் ஓர் உப-விடய தானமாக இஸ்லாமிய பொருளியலை கொண்டுவருதல் என்பன இஸ்லாமிய பொருளியல் தனது அடையாளம் மற்றும் தனித்து வத்தைப் பறிகொடுப்பதற்குக் காரணமாக அமையும். அவ்வாறு நடைபெற்றால் அபிவிருத்தியடைந்து வரும் இஸ்லாமியப் பொரு ளியலின் உண்மையான குறிக்கோள்கள் தோற்கடிக்கப்படும். முஸ்லிம் பொருளியலாளர்கள் இப்பொறியிலிருந்து வெளியாவ தற்கு தமது கருத்துக்களை பரந்தளவில் கலந்துரையாடி, ஆராய் வதைத் தவிர வேறெந்த கடினமான முறைகளும் இல்லை. இது தொடர்பான சுய-விமர்சனத்தின் மூலமாக மட்டுமே அவர்கள் இப் பொறிக்கெதிராகத் தம்மை காத்துக்கொள்ள முடியுமாயிருக்கும்.

அ த் தி யா ய ம்

03

# இஸ்லாமிய பொருளியலின் முறையியல்

## *1. அறிமுகம்*

*இவ்வத்தியாயத்தின் பிரதான நோக்கம், இஸ்லாமிய பொருளியலின் முறையியல் தொடர்பான பொதுவான மற்றும் பரந்த விடயங்களைக் கலந்துரையாடுவதோடு, பின்பழம் பொருளியலின் முறையியலிலிருந்து அது வேறுபடும் விதத்தையும் தெளிவுபடுத்துவதாகும். மேலும், இதில் நாம் பின்பழம் பொருளியலை நோக்கிய இஸ்லாமிய அணுகுமுறை, இஸ்லாமிய பொருளியலில் வஹியினுடையதும் பகுத்தறிவினுடையதும் பங்கு மற்றும் ஓர் இலட்சிய இஸ்லாமிய சமூகத்தின் எடுகோள் என்பன பற்றியும் பேசவுள்ளோம். எவ்வாறிருப்பினும், பின்பழம் பொருளியலின் முறையியல் பற்றிக் கலந்துரையாடுவதோ, மதிப்பிடுவதோ எமது நோக்கமல்ல. ஏனெனில், இவ்விடயத்தில் ஏற்கனவே நிறைய நூற்கள் காணப்படுவதால், அதையே திரும்பத் திரும்பக் கூறுவது முக்கியமான விடயத்தை விளங்கிக் கொள்வதைத் திசைதிருப்பி விடும். இப்பகுதியில் நாம் இரண்டு வினாக்களை கவனத்திற் கொள்கிறோம். முதலாவது, ஏன் நாம் ஒரு பாடவிதானத்தின், அதிலும் குறிப்பாக பொருளியலின் முறையியல் பற்றி கலந்துரையாடுகின்றோம்? இரண்டாவது, ஏன் இஸ்லாமிய பொருளியலுக்கென ஒரு முறையியல் தேவைப்படுகின்றது?*

## *1.1 ஏன் அனைத்திற்குமே முறையியல் அவசியம்?*

*ஒரு விடயத்தின் முறையியலானது, குறித்த விடயத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் அடிப் படை தத்துவங்கள் குறித்து விமர்சன ரீதியாக ஆராய்கின்றது. பொருளியலின் முறையியல் பற்றிய வித்தியாசமான கருத்துக்கள் பரந்தளவில் காணப்படுகின்றன. பழம் பொருளியலிலிருந்து பின்பழம் பொருளியலுக்கு எடுகோள்களை உறுதிப்படுத்துதல், எதிர்வுகூறல்களைப் பொய்ப்பித்தல் என்பவற்றை இக்கலந்துரை யாடலின் கீழ் அமையும் சில பிரதான வினாக்களான நேர், எதிர் நியமம், தொகுத்தறிதல், எதிர் உய்த்தறிதல், விழுமியங்களை எடுத்து நடத்தல், எதிர் விழுமியங்களைத் தவிர்த்தல், காலவிதிப்பு, எதிர் விவரிப்பு மற்றும் காரண வாதம், எதிர் சோதனைவழி வாதம் போன்றவற்றுடன் தொடர்புபடுத்தியே இம்முறையியல் வாதிடு கின்றது. பொருளியலாளர்கள் இவ்விவகாரங்கள் தொடர்பாக பல விடயங்களை மேற்கொண்டிருந்தாலும், அவை சூடான விவாதங்க ளாக நிறைவுபெறுவது மட்டுமே இறுதிப் பெறுபேறாக இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் தான், ஏன் அனைத்திலும் முறை யியல் பற்றிய கலந்துரையாடல் அவசியம்? என்ற கேள்வி எழுகின்றது.*

*பொருளியலாளர்கள் உண்மையை அடைவதற்கே ஆர்வமுடை யவர்களாகக் காணப்படுவதோடு, ஒவ்வொரு முறையியல் அணுகு முறையும் ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது அதிக உறுதியான வற்றையே பெற விரும்புகின்றது. இக்கோணத்திலிருந்து பார்ப் போமானால், முறையியல் பற்றிய வாதமானது மனிதனுடன் உடன்பிறந்த ஒரு தன்மையாகும். அனைத்துக் காலங்களிலும் உண்மையை அடைவதற்கே அவன் விரும்புகின்றான். அல்குர் ஆனும், அது உண்மையானதும் உறுதிப்படுத்தப்பட்டதுமான அறிவையுடைய புத்தகம் என்ற தகவலைக் கொண்டே மக்களை அழைக்கின்றது. ஆகவே, அது உண்மையை அடைவதற்கே மனித னைத் தூண்டுகின்றது. ஒருவர், உறுதியானவற்றுக்கெதிரான சந்தே கங்களை ஒதுக்க வேண்டும் என அல்-குர்ஆன் வாதிடுகின்றது.*

பொருளியலில், ஏன் ஏனைய விஞ்ஞானங்களில் கூட முறை யியல் பற்றிய வாதமானது இவ்வடிப்படை உண்மையில் ஒரு கருத்து வேறுபாட்டைக் கொண்டுள்ளது. இதனால் தான், இம் முழு விவாதமுமே பொய்யிலிருந்து உண்மையை அரித்தெடுப்ப தற்காகத் தெளிவானதும் ஒத்துப்போகக்கூடியதும் உறுதியானது மான விதிகளை நிலைநிறுத்த முயல்கின்றது.

## 1.2 இஸ்லாமிய பொருளியலின் முறையியலை வரைவிலக்கணப்படுத்துவதற்கான தேவை

பொருளியலில், முறையியல் பற்றி வேறுபட்ட வாதக் கருத் துக்கள் காணப்படினும் மனித இனத்தைப் பற்றிக் கவனம் செலுத்துகின்ற குறைந்தபட்சம் மூன்று முக்கிய கருத்துக்களில் பரந்தளவில் கருத்தொற்றுமை காணப்படுகின்றது.

1. பிரதானமாக மனித இனம் சுய விருப்பத்தினாலேயே எதற்கும் தூண்டப்படுவதோடு, அது அவர்களைப் பகுத்தறிவான நடத்தைக்கும் இட்டுச்செல்கின்றது.

2. அவர்களது முயற்சியின் அதியுயர் இலக்கு பொருள் முன்னேற்றமாகும்.

3. மனித இனத்திடம் பொருள் நலனை உச்சப்படுத்துவதற் கான போக்கு இயல்பாகவே காணப்படுவதோடு, அவர்களுக்கு எது சிறந்தது என்பதைத் தீர்மானிக்கும் அறிவும் இயலுமையும் கூட அவர்களிடம் காணப்படுகின்றது.

இஸ்லாம், இவ்விடயங்கள் தொடர்பில் முற்றிலும் வித்தியாச மான கருத்தையே கொண்டுள்ளது. முதலாவது, அது மனித இனம் இயல்பிலேயே சுயநலமாக மட்டும் இருப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், அனைத்து நாகரிகமடைந்த சமூகங் களிலுமுள்ள மக்கள் பொதுநல நோக்கில் செயற்பட்டுள்ளமை இதற்குச்சான்றாகும். எனவே, பொதுநலக் கொள்கையானது மனித வாழ்வில் உண்மையாகக் காணப்படுவது போலவே சுய நலமும் காணப்படுகின்றது. எனவே, இஸ்லாம் மனிதனை இரு

துருவங்களில் வைத்துப் பார்ப்பதைத் தவிர்க்கின்றது. இதனால் தான், இஸ்லாம் பொதுநலத்தை நடைமுறைப்படுத்துவதையும் ஏனையோருக்காக தியாகம் புரிவதையும் ஊக்குவிக்கின்றது. அல்-குர்ஆனும், தான் சிரமத்திலிருக்கும் போதும் ஏனையோரின் தேவைகளை நிறைவேற்ற விரும்பும் முஸ்லிம்களைப் பற்றி புகழ்ந்துரைக்கின்றது.

ஒருமுறை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து தனது வறுமையையும் பசிப்பிணியையும் முறையிட்டார். அம்மனிதருக்கு ஏதாவது கொடுக்கும்படி கூறி நபிகளார் (ஸல்) அவர்கள், அவரைத் தன் மனைவியரிடம் அனுப்பி வைத்தார்கள். ஆனால், அவருக்குக் கொடுப்பதற்கு எந்த மனைவியரிடமும் எதுவும் இருக்கவில்லை. அப்போது நபி (ஸல்) அவர்கள் அங்கிருந்த தன் தோழர்களை நோக்கி, ''இன்றிரவு இவருக்கு உணவளிப்பவர் எவரும் இருக்கின்றனரா? அல்லாஹ் அவருக்கு அருள் புரிவான்'' என்றார்கள். அதைக் கேட்ட அன்ஸார்களைச் சேர்ந்த ஒருவர் எழுந்து, ''அல்லாஹ்வின் தூதரே! நான் இருக் கின்றேன்'' என்றார். பின்னர் அவர் அம்மனிதரை அழைத்துக் கொண்டு தனது வீட்டுக்குச் சென்றார். தனது மனைவியிடம், ''அல்லாஹ்வுடைய தூதரினுடைய விருந்தாளி வந்திருக்கின்றார். நீ எதனையும் சேமிக்காதே'' என்றார். அதற்கு அப்பெண், ''பிள்ளைகளின் உணவைத் தவிர வேறு எதுவும் கிடையாது'' என்றார். ''அப்படியானால், அவர்களை உறங்க வைத்துவிடு'' என்றார் கணவர். (அப்பெண் தன் பிள்ளைகளை உறங்க வைத்த பின்னர் விருந்தாளியுடன் உணவு உண்பதற்காக அவர்கள் அமர்ந் தனர்.) அவ்வேளை அவர் தன் மனைவியை நோக்கி, ''நாங்கள் சாப்பிடுவது போன்று பாசாங்கு செய்வதற்காக விளக்கை அணைத்துவிடு. இன்றிரவு நாங்கள் எங்கள் வயிறுகளையும் அணைத்து விடுவோம்'' என்றார். அப்பெண்ணும் அவ்வாறே செய்தார். (இதன் காரணமாக அவ்வுணவு முழுவதையும் விருந் தாளி மிகத் திருப்தியுடன் உண்டார்.) மறுநாள் அந்த அன்ஸாரித் தோழர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்த வேளை, ''கண்ணியமும்

மகத்துவமும் நிறைந்த அல்லாஹ் அத்தம்பதியினரின் நடவடிக் கைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டான்'' என்று கூறிய நபி (ஸல்) அவர்கள் இவ்விடயமாக இறங்கிய பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

> ''அன்றி தங்களுக்குக் (கடும்) தேவையிருந்த போதிலும் தங்களை விட அவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.'' (59:09)

இச்சம்பவம் புஹாரி, முஸ்லிம், திர்மிதி, நஸாஈ போன்ற பல்வேறு கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏனையோர் மீது அக்கறை காட்டுவது இஸ்லாத்தில் மிகச் சிறந்த விழுமியமாகப் பாராட்டப்படுகின்றது. முஸ்லிம் சமூகங்கள், மனிதத் தன்மையுடைய நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருப்பதற்கு வக்ஃப் நிறுவனங்களின் வரலாறும் ஒரு சான்றாகக் காணப்படுகின்றது. ஏன், மக்களின் மார்க்கப்பற்று சிறிதளவு பலவீனமடைந்து காணப்படும் போது கூட முஸ்லிம் சமூகத்திலுள்ள மக்கள் பொதுநல மனநிலையைக் கொண்டி ருப்பார்கள். முஸ்லிமல்லா சமூகங்களிலும் கூட மனிதத்தன்மை காணப்படுவது வெளிப்படையான உண்மையாகும். அமெரிக்கா வில் மட்டும் 22,000 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் மனிதா பிமான தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. எனவே, மேற்கின் பின்பழம் பொருளியலுடைய 'மனிதனின் சுயநலப் பண்பு' பற்றிய எடுகோளானது யதார்த்த வாழ்வில் காணப்படு கின்ற பல உண்மைகளை நிராகரிக்கின்றது.

இரண்டாவதாக, பொருள் முன்னேற்றமென்பது இஸ்லாமிய சமூகத்தில் மிக உயர்ந்த குறிக்கோளாக இல்லை. நாம் இரண் டாம் அத்தியாயத்தில் கலந்துரையாடியது போல அது மறுமையில் ஃபலாஹை அடைவதற்குத் துணையாக இருக்கும் ஒரு விரும்பத் தகு இலக்காகும். இது ஒரு முரண்பட்ட விடயமாகத் தோன்ற லாம். ஆனால், உண்மை அவ்வாறல்ல. நபி (ஸல்) அவர்கள் ஓர் எளிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டியது போலவே அன்னாரது தோழர்களது வாழ்வும் கூட மிக எளிமையானதாகவே இருந்தது.

அல்-குர்ஆன், இவ்வுலக வாழ்க்கையை வீண் விளையாட்டும் சொற்ப இன்பமுமே அன்றி வேறில்லை எனக் கூறுகின்றது. அது முதலில், மனிதனது மறுமை நலனுக்கே அதிக முக்கியத்துவத் தைக் கொடுக்கின்றது. இது, துறவறத்தை அல்லது மரணத்தைத் தேடிப் பெற்றுக்கொள்வதைப் போதிக்கின்றது என்பது அர்த்த மல்ல. மாறாக, இம்மார்க்கத்தைப் பின்பற்றுவோரை, ஒரு சம நிலை மனப்பாங்கைக் கொண்டிருக்குமாறே வலியுறுத்துகின்றது. வீண் விரயத்தையும் அளவு கடந்த மிதமிஞ்சிய நுகர்வையும் விரும்பவில்லை என்பதையே குறிக்கின்றது. பொருள் சுபீட்ச மானது ஒருவர் தனக்கும், அதேபோல் குடும்பம், சமூகம் மற்றும் அல்லாஹ்வுக்குமுரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி யாக இருக்கும் வரையே விரும்பத்தக்கதாகும். இதன்போது, அப்பொருள் சுபீட்சம் மறுமையில் ஃபலாஹை அடைவதற்கான ஒரு சாதனமாகக் காணப்படும். பொருள் முன்னேற்றத்தையே வாழ்க்கையின் உயர் குறிக்கோளாக எடுத்துக் கொள்வோமாயின், அது வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் உண்மையான நோக்கத்தைச் சிதறடித்துவிடும்.

மூன்றாவதாக, இஸ்லாம் மனிதனை, அவனுக்கு எது சிறந்தது என்பதைச் சுதந்திரமாக அறியும் தகுதியற்றவனாகவே கருது கின்றது. அல்லாஹ் மட்டுமே பூரண அறிவுடையவன். மனித அறிவானது பூரணமற்றது; வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத் திலும் வேறுபட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அவ னுக்கு வழிகாட்டல் தேவைப்படுகின்றது. அல்லாஹ், அவ னுடைய எல்லையற்ற அறிவிலிருந்தே அவனது வேதங்களை நபிமார்களின் மூலம் மனிதர்களின் நலனுக்கான வழிகாட்டல் களாக அருளியுள்ளான்.

ஆகவே, இஸ்லாமிய பொருளியல், பின்பழம் பொருளியலின் அடிப்படை எடுகோள்கள் தொடர்பில் ஒரு வித்தியாசமான நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. இதன் ஒரு பகுதியாகவே, இஸ்லாமிய பொருளியலின் பிரத்தியேக முறையியலுக்கான தேவை மற்றும் நியாயப்படுத்தல் விளக்கப்படுகின்றன. பின்பழம்

பொருளியலில் இன்னுமொரு பிரச்சினையும் உள்ளது. அது, ஆராய்ந்தறியப்பட்ட கருதுகோள் செயன்முறை மூலமாகப் பெற்றுக்கொண்ட மனித அறிவை விட வேறெந்த அறிவு மூலத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதேயாகும். ஆகவே, தெய்வீகத் தன்மை வாய்ந்த மூலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் உண்மையான அறிவின் கதவுகளை அது மூடிவிடுகின்றது. இது பொருளாதார சிந்தனையில் உருவான குழப்பங்களை மென்மேலும் அதிகரிக்கவே செய்யும். ஆனாலும், உலகளாவிய ரீதியில் உண்மையானதும், சரியானதுமாக பின்பழம் பொருளியலே ஏற்கப்பட்டுள்ளது. அதன் முழுப் பொருளியல் அறிவுமே மனிதர்களுக்காக அன்றி, அதனுடைய சுய தேவைக்காகவே அபிவிருத்தி செய்யப்படுகின்றது. தெய்வீகத் தன்மை வாய்ந்த மூலங்களிலிருந்து பெறப்பட்ட எந்தவொரு அறிவும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு வரைசட்டமும் இல்லாமலேயே விலக்கப்பட்டு, முழுமையாகப் புறக்கணிக்கப்படுகின்றது. எனவே தான், இதில் ஏறத்தாழ அனைத்து விடயங்களுமே சிக்கலானவையாக உள்ளன.

இது, பொருளாதாரக் கோட்பாடுகளின் பகுத்தறிவுச் சோதனை மற்றும் விமர்சனச் செயன்முறை என்பன கேள்விக்குறியாகவே உள்ளன என வாதிடவில்லை. ஆனால், வேறுபட்ட கோட்பாடுகளின் உண்மை மற்றும் பொய்மை குறித்து திறனாய்வு செய்வதற்குரிய தகவல் குறிப்புக்கள் மற்றும் தகுதி விதிகளைக் கையாளக் கூடிய வகையில் இந்தப் பொருளியலுக்கு எந்த உறுதிப்படுத்தப்பட்ட உண்மையான அறிவும் இல்லை என்றே கூறுகின்றது. ஆகவே, உண்மையான உறுதிப்படுத்தப்பட்ட அறிவிற்கான அடிப்படையை வழங்குவது மட்டுமல்ல, கோட்பாடுகளைத் திறனாய்வு செய்வதற்கான நம்பத்தகுந்த ஒரு தகுதிவிதியின் மூலம் நிலவுகின்ற குழப்பங்களைத் தவிர்க்க வேண்டியதும் அபிவிருத்தியடைந்து வரும் ஒரு முறையியலுக்கு அவசியமாகவுள்ளது. இஸ்லாமிய பொருளியல், இத்தகைய அறிவினை அல்லாஹ்வால் அருளப்பட்ட அறிவிலிருந்தே பெற்றுக் கொள்கின்றது.

## 2. இஸ்லாமிய பொருளியலின் முறையியல்

### 2.1 பிரதான மைய வெளிப்பாடு

ஒரு முறையியலின் அடிப்படை தொழிற்பாடாகக் காணப் படுவது மனிதன் உண்மையை அடைந்து கொள்வதற்கு உதவுவ தாகும். இஸ்லாமிய பொருளியலின் மையமானது அல்-குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறை என்பவற்றையே அதன் கொள்கைகளாகக் கொண்டுள்ளது. இக்கொள்கைகள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை. இதனால், மேற்கின் பொருளியலில் நாம் ஆராய்வது போல் உண்மையா? அல்லது பொய்யா? என்ற கேள்வி இங்கு எழாது. அவற்றின் தெய்வீகத்தன்மை வாய்ந்த மூலத் தோற்றத்தின் காரணமாக அவை உண்மையானவையாகும்; அதில் சந்தேகமேயில்லை.

இஸ்லாமிய பொருளியல் முறைமையானது ஒவ்வொரு நிலை மையிலும் இவ்விரண்டு மூலங்களையே சான்றாகக் கொண்டுள் ளது. எப்போது குறித்த விடயத்துக்கு இவ்விரு மூலங்களில் நேரடி வழிகாட்டல் காணப்படவில்லையோ, அப்போது மட்டுமே மனிதனின் அறிவுத்திறனின் தேவை ஏற்படுவதோடு முறையிய லிற்கான கேள்வியும் ஏற்படுகின்றது. உதாரணமாக, பொருளா தார நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய பொதுவான தத்துவங்கள் மற்றும் எதிர்வுகூறல்களை அல்-குர்ஆனின் பல வசனங்கள் குறிப்பிட்டுள்ளன. நாம் அவ்வாறான சில வசனங்களைக் கீழே பார்க்கவுள்ளோம். இவ்வசனங்களுக்கு எந்த உறுதிப்படுத்தலும் தேவையில்லை. ஏனெனில், இவை யாவுமறிந்த ஏக அல்லாஹ் வால் அருளப்பட்டவையாகும். எனவே, இஸ்லாமிய பொரு ளியல், அவ்வசனங்களை, அவை கூறப்பட்டவாறே ஏற்றுக் கொள்கின்றது. இவை மட்டுமல்லாது ஏனைய அனைத்து அல்-குர்ஆன் வசனங்களும் நபி (ஸல்) அவர்களின் உண்மையான வழிமுறையும் இஸ்லாமிய பொருளியலின் பிரதான மையமாகும்.

1. அல்லாஹ், வட்டியை (அதில் எவ்வித அபிவிருத்தியுமில்லாது) அழித்து விடுவான்; மேலும் தர்மங்களை (அபிவிருத்தியைக் கொண்டு) வளரச் செய்கின்றான்... (2:276)

2. இன்னும் நிச்சயமாக தௌராத்தையும் இன்ஜீலையும் அவர்களுடைய இரட்சகனிடமிருந்து அவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்டதையும் அவர்கள் நிலைநாட்டியிருந்தால், அவர்களுக்கு மே(ல் வானத்தி)லிருந்தும், அவர்களுடைய பாதங்களின் கீழ் (பூமியில்) இருந்தும் புசித்திருப்பார்கள்; (ஆனால்) அவர்களில் சிலர் நேர்மையான சமுதாயத்தினராக இருக்கின்றனர். இன்னும், அவர்களில் பெரும்பான்மையினர் - அவர்கள் செய்யும் காரியங்கள் மிகக் கெட்டவையாக இருக்கின்றன. (5:66)

3. அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட (நல்லுபதேசத்)தை அவர்கள் மறந்துவிடவே, (அவர்களைச் சோதிக்கும் பொருட்டு) ஒவ்வொரு பொருளின் வாயில்களையும் நாம் அவர்களுக்குத் திறந்துவிட்டோம்; (அவர்களுக்குத் தேவையானவை அனைத்தும் தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தன.) முடிவாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளைக் கொண்டு அவர்கள் ஆனந்தமடைந்து கொண்டிருந்த சமயத்தில் (நம் வேதனையைக் கொண்டு) நாம் அவர்களைத் திடீரென பிடித்துவிட்டோம்; அந்நேரத்தில் அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாகிவிட்டனர். (6:44)

4. மேலும், ''நீங்கள் உங்கள் இரட்சகனிடத்தில் பாவ மன்னிப்புத் தேடுங்கள்; அதன் பின்னர் (பாவங்களைவிட்டு தௌபாச் செய்து) அவன் பக்கம் திரும்புங்கள்; (அவ்வாறு செய்தால்) அவன் குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் உங்களை அழகான சுகமாக சுகமடையச் செய்வான்; இன்னும், சிறப்பிற்குரியவர் ஒவ்வொருவருக்கும் அவரது சிறப்பை அவன் கொடுப்பான்; நீங்கள் (அவனைப்) புறக்கணித்தால், (மா)பெரும் நாளின் வேதனையை நிச்சயமாக உங்கள் மீது நான் பயப்படுகின்றேன்'' (என்றும்), (11:3)

5. ''என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் உங்கள் இரட்சகனிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள்; அப்பால் (தௌபாச் செய்து) அவன் பக்கமே திரும்புங்கள்; (அவ்வாறு செய்வீர்களாயின்) மழையை உங்கள் மீது தொடர்ச்சியாகப் பொழியச் செய்வான்; உங்களுடைய பலத்திற்கு மேல் பலத்தையும் உங்களுக்கு அதிகரிக்கச் செய்வான்;

மேலும், குற்றவாளிகளாக நீங்கள் (அவனைப்) புறக்கணித்து விடாதீர்கள்'' (என்றும் கூறினார்). (11:52)

6. அன்றியும், உங்கள் இரட்சகன் (இதற்காக) நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் (என் அருளை) நிச்சயமாக உங்களுக்கு அதிகப்படுத்துவேன்; இன்னும், நீங்கள் மாறு செய்தீர்களானால், நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கடினமானது'' என்று அறிவித்ததையும் (நபியே! நீர் நினைவு கூர்வீராக). (14:7)

7. மேலும், ''எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக் கின்றாரோ, நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது. மேலும், மறுமை நாளில் நாம் அவனைக் குருட னாகவே எழுப்புவோம்''. (20:124)

*இவ்வசனங்கள், பொதுவான பொருளாதாரத் தத்துவங்கள் சிலவற்றைக் குறித்துக் காட்டுவதோடு, சில எதிர்வுகூறல்களை யும் செய்கின்றன. இவ்வெதிர்வுகூறல்களுக்கு எந்தவொரு நிறுவ லும் தேவையில்லை. அவை உண்மையானவை என்பதோடு, இஸ்லாமிய பொருளியல் அவற்றை, கூறப்பட்டவாறே ஏற்றுக் கொள்கின்றது. இஸ்லாமிய பொருளியலின் மையமானது இத்தகைய வெளிப்படை உண்மைகளையே கொண்டுள்ளது. அவை, பொருளியலின் எல்லை நிபந்தனைகளையும் வரையறுத் துக் கூறுகின்றன. அதேநேரம், கோட்பாடுகளைப் பரீட்சிப்பதற் காக மனிதர்களால் முன்வைக்கப்பட்ட தகுதிவிதிகளையும் பயன்படுத்துகின்றது. ஏதாவதொரு கோட்பாடு ஒரு நபரினால் முன்வைக்கப்படும் போது அக்கோட்பாடு இத்தகுதிவிதிகளால் பரீட்சிக்கப்படுவதுடன், அதில் தெளிவானதும் மறுக்க முடியாத துமான கருத்து வேறுபாடுகள் காணப்படின் எந்தவொரு மேலதிக பரீட்சித்தலுமின்றி அக்கோட்பாடானது நிராகரிக்கப்படும்.*

*எவ்வாறிருப்பினும், மேலே கூறப்பட்டவாறான முறையியலி னுடைய பிரயோகம் புனித நூற்களின் கருத்துக்களுக்கு மட்டுமே பொருந்தும். மாறாக, அதற்கான மனித விளக்கங்களுக்கல்ல. இப்புனித நூற்களின் கருத்துகளுக்கான மனித விளக்கங்கள்*

சோதிப்பதற்கும் விமர்சனத்திற்கும் திறந்துவிடப்பட்டுள்ளன. இவ்விளக்கங்களிலிருந்து முடிவுகளைப் பெறுவதற்கான அடிப் படையான முறையியலாக 'இல்ம் அல் உஸூல்' காணப்படு கின்றது. இஸ்லாமிய பொருளியலாளர்களும் கூட புனித நூற் களின் கருத்துக்களுக்குரிய விளக்கங்களிலிருந்து பெறப்படும் முடிவுகளைப் பரீட்சிப்பதற்காகவும் அதே முறையியலையே பிர யோகிக்கின்றனர். இஸ்லாத்தின் ஆரம்பகால மார்க்க அறிஞர்கள், குறிப்பிட்டுக் கூறத்தக்க வகையில் அவர்களுடைய கால சூழ் நிலையில் தம்மிடம் வரும் பிரச்சினைகளுக்கு இவ்வடிப்படை மூலங்களைக் கொண்டு நுண்ணறிவு, அகப்பார்வை மற்றும் சிறந்த சிந்தனைத்திறனினாலும் விளக்கமளித்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. அதைத் தொடர்ந்து வந்த காலத்தில், அம்மார்க்க அறிஞர்களால் விருத்தி செய்யப்பட்ட முறையியலானது மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப ஏற்கன வேயிருந்த அதனுடைய சில பொருத்தப்பாடுகளை இழக்க நேரிட் டதையும் மறுக்க முடியாது. இதனால், இன்றுள்ள அனைத்து முறையியலையும் மீள்மதிப்பீடு செய்யும் தேவை காணப்படு கின்றது.

உதாரணமாக, ஏதாவதொரு விவகாரத்தில் நபி (ஸல்) அவர் களது குறிக்கோள் மற்றும் அறிவாற்றலை விளங்கிக்கொள்ள வேண்டுமானாலும் அவர்களது வழிமுறை முழுவதையும் கற்பது சிறந்ததாக அமையக்கூடும். சமகாலப் பிரச்சினைகளுக்குரிய இஸ் லாத்தின் நிலைப்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு இஸ்லாம் ஒவ்வொன்றையும் விதியாக்கியுள்ளதற்கான, அதாவது சட்டங்க ளிற்கான உள்நோக்கம் மற்றும் தாத்பரியங்களைச் சரியாக விளங் கிக் கொள்ளுதல் வேண்டும். இன்றுள்ள புதிய புதிய கேள்விகள் இஸ்லாத்தின் தீர்ப்பை வேண்டி நின்றாலும், முறையியலில் நிலவுகின்ற பற்றாக்குறையினால் முஸ்லிம் அறிஞர்களால் அவற் றுக்குரிய சரியான பதிலை முன்வைக்க முடியாமலுள்ளன. எவ்வாறிருப்பினும், இன்று தாமதப்படுத்த முடியாத ஒரு தேவை யாக இவ்விடயம் காணப்படுவதை மறுக்க முடியாது.

## 2.2 அறிவின் வகிபாகம்

இஸ்லாமிய பொருளியலின் பரப்பானது இஸ்லாமிய விழு மியங்கள் பற்றிய விடயத்தை உள்ளடக்கியிருப்பதோடு, யதார்த்த வாழ்வில் நிகழ்கின்ற பொருளாதார நிகழ்ச்சிகளை ஆய்வு செய் தலையும், இருக்கின்ற பொருளாதாரங்களை இஸ்லாமிய பொரு ளாதாரங்களாக மாற்றுவதற்குரிய வழிகள் மற்றும் சாதனங்களைப் பற்றிய தேடலையும் உள்ளடக்கியுள்ளது. இதனால், இஸ்லாமிய பொருளாதாரத்தின் பிரதான வெளிப்பாடு சில பிரச்சினைகளுக்கு நேரடியான வழிகாட்டல்களையே வழங்குகின்றது. இது உண்மை யில் பொருளாதார வாழ்வினுடைய ஒரு பகுதி, ஒட்டுமொத்த தெய்வீக வரைசட்டத்துக்குள் அமைந்த மனிதனின் அறிவு, புலமை என்பவற்றைப் பிரயோகிக்குமாறு கோருகின்றது. எங்கு மனித அறிவு பிரயோகிக்கப்பட வேண்டுமோ, அங்கு தான் முறையியல் பற்றிய கேள்வியும் எழுகின்றது. ஒரு கோட்பாடு புனித நூற்களின் எந்தவொரு கருத்தையும் மறுத்துக் கூறாத போது, அதன் சரியான தன்மை மனித அறிவால் பரீட்சிக்கப்பட வேண்டும் என்பதே இவ்விடயத்திலுள்ள பொதுத் தத்துவமாகும்.

இது, கோட்பாட்டினுடைய சரியான தன்மையைப் பகுத்தறிவு மற்றும் சோதனைவழி தகுதிவிதிகளால் பரீட்சிக்கின்றது. எந்த வொரு கோட்பாடும் இவ்விரு தகுதிவிதிகளையும் திருப்திப் படுத்தியாக வேண்டும். அக்கோட்பாடு, பகுத்தறிவுக்கு உண்மை யாக இருக்கவேண்டும் என்பதோடு, சோதனைவழி ஆதாரங் களாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவ்வுறுதிப்படுத்தலா னது பொப்பேரியவாதிகளால் கண்டுபிடிக்கப்பட்ட பொய்ப்பித் தல் தகுதிவிதியினை ஒத்தது. அதாவது, ஒரு கோட்பாடு பொய்ப் பித்தல் தகுதிவிதியைக் கொண்டே பரீட்சிக்கப்பட வேண்டும். இவ்விரு தகுதிவிதிகளாலும் பொய்ப்பிக்கப்படாத கோட்பாடுகளே ஏற்றுக்கொள்ளப்படும். சுருங்கக்கூறின், இவ்விடயத்தில் இஸ் லாமிய பொருளியலின் முறையியல் பின்பழம் பொருளியலை ஒத்தது.

மேலும், இஸ்லாமிய பொருளியலின் கருதுகோள்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதிவிதிகளை ஒரே மாதிரியாகப் பின்பற்றவில் லையாயின் அவை பொய்யானவை எனக் கருதப்பட்டு விலக்கப் படலாம் என்ற விடயத்தைக் கண்டிப்பாகக் குறிப்பிடுகின்றது. வேறு வார்த்தையில் சொல்வதானால், ஒரு கருதுகோள் அத னுடைய நிபந்தனைகள் மற்றும் எதிர்வுகூறல்களைத் தெளிவாக்க வேண்டும். கருதுகோளானது, அது பிரயோகிக்கப்பட முடியாத நிலைமையினைக் குறிப்பிடும் போது அல்லது அதனைப் பொய்யாக்கும் நிபந்தனைகளைக் குறிப்பிடும் போது மட்டுமே நன்மையாக அமையும்.

பொய்ப்பித்தல் தகுதிவிதியானது, ஒரு பொருளாதார முறைமை தொடர்பில் எவ்வாறு என்ற கேள்விகளைப் பற்றிப் பேசும் கோட்பாடுகளுக்கு மட்டுமே பிரயோகிக்கப்பட முடியும். இதனை, ஏன் என்ற கேள்விகள் தொடர்பில் பிரயோகிக்க முடியாது. ஏனெனில், அறிவை எவ்வாறு என்ற கேள்விகளுக்கு மட்டுமே பிரயோகிக்க முடியும். மேலும், ஏன் என்ற கேள்விகள் ஒரு விட யத்தின் உண்மையையும் ஒழுக்க வரம்புகளையும் கருத்திற் கொள்வதாக இருக்கும். உதாரணமாக பின்பழம் பொருளியலில் கேட்கப்படும் கேள்விகளுள் ஒன்றைப் பார்ப்போமாயின், சந்தை எவ்வாறு தொழிற்படுகின்றது? ஆனால், எவரும் சந்தை ஏன் அவ்வாறு தொழிற்படுகின்றது எனக் கேட்பதில்லை. ஏனெனில், அது பொருளியலை ஒழுக்க வரம்புக்குள் இழுத்துச் செல்கின்றது.

'டிஸ்கார்ட்ஸ்' இன் கருத்துப்படி, மேற்குலகு அறிவை உண்மை மற்றும் ஒழுக்கத்திலிருந்து பிரித்து வைக்க நன்கு கற்றுள்ளது. எனவே தான், இஸ்லாமிய பொருளியலில் காணப்படுகின்ற உண்மை மற்றும் ஒழுக்கம் பற்றிய விடயங்கள் முற்றிலும் பொருத்தமானவையாகும். இதனால், இஸ்லாமிய பொருளியல், 'ஏன்' என்ற கேள்விகளுக்காக உண்மை மற்றும் ஒழுக்கம் என்பவற்றையே தகுதிவிதிகளாகப் பிரயோகிக்கின்றன.

## *2.3 தொகுத்தறியும் அல்லது ஆராய்ந்தறியும் நியாயங்கள்*

*தொகுத்தறியும் மற்றும் ஆராய்ந்தறியும் நியாயங்களுக்கிடையில் தெரிவுசெய்யப்பட்ட கேள்விகளுக்கு, இஸ்லாமிய பொருளியலின் பதில் என்ன? இதற்குரிய பதில், இஸ்லாமிய பொருளியல் இவ்விரு முறைகளையும் உள்ளடக்கிய ஒரு சேர்க்கையையே பயன்படுத்துகின்றது என்பதாகும். ஆனால், அதற்கான தகுதிகளையும் கோருகின்றது. முஸ்லிம்கள் தொகுத்தறியும் அறிவின் அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளதாக சிலாகிக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக, சோதனைவழி முறைகளிலாகும்.*

*நபி (ஸல்) அவர்களது வருகைக்கு முன்னரான காலத்தில் கூட தத்துவவியலின் சில பிரதான முறைமைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும், அவை அதிகம் உத்தேச நோக்கங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அல்-குர்ஆனும் கூட, சூரியன், சந்திரன், நாள், இரவு, மழை, பருவங்கள் மற்றும் நிறத்தின் வேறுபாடுகள் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளைப் பார்க்குமாறும், அறிவுடையவர்கள் அவற்றைப் பார்த்து சிந்தித்து உணர்வு பெறுமாறும் மக்களை அழைக்கின்றது. இது ஆய்வில் தொகுத்தறியப்பட்ட முறையின் கண்டுபிடிப்புக்கு இட்டுச்செல்லும் ஒன்றாகும். மேலும், நபி இப்றாஹீம் (அலை) அவர்கள், மரணத்தின் பின்னரான வாழ்க்கைக்கு ஒரு சோதனைவழி ஆதாரத்தைக் காட்டுமாறு கேட்டதை அல்-குர்ஆன் எடுத்துக் காட்டுகின்றது. நபி இப்றாஹீம் (அலை) அவர்களது விடயத்தில் அல்லாஹ் ஒருவன் என்ற உண்மை ஒரு சோதனை வழி அணுகுமுறைக்கு இட்டுச் சென்றதை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:*

> ''மேலும், வானங்களுடைய இன்னும் பூமியுடைய (நம்முடைய) ஆட்சியை (அதில் நடந்தேறும் பிரமாண்டமான அத்தாட்சிகளை) நாம் இப்றாஹீமுக்கு இவ்வாறே காண்பித்தோம். அவர் உறுதி கொண்டவர்களில் ஆவதற்காகவும் (இவ்வாறு செய்தோம்)'' (6:75).

இதில் அழுத்திக்கூறப்பட்ட 'நுரீ' என்ற சொல் பார்த்தலைக் குறிக்கும். அல்லாஹ் பகுத்தறிவான உண்மைகளின் ஏற்றுக்கொள் ளக்கூடிய தன்மையை நிலைநாட்டுவதற்குரிய அவதானங்களின் அடிப்படையிலேயே அறிவைக் குறிப்பிட்டுள்ளான். இது, பௌதிக உண்மைகளுக்கு இம்முறையைப் பின்பற்றுவது அதிகம் விரும்பத்தக்கது என்பதைக் குறிப்பிடுகின்றது.

இதிலிருந்து, இஸ்லாமிய பொருளியலில் தொகுத்தறியும் முறை யானது கடந்த காலங்களில் முஸ்லிம்களால் உருவாக்கப்பட்ட வழிமுறையின் ஒரு தொடர்ச்சியாகவே உள்ளது எனலாம். ஆனால், அது வெறுமனே தொகுத்தறியும் முறையைப் பயன் படுத்துவதால் எந்தவொரு விஞ்ஞான பூர்வமான முடிவுகளையும் பெறுவது சாத்தியமில்லை என்றே வாதிடுகின்றது. எப்போதாவது ஒருவர் ஒரு பொருளையும் அதைச் சுற்றியும் பார்க்கிறாரோ, அது அவரை அவர் பார்த்தவற்றிலிருந்து குறித்த ஒன்றை மட்டும் தெரிவு செய்து, ஏனையவற்றை நிராகரித்து விடக்கூடிய (பொதுத் தத்து வத்திலிருந்து ஆராய்ந்தறியும் சிந்தனை) ஒரு நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால், அறிவின் உண்மையான மூலம் புலமையே அன்றி அவதானிப்பல்ல. நாம் பின்பழம் பொருளியலின் இந்த வாதத்தை மறுத்துக் கூறவில்லை. மாறாக, நாம் மனித புலமையை அறிவின் ஒரு மூலமாகவே ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், இஸ்லாமிய பொருளியல் அதனுடன் அறிவின் ஏனைய மூலங்களையும் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றது. உதாரணமாக, வஹி மற்றும் உள்ளுணர்வு என்பன அறிவின் மூலங்கள் ஆகும். மனித உள்ளத்திற்கு திடீர் திடீரென மதிநுட்ப மான சிந்தனைகள் பிரகாசிக்கும் இயலுமை காணப்படுவதோடு, அவை எந்தவொரு முறைசார் அவதானிப்பினூடாக உருவாகு பவையும் அல்ல. எனவே, ஒரு கோட்பாட்டின் அடிப்படை தொகுத்தறியப்பட்டதாக அல்லது பொதுத் தத்துவத்திலிருந்து ஆராய்ந்தறிதலின் மூலம் பெறப்பட்டதாக இருக்கலாம். ஆனால், இஸ்லாமிய பொருளியலாளர்கள் இவற்றை புனித நூற்கள், அறிவு மற்றும் சோதனைவழி ஆதாரங்கள் என்ற பல்-தகுதிவிதிகளைக் கொண்டே பரீட்சிப்பர்.

இஸ்லாமிய பொருளியல், அனைத்திலுமே ஆராய்ந்தறியும் அறிவினைப் பயன்படுத்துவதில்லையா? என கேட்கப்படுமாயின் அதற்கான எமது பதில், எந்தவொரு கூற்றும் விடய உள்ளடக் கத்துக்கான தகுதியைக் கொண்டிருக்காவிட்டால் அவை எந்த அர்த்தத்தையும் தரப்போவதில்லை. பொருளாதார முகவர்களின் கருத்துப்படி, ஆராய்ந்தறியும் அறிவென்பது எதிர்காலம் பற்றிய பூரண அறிவை ஓர் எடுகோளாகக் கொண்டுள்ளது. ஆய்வுச் சுருக்கத்திலுள்ள குறைப்புக்கள் இவ்வெடுகோளின் அடிப்படை யிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. உண்மையாக, பொருளாதார கோட்பாடுகளின் அனைத்து நூற்களுமே குறிப்பாக இத்தகைய குறைப்பிற்கு இசைந்துள்ளன. பூரண அறிவு பற்றிய எடுகோளின் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையானது சோதனை முறைகளால் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றுடன் இது முரண்படுவதால் இஸ்லாமிய பொருளியலும் இவ்வெடுகோளை ஏற்பதில்லை. எதிர்காலம் பற்றிய பூரண அறிவு அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளதோடு, மனிதனுடைய அறிவு பூரணமற்றதும் பகுதியளவானதுமாகவே உள்ளது. இதனால், பூரண அறிவுடைய எடுகோளை சுருக்கக் குறைப்பு செய்வது இஸ்லாமிய பொருளி யலில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகவுள்ளது. இவ்வனைத்து வாதங்களையும் ஒரு வசனத்தில் சுருக்கமாகக் குறிப்பிட முடியும். இஸ்லாமிய பொருளியல் மனித புலமையை அறிவின் ஒப்புக் கொள்ளத்தக்க மூலமாகவே ஏற்கின்றது. ஆனால், மாதிரியாக்க மானது மிக ஆரம்ப இடத்திலிருந்தே ஒரு தொடராக சுருக்கக் குறைப்பில் ஈடுபடுவதால் அது ஆராய்ந்தறியும் அறிவின் அடிப் படை மாதிரியாக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அது பூரண அறிவை எடுகோளாகக் கொள்வதே இஸ்லாமிய பொருளிய லாளர்கள் அதனை நிராகரிப்பதற்குக் காரணமாகும்.

எஞ்சியிருக்கும் கேள்விகளாவன: எவ்வாறு இஸ்லாமிய பொருளியல் மாதிரியாக்கத்தைத் தொடர்ந்து செய்கின்றது? எவ்வாறு இஸ்லாமிய பொருளியல் உண்மையான வாழ்க்கை

நிலைமைகளை ஏற்கின்றது? அதாவது, தனிநபர்கள் பூரண முன்னறிவை கொண்டிருக்காததோடு, ஒவ்வொரு நபர்களினது அறிவும் ஏனையோரினது அறிவிலிருந்து வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. ஆகவே, தரப்பட்ட ஒரு நிலைமையின் கீழ் சாத்தியமான பிரதிபலிப்புக்கள் ஏராளமாகக் காணப்பட முடியும். ஆகவே, இஸ்லாமிய பொருளியலுக்கான பகுத்தறிவான அணுகு முறையாக இருப்பது வரலாற்றில் மனித நடத்தையை அவ தானிப்பதற்கு ஏற்ற, உண்மையான அறிவின் அடிப்படையில் கருதுகோள்களை உருவாக்குவதாகும். இது, சமூகவியல், சந்தைப் படுத்தல், சமூக உளவியல், சமூக மானிடவியல், வரலாறு, வியாபார முகாமைத்துவம் மற்றும் தொழில் உறவுகள் போன்ற விடயங்களிலிருந்து பெறப்பட்ட வழக்கத்திற்கு மாறான ஆய்வு முறைகளை நடைமுறைப்படுத்துமாறே கூறுகின்றது. தேசிய கணக்குகள், கம்பனிக் கணக்குகள், தேசிய வரவு-செலவு திட்டங்கள், வர்த்தக நடைமுறைகள், தொழிலாளர் நடத்தை மற்றும் விவசாயிகள் நடத்தை போன்ற தரவு மூலங்கள் இவ்வாறு வழக்கத்திற்கு மாற்றமாக இருக்கக்கூடும்.

## 2.4 எடுகோள்கள் மற்றும் முறை

பின்பழம் பொருளியலின் அடிப்படை எடுகோள்கள் அதனு டைய முறையியலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பொரு ளியலாளர்கள், மனித இனமானது சுயநலம் மற்றும் பகுத்தறிவு என்பவற்றைக் கொண்டிருப்பதாகக் கருதுவதோடு, அதனால் அவர்கள் பொருள் நலனை உச்சப்படுத்த முனைவதாகவும் எதிர்காலம் பற்றி பூரண அறிவை உடையதாகவும் எடுகோள் கொள்கின்றனர். இவ்வெடுகோள்கள் பல வரையறுக்கப்பட்ட மாறிகளால் ஆராய்ந்தறியும் கருதுகோள் முறைக்கு இட்டுச் செல் கின்றது. எனினும், இஸ்லாமிய பொருளியல் இவ்வெந்த எடுகோளையுமே ஏற்றுக்கொள்வதில்லை.

இஸ்லாமிய பொருளியலில் காணப்படும் உயர்மட்ட எடு கோள்கள் புனித நூற்களிலிருந்து பெறப்பட்டதோடு, கீழ்மட்ட

எடுகோள்களே மனித அறிவை அடிப்படையாகக் கொண்டவை. உயர்மட்ட எடுகோள்களுக்கு எந்த உறுதிப்படுத்தலும் தேவையில்லை. இதனால், இஸ்லாமிய பொருளியல் இவ்வெடுகோள்களல்லாதவற்றை, அதன் ஏற்றுக்கொள்ளும் தன்மை பற்றி கலந்துரையாடுவதற்கான தேவையைக் கொண்டுள்ளது. எனவே, கீழ்மட்ட எடுகோள்கள் பகுத்தறிவு மற்றும் சோதனை வழி ஆதாரம் என்ற இரட்டை தகுதி விதிகளுக்கெதிராகப் பரீட்சிக்கப் பட வேண்டிய தேவை உள்ளது. இந்நிலை பின்பழம் பொருளியலில் முற்றிலும் வேறுபட்டது. பின்பழம் பொருளியலாளர்கள், முக்கியமாக ஃப்ரெட்மன், எடுகோள்களுக்கு சோதனை வழி தகுதிவிதியால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை தேவையில்லை என வாதிடுகின்றார். உண்மையில் இதனை விரிவாகக் கூறின், சிலர் செல்லுபடியற்ற எடுகோள்களிலிருந்தே செல்லுபடியான எதிர்வுகூறல்கள் சாத்தியமானது என்கின்றனர். இஸ்லாமிய பொருளியல், பகுத்தறிவு மற்றும் சோதனைவழி அடிப்படையில் இந்நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை.

இது, எம்மை ஒரு கேள்விக்கு இட்டுச் செல்கின்றது. அது, இஸ்லாமிய பொருளியலின் உயர்மட்ட எடுகோள்கள் யாவை? என்பதாகும். முதலாவது, மனிதன் சுயநலமுடையவனாக மட்டுமோ அல்லது பொதுநலமுடையவனாக மட்டுமோ இல்லை. மாறாக, அவனிடம் இவ்விரண்டுமே காணப்படுகின்றது. அவனிடம் இயல்பிலேயே சுயநலம் மற்றும் செல்வத்தை விரும்பும் போக்கு காணப்படுவது உண்மையானாலும், பொது நலனுக்காக வாரி வழங்கும் தன்மையும் அவனிடத்தில் காணப்படுகின்றது. ஏனையோர் மீது அக்கறை காட்டுவது மிகச் சிறந்ததோர் மனிதப் பண்பாகும். இரண்டாவது, பொதுநல நடத்தையானது கல்வியினாலே உறுதியாக அடையப்பட முடியும். மூன்றாவதாக, மனித இனம் பூரணமற்ற முன்னறிவையே கொண்டுள்ளது. இத்தகைய பூரணமற்ற அறிவினால், அனைத்து பொருளியல் ஆய்வுகளுமே நிச்சயமற்ற ஓர் உலகிலேயே இடம்பெறுகின்றது. நான்காவதாக, மறுமையில் ஃபலாஹை அடைவதற்கான

விருப்பம் இவ்வுலகிலும் சுபீட்சத்துக்கு இட்டுச்செல்லும் என்ற எடுகோளாகும். இது, எடுகோள்களின் முழுமையான ஒரு பட்டியலல்ல. அதிகளவான உயர்மட்ட எடுகோள்கள் அல்-குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களது வழிமுறைகளின் அடிப்படையிலேயே அபிவிருத்தி செய்யப்பட முடியும்.

## *2.5 பிரச்சினைத் தீர்வு*

இஸ்லாமிய பொருளியல் சிந்தனையானது இஸ்லாத்தின் ஆரம்ப காலத்துக்கே திரும்பிச்சென்று அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றது. இஸ்லாமிய சிந்தனையாளர்கள் அபூ யூசுப், அபூ உபைத், யஹ்யா பின் ஆதம், குதாமா பின் ஜாபர், அல்-மாவர்தி, அல்-கஸ்ஸாலி, இப்னு கல்தூன், ஷா வலியுல்லாஹ் மற்றும் அண்மைய சிந்தனையாளர்களான அல்லாமா இக்பால், முஹம்மத் அப்துல்லாஹ், முஹம்மத் ராஷித் ரிழா, மௌதூதி, பாகிர் அல்-ஸத்ர், தாலிகானி போன்றோர் பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறைக்கு தங்களது ஒருமித்த பங்களிப்பை ஆற்றியுள்ளார்கள். இவர்கள், தமது காலத்திலிருந்த பொருளாதார பிரச்சினைகளைப் பற்றியே கவனம் செலுத்தியுள்ளார்கள். இவர்கள், வறுமை, சமூக நீதி, வரி விதிப்பு, பொருளாதார சமநிலை, நிறைவில் சந்தைகள் மற்றும் அரசின் ஒதுக்கீடு செய்யும் வகிபாகம் பற்றியெல்லாம் எழுதியுள்ளார்கள். அவர்கள், இஸ்லாத்தின் உலகப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு தமது வாதத்தை மேற்கொண்டதோடு, தமது காலத்தில் நிலவிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தமது அகப் பார்வையைக் குறைவாகவே பிரயோகித்துள்ளனர். தற்போதைய இஸ்லாமிய பொருளியலும் இவ்வழிமுறையின் ஒரு தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. இது தனிநபர்கள், வீட்டுத் துறை, நிறுவனங்கள் மற்றும் அரசு என்பவற்றின் பொருளாதார நடத்தையைப் பின்வரும் நோக்கில் கற்கின்றது.

*1.* நடத்தையை விளங்கிக் கொள்ளலும், தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையும்.

2. உடைமையாளர்கள், தொழிலாளர்கள், வாடிக்கையாளர்கள், பிரஜைகள் மற்றும் சமூகம் ஆகியோரது ஃபலாஹுடன் மனித நடத்தையை தொடர்புபடுத்தல்.

3. வேறுபட்ட மட்டங்களில் ஃபலாஹை உச்சப்படுத்துவதற்கான மாற்றுத் தந்திரோபாயங்கள் பற்றிக் கருதுகோள் கொள்ளல்.

இதை முறையே விளக்குவதற்கு, ஒரு முஸ்லிம் பொருளியலாளர் எவ்வாறு நிறுவனங்களின் பிரச்சினைகளை தீர்க்க முனைகின்றார் எனப் பார்ப்போம். எமது பார்வையில், ஒரு முஸ்லிம் பொருளியலாளர் முதலாவது கட்டத்தில், நிறுவனங்களால் தமது பொருட்களின் உற்பத்தி, விலையிடல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாக எடுக்கப்படும் வேறுபட்ட தீர்மானங்களை விளங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இக்கட்டத்தில், பின்பழம் பொருளியலில் காணப்படும் அனுகூலங்களுடன், அதற்கான எச்சரிக்கைகளையும் பயன்படுத்த வேண்டும். அதாவது, பின்பழம் பொருளியலின் எடுகோள்கள் உண்மையற்றவையாகவும் அதிகம் இலகுபடுத்தப்பட்டவையாகவும் இருக்கலாம். இதனால், முஸ்லிம் பொருளியலாளர்கள் ஏனைய விடயதானங்களான சந்தை ஆய்வு, உற்பத்தி முகாமைத்துவம் மற்றும் சமூக உளவியல் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். இரண்டாவது கட்டத்தில், அவர் நிறுவனங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் சாதாரண குடிமக்கள் என அனைவரினது ஃபலாஹைப் பற்றியும் விளங்கிக் கொள்வதோடு, பல்வேறுபட்ட விட்டுக் கொடுப்புக்களையும் அவர் குறித்துக் காட்ட முடியும். மூன்றாம் கட்டத்தில், வேறுபட்ட பொருளாதார முகவர்களின் ஃபலாஹை உச்சப்படுத்துவதற்கான மாதிரிகளை உருவாக்க முனைய வேண்டும்.

நாம் மேலே கூறியவற்றிலிருந்து இரண்டு முடிவுகளுக்கு வர முடியும்.

1. இஸ்லாமிய பொருளியலானது ஒரு பல்-பரிமாண விடயமாகும். அது பொருளியலின் மரபுவழி மூலங்களை மட்டுமே

நம்பியிருக்குமானால் அதனுடைய குறிக்கோள்களை அடைய முடியாது.

2. இஸ்லாமிய பொருளியலானது, ஒரு நியமமான விடய மாகும். அது, வெறுமனே பொருளாதார பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக மட்டுமே அவற்றைக் கற்பதில்லை. அதற்கென ஒரு நியமக் குறிக்கோள் உள்ளது. இருக்கின்ற பொருளாதாரங் களை இஸ்லாமிய பொருளாதாரங்களாக மாற்றியமைப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றி ஆராய்வதென்பதே அக்குறிக்கோளாகும். இஸ்லாமிய பொருளியலின் நேர் உள்ளடக்கமும் கூட குறைமதிப் பீடு செய்யப்பட்டதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ இல்லை. எவ்வாறிருப்பினும், அது நியம நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, இஸ்லாமிய பொருளாதாரங் கள் பின்பழம் பொருளியலிலிருந்து ஒரு படி மேலே செல்கின் றமை தெளிவாகின்றது.

## 2.6 கோட்பாட்டுச் செயன்முறை

இஸ்லாமிய பொருளியலில், கோட்பாட்டை உருவாக்கும் செயன்முறையானது ஏனைய சமூக விஞ்ஞானங்கள் பின்பற்றும் முறையிலிருந்து வித்தியாசமானது என்பது பொதுவாக நம்பப் படுகின்ற ஒரு விடயமாகும். சமூக விஞ்ஞானங்களில், இயற்கை விஞ்ஞானங்களைப் போலவே ஆய்வாளர் தன்னால் அறியப்பட்ட ஒரு கூற்றிலிருந்து அறியப்படாத ஒன்றை காரண-காரியத்துடன் உருவாக்க முயற்சிப்பார். எவ்வாறாயினும், உண்மையான வாழ்வு என்பது அதிக சிக்கலானது. அதாவது, சரிநுட்பமாக ஒரு கொள் கையின் வெளியீட்டைப் பற்றி எதிர்வு கூறுவதற்கு இது சாத்திய மற்றது.

இஸ்லாமிய பொருளியல், இக்கோட்பாட்டு உருவாக்கத்துக் கான மொத்த செயன்முறையையுமே தலைகீழாக மாற்றுகின்றது. அதாவது, அது எதிர்கால விளைவை அறியப்பட்டதாகக் கருது கின்றது. அதன் எதிர்கால விளைவென்பது ஃபலாஹை அடைந்து கொள்ளும் குறிக்கோளாகும். இதுவே அறியப்பட்ட விடயமாகும்.

எனினும், அறியப்படாத விடயம் யாதெனில், எப்பாதை மூலமாக நாம் ஃபலாஹின் அரசை அடைகின்றோம் என்பதாகும். இக்கட்டத்தில் தான் பொருளாதாரக் கோட்பாட்டின் பங்கு தோன்றுகின்றது.

கோட்பாட்டின் முதல் இலக்காக இருப்பது, நிகழ்கால (ஆரம்ப) அரசை ஃபலாஹினுடைய (இறுதியான) அரசாக மாற்றுவதற்குரிய பாதைகளை உருவாக்குவதாகும். விரும்பத்தகு குறிக்கோள்களை அடைவதற்கான வழியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் விடயங்களே 'பாதை' என்பதால் கருதப்படுகின்றது. அத்தகைய விடயங்களாக பௌதீக மற்றும் விலை உறவுகள் (உள்ளீடு மற்றும் வெளியீடு, வருமானம் மற்றும் வேலை வாய்ப்பு, முதலீடு மற்றும் நுகர்வு போன்றவை) அல்லது சமூக மாறிகள் (எழுத்தறிவு வீதம், சுகாதார வசதிகள், குற்றச் செயல்களின் வீதம் போன்றவை) அல்லது ஆன்மீக மாறிகள் (ஒரு நபர் வழமையாக பள்ளிவாசலுக்குச் செல்லும் தடவைகள் மற்றும் ஹஜ்ஜை நிறைவேற்றும் மக்களின் விகிதாசாரம் போன்றன) காணப்படுகின்றன. எனவே, நாம் அந்தப் பாதையை அறிந்து கொண்டால் தான் இலக்கை அடைவதற்கான முறைமையை உருவாக்க முடிவதோடு, அதற்கேற்ற நடத்தைக் கோலத்தையும் நிலைநாட்ட முடியும். ஆகவே, இந்நடத்தைக் கோலம் ஆரம்பத்தில் அறியப்படாததாக இருந்தாலும் குறித்த தொழில்நுட்ப விதிகள் மற்றும் இலக்கை நோக்கிய அறிவின் துணையுடன் தீர்மானிக்கப்பட முடியும்.

இம்முறையிலேயே நாம், இலக்கை அடைவதற்குரிய பொருத்தமான கட்டமைப்பு மற்றும் நடத்தை நிபந்தனைகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இப்பொருத்தமான நிபந்தனைகள் உண்மையான நிபந்தனைகளுடன் முற்றிலும் ஒத்திருக்கும் எனக்கருத முடியாது. இது, பொருத்தமான அல்லது விரும்பத்தகு நடத்தைகளை நாம் வெளிக்கொணர்வதற்குரிய பொதுக் கட்டுப்பாடுகளின் ஒரு தொகுதியை உருவாக்கவே கருதுகின்றது. இக்கட்டுப்பாடுகளானவை வழிகாட்டல், இசைவாக்கல், அரச செலவீட்டை ஈடு செய்தல், தாங்கிருப்பு, கூலி, விலை,

இலாபம் மற்றும் முதலீட்டு கட்டுப்பாடுகளாகக் காணப்படுவதோடு, இதன் தீவிர கட்டமாக நேரடி கட்டாயப்படுத்தல்களும் கூட காணப்பட முடியும். இக்கட்டுப்பாடுகளின் சரியானதொரு தொகுதியை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அல்லது ஒவ்வொரு விடயத்திலும் பொருளியலாளர்கள் அடையாளப்படுத்த வேண்டும். உண்மையில் இங்கு ஒரு கோட்பாட்டின் இலக்கு என்பது ஃபலாஹின் அரசை அடைவதற்கான பாதை, பொருத்தமான நடத்தைக் கோலம் மற்றும் பொதுக் கட்டுப்பாடுகளின் ஒரு தொகுதி என்பவற்றை அடையாளம் காண்பதாகும்.

## 3. இரு முறையியலினதும் ஒப்பீடு

இப்பகுதியில், நாம் முன்னைய பகுதியில் கலந்துரையாடிய இஸ்லாமிய பொருளியலினுடைய முறையியலின் தனித்துவமான பண்புகளுக்கு முக்கியத்துவமளித்து சுருக்கமாகக் குறிப்பிடவுள்ளோம். முதல் முக்கியமான விடயம், இஸ்லாமிய பொருளியல் புனித நூற்களிலிருந்து பெற்ற ஒரு வரைசட்டத்தையே பயன்படுத்துகின்றது. இவ்வரைசட்டமானது புனிதமானதும் மாற்றப்பட முடியாததுமாகும். எந்தவொரு தனிநபரும் அல்லது குழுக்களும் அதனை மிகையாக்கவோ அல்லது பொருத்தமற்றதாக ஆக்கவோ முடியாது. அதாவது, மனித விமர்சனத்தைப் புனித நூற்களின் கருத்துக்களில் பிரயோகிக்க முடியாது. எனவேதான், விமர்சனத்தை ஏற்படுத்தும் மற்றும் மாற்றங்களை சகித்துக் கொள்ளும் இடத்தில் இவ்வணுகுமுறையானது பின்பழம் பொருளியலிலிருந்து முழுமையாக வேறுபடுகின்றது. எவ்வாறிருப்பினும், புனித நூற்களுக்குரிய விளக்கங்கள் புனிதமானவையல்ல, மற்றும் அவை இறுதியானவையோ, தவறற்றவையுமோ அல்ல. எனினும், இவ்விளக்கங்களையும் பின்பற்றியே இஸ்லாமிய அறிஞர்களால் இஸ்லாமிய பொருளியலின் முறையியல் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது, இஸ்லாமிய பொருளியல் ஆரம்பமாக தொகுத்தறியும் முறையையே பின்பற்றுகின்றது. அது, பகுத்தறிவு மற்றும்

சோதனைவழி ஆதாரங்கள் ஆகிய இரட்டைத் தகுதிவிதிகளைக் கொண்டே எடுகோள்களையும், அதேபோல் எதிர்வுகூறல்களையும் (அதன் உண்மை மற்றும் பொய்மை குறித்து) பரீட்சிக்கின்றது. பின்பழம் பொருளியலில் ஆராய்ந்தறியும் முறையே பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதுண்டு. மேலும் இவர்கள், நாம் அறிந்துவைத்துள்ள பொருளியலாளர்களின் எடுகோள்கள் எப்போதும் உண்மையாக இருக்க வேண்டிய தேவை இல்லையென்றும், உண்மையான பரீட்சிப்பு என்பது எதிர்வுகூறல்கள் பொய்ப்பிக்கப்படாமையேயாகும் என்றும் கூறுகின்றனர். சுயவிருப்பு, பகுத்தறிவு, பூரண முன்னறிவு, மனிதனிடம் காணப்படுகின்ற எது அவனுக்குச் சிறந்தது என்பதை அறியும் இயலுமை (பகுத்தறிவு) ஆகிய அடிப்படைகள் பொருளியலாளர்கள் ஆராய்ந்தறியும் முறையைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கின்றது. இஸ்லாமிய பொருளியல், இவ்விவகாரங்களில் வித்தியாசமான ஒரு நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. இதனால், அது முன்னால் ஆரம்பத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டவற்றுடன் தொகுத்தறிதல் மற்றும் ஆராய்ந்தறிதல் முறையின் ஒரு சேர்க்கையையே நடைமுறைப்படுத்துகின்றது.

மூன்றாவதாக, இஸ்லாமிய பொருளியல் நீதி, நன்மை செய்ய விரும்புதல், நடுநிலை பேணல், தியாகம் புரிதல், ஏனையோரைப் பராமரித்தல் போன்ற ஒழுக்க விழுமியங்களைத் தனது ஆய்விற்குள் நடத்தைப் பரிமாணங்களாகக் கட்டியெழுப்புகின்றது. மேலும், பொருளியலானது பெறுமான மதிப்பீட்டை நீளமான ஒன்றாக உள்ளடக்க வேண்டும் எனக் கூறுகின்றது. அதாவது, பின்பழம் பொருளியலில் நடுநிலை வாதமானது பெறுமான மதிப்பீட்டிலிருந்து தப்பிக்க முடியாது எனக் கருதும் அதே வேளை, பொருளியலாளர்கள் பொய்ப்பிக்கும் கருதுகோள்களையும் உருவாக்க வேண்டும் என்கின்றது. கருதுகோள் சோதனையின் செயன்முறையில் தனிநபர், சமூக, அரசியல் கெடுதிகள் மற்றும் பெறுமான மதிப்பீடுகள் விலக்கப்பட வேண்டும். ஆகவே, பின்பழம் பொருளியலில் பொய்களே முன்னேற்றத்துக்கான

பாதைகளாகும். இஸ்லாத்தின் ஒழுக்க விழுமியங்கள் பொருளா தார கோட்பாடுகளின் ஒரு பகுதியாகத் தொடர்ந்திருக்கும் என்பதோடு, அவை எந்த கருதுகோள் சோதனையாலும் பொய்ப் பிக்கப்பட முடியாது. ஒரு கோட்பாடானது இஸ்லாத்தின் எந்த வொரு ஒழுக்க நியமத்தையும் உள்ளடக்குவதாகவோ அல்லது அவற்றை மறுப்பதாகவோ அல்லது எதிர்வுகூறலுக்கு இட்டுச் செல்வதாகவோ இல்லை. பின்பழம் பொருளியல் அவ்வொழுக்க நியமங்களைத் தோற்கடிப்பதனால் அல்லது பலவீனப்படுத்து வதனால் எந்தவொரு சோதனைவழி ஆதாரங்களும் இல்லாமல் தானாகவே தன்னை நிராகரித்துக்கொள்கின்றது.

நான்காவதாக, இஸ்லாமிய பொருளியலானது ஒரு நியம பாடவிதானமாகும். அது, இருக்கின்ற பொருளாதாரங்களை உண் மையான இஸ்லாமிய பொருளாதாரங்களாக மாற்றுவதற்குத் தேவையான வழிகள் மற்றும் சாதனங்களைப் பற்றி ஆராய் கின்றது. மறுபுறம், பின்பழம் பொருளியலானது முழுமையாக இல்லாவிட்டாலும், எப்போதும் விழிப்பாக இருக்கக்கூடிய பொருளாதார நிகழ்ச்சிகளைப் பற்றிக் கற்கும் ஒரு நேர் விஞ் ஞானமாகக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், இஸ்லா மிய பொருளியலே பொருளாதார யதார்த்தத்தை மாற்றிய மைப்பதில் அதிக ஆர்வமுடையது. அது, இதுவரை வழிகாட்டிச் செல்லப்படாத ஓர் உலகுடன் தொடர்புபட்டது. இதனால், இஸ்லாமிய பொருளாதார கோட்பாடுகளின் உண்மையான பரீட்சிப்பானது ஒரு இஸ்லாமிய பொருளாதாரம் அதற்குள் உள் வரும் வரை காத்திருக்கும். எவ்வாறெனினும், இஸ்லாமிய பொருளாதாரங்கள் அதனுடைய நிலைமாற்ற பாதை பற்றிக் கவனமெடுக்கின்றது. அதனுடைய நிலைமாற்ற கோட்பாடுகள், நிலைமாற்றச் செயன்முறையை வழங்கும் யதார்த்த உலகிலேயே பரீட்சிக்கப்பட முடியும்.

ஐந்தாவதாக, இஸ்லாமிய பொருளியல் கேட்கும் கேள்விகள், பின்பழம் பொருளியலால் கேட்கப்படும் கேள்விகளிலிருந்து வித்தியாசமானவை. அது, ஒரு சமூகத்தில் ஃபலாஹை

உச்சப்படுத்துவதற்குரிய சமூக மற்றும் நிறுவன ரீதியான நிபந் தனைகளை உருவாக்குவதுடன், மனித ஃபலாஹைப் பற்றியே கவனமெடுக்கின்றது. மறைமுகமாக, அது ஃபலாஹின் உச்சப் படுத்தலுக்கு பங்காற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களைப் பின்தொடர்வதைப் பற்றியே குறிப்பிடுகின்றது. இம்முறையில் ஃபலாஹானது, ஓர் ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தலுக்கான தகுதிவிதியாக உரு வெடுக்கின்றது. பின்பழம் பொருளியலில் அத்தகைய தகுதிவிதி கள் இல்லை என்பதை ஐயத்திற்கிடமின்றி கூறலாம். ஆகவே, அது 'ஆய்வின் பொருட்டு ஆய்வு' அல்லது 'அறிவின் பொருட்டு அறிவு' என்றே பின்தொடர்ந்து செல்கின்றது. இஸ்லாமிய பொருளியலில், அனைத்து அறிவுமே ஒரே நோக்கத்தையே கொண்டுள்ளது. அந்நோக்கம், இஸ்லாத்தின் ஒட்டுமொத்த உலகப் பார்வையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## 4. தொடர்புடைய சில விவகாரங்கள்

இப்பகுதியில் நாம் இஸ்லாமிய பொருளியல் மன்றங்களில் அடிக்கடி கலந்துரையாடலுக்காக விடப்படும் இதனுடன் தொடர் புடைய சில விவகாரங்களைப் பற்றிப் பார்ப்போம்.

### 4.1 வஹியின் வகிபாகம்

இஸ்லாமிய முறையியலின் பொதுத் தத்துவமானது, எந்த வொரு விவகாரத்தின் வழிகாட்டலுக்காகவென்றாலும் வேறெந்த குறிப்புக்களையும் நோக்குமுன் முதலாவதாக அல்-குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களது ஸுன்னாஹ்வையே நோக்கிப் பார்க்க வேண்டும் எனக் கூறுகின்றது. ஏனெனில், இவையிரண் டுமே முறையே ஓதிக் காண்பிக்கப்பட்ட மற்றும் ஓதிக் காண்பிக் கப்படாத வஹியாக உள்ளன. ஆனால், இம்மூலங்களிலிருந்து நாம் விடயங்களைப் பெற்றுக்கொள்வதில் ஒரு வரையறையும் காணப்படுகின்றது. பொருளியல் உள்ளடங்கலாக விஞ்ஞான ரீதி யான பாடவிதானங்கள் கையாள்வதைப் போல அல்-குர்ஆனும்

நபி (ஸல்) அவர்களது ஸுன்னாஹ்வும் இவ்விவகாரங்களைக் கையாளவில்லை. அவை, பரந்த மற்றும் பொதுவான தத்துவங் களை உள்ளடக்கியிருப்பதோடு, ஓர் அடிப்படை வரைசட்டத் தையும் வழங்குகின்றன. ஒவ்வொரு காலத்திலும் அதன் விளக் கங்கள் குறித்து மக்கள் தாமாகவே முயற்சித்துக் கொண்டிருக் கின்றார்கள். ஆனால், முஸ்லிம் பொருளியலாளர்கள் அல்-குர் ஆன் வசனங்களுக்குரிய அர்த்தத்தை விளங்குவதற்குத் தற்செய லாகவே ஊக்கமெடுத்தாலும், அவை பெரியளவில் அல்-குர் ஆனில் தேடப்பட வேண்டிய தேவை காணப்படாதவையாகவே இருந்தன. ஏனெனில், அவை பொது அறிவு மற்றும் அவதானிப் பால் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களாகவே இருந்தமையாகும்.

அதாவது, ஓர் உண்மையானது அவதானிப்பால் அல்லது பகுத் தறிவால் உறுதிப்படுத்தப்பட்டதாகவும், பார்க்கக் கூடியதாகவும் இருக்குமென்றால், அதற்காக அல்-குர்ஆன் அல்லது ஸுன்னாஹ் விலிருந்து ஓர் ஆதாரத்தைத் தேடுவது அவசியமற்றதாக இருக்கும். அது, ஊழியர்களின் விவரிப்புக்களாலேயே நிலைநாட்டப்பட வேண்டியுள்ளது. உதாரணமாக, நன்கு கவனிக்கப்பட்ட ஓர் ஊழி யர், அலட்சியமாகப் புறக்கணிக்கப்பட்ட ஓர் ஊழியரை விட அதிக உற்பத்தித்திறன் உடையவராக இருப்பார் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு யாரும் அல்-குர்ஆன் அல்லது ஸுன்னாஹ்வில் ஆதாரம் தேடத் தேவையில்லை. ஆனால், மக்களில் சிலர் அல்-குர்ஆன் வசனங்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களது ஸுன்னாஹ் போன்ற இஸ்லாமிய கருத்துக்களை தேவையில்லாமல் இத்தகைய கருத்துக்களையுடைய விடயங்களிலும் இழுத்துப் பெரிதுபடுத்த முயற்சித்ததோடு, இவ்விடயத்தை நிரூபிப்பதற்கு ஆரம்பகால இஸ்லாமிய யுகத்தில் காணப்பட்ட அடிமைகளோடு தொடர் புடைய தொழிலாளர்களின் விவரிப்புகளையும் இதனுள் சிறிதளவு உள்ளடக்கியுள்ளனர்.

மேலும், நாம் இங்கு 'இஸ்லாமிய' மற்றும் 'இஸ்லாமிய வரை சட்டம்' என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைத் தெளிவாக அடையாளம் காண முடியாதவாறு ஏற்பட்டுள்ள குழப்பத்தைப்

பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. 'இஸ்லாமிய' என்பதனால் நாம் கருதுவது அல்லாஹ்வால் அருளப்பட்ட அல் லது நபி (ஸல்) அவர்களால் வலியுறுத்தப்பட்ட புனிதமான விடயங்களாகும். 'இஸ்லாமிய' என்று உணரப்படும் எதுவும் மாற்றப்பட முடியாததாகும். ஆனால் மக்களில் சிலர், மனிதர் களால் முன்வைக்கப்பட்ட சில எண்ணக்கருக்களுடன் 'இஸ்லா மிய' என்ற அடைமொழியை சேர்த்துள்ளனர். இஸ்லாமிய இலாபம், இஸ்லாமிய வங்கி, இஸ்லாமிய வியாபாரம் போன்றன அவற்றுள் சிலவாகும். சிலவேளை, 'இஸ்லாமிய' என்ற அடை மொழி சேர்க்கப்பட்டிருக்காவிட்டாலும், அக்கலந்துரையாடல் குறிப்பிடும் விடயம் அல்லது அந்நிறுவனம் இயங்கும் விதம் இஸ்லாத்தின் புனிதத்துவத்தை உள்ளடக்கியதாக இருக்கும் நிலையும் காணப்படுகின்றது. எனவே, இது தொடர்பில் தெளிவு பெற வேண்டிய தேவையுள்ளது. இதனால், 'இஸ்லாமிய வரைச ட்டம்' என்பதற்குள்ளிருந்து குறிப்பிடப்படும் அனைத்துமே நிரந்தரமான ஏற்புடைய 'இஸ்லாமிய' என்பதற்குள் வரத்தேவை யில்லை. ஏனெனில், 'இஸ்லாமிய வரைசட்டம்' மனித சிந்தனை யின் ஓர் உற்பத்தி என்பதோடு, பரீட்சிப்புக்காகவும் திறந்து விடப்பட்டுள்ளது.

## 4.2 ஓர் இலட்சிய இஸ்லாமிய சமூகத்தின் எடுகோள்

இஸ்லாமிய பொருளியல் தொடர்பான அநேக நூற்கள் ஓர் இலட்சிய இஸ்லாமிய சமூகத்தையே கருதுகின்றன. அது தற் போது எங்கும் காணப்படாததோடு, அது அண்மையில் தோன்று வதற்கான சாத்தியப்பாடுகள் கூட உறுதியாக இல்லை. இந் நிலையில், முஸ்லிம் பொருளியலாளர்கள் இவ்வெடுகோளை தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுகின்றது. இலட்சிய இஸ்லாமிய சமூகத்தின் எடுகோளானது ஓர் ஆய்வுக் கருவியாகும். அது 'இலட்சிய' மற்றும் 'உண்மையான' தோற்றப் பாடுகளுக்கிடையிலான ஒன்றிலொன்று தங்கியிருக்கும் உற வையே விளக்குகின்றது. இவ்வரைசட்டத்திலுள்ள கோட்பாடு கள், எவ்வாறு இரு தோற்றப்பாடுகளுமே ஒன்றுடன் ஒன்று

தொடர்புடையது என்பதை விளக்குவதோடு, இவ்வுறவில் இடையூறை ஏற்படுத்தும் காரணிகள் எவை என்பது பற்றியும் விளக்குகின்றது. எனவே, இங்கு இது ஒரு வீரியமுள்ள கருவி யாகவே உள்ளது.

ஆனால், முஸ்லிம் பொருளியலாளர்கள் இலட்சிய இஸ்லா மிய சமூகமானது சாத்தியமான எல்லைக்குள்ளே இருக்கும் ஒரு விசேட நிலை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஓர் இலட் சிய இஸ்லாமிய சமூகம், அதன் இலட்சியம் அடையப்படும் வரை தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். அதேநேரம், உண்மை யான இஸ்லாமிய சமூகத்தின் உறுதியான சமூக யதார்த்தங் களைப் பற்றியும் கற்க வேண்டியது அவசியமாகும். சில புதி யனவற்றில் நாட்டம் கொள்வதைக் கொண்டு மட்டுமே முஸ்லிம் பொருளியலாளர்கள் அடைந்து வரும் மகிழ்ச்சியை இது இல் லாமலாக்குகின்றது.

முஸ்லிம் பொருளியலாளர்களின் இந்த இலட்சிய வாதமானது, இஸ்லாமிய பொருளியல் பரப்பிற்குச் சில தீங்குகளையும் கூட செய்துள்ளதெனலாம். ஏனெனில், அதிகம் அஞ்சத்தக்க பிரச்சி னைகளான வேலையின்மை, பணவீக்கம் மற்றும் வர்த்தக சக டோட்டம் போன்றவை இலட்சிய இஸ்லாமிய சமூக நிபந்த னைகளில் காணப்படுவதில்லை என ஆய்வு கருதுகின்றது. இன்னும், இலட்சிய இஸ்லாமிய பொருளாதாரத்தில் அப்பிரச்சி னைகள் காணப்படாததால் முஸ்லிம் பொருளியலாளர்கள் அவற்றைத் தீவிரமாகக் கற்கத் தேவையில்லை எனும் எண்ணப் போக்கையும் இது ஏற்படுத்தியுள்ளது. ஆனால், எமது பார்வையில் இது மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட ஓர் அணுகுமுறையாகும். இப்பிரச்சினைகள் உண்மையான வாழ்க்கை விவகாரங்களாக இருப்பதோடு, அது ஓர் இலட்சிய இஸ்லாமிய பொருளாதாரத் தில் தோன்றவே முடியாது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. முஸ்லிம்கள், இலட்சிய சமூகம் எதிர்பார்த்தவாறே நடந்து கொள்ளாத போது அப்பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதோடு, அதன் மூலம் வேறு பல பிரச்சினைகள்

தோன்றுவதற்கும் அது காரணமாகின்றது. இதனால், முஸ்லிம் பொருளியலாளர்கள் யதார்த்தத்துக்கு முகம் கொடுக்க வேண்டு மென்பதோடு, உண்மையான பிரச்சினைகளைப் பற்றி கலந்துரை யாடித் தீர்வு பெற வேண்டும்.

## 4.3 இஸ்லாமிய பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாடு


இஸ்லாமிய பொருளியலில், இஸ்லாமிய பொருளாதாரத் திற்கேற்ற ஒரு பொதுக்கோட்பாடு காணப்படுவதில்லை எனப் பலபோது விமர்சிக்கப்பட்டது. இவ்விமர்சனம் நேர்மையானதா? பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாடானது உண்மையான வாழ்க்கை நிலைமைகளைக் கற்பதிலிருந்தே உருவாக முடியும். நாம் முன்னர் கலந்துரையாடியது போல கோட்பாடென்பது ஒரு சிக்கலான யதார்த்தத்தின் சுருக்கமாகும். அது உண்மையான வாழ்விலுள்ள மாறிகளின் நடத்தையினை விளக்கவும், ஆராயவும் மற்றும் எதிர்வுகூறவும் உதவுகின்றது. ஆனால், உலகில் எங்குமே அத்தகைய ஓர் இஸ்லாமிய சமூகம் இல்லை என்பதைப் பொது வாக ஏற்கின்றது. இல்லாத ஒரு சமூகத்தை எவ்வாறு ஒரு பொதுக் கோட்பாடு அபிவிருத்தி செய்ய முடியும்? இது, இஸ்லாமிய பொருளியல் இன்று பொருளாதார விவகாரங்கள் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டை ஏன் குறைவாகவே தெளிவுபடுத்த முடியுமாயுள்ளது என்பதற்கான சரியான காரணமாகும்.

இந்நிலைமையில், இஸ்லாமிய பொருளாதாரத்தின் ஒரு பொதுக் கோட்பாட்டுக்கான கேள்வி நியாயமற்றதாகவே கருதப் படுகின்றது. முஸ்லிம் பொருளியலாளர்கள், இஸ்லாமிய பொரு ளாதாரத்துக்குரிய நிலைமாற்றத்துக்கான ஒரு பொதுக் கோட் பாட்டை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றனர். ஆனால், நிலை மாற்றத்துக்கான ஒரு கோட்பாடென்பது சிக்கலான விடயமாகும். ஏனெனில், உலக பொருளாதாரங்கள் தமது நிதிவளம், பெறுமதி முறைமை மற்றும் சமூக உட்கட்டுமானங்கள் என்பவற்றில் பரந்த வேறுபாட்டைக் கொண்டுள்ளன. இதன் விளைவாக, எந்தவொரு மாற்றத்துக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடு

காணப்படுவதில்லை. பல்வேறுபட்ட நாடுகளிலுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் வேறுபட்ட கருத்துக்களை ஆதரித்துப் பேசுவதோடு, மாற்றத்துக்கு அதிகம் பொருத்தமான பாதை தொடர்பில் பரந்த வாதப்பிரதிவாதங்களைக் கொண்டுள்ளன. எமது கருத்துப்படி, இஸ்லாமிய மயப்படுத்தலுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதையொன்றின் எழுச்சியானது வேறுபட்ட பாடவிதானங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அறிஞர்களின் ஒன்று சேர்ந்த முயற்சியையே வேண்டி நிற்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் பொருளியலாளர்களின் பங்கு என்ன? அவர்கள் அத்தகைய மாற்றத்துக்கான ஒரு கோட்பாடு உருவாகும் வரையில் பொருத்தமான அந்த நேரத்துக்காகக் காத்துக்கொண்டும், அது வரை பின் தங்கிக் கொண்டுமே இருக்கப் போகின்றனரா? உண்மையில், முஸ்லிம் பொருளியலாளர்களிடம் முதற்கட்ட விடயங்களையும் தாண்டி, கடினமான விடயங்களைத் தொடங்குவதற்குரிய இயலுமை மட்டுமன்றி பொறுப்பும் காணப்படுகின்றது.

இஸ்லாமிய பொருளாதாரத்துக்கான ஒரு நிலைமாற்றக் கோட்பாடானது இஸ்லாமிய பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாட்டை விடக் குறைந்ததோடு, இது நடைமுறையில் ஆய்வு முறையியல் மற்றும் கலந்துரையாடல் மட்டத்திலிருந்து உருவாக முடியாது என நாம் நம்புகின்றோம். நிலைமாற்றக் கோட்பாட்டுக்கான கட்டத்தை அமைப்பதற்கான முதற்படியாக, பொருத்தமான முறையில் ஆய்வு செய்ய வேண்டும். அதன் தொடக்கமானது பின்வரும் திசையில் உருவாக முடியும். (கீழ்வரும் வரைபடம் 2 விடயங்களை விளக்குகின்றது):

### *வரைபடம் 2: இஸ்லாமிய பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாடு*




i. *முஸ்லிம் நாடுகள், இஸ்லாமிய பொருளாதார கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதோடு, ஏனைய நாடுகளிலும் கூட இதனை காலத்தை மேலும் விரயமாக்காது விரைவாக ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பமாக, முஸ்லிம் நாடுகளில் நிலவும் உண்மையான வாழ்க்கையின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை ஆராய்வதன் மூலம் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாய்வுக் கருத்திட்டங்கள் பிரதான திட்டத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நிலைமைகளுக்கும் யதார்த்தத்தில் இஸ்லாத்தின் கொள்கைகளில் தீவிர பற்றற்ற நிலை காணப்படுவதற்கும் இடையில் ஓர் உறவு*

காணப்பட வேண்டுமென்பதே இக்கற்கைகளின் நோக்கமாக உள்ளது. அபிவிருத்திப் பொருளியலாளர்கள், முஸ்லிம் நாடுகள் உள்ளடங்கலாக மூன்றாம் உலக நாடுகளின் உண்மையான வாழ்க்கை நிலைமைகள் பற்றி நிறைய ஆய்வுகளைச் செய்துள்ள னர். எவ்வாறாயினும், அவர்களது முயற்சி போதாது. விரிவாகக் கூறின், அவற்றுள் சில, இன்றைய நடைமுறைச் சூழலுக்குப் பொருத்தமற்றவையாகவும் உள்ளன. இவ்வாய்வுகள் போதியள வில் காணப்படாமைக்குக் காரணம், அவை இஸ்லாமிய வரை சட்டத்துக்குள் மேற்கொள்ளப்படாமையேயாகும். மாறாக, அவை மதச்சார்பற்ற வரைசட்டத்துடன் தொடர்புடையதாகவே காணப் படுகின்றன. அவை பொருத்தமற்றிருப்பதற்கான காரணம், அவை தமது நோக்கத்துக்குப் பொருத்தமற்றிருக்கும் பின்பழம் பொரு ளியல் கருவிகளையே பயன்படுத்துகின்றமையாகும். இதனால், இவ்வாய்வுக் கருத்திட்டங்களின் அத்தகைய சில வடிவமைப் புக்களை, முஸ்லிம் நாடுகளின் உண்மையான வாழ்க்கை நிலைமைகள் பற்றிய ஒரு சிறந்த விழிப்புணர்வுக்கு இட்டுச்செ ல்லக்கூடிய வகையில் உருவாக்க வேண்டும்.

ii. ஆய்வுக் கருத்திட்டங்களின் மற்றொரு தொடரானது, முஸ் லிம் நாடுகளின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளை இஸ் லாத்தின் பார்வையில் விமர்சன ரீதியாகப் பரீட்சிக்கின்றது. இது, இஸ்லாமிய பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்திற்கான செயன் முறை மீதுள்ள அந்தக் கொள்கைகளின் தாக்கத்திற்கு மேலும் வலிமையை வழங்குகின்றது.

iii. சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிறுவனங்கள் பற்றியும் பொருளாதார நிலைமைகள் மீதான அவற்றின் தாக்கம் பற்றியும் பரீட்சிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதன் பின்னர், மீண்டுமொரு முறை இஸ்லாத்தின் பார்வையிலும் அதனை விமர்சன ரீதியாகப் பரீட்சிக்குமாறு கூறுகின்றது.

iv. முஸ்லிம் மக்களின் நடத்தைக் கோலம் பற்றிய பரந்த கற் கைகள் மற்றும் அதன் மூலம் இஸ்லாத்தின் போதனைகளுக்கு அவர்களால் இயன்ற பங்களிப்புகள் என்பவற்றை உருவாக்க

வேண்டிய தேவையுள்ளது. இது இஸ்லாமிய பொருளியலை நோக்கிய கற்பனையான அணுகுமுறையைத் திருத்தியமைக்க உதவும்.

அடிப்படை ஆய்வானது இம்முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதோடு, பரந்த மற்றும் இணைப்புடையதாகக் கருதப்படும் இத்திட்டமானது இருக்கின்ற நிலைமையினை மிகச் சிறந்த முறையில் விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது. இவ்வாய்வானது எண்ணக்கரு ரீதியான தன்மையை மட்டும் கொண்டிருக்கக் கூடாது. அது கள வேலைகளிலும் ஈடுபட்டாக வேண்டிய தேவையுள்ளது. ஆகவே, முஸ்லிம்கள் உள்ளடங்கலாக உலகில் வாழுகின்ற முழு மனித இனத்தினதும் உண்மையான நிலைமைகளை ஆய்வாளர்கள் விளங்கிக் கொள்வதற்கு உதவி புரியும் வகையில் நவீன நிறுவனங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பம் என்பன முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இருக்கின்ற நிலைமைகள் பற்றிய நல்லதொரு விழிப்புணர்வானது மாற்றத்துக்கான எந்தவொரு பொதுக் கோட்பாட்டையும் விருத்தி செய்வதற்கு அவசியமாகும். இவ்விழிப்புணர்வானது வெறுமனே எண்ணக்கருக்களின் செயற்பாடுகளால் மட்டுமே வந்துவிடாது. மாறாக, முஸ்லிம் பொருளியலாளர்கள் அடிப்படை யதார்த்தங்களைத் தேடிச் செல்ல வேண்டும்.

இஸ்லாமிய பொருளாதாரத்துக்குரிய பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு ‘நிலைமாற்றக் கோட்பாடானது’, இஸ்லாமிய பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாட்டுக்கான ஒரு முன் நிபந்தனையாகும். இஸ்லாமிய பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாடானது, எப்போது இஸ்லாமிய பொருளாதாரம் நடைமுறைக்கு வருமோ அப்போது அதன் விளக்கமாகவும் ஆய்வாகவும் அமையும். ஆனால், இல்லாத ஒரு பொருளாதாரத்தின் பொதுக் கோட்பாட்டுக்கான கேள்வியானது சாத்தியமற்றது. அத்தகைய ஒரு கோட்பாட்டை உருவாக்குவதற்கான முயற்சி முஸ்லிம் அறிஞர்களின் ஒரு பகுதியினரது புலமைசார் செயற்பாடுகளை அதிகரிப்பதை விட வேறெதையும் செய்துவிடுவதில்லை.

## 5. முடிவான சில கருத்துக்கள்

இந்த யுகத்தில் பெரும்பாலானோர், குறிப்பாக முஸ்லிம் சமுதாயம் வேலையின்மை, பணவீக்கம், சமமற்ற வருமானப் பங்கீடு, வறுமை, சென்மதி நிலுவை பிரச்சினைகள், கடன் சுமை மற்றும் பலம் வாய்ந்த நாடுகளால் பலவீனமான நாடுகள் சுரண் டப்படுதல் போன்ற தீர்வுகாண முடியாமல் தொடர்ந்து கொண்டே யிருக்கும் பொருளாதார பிரச்சினைகளால் துன்பப்பட்டுக் கொண் டிருக்கின்றன. இப்பிரச்சினைகள் இஸ்லாமிய பொருளியலுக்கு முக்கிய சவாலாக உள்ளன. இஸ்லாமிய பொருளியல், இப்பிரச் சினைகளுக்கு எந்த விசாரணை முறையைப் பின்பற்றியேனும் சாத்தியமான தீர்வுகளை முன்வைக்க முடியுமானால் அது உல கால் அங்கீகரிக்கப்படும். இதனால், இறுதியாய்வில் விசாரணை முறை பிரதானமானதல்ல. இஸ்லாமிய பொருளியல், பொருளா தார முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்தை அடைவதற்கு பங்காற்று வதே முக்கியமானதாகும். இஸ்லாமிய பொருளியல் எந்தவொரு முறையினுள்ளும் சிறைப்படத் தேவையில்லை. அது, இஸ்லா த்தின் அடிப்படை வரைசட்டத்துக்குள் எஞ்சியிருக்கும் அனைத்து முறைகளையும் திறந்து விட வேண்டும் என்பதோடு, அறிவு மற்றும் சோதனைவழி ஏற்புடைமை ஆகிய இரட்டைத் தகுதி விதிகளையும் திருப்திப்படுத்தியாக வேண்டும்.

இஸ்லாமிய பொருளியலானது, முஸ்லிம்களைப் போல் முஸ் லிமல்லாதோரும் பரீட்சிப்பதற்கு திறந்து விடப்பட்டுள்ளது. அது, இறுதியாக தனது ஆதாரங்களின் நிறையளவு மற்றும் ஆய்வுகளின் கடுமை என்பவற்றைக் கொண்டு தன் மதிப்பை நிலைநாட்டும். இதனால், முஸ்லிம் பொருளியலாளர்கள் இலட்சிய இஸ்லாமிய சமூகத்தின் அவாவிலிருந்து வெளியில் வர வேண்டும். அவர்கள், இஸ்லாத்தின் கடந்துபோன புகழை வெறுமனே மீள கணக்கிட் டுக் கொண்டிருப்பதை விட இன்றைய பிரச்சினைகளை ஆராய் வதற்கும் அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்கும் அதிக கவனம் செலுத்தவேண்டும். இது, இஸ்லாமிய பொருளியல் வரலாற்று

ரீதியான பார்வையை ஒதுக்கித் தள்ளுகின்றது என்பது அர்த்த மல்ல. இவ்வரலாற்றுத் தரவுகளைக் கொண்டு கடந்தகால புகழைப் பற்றி மகிழ்ச்சியடைந்து கொண்டிருப்பதை விட நிகழ்கால விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பதே இதன் எதிர்பார்ப்பாகும்.

ஓர் இலட்சிய இஸ்லாமிய சமூகம் என்ற எடுகோளானது அடையப்பட வேண்டிய இலக்காக தொடர்ந்து பேணப்பட வேண்டும். முஸ்லிம் பொருளியலாளர்களின் பிரதான தொழில் எவ்வாறிருப்பினும், இன்றைய சமூகத்தில் இஸ்லாமிய தத்துவங் களின் பிரயோகம் பற்றிய ஓர் ஆய்வை அவர்களால் முன்வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இது ஒரு 'நிலைமாற்ற கோட் பாட்டை' மட்டும் உருவாக்கிவிடுவதில்லை; இந்நிலைமாற்ற கோட்பாடு இன்று தவறவிடப்பட்டிருந்தாலும், இஸ்லாமிய பொருளாதார முறைமை பற்றி அக்கறையற்ற பார்வையாளர்கள் தீவிரமாக சிந்திப்பதற்கேனும் வழிகோலும் என நம்பப்படு கின்றது.

அத்தியாயம்

04

# நடைமுறையில் இஸ்லாமிய பொருளியல்

இவ்வத்தியாயத்தில் நாம் இன்றுள்ள இஸ்லாமிய வங்கிகள், ஸகாத், காப்புறுதி, வக்ஃப் மற்றும் ஹிஸ்பாஹ் போன்ற சில இஸ்லாமிய பொருளியல் நிறுவனங்களைப் பற்றி சுருக்கமாக விளக்க முனைகின்றோம். இதன்போது இந்நிறுவனங்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளையும், சவால்களையும் குறிப் பிடவுள்ளோம். இஸ்லாமிய பொருளியல் சிந்தனைகளை யதார்த்த உண்மைகளாக மாற்றுவதற்கும் அவர்களது எதிர்கால அபிவி ருத்தியின் திசையை எதிர்வு கூறுவதற்கும் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முக்கியப்படுத்திக் காட்டுவதே இதன் குறிக்கோளாகும்.

## *1.* இஸ்லாமிய வங்கிகள்

இஸ்லாமிய பொருளியலின் நடைமுறைகள் எங்குமே காணப் படாத போதும் நடைமுறைத் தேவைகளுக்காக இஸ்லாமிய வங்கியியலின் கோட்பாட்டுக்கேனும் முன்னுரிமையளித்து நடைமுறைப்படுத்த முடியும். ஏனெனில், இஸ்லாம் வட்டியை முழுமையாகத் தடைசெய்துள்ளதோடு, பொருளாதாரத்தை இஸ் லாமிய மயப்படுத்துவதென்பது வட்டியில்லா வங்கிகளை

நிலைநாட்டுவதற்கான வழிமுறைகள் மற்றும் ஆராய்ச்சிகளை நோக்கியே ஆரம்பிக்கப்படுகின்றன.

1950களிலும், 1960களிலும் வட்டியில்லா வங்கிகளை நிலை நிறுத்துவதற்காகப் பல கோட்பாட்டு ரீதியான கற்கைகள் உரு வாக்கப்பட்டன. ஆனால், முஸ்லிம் நாடுகளுக்கு வட்டியில்லா நிதியினை வழங்குவதனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இஸ் லாமிய மாநாடுகளின் ஒழுங்கமைப்புப் பட்டயத்தின் கீழ் இயங் கும் வகையில் ஜித்தாவில் இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்ட காலமான 1970களின் நடுப்பகுதி வரை இஸ் லாமிய வங்கியியலின் உண்மையான அமுலாக்கத்துக்காகக் காத்திருக்க வேண்டியேற்பட்டது. (முதலாவது சர்வதேச இஸ் லாமிய பொருளியல் மாநாடும் கூட மக்காவில் 1976இலே தான் நடைபெற்றது.) அதன் பிறகு விரைவாக பல தனியார் இஸ்லாமிய வங்கிகள் எகிப்து, சூடான், குவைட், ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, சைப்ரஸ், லக்ஸம்பேர்க், டென்மார்க் போன்ற உலகின் பல்வேறு நாடுகளில் விரைவாக நிலைநாட்டப்பட்டன.

1980களின் ஆரம்பத்தில் இரு நாடுகள் அதாவது, பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகியவை அவர்களது முழு வங்கி முறைமையை யும் இஸ்லாமிய மயப்படுத்த முயற்சித்ததோடு, மூலதனம் மீதான வெளிப்படையான வட்டியுடன் தொடர்புடைய சகல கொடுக்கல் வாங்கல்களையும் தடை செய்தன. 1994இல் உலகின் பல்வேறு பட்ட பகுதிகளில் 200க்கும் மேற்பட்ட இஸ்லாமிய வங்கிகள் காணப்பட்டன. ஆனால், தற்போதும் 300ற்குள்ளேயே காணப்படு கின்றன. அதே நேரம், மலேசியாவில் மட்டும் இஸ்லாமிய வங்கி களும் நிறுவனங்களும் மொத்தமாக ஏறத்தாழ ஐம்பதாக காணப் படுகின்றன. தற்போது ஜித்தாவில் இயங்கும் இஸ்லாமிய அபி விருத்தி வங்கியானது தனியார் துறையினரின் அபிவிருத்திக்கான கூட்டுத்தாபனம் (ICD), முதலீட்டின் காப்புறுதி மற்றும் ஏற்றுமதிக் கடன் என்பவற்றுக்கான இஸ்லாமிய கூட்டுத்தாபனம் (ICIEC), ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான இஸ்லாமிய நிறுவனம் (IRTI), சர்வதேச இஸ்லாமிய வர்த்தக நிதிக் கூட்டுத்தாபனம் (ITFC),

அபிவிருத்திக்கான இஸ்லாமிய கூட்டு ஒருமைப்பாட்டு நிதியம் (ISFD), உலக வக்ஃப் அமைப்பு (WWF) என்ற ஆறு பிரதான பிரிவு களைக் கொண்டு விரிவடைந்துள்ளது.

சமமான பங்குடமை (முஷாரகா மற்றும் முழாரபா), குத்தகை (இஜாரா), குத்தகைக் கொள்வனவு (இஜாரா வ இக்தினா), செலவுச் சேர்க்கை நிதியிடல் (ஃபை முராபஹாஹ்) மற்றும் வாடகைப் பங்கீடு என்பவற்றின் அடிப்படையிலேயே இஸ்லாமிய வங்கிகள் தமது வர்த்தகத்தைக் கொண்டு நடாத்துகின்றன. இந்நிறுவனங் கள் பங்குபற்றல் தவணை சான்றிதழ்கள் (PTC), தவணை நிதிச் சான்றிதழ்கள் (TFC), முகாரதா முறிகள், குத்தகைச் சான்றிதழ்கள் போன்ற சில புதிய நிதிக்கருவிகளை உருவாக்குவதிலும் புத்தாக் கத்தைக் கொண்டிருந்தன. மிக அண்மையில் உத்தரவாதப் பத்தி ரம் (கபாலா), கடன் பத்திரம் (ஹவாலா), ஜுவாலா (வெளிநாட்டு நாணய மாற்று வர்த்தகம்) போன்ற நிதிக் கருவிகளும் உருவாக் கப்பட்டுள்ளன. இத்தகைய வளர்ச்சியால் தற்போது உலகளாவிய ரீதியில் அண்ணளவாக 100 இஸ்லாமிய பங்கு நிதியங்கள் காணப் படுகின்றன.

பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் வங்கிகளை இஸ் லாமிய மயப்படுத்திய போதும் அதன் ஆரம்பத்தில் உருவாகிய மாற்றத்தினால் ஏற்பட்ட கடுமையான அதிர்ச்சியிலிருந்து ஒரு வாறு தப்பிப் பிழைத்துக் கொண்டன. அவ்வாறே, தனியார் இஸ்லாமிய வங்கிகளும் இலாபத்திலேயே இயங்கிக் கொண்டி ருந்தன. இவ் வங்கிகள் அதிகளவான வைப்புக்களால் கவரப் பட்டதோடு, மிகைத் திரவ நிலையையும் அதிகளவில் கொண்டி ருந்தன.

மேலும், இஸ்லாமிய வங்கிகள் பொதுவாக பல சவால்களை எதிர்கொள்கின்றன. முதலாவது, குறுங்கால அடிப்படையில் தமது நிதியினை முதலிடுவதற்குரிய வட்டியற்ற பொறிமுறை யொன்றை இதுவரை வெற்றிகரமாகத் திட்டமிட முடியவில்லை. அவை அரசாங்கப் பற்றாக்குறை மற்றும் நுகர்வோர் கடன்களை

நிதியிடுவதில் ஒரே விதமான பிரச்சினைகளையே எதிர்கொள் கின்றன. இரண்டாவது, இலாபப் பகிர்வில் இடரபாயமானது உயரளவில் காணப்படுகின்றது. பெரும்பாலான வங்கிகள் அதற் காக உறுதிப்படுத்தப்பட்ட நிலையான வருவாயைப் பெறும் வகையிலான நிதியீட்டத்தையே மேற்கொண்டன. இதன் விளை வாக, இவ்வங்கிகள் வட்டியை மட்டும் அழிக்கவில்லை. மாறாக, அவர்களுடைய கொடுக்கல் வாங்கல்களின் பெயரிடும் முறை யையும் மாற்றியுள்ளனர் என பல நேர்மையான விமர்சனங்கள் காணப்படுகின்றன. மூன்றாவதாக, இஸ்லாமிய வங்கிகள் ஆரம் பத்தில் (ஈரான் மற்றும் பாகிஸ்தான் தவிர்ந்த) தமது நாட்டு மத்திய வங்கிகளிடமிருந்து எந்த சட்ட ரீதியான ஒத்துழைப்பை யும் பெறவில்லை. இது, அவ்வங்கிகள் அதிக இடரபாயத்தை தாங்கச் செய்தன.

தற்போதும் கூட மலேசியா, சவூதி அரேபியா, புரூணை, இந்தோனேஷியா போன்ற சில நாடுகளிலேயே மத்திய வங்கி களின் ஒத்துழைப்போடு இவ்வங்கிகள் விருத்தியடைந்துள்ளன. நான்காவதாக, நிதியிடத் தேவையான கருத் திட்டங்களை மதிப் பிட, கண்காணிக்க மற்றும் கணக்காய்வு செய்வதற்கென தேவைப் படும் எந்தவிதமான பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் சிறப்புத் தேர்ச்சியடைந்த மனித வளங்களையும் இந்த இஸ்லாமிய வங்கி கள் கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதித் திரவ நிலை இருந்தபோதும் இதனை விரிவுபடுத்த முடியாதிருந்தன.

இஸ்லாமிய வங்கிகளின் எதிர்காலம், அனைத்து வகையான கடன்களின் நிதியிடலுக்கும் வட்டிக்குப் பதிலாக சாத்தியமான மாற்று முறைகளை இனங்காணும் அவர்களது இயலுமை யினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவர்கள், வட்டியை ஒழிப்பதில் தமது வெற்றியை அடையாளம் காண வேண்டு மென்பதோடு, வட்டிக்கு ஒரு திருப்தியான மாற்றீட்டைப் பெறு வதற்காக அவர்களுடைய நீண்ட ஆராய்ச்சியை மேற்கொண்டாக வேண்டும். அதனோடு இணைந்த வகையில், கருத்திட்ட மதிப் பீடு, கண்காணித்தல் மற்றும் கணக்காய்வு செயலாற்றம்

என்பவற்றில் அவர்களது அலுவலக பணியாளர்களைப் பயிற்சி யளிப்பதைக் கொண்டு அவர்களது முகாமைத்துவத் திறன்களை முன்னேற்றுவதற்கான தேவை இஸ்லாமிய வங்கிகளிடம் காணப் படுகின்றன. மேலும், இஸ்லாமிய வங்கிகளின் எதிர்காலம், காலத்திற்கேற்ற மற்றும் உண்மையான தகவல்களை வழங்கும் அத்தகைய கணக்கீட்டுத் தர நிர்ணயங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலும் அபிவிருத்தி செய்வதிலுமே தங்கியுள்ளது. இது, இஸ்லாமிய வங்கிகளை செலவுச் சேர்க்கை நிதியிடலுக்காக அல்லது வாடகைப் பகிர்வு, இலாபப் பகிர்வுக்காக தேவைப் படுத்துகின்றது. அத்தகு தரநிர்ணயங்கள் இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இஸ்லாமிய வங்கிகள், நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையை நிலைநிறுத்தி தமது வாடிக்கையாளர் கள் அத்தர நிர்ணயங்களை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக அதிகம் உழைக்க வேண்டியுள்ளன.

## 2. ஸகாத்

ஸகாத் என்பது முஸ்லிம்களின் மிகையான செல்வம் மற்றும் விவசாய வருமானங்கள் அனைத்தின் மீதும் அறவிடப்படுகின்ற ஒரு கட்டாய நிதியியல் வரியாகும். இது வேறுபட்ட வீதங்களில் அறவிடப்படுகின்றது. இதனை அரசாங்கமே சேகரித்து, விநியோ கிக்க முடியும். அதன் குறிக்கோளாக அமைவது வறிய மற்றும் தேவையுடைய, குறிப்பிட்ட மக்கள் பிரிவினருக்கு நிதியியல் ஒத்துழைப்பை வழங்குவதாகும். முஸ்லிம்களின் வரலாற்றைப் பார்ப்போமானால், அனைத்து முஸ்லிம் சமூகங்களிலும் ஸகாத் நிறுவனம் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. ஆனால், கால னித்துவ ஆட்சிக் காலத்தில் மட்டும் இது புறக்கணிக்கப்பட்டுள் ளது. 2 ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் முஸ்லிம் அரசுகளின் சுதந்திரத்துடன் இந்நிறுவனத்தின் பணியும் ஆரம்பமானது. வங் காளதேசம், பாகிஸ்தான், சவூதி அரேபியா, சூடான், ஈரான், லிபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் குவைட் போன்ற சில நாடுகள் இதற்காக முறைசார் சட்டமொன்றையும் இயற்றிக்

கொண்டன. இந்நாடுகளில் அரசு அல்லது தனித்துச் செயற்படு கின்ற ஒழுங்கமைப்புக்கள் ஸகாத்தை சேகரித்துப் பங்கிட்டன.

கோட்பாட்டு ரீதியாக, ஸகாத் என்பது இல்லாதோர்க்கு உறுதி யான கொள்வனவு சக்தியை ஏற்படுத்துவதைக் கொண்டு சமூகப் பாதுகாப்பை வழங்கல், வறுமையை முழுமையாக ஒழித்தல், அதிகளவிலான பொருளாதார ஏற்றத்தாழ்வினைத் தடுத்தல் மற் றும் பொருளாதார செயற்பாட்டைத் தூண்டுதல் என்பவற்றுக் கான ஒரு பிரதான கருவியாக விளங்குகின்றது. ஆனால் நடை முறையில், எங்கெங்கு ஸகாத் அறிமுகப்படுத்தப்பட்டதோ அவ் வந்த நாடுகளிலும் ஸகாத்திலிருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட இத்த கைய வகிபங்கு நிறைவேற்றப்படவில்லை. இதற்கான பிரதான காரணம், இந்நிறுவனம் வரையறுக்கப்பட்ட அளவில் இயங்கு வதற்கான அனுமதியே காணப்பட்டமையாகும். இஸ்லாத்தின் கோட்பாட்டு ரீதியான வரைசட்டத்துக்குள்ளிருக்கும் ஒரு முக்கிய மான நிறுவனம் என்ற அந்தஸ்தினை இதற்கு இந்நாட்டு அரசாங் கங்கள் வழங்கவில்லை. மேலும், ஸகாதின் முகாமைத்துவம், தாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் குறித்து போதிய தெளிவைப் பெற்றிருக்கவில்லை; அச்செயற்பாடுகள் போதுமான அளவிலும் இருக்கவில்லை. மேலும், நிதியங்களின் ஒழுகல், ஸகாத் (வரி) மதிப்பீட்டின் குறைவான உள்ளடக்கம் மற்றும் சரியான கணக் கீடு, கண்காணிப்பு, மதிப்பீடு என்பவற்றின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் இந்நிறுவனங்களால் எதிர்கொள்ளப்பட்டன.

எவ்வாறெனினும், ஸகாதிற்கு பிரகாசமான எதிர்காலமுண்டு என்பதை உறுதியாகக் கூறமுடியும். வட்டியானது ஒட்டுமொத்த நிதியியல் முறைமைக்குள் ஆழமாக வேரூன்றிக் காணப்படும் போது வட்டியில்லா பொருளாதாரத்தை அறிமுகப்படுத்துவ தென்பது ஒரு கடினமான இலக்காகக் காணப்படும். ஆனால், இத்தகைய வட்டியில்லா ஒரு பொருளாதார முறைமையை அறி முகப்படுத்தும் இலக்கைப் போலல்லாமல் ஸகாத் நிறுவனத்தின் வினைத்திறனான செயன்முறையினால் அது அதிகம் முகாமை செய்யப்படக்கூடிய இலக்காகவேயுள்ளது. அது இருக்கின்ற

பொருளாதார முறைமையை இடித்துத் தகர்த்து விட்டுத்தான் நடைபெற வேண்டுமென்ற எந்தத் தேவையுமில்லை. அது முஸ்லிம் மக்களுக்காக ஆர்வத்துடன் செயற்படும் ஒரு சக்தி வாய்ந்த நிறுவனம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை மட்டுமே கோருகின்றது. இதனால், ஸகாதின் எதிர்காலம் ஆர்வ முடைய முஸ்லிம் அரசுகள் இதனை நிலைநாட்டுவதிலும் செயற்படுத்தும் விதத்திலுமே தங்கியுள்ளது.

## 3. காப்புறுதி

சமகால காப்புறுதி வியாபாரமானது, இஸ்லாமிய தத்துவங் களுடன் அதன் ஒத்துப்போகாத விதம் பற்றி பரவலாக விமர்சிக் கப்படுகின்றது. காப்புறுதியை மேற்கொண்டுள்ள அனைவரும் ஏனையோரின் நட்டத்தை இழப்பீடு செய்வதற்காகப் பங்காற்றக் கூடிய பரஸ்பர காப்புறுதியே இஸ்லாத்துக்கு மிக நெருக்கமான தாகக் காணப்படும்.

துரதிஷ்டவசமாக, முஸ்லிம் அரசுகள் இஸ்லாமிய மயப்படுத் தப்பட்ட காப்புறுதி வியாபாரத்துக்கு அதிக ஆர்வத்தைக் காட்டு வதில்லை. ஆனால், தார் அல்-மால் அல்-இஸ்லாமி, இஸ்லாமிய வங்கிகளின் பைஸல் குழு மற்றும் இஸ்லாமிய வங்கிகளின் அல்-பரகாஹ் குழு போன்ற சில இஸ்லாமிய வங்கிகள், இஸ்லா மிய தத்துவங்களின் அடிப்படையில் இயங்குகின்ற இஸ்லாமிய கூட்டு ஒருமைப்பாட்டு கம்பனிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இன்று ஏறத்தாழ 190 நாடுகளில் இஸ்லாமிய காப்புறுதி நிறுவ னங்கள் காணப்படுகின்றன. ஆனால், அவர்களது செயற்பாடுகள் இத்துறையில் ஒரு காத்திரமான விளைவை ஏற்படுத்துவதற்கேற்ற வகையில் இன்னும் விரிவாக்கப்பட வேண்டும்.

இஸ்லாமிய காப்புறுதியின் எதிர்காலம், இருக்கின்ற காப்புறுதி வியாபாரத்தில் கொண்டுவரப்படும் கட்டமைப்பு ரீதியான மாற் றங்கள் மற்றும் அவர்களது சட்டங்களைத் திருத்துதல் என்பவற் றில் முஸ்லிம் அரசுகளால் காட்டப்படும் ஆர்வத்திலேயே தங்கி யுள்ளது.

## 4. வக்ஃப்

வக்ஃப் நிறுவனமானது பொதுப் பயன்பாட்டிற்காக விடப் பட்ட நிலையான சொத்திருப்புக்களைக் கொண்ட ஒரு நிறுவன மாகும். இன்று அசையும் சொத்துக்களும் இதில் பங்கேற்றுள்ளன. குறிப்பாக, வங்காளதேசத்தின் சமூக இஸ்லாமிய வங்கியின் கீழ் வழங்கப்படும் வக்ஃப் முகாமைத்துவ சேவைகளில் இத்தகைய வக்ஃப் சொத்தே அதிகம் காணப்படுகின்றன. இந்நிறுவனம், இச்சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாயை குறித்த நலன் பெறுவோருக்காக வழங்குகின்றது. இந்நிறுவனம் இஸ்லாத்தின் மிக ஆரம்ப காலங்களிலிருந்தே காணப்படுகின்றது. அது எப் போதுமே ஒரு முக்கியமான சமூக, கலாசார வகிபங்கினை ஆற்றிவந்துள்ளது. வக்ஃப் சொத்துக்களையுடைய நிதியானது மரபு ரீதியாக மஸ்ஜிதுகள், பாடசாலைகள், ஆய்வுகள், வைத்தியசாலை கள், சமூக சேவைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் மீதே செலவிடப்படுகின்றது. ஏறத்தாழ அனைத்து முஸ்லிம் நாடுகளி லும் ஏதாவதொரு அமைப்பில் இந்த வக்ஃப் நிறுவனம் காணப்படுகின்றது. இந்நிறுவனம் உஸ்மானிய சாம்ராஜ்ஜியத்தில் மிகக் குறிப்பிடத்தக்களவில் அபிவிருத்தி செய்யப்பட்டுமுள்ளது. ஆகவே, பயிரிடத்தக்க நிலப் பரப்புக்களும், குறிப்பிடத்தக்க பெறு மதியையுடைய ஏனைய சொத்துக்களும் 'அவ்காஃப்' இனால் உடைமையாகக் கொள்ளப்பட்டிருந்தன.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் நிலங்கள் மதச்சார் பற்ற சட்டங்களால் சட்டத்துக்குட்படுத்தப்பட்டதோடு, 'அவ்காஃப்' திணைக்களங்களும் நிலைநாட்டப்பட்டன. அது தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து, 2001 ஆம் ஆண்டிலே இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியினால் உலக வக்ஃப் தாபனமும் அமைக்கப்பட்டது. இன்று, ஏறத்தாழ எல்லா முஸ்லிம் நாடுகளிலுமே 'வக்ஃப்' இனுடைய சில அமைப்புக்கள் காணப்படுகின்றன. ஆனாலும், அதன் முகாமைத்துவம் தகுதியற்றோரின் கைகளில் சிக்கியுள்ளது என்றே கூற வேண்டும். ஏனெனில், வினைத்திறனற்ற முகாமைத் துவம் மற்றும் அரச தலையீடுகள் என்பன தனியார் துறையினர்

'அவ்காஃப்' இனை நிலைநாட்டத் தூண்டியுள்ளது. ஆனால், அதுவும் கூட பலவீனமடைந்தே காணப்படுகின்றது. எவ்வா றெனினும், அண்மையில் முஸ்லிம் நாடுகளில் 'வக்ஃப்' நிறு வனம் உறுதியாகக் காணப்படும் வகையில் புதுப்பிக்கப்பட் டுள்ளது. கடந்த இரு தசாப்தங்களில் மிகப் பயன் தரும் வகை யிலும், செயற்படும் வகையிலும் அதிக எண்ணிக்கையான 'அவ்காஃப்' நிறுவனங்கள் நிலைநாட்டப்பட்ட துருக்கியை இதற்குச் சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். இன்று, மலே சியா, சவூதி அரேபியா, சிங்கப்பூர், குவைட் என்பனவும் இதில் சிறந்த முறையில் செயற்படுகின்றன.

முஸ்லிம்கள் இந்நிறுவனத்தை மீள் செயற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதன் முதற் கட்டமாக, முஸ்லிம் நாடுகளில் காணப்படுகின்ற 'அவ்காஃப்' நிறுவனங்கள் பற்றிய ஒரு பட்டியல் உருவாக்கப்பட வேண்டும். சரியான சட்ட, நிர்வாக மற்றும் சமூக அளவீடுகளைக் கொண்டு அதன் முகாமைத்து வத்தை முன்னேற்ற வேண்டும். 'வக்ஃப்' நிறுவனமானது முஸ்லிம் அரசுகளின் கல்வி, ஆய்வு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இயலு மைகளை முன்னேற்றுவதற்கு சாத்தியமான பயனளிக்க முடியும்.

## 5. அல்-ஹிஸ்பாஹ்

ஹிஸ்பாஹ் நிறுவனம் என்பது முஸ்லிம் அரசுகள் சந்தையை கண்காணிக்கவும் (அதாவது சந்தையில் வர்த்தகத்தின் நேர்மை யைக் காப்பதற்கும், சந்தையில் இடம்பெறும் நேர்மையீனங் களையும் மோசடிகளையும் தவிர்ப்பதற்கும்) உள்ளூர் சேவை களை வழங்குவதற்கும் சிறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் என பிரத்தியேகமான ஒரு காரியாலயத்தைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். இது, முஹம்மத் (ஸல்) அவர்களது காலத்தி லேயே இருந்துள்ளது. அவர்களே முதல் முஹ்தஸிபாக இருந்து முள்ளார்கள். எனவே, மிக ஆரம்ப நாட்களிலேயே இதன் வேர் தோன்றிவிட்டது எனலாம். முஸ்லிம்களின் வரலாற்றை முழுக்க எடுத்துப் பார்ப்போமாயின், காலனித்துவ அரசாங்கங்கள்

'ஹிஸ்பாஹ்' வினால் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த செயற்பாடுகளை பல்வேறுபட்ட மதச்சார்பற்ற அமைச்சர்களுக்கு கையளிக்கும் வரை, இந்நிறுவனம் ஏதோவொரு அமைப்பில் இருந்து வந்துள்ளதை அறியலாம்.

பாகிஸ்தான் மட்டுமே இந்நிறுவனத்தை திருத்தியமைக்கப்பட்ட வகையில் மீளுருவாக்க முயற்சித்தது எனலாம். அது மத்திய அரசாங்க திணைக்களங்கள் மற்றும் முகவர்களின் நிர்வாகத்துக்கான ஆட்சியெல்லையைக் கொண்ட 'முஹ்தஸிப்' இன் ஒரு காரியாலயத்தை நிறுவியது. இந்நிறுவனம் சாதாரண குடிமக்களுக்கு நிர்வாகப் பிழைகளுக்கெதிராகவே பாதுகாப்பு வழங்குகின்றது. ஆகவே, பாகிஸ்தானில் முஹ்தஸிப்களின் காரியாலயம் வரையறுக்கப்பட்ட வகிபங்கினையே கொண்டுள்ளது. அது மாகாண அல்லது உள்ளூர் அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கவில்லை. மேலும், அது ஒரு குடிமகனை வியாபார நிறுவனங்களின் தவறான செய்கைகளுக்கு எதிராகக் காக்கவுமில்லை. இத்தகைய குறைபாடுகளால் நிறுவனம் அதனுடைய ஆரோக்கியமான வகிபங்கினை வேண்டி நிற்கின்றது. எனவே, எதிர்காலத்தில் முஹ்தஸிப்களின் வகிபங்கு மற்றும் பரப்பை விரிவாக்குவதற்கு இன்று பரவலான கேள்வி ஏற்பட்டுள்ளது.

அத்தியாயம்

05

# எதிர்காலத்துக்கான எதிர்பார்ப்பு

## *1. அறிமுகம்*

இஸ்லாமிய பொருளியலானது எதிர்காலத்துக்கான ஓர் எதிர் பார்ப்பை வழங்குகின்றதைப் பற்றி இவ்வத்தியாயத்தில் நாம் கலந்துரையாடவுள்ளோம். எதிர்கால உலக பொருளாதாரத்தின் தோற்றத்தை அது இன்றிருக்கும் நிலையிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளமுடியும். தற்போதைய போக்கே தொடருமாயின், இவ் வுலகிலுள்ள மனித இனத்தின் எதிர்காலப் பொருளாதாரம் அதிக உறுதியானதாக இருக்க முடியாது. நாம் முன்னர் குறிப்பிட்டதைப் போல் சில பொருளாதார பிரச்சினைகள் தொடர்ந்து விடாப்பிடி யாக இருந்து வருவதோடு, அவை சகல மரபுசார் அறிவிலிருந்தும் தப்பித்து வெற்றி கண்டுள்ளன. 21 ஆம் நூற்றாண்டில் அப்பிரச்சி னைகள் மேலும் சிக்கலாகியுள்ளன. நிகழ்கால பொருளாதார ஒழுங்கானது பின்பழம் பொருளியல் சிந்தனைகளையே அடிப் படையாகக் கொண்டுள்ளது. முதலாவதாக, பின்பழம் பொருளிய லானது ஒரு நேர் பாடவிதானமாகவே கொள்ளப்படுகின்றது. அது மனித நடத்தையை அல்லது பொருளாதார நிகழ்வுகளை வழிப் படுத்துவதில் ஒரு செயற்பாட்டு ரீதியான வகிபங்கினை ஆற்று வதில்லை. அது வெறுமனே அவற்றை விளக்கிச் செல்கின்ற அல்லது பகுத்தறிவானதாக்குகின்ற செயற்பாட்டை மட்டுமே

செய்கின்றது. இரண்டாவதாக, பின்பழம் பொருளியல் கொள்கை, கோட்பாடுகளில் அடிப்படையாகக் காணப்படும் மனிதனது இயல்பான சுயநலம், கட்டுப்படுத்தப்படாத சுதந்திர நிறுவனம், நுகர்வோன் இறைமை, வருவாயைப் பெறவும் சேமிக்கவும் முத லிடவும் அல்லது வீணாக்கவும் உள்ள முழுமையான சுதந்திரம் போன்ற எடுகோள்கள் பிரச்சினைகளை உருவாக்கும் கருவிகளாக உள்ளன. அவை பற்றிப் பின்னால் கலந்துரையாடுவோம்.

இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வானது சமகால மரபுசார் அறிவிலிருந்து ஒரு முழுமையான வெளியேற் றத்தை வேண்டி நிற்கின்றது. மனிதனது எதிர்கால பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வினை இஸ்லாமிய பொருளியலே கொண்டுள்ளது எனத் துணிந்து கூறலாம். அது மனிதனது பொரு ளாதாரப் பிரச்சினையை முழுமையாக ஒரு புதிய கோணத்தி லிருந்து அணுகுகின்றது. இஸ்லாமிய பொருளியல் தத்துவங்களின் ஆழமானதும் குறிக்கோளை அடைவதற்குமான கற்கையானது சமூகத்தை அதிகம் நடுநிலையானதும் மனிதத் தன்மையுடைய துமான எதிர்காலத்திற்குள் இட்டுச்செல்லும் சாத்தியத்தையே கொண்டுள்ளது.

பின்வரும் கலந்துரையாடல் சமகால சமூகத்தின் சில முக்கியத் துவம் வாய்ந்த பிரச்சினைகளைப் பரீட்சிப்பதோடு, இப்பிரச்சி னைகளுக்கான இஸ்லாமிய பொருளியலின் அணுகுமுறையை யும் காட்டும். இது, மனிதனுக்கு இஸ்லாமிய தத்துவங்களே அவனது எதிர்காலத்துக்கான எதிர்பார்ப்பை வழங்குகின்றது என்ற குறிக்கோளைக் காட்டுகின்றது. எதிர்கால பொருளாதார பிரச்சினை களின் அழுத்தமானது மனித இனத்தை அதிகம் சரியானதும் மனிதத் தன்மையுடையதுமான ஒரு பொருளாதார ஒழுங்கைத் தேடுவதற்குக் கட்டாயப்படுத்தும். ஒருவேளை, அந்நேரத்தில் இஸ்லாமிய பொருளியல் இவ்வெதிர்பார்ப்பின் சுடரினை வழங்கும்.

# 2. சமகால பொருளாதார பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய அணுகுமுறை

## 2.1 வேலையின்மை மற்றும் பணவீக்கம்

1960களிலிருந்து சுதந்திர உலகின் பொருளாதாரங்கள் பண வீக்கம் மற்றும் வேலையின்மை என்ற இரட்டைப் பிரச்சினை களை எதிர்கொண்டு வருகின்றன. ஆரம்பத்தில், இவ்விரு பிரச்சி னைகளுக்குமிடையில் தலைகீழ்படுத்திய (எதிரான) தொடர்பு காணப்படுவதாக நம்பப்பட்டது. நாம், பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவோமானால் உயர் வேலையின்மையை அனுபவிக்க வேண்டியிருக்கும். அதேபோல், வேலையின்மையைக் கட்டுப் படுத்துவோமானால் உயர் பணவீக்கத்தை அனுபவிக்க வேண்டி யிருக்கும். ஆனால், அண்மைய காலங்களின் அனுபவங்கள் குறிப் பாக, பொருளியலாளர்களுக்கு பெரும் புதிராகவே இருந்து வந் துள்ளது. இதுவரை அவ்வனுபவங்களில் எந்தவொன்றும் மேற் சொன்ன தொடர்பைக் காட்டவில்லை. இதுவரை இவ்விதிகள் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையின் முகாமைத்துவம், வருமானக் கொள்கை, பணநிரம்பலின் கட்டுப்பாடு, பரிமாற்ற வீதத்தின் கையாளுகை, பொருளாதாரத்தின் நிரம்பல் பக்கம் போன்ற விடயங்களை உள்ளடக்க முயற்சித்தும் வந்;துள்ளன.

மேலும், இப்பிரச்சினையானது அதற்குத் தீர்வுகாண முயற்சிக் கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலுமே பிழைத்துவிட்டது. ஏனெ னில், எந்தவொரு கொள்கையும் பிரச்சினையின் மூலவேரில் நின்றுகொண்டிருந்தது. அதுவே, வேலையின்மைக்கான பிரதான காரணமான மூலதனத்தின் மீதான வட்டியாகும். அது முதலீட்டு மட்டம் அதிகரிக்கும் வேகத்தைக் குறைப்பதோடு, பௌதிக மற்றும் மனித வளங்களின் வேலையின்மைக்கும் இட்டுச் செல் கின்றது. வட்டி செல்கின்ற வீதத்தில் எப்போதும் சில முதலீட்டுத் திட்டங்கள் முன் செல்லாமல் அதே இடத்தில் தொடர்ந்து இருக் கும். அவை வட்டியைச் செலுத்துவதற்கு இயலுமான வகையில் முதலீட்டின் மூலம் போதிய வருவாயைப் பெற முடியுமென

முதலீட்டாளர்களை நம்பவைக்க முடியாத நிலையிலிருக்கும். இதனால், சில கருத்திட்டங்கள் சாத்தியமற்ற முறையில் ஒரு பக்கமாகவே வடிவமைக்கப்படும். ஆக, தன்னார்வமற்ற வேலை யின்மையின் தீர்வு வட்டி வீதத்தைப் பூச்சியமாகக் குறைப்பதி லேயே தங்கியுள்ளது. இதனை எப்படிச் செய்வதென்ற கேள்வி இப்போதைக்கு எமக்கு ஒரு பொருட்டாக இல்லை. ஒருவேளை, இது மனிதத் திறமைக்கு ஒரு சவாலாக விடப்பட்டிருக்க முடியும். வேலையின்மையின் மூலவேர் நிதியின் மீதான வட்டியே என் பதை அடையாளம் கண்டு கொள்வதால், எமது முதல் முன் னுரிமை அதனை முழுவதுமாக அழித்துவிடுவதேயாகும்.

முக்கியமாக, கெயின்ஸ் கூட இப்பிரச்சினையை இதற்கு மிக அண்மியவாறு ஆய்வு செய்து, வட்டி வீதத்தை அதன் திரவப் பொறிநிலைக்குக் குறைக்குமாறு கூறியுள்ளார். (அவர் அப்போது அத்திரவப் பொறிநிலை 2 வீதமாக இருக்க வேண்டும் என எண்ணினார்.) இதனை அவர், 'மூலதனத்திலிருந்து நிலையான வருமானம் பெறுவோரின் கருணைக் கொலை' என வர்ணித்துள் ளார். வட்டிவீதம் அதன் திரவப் பொறிநிலைக்குக் குறைக்கப் பட்ட பின் பற்றாக்குறை நிதியீட்டம் அல்லது விரிவாக்கச் செலவீடு என்பவற்றுக்குக் கட்டளையிடுகின்றார். துரதிஷ்டவச மாக, கெயின்ஸிய வாதிகளின் ஆலோசனை சரியாகக் கவனிக் கப்படவில்லை. அதன் முதற்கட்டத்தில், வட்டிவீதம் அதன் திரவப் பொறிநிலைக்கு குறைப்பதுடன் தொடர்புபட்டிருந்தது. எனினும், அது விலக்கப்பட்டு 'பெவரிட்ஜ்' இனுடைய சமூகக் காப்புறுதி திட்டத்தின் மூலம் விரிவாக்க செலவீட்டுத் திட்டக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் விளைவு, ஒரு புறம் முதலீட்டின் மீதான தடை (வட்டியமைப்பில்) பிரயோகிக் கப்படக் கூடியவாறிருப்பதோடு, மறுபுறம் சமூகக் காப்புறுதி மீதான பொதுச் செலவினத்தின் முடுக்கி தொடர்ச்சியாக நெருக் கப்படுகின்றது. இதனால், பொருளாதாரம் மோசமான நெருக்கு தல்களால் பாதிக்கப்பட ஆரம்பிக்கும். உயர் வட்டி வீதத்தினால் உருவான வேலையின்மை பிடிவாதமாக இருக்கும்.

பற்றாக்குறை நிதியீட்டத்தின் ஒரு விளைவாக பணவீக்கம் நீண்ட அடிகளை வைப்பதால் அது எளிதாகக் கீழ் செல்லாது. சமூகக் காப்பு முறைமையானது புதிய நலன்புரி பொருளியலின் படி, வட்டியின் மீது கடன் வாங்குதல் அல்லது வரியின் மூலமாக நிதியினை அதிகரித்தல் என இரண்டு தெரிவுகள் மட்டுமே அரசாங்கத்தின் முன்னால் விடப்பட்டுள்ளன. முதலாவது தெரி வினால் பொருளாதாரம் மேலும் ஊக்கமிழக்கச் செய்யப்படு கின்றது. இரண்டாவது, வரவு-செலவு மற்றும் அதனூடான பண வீக்கத்துக்கும் மட்டுமல்ல நிலையான வருமானம் பெறும் முதலீட்டாளர் வகுப்புக்குச் சார்பான வருமானப் பகிர்வுக்கும் பொருளாதார சமத்துவமின்மைக்கும் இட்டுச்செல்கின்றது.

இஸ்லாமிய நிலைப்பாடானது முற்றிலும் எளிமையானது. அது, மூலதனத்தின் மீதான வட்டியை அதனுடைய அனைத்து வடிவங்களிலும் அழிப்பதோடு, முதலீட்டை அதன் உச்சத்திற்கு உயர்த்துவதற்கு அனுமதிக்கின்றது. எனவே, அது வேலைவாய்ப்பு மட்டங்களை உயர்த்துவதோடு, சமூகப் பாதுகாப்பு செலவினங் களின் தேவையையும் குறைக்கும். இரண்டாவது, இஸ்லாமிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது பற்றாக்குறை நிதி யீட்டம் ஒரு விரும்பத்தகு கொள்கையாக அமையாது. சமநிலைப் பாதீட்டின் 'கோல்டன் ரூல்' எனப்படும் சமமான, பரஸ்பர விதியே இஸ்லாத்தின் அடிநாதத்துக்கு மிகச் சமீபமாக இருக் கின்றது. இது ஏற்றுக்கொள்ளப்படுமானால் ஒரே ஒரு சிக்கலை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். அது மிகப் பெரியதும் கூட. வட்டியில்லா நிதியை வழங்குவதற்கு ஒரு நிறுவன ரீதியான ஆயத்தம், ஒழுங்கமைப்பை விருத்தி செய்வது என்பதே அதுவா கும். சமூகப் பாதுகாப்பு நலன்களை வழங்குவதில் இலகுவான நடைமுறைகளை விளக்குவதற்குப் பதிலாக மனித முயற்சிகள் இக்கேள்வியின் மீதே தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இதுவரை பணவீக்கத்தின் பிரச்சினையில் இஸ்லாமிய கொள் கையும் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது. முதலில், பண வீக்கத்திற்கான காரணங்களில் ஒன்றாக வட்டியே காணப்படு

கின்றது. ஏனெனில், அது உற்பத்திச் செலவிற்குள் புகுந்து உற்பத்திப் பொருட்களின் விலையில் ஒரு பகுதியாக உருவெடுக்கின்றது. இந்நிலை பூரண நிறைபோட்டி என்ற எடுகோளின் கீழ் நிகழமுடியாது. ஆனால், மிகப்பெரிய கூட்டமைப்புக்கள் பொருளாதார அதிகாரத்தைத் திறமையாகக் கையாளுகின்ற போதும் மற்றும் அவர்களது பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதில் தன்னிச்சையாகக் காணப்படுகின்ற போதும் வட்டியானது விலை மட்டத்தினுள் புகுவதனையும் பணவீக்கத்துக்குக் காரணமாயமைவதையும் ஏற்கின்றனர். ஒருவேளை, நாம் வட்டியை ஒழித்து விடுவோமானால், உற்பத்திச்செலவினுள் நுழைவிக்கப்பட்ட வட்டியின் அளவிற்கேற்ப உற்பத்திப் பொருட்களின் விலை குறைவடையும்.

இரண்டாவது, வட்டியின் அழிவு உயர் முதலீட்டுக்கும் பொருட்கள், சேவைகளின் மிகப் பெரிய நிரம்பலுக்கும் இட்டுச் செல்லும். எனவே, இதுகூட விலை மட்டத்தை குறைக்கும் ஒரு மூலக்கூறாக உருவெடுக்கின்றது.

மூன்றாவது, ஸகாத் என்பது நிதியியல் செல்வம் மற்றும் விவசாய வருமானங்களின் மீதான ஒரு வரி என்பதோடு, அதனை தேவையுடையோருக்கு உதவியாக வழங்குவதற்காக வேண்டி உள்ளூர் மட்டத்தில் சேகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. வறிய மற்றும் பற்றாக்குறையுடையவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு நுண்பாக மட்டத்தில் குடும்பத்திடமும், உள்ளூர் மட்டத்தில் சமுதாயத்திடமும் காணப்படுகின்றது. அரசாங்கம் வறியோரின் எஞ்சிய தேவைகளை மட்டுமே பொறுப்பேற்பதோடு, அதுகூட பற்றாக்குறை நிதியீட்டத்தின் மூலமாகவன்றி, வரி மற்றும் ஏனைய வருமானங்களின் மூலமாகவே செய்யப்படும்.

நான்காவது, இஸ்லாம் எளிய வாழ்க்கை முறையையே பாராட்டுகின்றது. அதுவே, மேற்கத்தேய சமூகத்தில் நடைமுறையிலுள்ள நுகர்விலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு நுகர்வு

நடத்தைக்கு இட்டுச்செல்கின்றது. அதேநேரத்தில், வட்டியுட னான நிதி கிடைக்கப் பெறாத ஒரு சூழலில் இவ்வாறான அதிக நுகர்வு சாத்தியப்படாததும் கூட. இஸ்லாமும் கூட அவர்களது வளங்களுக்கு அப்பால் வாழ்வதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறு, பணவீக்க அழுத்தங்களைத் தடைசெய்ய இஸ்லாம் இத்தகைய ஒரு கலாசார முறைமைக்கே கட்டளையிடுகின்றது.

ஐந்தாவது, இஸ்லாம் எங்கு உற்பத்தித் துறையானது இலாபப் பகிர்வு அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்குமோ அத்த கைய ஒரு பொருளாதாரத்தைப் பற்றியே பேசுகின்றது. ஆகவே, ஊழியர்களுக்கு கைத்தொழில் நலனில் பங்கு காணப்படுகின்றது. இதன் விளைவாக, கூலித் தள்ளல் பணவீக்கத்திற்கான வாய்ப் புக்கள் அதன் இழிவளவு மட்டத்துக்குக் குறைக்கப்படும்.

சுருக்கமாக, இஸ்லாம் வேலையின்மை மற்றும் பணவீக்கம் என்ற இரட்டைப் பிரச்சினைகளை ஒரு நேர்மையான அணுகு முறையைக் கொண்டு சமாளிக்கின்றது. முதன்மையான அளவீடு களாக வட்டியின் அழிவு, சமநிலை வரவு-செலவு திட்டம், ஸகாதின் வினைத்திறனான சேகரிப்பு மற்றும் பகிர்வு, மற்றும் இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையிலான நுகர்வோர் நடத்தை என்பன விளங்குகின்றன. இப்பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கான பின்பழம் பொருளியல் அணுகுமுறை இதற்கு நேர் மாறானதாக உள்ளது. அது, வேலையின்மைக்கான பிரதான காரணியான வட்டியை அழிப்பதற்கு முயலவில்லை. மாறாக, அது பணவீக்கத்தை உருவாக்கும் கடன் சேவை அளவீடுகள் மற்றும் சமூகக் காப்புறுதிகளை வழங்குவதற்காக பற்றாக்குறை நிதியீட்ட வளங்களைப் பயன்படுத்த இட்டுச் செல்கின்றது. அதனால் தான், பொருளாதாரத்துக்கு அது மிக மோசமான விதத் தில் பேரிழப்பை ஏற்படுத்தும் அணுகுமுறையாகச் சொல்லப்படு கின்றது.

## 2.2 பொருளாதார அபிவிருத்தி

### 2.2.1 எண்ணக்கரு

அநேகமாக, உலகின் அனைத்து நாடுகளுமே பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள் ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளை எட்டிப் பிடிப்பதற்கான ஓர் ஆர்வம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தெளி வாகவே காணப்படுகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் கூட அவர்களது அபிவிருத்தியை நிலையாகப் பேணவேண்டிய தேவை காணப்படுவதோடு, அவர்கள் அவ்வாறே என்றும் நிலைத் திருக்க விரும்புகின்றனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கைத்தொழிலில் முன்னேறி சுபீட்சத்தைக் கண்ட நாடுகளின் அபிவிருத்தி மாதிரிகளை சில சிறிய வேறுபாடுகளுடன் பின் பற்றின. அனைத்து அபிவிருத்திக்கான குறிப்புக்களையும் அந்நாடு களின் அபிவிருத்திச் செயன்முறையையும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றன. இவை ஒட்டுமொத்த சனத்தொகைக்குமான பௌதீக பொருட்கள், சேவைகளின் இருப்பின் அளவை அதி கரிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதோடு, அதனூடாக பொருட்கள், சேவைகளின் உயர் தலா வருமானப் பங்கினைப் பெறுவதையும் நோக்காகக் கொண்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், அபிவிருத்தியின் அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் சிறப்பானதாக அமையவில்லை. வறிய நாடுகள் மற்றும் செல்வந்த நாடுகளுக்கிடையிலான வருமான வேறுபாடுகள் அரை நூற்றாண்டுக்கு முன்பிருந்ததை விட தற் போது அதிகரித்துள்ளன. மேலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முதலீட்டு உருவாக்கத்தை அதிகரிப்பதற்கு மூலதன இருப்பு, கைத்தொழில்மயமாக்கம் மற்றும் நகரமயமாக்கம் என்ப வற்றுக்கான சகல முயற்சிகளும் இருந்தாலும் அவர்கள் பின்பற்று வதற்கு முயற்சித்தவாறே இருக்கக்கூடிய மேற்கின் மாதிரிகள் எங்குமே இல்லை. ஏனெனில், முன்னேறிய நாடுகளின் நிலையும் கூட கவலைப்படும் வகையில் இல்லாமலில்லை. அங்கே

செழிப்புக்கு மத்தியிலும் வறுமை காணப்படுகின்றது. சுற்றாடல் மற்றும் சூழல் பேணல் என்ற விடயங்கள் தொடர்ந்து அச்சுறுத்த லாகவேயுள்ளன. புதுப்பிக்கப்பட முடியாத வளங்களின் விரயம், அதிலும் முக்கியமாக சக்தியின் விரயம் என்பன அடுத்த சந்ததி யினருக்குக் கிடைக்கக்கூடிய வள ஒதுக்கீட்டைக் குறைவடையச் செய்துகொண்டிருக்கின்றன. மேற்கத்தேய தேசங்கள் தற்போதைய வாழ்க்கைத் தரத்தை நிலையாகப் பேணிக்கொள்ள வேண்டி யதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முன் னேற்றமடைந்த நாடுகளின் முயற்சியானது, புவியிலுள்ள அறியப் பட்ட வளங்கள் யாவும் உலகிலுள்ள அனைவரும் ஒரே மாதிரி யான வாழ்க்கை முறையைப் பின்பற்றப் போதுமானதாக உள்ளன எனப்பார்ப்பதில்லை. இந்த உண்மை ஒன்றே, அபிவிருத்திக்கான மரபுசார் அணுகுமுறைகள் ஒரு புதிய உருவிற்கு வார்ப்புச் செய் யப்பட வேண்டும் என்பதற்குப் போதுமான ஆதாரம்.

அபிவிருத்தியின் இஸ்லாமிய எண்ணக்கருவானது, மரபுசார் மேற்கத்தேய அணுகுமுறையிலிருந்து வேறுபட்டது. முதலாவது, மனித சமூகத்தின் இறுதிக் குறிக்கோளாக அமைவது வெறுமனே பொருளாதார சுபீட்சமன்றி ஃபலாஹ்வை அடைவதாகும். இரண் டாவது, இஸ்லாம் வருமானம் மற்றும் செல்வத்தின் பகிர்வில் பொருளாதார நீதியை வலியுறுத்துகின்றது. ஒரு சமூகம் A அரசி லிருந்து B அரசுக்கு அத்தகையதொரு முறையில் நகருமாயிருந் தால், அதனுடைய பங்கீட்டுச் சமமின்மைகள் குறைவடையும். இஸ்லாமிய பரிபாஷையில், வளங்களின் முழுமையான அளவில் அதிகரிப்பு ஏற்படாவிட்டாலும் அது அபிவிருத்தியாகும். மூன் றாவதாக, இஸ்லாம் அபிவிருத்தித் தத்துவத்தை உள்ளூர் சமூக, கலாசார மரபுகளிலிருந்து கட்டியெழுப்பப்பட்டதாகவும் உள்ளூரி லுள்ள திறமைசாலிகள் மற்றும் பௌதீக வளங்களை சார்ந்தி ருப்பதாகவும் மற்றும் இவ்வபிவிருத்திச் செயன்முறையில் கருத்திற் கொள்ளப்படும் நிலப்பரப்பில் வாழும் முழுச் சனத்தொகையும் ஈடுபடுவதாகவும் கருதுகின்றது.

### *2.2.2 உபாயம்*

*இஸ்லாம், சமூகத்தை அதன் ஆரம்ப நிதி நிலையிலிருந்து ஃபலாஹ்வின் அரசிற்கு மாற்றுவதற்கு முனைகின்றது. ஏனெனில், ஆரம்ப நிலைமைகள் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வேறுபட்டிருக்கும். நாம் இஸ்லாத்தின் அபிவிருத்தி உபாயத்தை விளக்குவதற்கு இருதுருவ நிலைகளை எடுத்துக்கொள்வோம். முதலாவது நிலைமையில், நாம் ஒரு ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள துணை சஹாரா அல்லது தென்னாசியாவிலுள்ள சனத்தொகை அடர்த்தி கூடியதும் குறைந்த மட்ட வருமானத்தை உடையதுமான ஒரு வறிய நாட்டை எடுத்துக்கொள்வோம். இந்தவகை நாடுகளுக்கான இஸ்லாமிய அபிவிருத்தி உபாயமானது முக்கியமாக அதன் சொந்த பௌதிக, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களையே சார்ந்திருக்கின்றது.*

*அபிவிருத்திக் குறிக்கோளானது பலாஹ்வின் ஓர் அரசை அடைவதாக இருக்கும். இக்குறிக்கோளானது அடிப்படையில், மக்களின் அத்தியாவசிய தேவைகளை ஒரு குறிப்பிட்ட கண்டிப்புடன் நிறைவேற்றுவதற்கு நெறிப்படுத்தப்படுகின்றது. அபிவிருத்தி முயற்சியானது மனித வளங்களின் அபிவிருத்தி, பாதைகள், துறைமுகம் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் கட்டுமானம் மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தின் அபிவிருத்தி என்பவற்றின் மீதே தனது கவனத்தைச் செலுத்துகின்றது. அதற்காக முடியுமானவரை, உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் உள்ளூர் திறமைகளே பயன்படுத்தப்படும்.*


*நம்பிக்கைகள், முறைசார் கல்வி, பொதுக் கொள்கைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் நிறுவனமயமாக்கம் என்பவற்றின் மூலமாக மக்களின் ஆன்மீக அபிவிருத்திக்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து அதனை முழுமைப்படுத்துவதாக இம்முயற்சி காணப்படும். மக்களின் நலன்களே அதன் முடிவாகக் கருதப்படும். அங்கே, உயர் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதற்கு எந்த இலட்சியமும் காணப்படுவதில்லை. முடியுமானவரை,*

வளங்களானவை வட்டியில்லா அடிப்படையில் கடனாக அல்லது நன்கொடையாகவே தவிர வெளிநாட்டு நிதியைப் பெற முயல் வதில்லை. பொதுக் கொள்கையானது செல்வம் மற்றும் வருமானப் பகிர்வு என்பவற்றை முன்னேற்றுவதோடு, அங்கவீனர்களுக்கு அதிகச் சலுகைகளுடன் சிகிச்சை வழங்கல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பொதுமக்களைப் பங்கேற்கச் செய்வதற்கேற்ற நிலைமைகளை உருவாக்குகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டி ருக்கும். அத்தகைய ஒரு நாட்டில், தலா வருமானம் இன்று கைத்தொழில் ரீதியாக முன்னேற்றமடைந்த சில நாடுகளில் நாம் காண்பதை விடக் குறைவாகவே இருக்கும். எனினும், இஸ்லாத் தின் பார்வையில் இந்நாடு ஃபலாஹ்வின் அரசுக்கு மிகச் சமீப மாகவே இருக்கும் என்பதோடு, அதுவே அபிவிருத்தியாகக் கருதப்படும்.

இரண்டாவது நிலைமை, சில 0PEC நாடுகளைப் போன்ற ஒரு செல்வந்த நாட்டை எடுத்துக் கொள்வோம். அத்தகைய நாடுகளுக் கான அபிவிருத்தி உபாயமானது ஃபலாஹ்வினை அடையும் அதே குறிக்கோளினையே தொடர்ந்தும் கொண்டிருக்கும். அவர் களிடம் உயர் மூலதன இருப்பு காணப்படும். அவர்கள் தமது மக்களுக்கான கைத்தொழில் அபிவிருத்தி, உயர் தொழில்நுட்பத் தின் அறிமுகம் மற்றும் பொருள்சார் சுபீட்சமிக்க வாழ்க்கைத் தரத்தை வழங்கல் என்பவற்றின் மீது தமது கவனத்தைச் செலுத் துவர். ஆனால், ஒட்டுமொத்த ரீதியாகப் பார்ப்போமானால், பொரு ளாதார நீதி, ஆன்மீக வளர்ச்சி, தீர்மானம் மேற்கொள்வதில் உள்ளூர் சனத்தொகையின் பங்கேற்பு மற்றும் உள்ளூர் திறமை களை விருத்தி செய்தல் என்பன பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய விடயங்களாக தொடர்ந்திருந்து கொண்டி ருக்கும். அத்தகைய நாடுகள் பாதுகாப்பான கைத்தொழில் களின் அபிவிருத்திக்காக அல்லது ஏனைய நாடுகளுக்கான வட்டி யில்லா கடன்கள் அல்லது உதவிகளுக்காக சில வளங்களை ஒரு பக்கமாக ஒதுக்க முடியும். மேலும், இத்தகைய நாடுகள் மேற் கத்தேய விதமான ஒரு நுகர்வோர் சமூகத்திற்குள் இழுத்துச்

செல்லப்படும் தீவிர அபாயத்தை எதிர்கொள்ளவதால் அதிகள விலான வளங்கள், நம்பிக்கைகள், முறைசார் கல்வி, நிலையான தும் நலன் தருகின்றதுமான பொதுக் கொள்கைகள் மற்றும் இஸ் லாத்தின் ஒழுக்க விழுமியங்களின் நிறுவனமயமாக்கம் என்பவற் றின் மூலமாக மக்களின் ஆன்மீகப் பயிற்சியின் மீது செலவிடப்பட வேண்டும். இந்த அளவீடுகளின் மூலம் பொருள் சுபீட்சமானது ஓர் உயர்மட்ட தாராள நுகர்வுச் சமூகத்தை விட ஃபலாஹ்வை முன்னேற்றும் சாதனங்களை உருவாக்குவதற்கு உதவ வேண்டும். இஸ்லாத்தின் பார்வையில், இந்நாடுகள் ஃபலாஹ்விற்கு மிக நெருக்கமானதாகக் காணப்படுவதோடு, சமகால மேற்கத்தேய சமூகங்களின் மாதிரிகளைப் பின்பற்றும் நாடுகளை விட அதிக விருத்தியடைந்தனவாக இருக்கும். *(பார்க்க வரைபடம்: 3)*

**வரைபடம்: 3 ஆரம்ப வள சாதனம்**



## வரைபடம் 3 இன் குறிப்புகள்:

மேலுள்ள வரைபடம் இஸ்லாமிய அபிவிருத்தி பற்றிய ஒரு விரிவான சிந்தனையை முன்வைக்கிறது. அது மிக வறிய மற்றும் அதிக செல்வமுடைய என்ற இரு அந்த நிலைமைகளைக் கருத்தில் எடுக்கின்றது.

ஒரு வறிய நாடு, அது தன்னை நம்பிக்கைகள், கல்வி, பொதுக் கொள்கைகள் மூலமாக மக்களின் ஆன்மீக வளர்ச்சியைத் தனது சொந்த வளங்களைக் கொண்டு முன்னேற்றுவதற்கு முயற்சி செய்யுமாயின் ஃபலாஹ்வை அடைய முடியும் (வலது பக்கம்). அதனுடைய மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தலா வருமானம் அபிவிருத்தியடைந்த நாடுகளை அண்மித்தளவு காணப்படாத போதும் இஸ்லாத்தின் பார்வையில் அது அபிவிருத்தியடைந்த தாகக் கருதப்படும். அத்தகைய ஒரு நாடு அதன் மக்களின் ஆன்மீக வளர்ச்சியைப் புறக்கணிக்குமாயின், அது அபிவிருத்தியடைந்த தாகக் கருதப்படாது. அது இஸ்லாமிய விளக்கப்படி ஒரு வறிய நாடாகக் கருதப்படும்.

அதேபோல், நாம் வரைபடத்தின் இடப்பகுதியை பார்ப்போ மாயின் அது ஒரு வளச்செழுமை மிக்க செல்வந்த நாட்டுக்கான உபாயத்தைக் காட்டுகின்றது. அத்தகைய ஒரு நாடு அதன் பொருள் சார் அபிவிருத்தியுடன் மேலதிகமாக மக்களின் ஆன்மீக வளர்ச்சி யையும் ஏற்படுத்துமாயின் மட்டுமே அது இஸ்லாமிய பார்வை யில் அபிவிருத்தியடைந்ததாகக் கருதப்படும். அவ்வாறில்லாத போது அது இன்றைய மேற்கு நாடுகளில் காணப்படுவதைப் போல ஒரு பொருள்சார் பொருளாதாரமாகவே கருதப்படும்.

### 2.2.3 முதலீட்டுத் தகுதி விதி

மேற்கின் பொருளாதார மாதிரிகளில் முதலீட்டுத் தகுதிவிதி யானது, நலன்-செலவு விகிதம் அல்லது கழிவு செய்யப்பட்ட காசோட்ட ஆய்வு என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப் படும் பிரபலமான பொருளாதார வினைத்திறன் தகுதிவிதி

களையே பின்பற்றுகின்றது. நுட்பங்கள் பெறுமதியை மிதமாகக் காட்டினாலும், குறித்த பெறுமான மதிப்பீடு அதனுள் மறைந் துள்ளது. தகுதிவிதியின் சரியான செல்லுபடித் தன்மையானது, ஒரு குறித்த சமூகம் இந்த நுட்பங்களை எவ்வாறு அவற்றை செல்லுபடியான பெறுமான மதிப்பீடாகப் பயன்படுத்தும் என்ப திலே தான் தங்கியுள்ளது. ஆனால், துரதிஷ்டவசமாக இந்த நுட்பமானது கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கப்படுகிறது. இந்த நுட்பத்தில் மறைந்துள்ள பெறுமான மதிப்பீடுகளாவன:

(அ) ஓர் உயர் தேறிய நலனைக் கொண்ட கருத்திட்டமானது ஒரு குறைந்த தேறிய நலனையுடைய கருத்திட்ட இஸ்லாமிய பொருளியல் இடத்தை விட விரும்பத்தக்கதாகும். இப்பெறுமான மதிப்பீடு என்பது முற்றிலும் நியாயமானதாக இருக்கவேண்டும். ஆனால், நிஜவுலகில் இதுவரை அவ்வாறு காணப்படவில்லை. அரசியல்வாதிகள் ஒரு பக்க பொருளாதார வினைத்திறன் தகுதி விதியை உருவாக்குவதோடு, அரசியல், இன அல்லது பிராந்திய முக்கியத்துவங்களின் அடிப்படையிலேயே இக்கருத்திட்டங் களை ஏற்கின்றனர். அரசியல்வாதிகளுக்கு மக்களின் ஆதரவு இருக்கும்வரை அவர்களது தீர்மானங்களை எந்தத் தகுதிவிதி களாலும் 'வினைத் திறன்' அற்றதாக்க முடியாதுள்ளது.

பொருளாதாரத்தின் அடிப்படை எடுகோளாக காணப்படுவது, ஒவ்வொரு தனிநபரும் அவரது சொந்த நலனை முடிவு செய்யும் சிறந்த நீதிபதியாக இருப்பதோடு, மக்களின் மொத்த நலனானது அவர்கள் தாமாக எதையும் தெரிவு செய்வதற்கு சுதந்திரமாக விடப்படுவார்களாயின் உத்தமமாகக் காணப்படும் என்பதாகும். அரசியல் வாதிகள் மக்களது விருப்பங்களின் அடிப்படையிலேயே அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் ஊருக்குள்ளான தீர்மா னங்களை எடுப்பதால் அவர்களது தீர்மானங்கள் பகுத்தறிவான தாக அல்லது வினைத் திறனானதாக கொள்ளப்பட முடியாது. ஏனெனில், அவர்கள் பொருளியலாளர்களுடைய கணிப்பீட்டைப் பின்பற்றுவதில்லை.

*(ஆ) வழமையான கருத்திட்ட மதிப்பீட்டு நுட்பங்களானவை மக்களின் சுவை மற்றும் பழக்கவழக்கங்கள் மாற்றமடையாமல் தொடர்ந்திருக்கும் என எடுகோள் கொள்கின்றது. ஆகவே, 10 அல்லது 15 வருடங்களுக்குப் பிறகும் கூட ஒரு கருத்திட்டம் அதிக பயனுடையதாகக் கருதப்படும். இது ஒரு நியாயமற்ற எடுகோளா கும். நாம் விரைவாக மாறிவரும் ஓர் உலகில் இருக்கிறோம். சில காலத்துக்குள்ளாகவே புத்தாக்கம், சுவை மற்றும் பழக்கவழக் கங்கள் எனப் பல விடயங்கள் மாற்றத்துக்கு உள்ளாவதைச் சகித்துக் கொண்டிருக்கும் ஓர் உலகிலேயே நாம் வாழுகிறோம். ஆகவே, ஒரு கருத் திட்டமானது செலவு-நலன் அடிப்படையில் இன்று நலன் தரக்கூடியதாக கருதப்படுவது, தொடர்ந்து வருகின்ற வருடங்களில் பயனற்றதாக மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய தாக இருக்கலாம்.*

*(இ) அது வேறுபட்ட மக்கள் குழுக்களிடையே சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கின்றது. உயர் தேறிய நலனடிப் படையில் நலன் தரக்கூடியதாகக் கருதப்படும் ஒரு கருத்திட்ட மானது வளங்களை செல்வந்த நாட்டிலிருந்து வறிய நாட்டுக்கு மாற்றம் செய்வதால் சமூக ரீதியாக விரும்பத்தகாததாக கருதப்படும்.*

*(ஈ) கழிவிடல் நுட்பமானது சந்ததிகளுக்கிடையிலான சமத்து வத்தைப் புறக்கணிக்கின்றது. இயற்கை வாயு மூலப்பொருளாக நுகரப்படும் ஒரு பசளை கருத்திட்டத்தினை எடுத்துக் கொள்வோ மாயின், அதனுடைய நலன்களின் நிகழ்காலப் பெறுமதியானது நிகழ்கால சந்ததியினருக்கே உயர்வானதாகக் காணப்படும். ஆனால், எதிர்கால சந்ததியினரின் பார்வையில், அவர்களுக்கான இயற்கை வாயு ஒதுக்கத்தை இது குறைப்பதால் இவ்வாறு காணப்பட்ட நலன்களின் பெறுமதியானது மிகக் குறைவாகக் காணப்படுவ தோடு, அது உண்மையாக கடினமான ஒரு நிலைக்கே இட்டுச் செல்லும். ஆனால், பொருளாதார வினைத்திறன் தகுதிவிதி யானது அத்தகைய முக்கியத்துவங்களை ஏமாற்றிவிடுகின்றது.*

*(உ) கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ஆய்வானது முதலில்* பொம் போவேர்க் (Bhom Bawerk) என்பவரால் முன்வைக்கப்பட்ட

பணத்தின் காலப் பெறுமதி எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டது. இக்கோட்பாடானது கருத்திட்ட மதிப்பீட்டில் அதன் பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தைக் கொண்டுள்ள ஒரு விடய மாகவேயுள்ளது. இதன் உறுதித் தன்மையானது மக்கள் எதிர் காலப் பொருட்களுக்குப் பதிலாக நிகழ்காலப் பொருட்களை விரும்புவதனை வலியுறுத்துகின்றது.

நிகழ்காலத்தில் நுகரும் பொருட்களின் விடயத்தில் இக்கூற்று உண்மையானதாயினும், எதிர்காலப் பொருட்கள் நிகழ்கால சந் தர்ப்பத்தில் சரியாக நுகரப்படாததால் மற்றும் அவை ஒருவரு டைய சேமிப்பால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதால் மேற் சொன்ன விடயத்துடன் முரண்படுகின்றது. சேமிப்பின் விடயத் தைப் பொறுத்தவரை ஒரு நபர் நிகழ்காலப் பொருட்களை விட எதிர்காலப் பொருட்களையே அதிகம் விரும்புவார். அது ஏன் நிகழ்காலத்தில் அவரால் நுகரப்படுவதில்லை? இவ்வாறு, ஒவ் வொரு ரூபாயும் பணம் சேமிப்பவரிடம் காலம் தொடர்பில் எதிர்மறையான விருப்பம் காணப்படுவதற்குப் பதிலாக எங்குமே அது சேமிக்கப்படுகிறது. முக்கியமாக, சிலரால் சேமிக்கப்பட்ட பணம் ஒரு கருத்திட்டத்தில் முதலீடாக இடப்படுகின்றது. ஆக, கழிவிடலால் பணத்தின் நிகழ்காலப் பெறுமதியைத் தீர்மானிப் பதானது ஒரு சமயோசிதமான செயலாக இருக்க முடியாது.

இஸ்லாமிய வரைசட்டத்தில் மேற்கூறப்பட்ட பொருளாதார வினைத்திறன், முதலீட்டுத் தீர்மானங்கள் என்பன ஒரு சமூக, அரசியல், கலாசார முக்கியத்துவத்தின் அடிப்படையில் திருத்தி யமைக்கப்பட்ட வகையிலே சராசரி இலாபத் தகுதிவிதியே பின் பற்றப்படும். விரிவான நடைமுறைகள் நடைமுறையில் இத்தத் துவத்தை விரிவுபடுத்த முடியும்.

### 2.2.4 அபிவிருத்தித் திட்டமிடல்

சமகால அபிவிருத்தித் திட்டங்களானவை சேமிப்பு, மூலதன உருவாக்கம், மொத்த தேசிய உற்பத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலா வருமானம், அபிவிருத்திக் கருத்திட்டங்கள்,

உட்கட்டமைப்புக்கள், இறக்குமதிக்கான கருவிகள், நிதி மூலங்கள், வரி, வெளிநாட்டு உதவிகள் மற்றும் ஒப்பந்தங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய கணிப்பீட்டில் ஈடுபடுகின்றன. ஆனால், பொதுவாக ஒரு நாட்டில் வாழும் மனித இனத்துக்கு எதையும் செய்ய வேண்டுமென்ற எந்த முக்கியத்துவத்தையும் இத்திட்டங்கள் வழங்கவில்லை. இங்கு முழுமையாக விடப்பட்ட ஒரு பகுதி யாதெனில் இங்கு யாரை நோக்கி ஒட்டுமொத்த கவனமும் செலுத்தப்பட வேண்டும் என்பதேயாகும். அதுவே மனிதன்.

இதனுடன் ஒப்பிடுகையில், இஸ்லாமிய கவனமானது மனித இனத்தின் மீதே உள்ளது. மனிதனே பிரதான இடத்தை ஆக்கிரமித்துள்ளான். இஸ்லாமிய வரைசட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க திட்டம் மூலம் பின்வரும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது பொருளாதாரத்தின் மனித வளத்தை மதிப்பிடவும் போஷாக்கு, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் போன்றவற்றுக்கான இலக்குகளை எதிர்காலத்துக்காகப் பேணவும் வேண்டும். பிறகு இவ்விலக்குகள் முதலீடுகள் தேவைப்படுத்தும் உள்ளீடுகளுக்கு மாற்றப்பட வேண்டும். ஒட்டுமொத்த திட்டமிடல் செயன்முறையும் மனித இனத்தின் அபிவிருத்தியின் மீதே கவனத்தைச் செலுத்த வேண்டும். மனிதனே மைய ஸ்தானத்தை ஆக்கிரமிக்க வேண்டும். முன்னுரிமையானது பயிற்சி, கல்வி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வு என்பவற்றுக்கேற்ப அமைய வேண்டும். கல்வி முறைமையானது அனைவருக்குமான சமமான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும். விடய உள்ளடக்கங்கள் மற்றும் ஏனைய கற்பித்தல் உள்ளீடுகள் ஒரே சீரான நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். அதேபோல், பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் முன்னுரிமை அடிப்படையில் முக்கியமாக, கிராம மற்றும் நகரங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும்.

## 2.2.5 வெளிநாட்டு உதவி

வறிய நாடுகளின் அபிவிருத்தியில் வெளிநாட்டு உதவியின் பங்களிப்பானது குறிப்பிடத்தக்களவில் சந்தேகத்திற்கிடமானது. வெளிநாட்டு உதவிக்கான தேவையானது மேற்கத்தேய பொரு ளியலாளர்களால் பிரபலமான நச்சுவட்டக் கோட்பாட்டின் அடிப் படையில் பரப்பப்பட்டது. இவ்விடயத்தில் காணப்படும் தாராள மான சான்று யாதெனில், கோட்பாடானது சிறியளவே சரியான தன்மையுடையது என்பதாகும். உண்மையில், கைத்தொழில் ரீதி யாக செல்வந்த நாடுகள் வெளிநாட்டு உதவி இல்லாமலே அபி விருத்தி அடைந்துள்ளன என்ற விடயம் நச்சுவட்ட கோட்பாடு செல்லுபடி அற்றதாகும் என்பதை உறுதி செய்கின்றது. ஆனால், மூன்றாம் உலக நாடுகளின் வறிய நாடுகள் வெளிநாட்டுக் கடன் பொறிக்குள் அகப்பட்டுள்ளன. கடன் சேவை மற்றும் வட்டிக் கொடுப்பனவு அமைப்பில் வளங்கள் வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்கு வெளியேறுவது தற்போது அங்கு உறுதி யாக அதிகரித்து வருகிறது. செல்வந்த நாடுகள் முதலீட்டின் மூலம் வருவாய் உழைக்கும் வகிபங்கை ஆற்றுவதோடு, வறிய நாடுகளின் நிதியியல் வளங்களிலிருந்து தமது நலன்களை உச்சப் படுத்துவதையும் நோக்காகக் கொண்டுள்ளன.

வெளிநாட்டு உதவியென்பது, உதவிபெறும் பொருளாதாரங் களை விட உதவி வழங்கும் நாடுகளையே, அதாவது தமது சொந்த பொருளாதாரங்களையே ஊக்குவிப்பதால் உண்மையான செயன்முறையில் இதுவொரு தந்திரமான பொறிமுறையாகக் காணப்படுகின்றது. கடன்கள் கருத்திட்டங்களுக்கான நிதியிடலை வழங்குகின்றது. அது உதவி வழங்குவோருக்கே ஓர் உயர் முன் னுரிமையை வழங்குகின்றது. கடன் கொடுத்த நாடுகளுக்கே அதிகளவான பணம் திரும்பிச் செல்கின்ற அமைப்பிலேயே கடன் கொடுக்கப்படுகின்றது என்ற விடயம் அனைவராலும் அறியப் பட்டது. எனவே, அதனை மீள குறிப்பிட வேண்டிய அவசிய மில்லை.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நிதி நிறுவனங்கள் கொள்ளை இலாபம் பெறுவதால் கடன்பட்ட நிலையிலுள்ள இலத்தீன் அமெரிக்க மற்றும் ஏனைய வறிய நாடுகளில் அபாய அறிவிப்பு நிலைமை உருவாக்கப்படுகின்றது. ஏறத்தாழ எல்லா நிதி நிறு வனங்களும் 'அபிவிருத்தி' அல்லது 'சந்தைப்படுத்தல்' துறை களைக் கொண்டிருப்பதோடு, எதிர்பார்க்கும் வாடிக்கையாளர் களனைவரையும் இக்கடன்களை ஏற்றுக்கொள்ளச் செய்வதே அவர்களது ஆரம்ப பொறுப்பாக காணப்படுகின்றது. இத்துறை கள் மிகத் திறமையுடையோர்களாலேயே நிர்வகிக்கப்படுகின் றது. இவர்கள் மூன்றாம் உலக நாடுகளுக்கு முதலில் சென்றபோது அங்குள்ள உயர் குடிகளுக்கு கடன் தேவையை ஏற்கச் செய்து, அதன் பின் அதற்கான கருத்திட்டங்களைத் தயார் செய்து, ஆய் வறிக்கைகளையும் முழுமையாக்க உதவுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சில நேரங்களில் தவறான செய்கைகளில் ஈடுபட்டா வது அந்நாடுகள் கடன்களை ஏற்றுக்கொள்ளச் செய்தன. ஒரு வேளை, கடன்கள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், கடன் கொடுத்த வர்களின் அக்கறையானது கடன் பெற்ற நாடுகளால் அக்கடன்கள் உரிய முறையில் சிறப்பாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதை விட அவர்கள் பெறும் வட்டியுடனான பணத்திலேயே குறியாக இருக்கும். உண்மையில், அநேகமான கடன் தொகைகள் விரயமாக்கப்படுகிறது; தனிப்பட்டோரின் பணப்பெட்டியை நிறைப்பதாக அல்லது குறைந்த பட்சம் செயற் திறனற்ற வகையிலே தான் அவை பயன்படுத்தப்படுகின்றன.

மூன்றாம் உலக நாடுகளின் கடன் சேவை தொடர்பில் வளர்ந்து வரும் இயலாமை ஒரு அபாயகரமான நிலையில் காணப்படுகின் றது என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. உலக நிதி முறைமையின் உடனடியான உடைவு பற்றி அடிக்கடி எச்சரிக்கை கள் விடப்படுகின்றன. அனைத்து நிழல்களின் மற்றும் சமயக் கோட்பாடுகளின் கீழுள்ள பொருளியலாளர்கள் இந்நிலைமைக் குத் தீர்வாக சில ஆலோசனைகளைப் பரிந்துரைத்துள்ளார்கள். உண்மையில், தீர்வுகள் அதிகளவில் உள்ளன. ஆனால், துரதிஷ்ட

வசமாக எந்தவொரு தீர்மானமும் கடன் பிரச்சினையைச் செயற் திறனாக தீர்த்து வைப்பதில் போதியளவு பங்காற்றவில்லை.

அனைத்துப் பிரச்சினைகளுக்குமான இஸ்லாமிய அணுகுமுறை யென்பது அடிப்படையான தர நிர்ணயங்களால் உருவாவதோடு, குறித்த நிலைமைக்குத் தீர்வு காண்பதில் செயற்றிறனாகவும் இருக்கும். இவ்வணுகுமுறையிலுள்ள மிக முக்கியமான ஓர் அம்சம் இது அனைத்து வகையான கடன்களின் மீதுமுள்ள வட்டியை அழிப்பதற்கே முனைகிறது என்பதாகும். ஆகவே, இஸ்லாமிய உபாயத்தின் முதலாவது படி, அனைத்து வட்டிக் கொடுப்பனவுகளையும் நீக்கி, கடன் கொடுப்பவர்கள் கடன் தொகையை மட்டுமே பெற வேண்டுமென்பதோடு, அதுவும் கூட இலகு தவணை அடிப்படையிலேயே ஆகும். இது மிக விரை வில் கடனை குறிப்பிடத்தக்களவில் குறைவடையச் செய்யும். எதிர்காலத்துக்கான எந்தவொரு கடனும் வட்டியடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்படக்கூடாது. நிதியானது தேவையுடைய நாடு களுக்கு பாய்ச்சப்பட வேண்டும். அதுவும் கூட இலாப-நட்டப் பகிர்வின் அல்லது பங்கு நிதி அடிப்படையில் மட்டுமே செய் யப்பட வேண்டும்.

தெளிவாகவே, இவ்வணுகுமுறையானது முதலீட்டின் மூலம் வருவாய் பெறும் நாடுகளுக்கு இனிய செய்தியாக அமையாது. அவை அதிகளவான வட்டித் தொகைகளுடன் கடன் தொகையை மீளப் பெறவே விரும்புகின்றன. ஆனால், சர்வதேச கடன் பிரச்சி னையானது இப்பிரதான செயன்முறையைப் பிற்படுத்துமானால் மோசமான நிலையிலிருந்து மிக மோசமான நிலைக்கே தள்ளப் படும். கடந்த காலத்தின் அனைத்து வட்டிகளையும் நீக்குவதற் கும், எதிர்கால நிதியை வட்டியில்லா கடன்கள் அல்லது இலாப -நட்டப் பகிர்வு அடிப்படையில் ஏற்படுத்தவும் சர்வதேச சமூக மானது ஒன்றிணைந்து ஓர் ஒழுங்கை உருவாக்க வேண்டும். உண்மையில், பொருளாதாரங்களுக்கான யதார்த்தமான சவால் கள் இக்களத்திலேயே தங்கியிருக்கின்றன. உலக பொருளியலா ளர்கள் வட்டியில்லா நிதியிடலுக்கான நிறுவன ரீதியான ஒழுங்

கமைப்புக்களை உருவாக்குவதற்கான ஆய்வுகளுக்கு உயர் முன்னுரிமை வழங்க வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றனர்.

## 2.3 தொழில்நுட்பம்

இன்று முழு உலகுமே ஒரு வேகமான தொழில்நுட்பப் புரட்சியில் உள்ளது. தொழில்நுட்பத்தில் இடம்பெற்று வரும் புத்தாக்கங்களானவை பல்வேறு வழிகளில் சமூக, கலாசார மற்றும் பொருளாதார உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதிகமான ஆய்வு மற்றும் அபிவிருத்தியானது தனியார் துறையினராலேயே மேற்கொள்ளப்படினும் சிறியளவில் அரச கட்டுப்பாடும் உள்ளது. தொழில்நுட்ப அபிவிருத்தியானது சத்திர சிகிச்சையில், மருந்துப் பொருட்களில், செயற்கையான உணவு வகைகளின் சந்தைப்படுத்தலில் மற்றும் ஆயுதங்கள், ஆராய்ச்சிக் கருவிகள், தொடர்பு சாதனங்கள் எனப் பலவாறாக இன்று வியாபித்துள்ளன. பொருளாதார ரீதியாக தொழில்நுட்ப அபிவிருத்தியில் ஏற்படுகின்ற ஒவ்வொரு புதிய அலையும் சில மக்களின் வேலைவாய்ப்பை இழக்கச் செய்வதோடு, அவர்களது மீள்பயிற்சியையும் கட்டாயப்படுத்துகின்றது.

மேலும், இது கட்டமைப்பு வேலையின்மைப் பிரச்சினையையும் உருவாக்குகின்றது. சர்வதேச மட்டத்தில், தொழில்நுட்ப வாடகைகள் வறிய நாடுகளில் இருந்து செல்வந்த நாடுகளுக்கு வளங்களை மாற்றுவதில் குறிப்பிட்ட இடத்தைக் கொண்டுள்ளன. உதாரணமாக, 1980களிலேயே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பங்குவீத உரிமை மற்றும் கட்டணங்களாக சுமார் 2 பில்லியன் டொலரினை முக்கியமாக, கைத்தொழில் நாடுகளுக்குச் செலுத்தியுள்ளன. அநேகமான தொழில்நுட்ப அபிவிருத்தி மேற்கு நாடுகளிலேயே இடம்பெறுகின்றன. உதாரணமாக, 1980களில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மொத்தமாக 6 வீத காப்புரிமையையே கொண்டிருந்தன. தொழில்நுட்பத்தின் காப்புரிமை என்ற விடயமானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் புதிய தொழில்நுட்பத்தைச் சேர்த்துக் கொள்வதில் ஒரு பிரதான தடையாகக் காணப்படுகின்றது.

இஸ்லாத்தின் பார்வையில், தொழில்நுட்பத்தின் திட்டமிடப் படாத பரவலுக்கு குறைந்தளவான நியாயப்படுத்தலே காணப் படுகின்றது. இஸ்லாமிய அடிப்படையுடனான பின்வரும் வரை சட்டத்துக்குள்ளேயே தொழில்நுட்ப அபிவிருத்தியானது காணப் படவேண்டும்.

*(அ)* அனைத்து புதிய கண்டுபிடிப்புக்களும் வேலைவாய்ப்பு நிலைமை, சமூக நீதி மற்றும் நேர்மை ஆகியவற்றின் முக்கியத் துவங்களின் பரப்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என் பதை மதிப்பிட வேண்டும். ஒரு புதிய கண்டுபிடிப்பு சந்தைக்குள் அனுமதிக்கப்படுவதற்கு முன் இதனால் யார் யார் பாதிக்கப்படப் போகிறார்களோ அவர்களுக்கான மீள்பயிற்சி மற்றும் இடமாற்றம் ஆகியவற்றுக்கான பரந்த ஒரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

*(ஆ)* முடியுமானவரை புதிய தொழில்நுட்பம் உள்ளூர் திற மைகள் மற்றும் பௌதீக வளங்களைக்கொண்டு உருவாக்கப்பட வேண்டும் என்பதோடு, அது தேவைகளின் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறும் மாற்றியமைக்கப்பட வேண்டும். உள்ளூர் நிலைமை களுக்கு அதனுடைய பொருத்தப்பாடு, சமூக நன்மை அல்லது தீமை தொடர்பான சாத்தியத் தன்மைகளைக் கருத்திலெடுக்கா மல் அனைத்துப் புதிய தொழில்நுட்பங்களையும் ஏற்றுக்கொள் வதை அதைரியப்படுத்த வேண்டும்.

*(இ)* சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சூழற் சமநிலை என்ப வற்றின் முக்கியத்துவம் ஒவ்வொரு தொழில்நுட்ப முன்னேற் றத்தை நடைமுறைப்படுத்தும் போதும் கவனிக்கப்பட வேண்டும்.

*(ஈ)* மருத்துவம், உணவு, அலுவலக பணியாளர் முகாமைத் துவம் போன்ற தொழில்நுட்பங்களின் பயன்பாட்டின் போதும் அதற்காக சில ஒழுக்க வழிகாட்டல்கள் வெளியிடப்பட வேண்டும்.

*(உ)* இஸ்லாமிய வரைசட்டம் சர்வதேச ரீதியான ஓர் ஒத்து ழைப்பைப் பற்றியே பேசுகின்றது. இஸ்லாத்தின் ஓர் உறுதியான கருத்து தான், அனைத்து அறிவுமே பகிரப்பட வேண்டுமென்ப தாகும். இது தெளிவாக, விருத்தியடையும் புதிய அறிவிற்கான

செலவு மற்றும் பிறரை அண்டி வாழும் 'இலவச சவாரி' செய்ப வர்களால் உருவாகும் அச்சுறுத்தல் பற்றிய கேள்விகளை எழுப் புகின்றது. இந்தப் பிரச்சினைகள் தொழில்நுட்ப அபிவிருத்திச் செலவினைப் பகிர்வதற்கான ஒரு வரைசட்டத்தைத் தயாரிப்பதற்கு மட்டுமல்லாது, புதிய அறிவை உருவாக்குவதில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளையும் ஈடுபடுத்துவதற்கான ஒரு திட்டத் தைத் தயாரிப்பதற்காகவும் சர்வதேச ஒத்துழைப்பைக் கோரு கின்றது. தற்போது தொழில்நுட்ப மாற்றத்தின் புராணம் அநேக மாக தவறென்றே நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒருவேளை, அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிடம் தனது வருவாய்களில் சிலதை விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தாலே தவிர தொழில்நுட்பம், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு செயற்திறனாக மாற்றப் பட முடியாது. இது அவ்வளவு இலகுவாக வந்துவிடாது. அதிகம் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆயத்தங்களின் மூலம் அபிவிருத்தி அடை ந்துவரும் நாடுகளில் அவர்களது உள்ளூர் சுற்றாடலுக்கேற்ப புதிய தொழில்நுட்பத்தையும் பொருத்தமான தொழில்நுட்பத்தையும் உருவாக்குவதில் அவர்களது திறமைகளைப் பயன்படுத்த முடியும். இதன் மூலம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் வறிய நாடுகளின் திறமைகளை அபிவிருத்தி செய்வதில் ஒரு பிரதான வகிபாகத்தை ஆற்றமுடியும்.

## 2.4 பொருளாதார அதிகாரம்

பழம் பொருளியல் மற்றும் பின்பழம் பொருளியல் பொரு ளாதார மாதிரிகள் யதார்த்த வாழ்வில் பொருளாதார அதிகாரம் ஒரு பிரதான வகிபங்கினை ஆற்றுகின்றது என்ற உண்மைக்கு எந்த மதிப்பையும் வழங்குவதில்லை. மக்கள் வித்தியாசமான திறமைகள் மற்றும் வாய்ப்புக்களுடனேயே பிறக்கின்றனர். இதன் விளைவாக, சிலர் சட்டரீதியான வரைசட்டத்துக்குள் வாழ்ந்த போதும் ஏனையோரைச் சுரண்டுவதற்கு எந்தவொரு முயற்சி யையும் மேற்கொள்ளாதிருந்த போதும் அதிக பொருளாதார

அதிகாரத்தைக் குவிப்பதற்கு வாய்ப்புள்ளது. பொருளாதார அதிகார மானது பலவீனர்களின் சுரண்டல் மற்றும் அடக்குமுறைக்கான சாதனங்களுடனான செல்வத்தையே வழங்குகின்றது. பழம் பொரு ளியல் அணுகுமுறையின் எடுகோளானது பொருளாதார அதி காரம் பொருளாதார உறவில் தலைகீழாக (எதிராக) தாக்கம் ஏற்படுத்தாது என்கின்றது. ஏனெனில், நிறைபோட்டி அவ்வாறு நிகழவிடாது. ஆனால், 2 ஆம் உலகப் போருக்குப் பின்னரான காலப்பகுதியிலேயே உலக கூட்டுத்தாபனங்கள் தோன்றின. முத லாளித்துவமானது அதனுடைய புரட்சியில் ஒரு புதிய கட்டத் துக்குள் நுழைந்தது. தேசிய கூட்டுத்தாபனங்கள் உலக கூட்டுத் தாபனங்களுக்கான வழிமுறைகளை வழங்குகின்றன.

இக்கூட்டுத்தாபனங்கள் பொருளாதார அதிகாரத்தைக் குவித்த வையாகக் காணப்படுகின்றன. எங்கு தமது இலாபம் மற்றும் சந்தைப் பங்கை உத்தமப்படுத்த முடியுமோ அந்த இடத்திலே தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கின்றன. இவை தமது செயற்பாடுகளை மிக விரைவாக மிகப்பொருத்தமான ஓர் இடத்தை நோக்கி நகர்த்த முடியுமாதலால், தேசிய சட்டங்களி லிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். மேலும், உலக கூட்டுத்தாப னங்களின் தீர்மானங்கள் தேசிய அரசாங்கங்களின் உள்ளூர் நிலை மைகளைப் பாதிக்கும். உதாரணமாக, ஒரு கூட்டுத்தாபனம் ஒரு நாட்டிலிருந்து முதலீட்டைக் குறைத்து இன்னொரு நாட்டுக்கு மாற்றுவதற்குத் தீர்மானித்தால் அது முன்னைய தேசத்தின் வேலைவாய்ப்பு மற்றும் நிரம்பல் நிலைமைகளில் எதிரான தாக்கத்தையே ஏற்படுத்தும். அதேபோல், உலக கூட்டுத்தாபனம் அவர்களது உற்பத்திகளின் ஒரு விலையிடல் முறைமை மூலம் சுரண்டப்பட்ட இலாபத்தைப் பெறுகின்றது. ஒரு நாட்டிலுள்ள சாதனங்களின் வெளியீடுகள், எங்கு அதற்கான மேலதிக செயன் முறைக்குரிய வசதிகள் காணப்படுகின்றதோ அந்த நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும். அதாவது, இவ்வெளியீடு மற்றோர் இடத்தில் மூலப்பொருளாக மாற்றமடைகின்றது. அங்கு இவை தமக்குச் சாதகமான விதத்தில் நடுநிலையற்றதாகவும், பலபோது

எந்தவித கட்டுப்பாடுமின்றிய உயர் விலைகளையும் கொண்டி ருக்கும். எனவே, உலகமானது உலக கூட்டுத்தாபனங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் மற்றும் ஒழுங்குபடுத்தும் ஒரு பொறிமுறையினை உருவாக்க முடியாதுள்ளது.

நாம் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஒரே மாதிரியான நிலைமையைக் கவனிக்கின்றோம். தேசிய மட்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்கள் சந்தையில் ஒருவகையான தனியுரிமை அல்லது சிலருரிமையின் அமைப்பில் உள்ளன. இவை தமது பொருளாதார அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்காக யாருக்கும் பொறுப்புக்கூற வேண்டிய தேவையில்லை. சர்வதேச மட்டத்தில் பொருளாதார ரீதியாகப் பலம்வாய்ந்த நாடுகள் பொறுப்பற்ற முறையில் நடப்பதற்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உள்ள சுதந்திரம் மற்றும் இயலுமை என்பன ஏனைய நாடுகளுக்கு பாதிப்பேற்படுத்துவதாக அமையும். இது வெறுமனே கருதுகோள் சாத்தியமொன்றல்ல. தீர்வைக் கொள்கைகள், பரிமாற்ற வீதக்கொள்கைகள் மற்றும் பண்டத்தின் வர்த்தகம் கையாளப்படும் விதம் என்பன அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் விருப்பத்திற்கெதிராகவே அபிவிருத்தி அடைந்த நாடுகளால் தொடர்ச்சியாக இயக்கப்படுகின்றன. பலம்வாய்ந்த நாடுகளுக்கெதிராக பலவீனமான நாடுகளால் செய்ய முடியுமானவை ஒன்றுமில்லை.

இஸ்லாத்தின் பார்வையில், பொருளாதார சக்தி ஒரு சிலரின் கரங்களில் குவிக்கப்படக்கூடாது. பொருளாதாரமானது அதற்கேற்ற வகையிலேயே ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்கின்றது. இஸ்லாம், மனித செயற்றிறன்களில் இயல்பாக வேறுபாடுகள் இருப்பதன் காரணமாக சிலருக்கு சிலரைவிட அதிக பொருளாதார சக்தியைத் திரட்ட முடியுமாயிருக்கின்றது என்பதை இனங்காண்கின்றது. ஆரம்பமாக, இஸ்லாம், மக்கள் நேர்மையற்ற முறையில் சம்பாதிப்பதைத் தடுக்கின்றது. அதுவே பொருளாதார சக்தி குவிவதற்கான பிரதான காரணமாக இருக்கின்றது. இரண்டாவதாக, இஸ்லாம் அதன் வாரிசுரிமை சட்டங்கள், ஸகாத்

முறைமை மற்றும் பொதுக்கொள்கைகள் போன்ற பல கொள் கைகள் மூலமாக பொருளாதார பலத்தைப் பகிர முயற்சிக்கின் றது. இது சமமான கல்வி வாய்ப்புக்கள், சமமான தகவல்கள் பெறும் வாய்ப்புக்கள் போன்றவற்றை வழங்குவதினூடாக இயல் பான இவ்வேறுபாடுகளைக் குறைக்க முயற்சிக்கின்றது. ஆனால், பொருளாதார அதிகாரத்தின் ஒருமுகப்படுத்தலுக்கெதிரான அனைத்து அளவீடுகளிலும் பெரியதாகக் காணப்படுவது இஸ் லாத்தின் பொறுப்புக்கூறும் தத்துவமாகும். அது ஒவ்வொரு தனி நபரும் அவர் ஓர் அமைப்பில் அல்லது அரசாங்கத்தில் என எதில் வேலை செய்தாலும் அவரது செயல்களுக்கான பொறுப்பைப் பெற்றிருப்பார் என்கின்றது.

உதாரணமாக, உலக கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை இஸ்லாமிய முறைமை, முதலில் கூறியதைப் போல் பொருளாதார ரீதியாக பலம்வாய்ந்த வேங்கைகளை உருவாக்காது. பொருளாதார பலத்தின் மூலமானது முதலாளித்துவத்தின் மூன்று முக்கிய பண்புகளான மூலதனத்தின் மீதான வட்டிக் கிடைப்பனவு, வரையறுக்கப்பட்ட பொறுப்புத் தத்துவம் மற்றும் கூலித் தொழி லாளரின் அடிப்படையில் அமைந்த உற்பத்தி ஒழுங்கமைப்பு என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இவ்விடயம் தொடர்பான மேலதிக விளக்கத்தைப் பெற ஆர்வமுள்ள வாசகர் இணைப்பு-1 மற்றும் 2 இனையும் வாசிக்கவும்.

முதலாளித்துவத்தின் இம்மூன்று அம்சங்களும் ஒரு குறித்த வீதாசாரத்தில் இடரபாயத்தைத் தாங்காமலே பாரியளவு நிதியைச் சேர்ப்பதற்கு இக்கூட்டுத்தாபனங்களை அனுமதிக்கின்றது என்ப தைக் குறிப்பிட்டாக வேண்டும். அவை சந்தையைக் கட்டுப் படுத்தி நிலையான விலைகளை அனுபவிப்பதன் மூலம் அசா தாரண இலாபத்தை உழைக்கமுடியும். இஸ்லாமிய முறைமை வட்டியின் மீதான கடனை அனுமதிப்பதில்லை. மேலும், அது வரையறுக்கப்பட்ட பொறுப்புத் தத்துவத்தையும் ஏற்பதில்லை. மேலும், உற்பத்தி ஒழுங்கமைப்பொன்றில் தொழில் புரிவோரை கூலியைப் பெறுவோர் என்பதைவிட பங்காளர்களாகக் கருதும்

ஒரு முறையையே அது ஊக்குவிக்கின்றது. இம்முறையில், இது செல்வத்தின் அடிப்படையைக் குறிப்பிடத்தக்களவு அகலமாக்கு கின்றது. இஸ்லாமிய முறைமையில் உலக கூட்டுத்தாபனம் உருவாக்கப்படுவதற்கான சாத்தியம் குறிப்பிடத்தக்களவில் குறைக் கப்பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படையானது, ஒன்று மற் றொன்றுடன் போட்டியிடும் மற்றும் ஒத்துழைக்கும் பாரிய அல்லது நடுத்தரளவிலான நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்தப் படும் ஒரு பொருளாதாரத்தையே ஊக்குவிக்கப் பார்க்கின்றது.

ஒரு நாட்டின் தேசிய எல்லைகளுக்குள் அல்லது அதற்கப்பால் என பாரிய கூட்டுத்தாபனங்கள் இருந்தாலும் பொறுப்புக்கூறும் இஸ்லாமிய முறைமையானது நடைமுறைக்கு வந்தே தீரும். அது தேசிய மட்டத்தில் மரபுசார் கணக்காய்வின் மீளாய்வினைப் பரிந்துரைக்கும். ஆகவே, கூட்டுத்தாபனங்களின் முகாமைத்துவ மானது அதன் செயற்பாடுகள் மற்றும் செய்யாமல் விட்டவை களுக்கான பொறுப்புக் கூறுதலைக் கொண்டிருக்கும். சர்வதேச மட்டத்தில், இஸ்லாமிய வரைசட்டமானது உலக கூட்டுத்தாப னங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய உலகின் ஒரு மீயுயர் கணக்காய்வு நிறுவனம் நிலைநாட்டப்பட உதவியாக இருக்கும். இந்நிறுவனத்தின் பரப் பானது இக்கூட்டுத்தாபனங்களின் முகாமையாளர்கள் வெளியீடு, விலையிடல், முதலீடு, உற்பத்தியின் தரம், சூழல் பாதிப்புக்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய அவர்களது வேறுபட்ட தீர்மா னங்களுக்கான பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும். அதே நிறுவனம், ஏனைய தேசங்களுக்குப் பாதிப்பேற்படுத்தும் அரசாங் கங்களின் கொள்கைகளைக் கணக்காய்வு செய்வதற்கான பொறுப் பையும் கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் கட்டத்தில், இது ஒரு பரந்த சிந்தனை போல் தோன் றலாம். ஆனால், அது அரச பொது முகாமையாளர்களுக்கான பொறுப்புக்கூறும் சிந்தனைக்கு ஆதரவான சமகால சிந்தனை யுடன் முற்றிலும் ஒத்துப்போகின்றது. அரச பொது முகாமை யாளர்கள் அவர்களது செயற்பாடுகளுக்கான பொறுப்புக் கூறும்

தன்மையை கொண்டிருக்க வேண்டும் என்றிருக்குமானால், தனி யார் முகாமையாளர்களும் ஏன் இவ்வாறு இருக்கக்கூடாது? அதேபோல், பொறுப்புக்கூறும் பரப்பானது தற்போது 3 பிரபல மான E க்களாகக் காணப்படுகின்றன. அவை பொருளாதாரம் (Economy), வினைத்திறன் (Efficiency) மற்றும் செயற்றிறன் (Effectiveness) என்பனவாகும். ஆனால், இவற்றை மூன்றாக மட்டும் வரையறுக்கத் தேவையில்லை. அதற்குள் மேலும் இரு E க்களான ஒழுக்கங்கள் (Ethics) மற்றும் சுற்றாடல் (Environment) என்பவற்றையும் உள்ளடக்க முடியும். உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள், சுதந்திரம், தாராண்மை மற்றும் சமத்துவம் என அனைத்தும் இருந்த போதும் உலகம், பொருளாதார ரீதியாக பலமான நாடுகளின் பொறுப்புக் கூறும் விடயத்தில் அதிக கரிசனை காட்டுவதாகத் தெரியவில்லை. அது வெறும் உதட்டள விலேயே தான் இருக்கின்றது என்பது பெரும் துரதிர்ஷ்டமாகும். எனவே, அது எவ்வாறு பலவீனமான நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கப் போகின்றது?

## 2.5 நுகர்வோர் இறைமை

### 2.5.1 நுகர்வுச் சார்பு வாதம்

பின்பழம் பொருளியலானது நுகர்வோன் இறைமையாளன் எனக் கருதுகின்றது. ஆனால், கூட்டுத்தாபன பலத்தின் உதய மானது இந்த எடுகோளின் புதிரைக் குறைத்துவிட்டது. கூட்டுத் தாபனங்களுக்கு விளம்பரப் பிரசாரங்களின் உதவியுடன் சந்தை யில் எந்தப் பொருட்களையும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த முடியும். இது ஒரு கலையாக அவர்களுள் உருவெடுத்தது. விற் பனை மேம்படுத்தல் உபாயங்களை பயன்படுத்தித் திறமையான முறையில் நுகர்வோர் தமக்கு எது மிகச் சிறந்தது என்பதை அறியச் செய்கிறது. உண்மையில் ஒட்டு மொத்த பொருளாதாரம் விளம் பரத்தால் திருப்திப்படுவது மாத்திரமன்றி, அதன் மூலம் கேள்வி யையும் உருவாக்குகின்றது. இதனால் கூட்டுத்தாபனத் துறையின் உதவிக்கு நிதியும் வருகின்றது. எனினும், இதனால் நுகர்வோர்

துணிச்சலாக செலவு செய்வதற்கு இயலாமலாகின்றது. இன்றைய நுகர்வுச் சமூகமானது மேலும் மேலும் பொருட்களைப் பின் தொடர்ந்து செல்வதையே அதிகம் ஊக்குவிக்கின்றது. நுகர்வோன் என்பவன் ஏற்கனவே அவனிடம் ஏறத்தாழ அனைத்துப் பொருட் களுமே இருந்தாலும் கூட புதிய மாதிரிகள், பிந்திய வடிவங்கள் மற்றும் நவீன காலத்துக்கேற்ற ரகங்களைக் கொள்வனவு செய் வதற்குத் தூண்டப்படுகின்றான்.

இந்த மாற்றப்பட்ட சில மாதிரிகள் சில புதிய உள்ளடக்கங் களைக் கொண்டிருப்பதோடு, அதன் பயன்பாடுகளிலும் முன் னேற்றம் ஏற்பட்டிருக்கும். ஆனால், ஒருவேளை ஒருவருக்கு அப்புதிய வசதிகளில்லாமலேயே குறித்த விடயத்தைச் செய்து கொள்ள முடியும். ஆனால், தனிநபர்களது ஊக்கங்கள் மீது அதி களவான அழுத்தம் இந்த விளம்பரச் செயற்பாடுகளால் வழங் கப்படுகின்றன. இது ஏறத்தாழ நுகர்வோரின் இறைமையை சிறிது சிறிதாக அரித்துச் செல்லும் ஒரு நிலைமையாகும். நுகர்வோர் தமக்கு அவசியமற்ற அல்லது அனுபவிக்க நேரமற்ற பல எண்ணிறைந்த பொருட்களைக் கொள்வனவு செய்ய உளரீதியாகக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இவ்வளங்கள் வேறு ஏதாவது உற்பத்தித் திறனுடைய வழிகளில் மேலும் பயன்தரத்தக்க வழி களில் பயன்படுத்தப்பட முடியுமல்லவா?

எப்போது விளம்பரக் கலாசாரத்தை மாற்றுவது சாத்தியமற்ற தாக மாறுகின்றதோ அப்போதே, அதிக பலம் வாய்ந்த இரு நிறுவனங்களான ஊடகம் மற்றும் நிதி என்பன நுகர்வுச்சார்பான சமூகத்தைப் பேணும் வகையில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக்கொள்ளும். இஸ்லாமிய வரைசட்டம் அஜாக்கிரதையான நுகர்வுச் சார்பு வாதத்தை எதிர்க்கின்றது. அது எளிய வாழ்க்கை யையும் நடுநிலையையுமே ஊக்குவிக்கின்றது. ஆனால், அதுவும் அதன் உற்பத்திகளை விளம்பரப்படுத்துவதனைப் பரந்தளவில் ஒழுங்குபடுத்துவதால் ஏமாற்றல் அல்லது பிழையான தகவல் களிலிருந்து நுகர்வோரைக் காக்குமேயன்றி, வியாபாரத்தின் சுதந் திரத்தைக் குறைக்காது.

நாம் மக்களுக்கு நுகர்வு நுட்பங்களைக் கற்பித்தாக வேண்டும். நடைமுறையில் ஒட்டுமொத்த கல்வி முறைமையும் உற்பத்தி நுட்பங்கள் பற்றிக் கற்பிப்பவையாகவே உள்ளன. மக்கள், சிறந்த கொள்வனவு முறையை மேற்கொள்ளும் முறையை அடையாளம் காணல், கொள்வனவு செய்வதற்கான சிறந்த நேரம், வேறுபட்ட பொருட்களைக் கொண்டு அவற்றில் உயர்ந்த பயனைப் பெறும் முறைகள், வீட்டுச் சொத்துக்களை நாளாந்தம் சிறந்த முறையில் பேணுவதற்குரிய திறன் அபிவிருத்திகள், சிக்கனம் மற்றும் பொருளாதார கொள்வனவு நிலையங்களின் இயலுமைகளைப் பெறுவதற்கேற்ற வகையில் பயிற்சியளிக்கப்பட வேண்டும். இவ்வகையான பயிற்சி வகை மாணவர்களின் வழமையான கல்வியின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். ஆகவே, எப்போது நுகர்வோர் அறிவுரீதியாக முதிர்ச்சியடைகிறார்களோ அப்போது விளம்பரம் அல்லது சந்தைப்படுத்தல் செயற்பாடுகளால் தாக்கப் படும் போக்கு குறைக்கப்படும்.

சந்தையின் கடுந்தாக்குதல்களிலிருந்து நுகர்வோரைப் பாது காக்கும் இன்னொரு முறைதான் வாழ்க்கையின் வேறுபட்ட விடயங்கள் பற்றிய அதிக தகவல்களை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதாகும். பின்பழம் பொருளியலாளர்கள் விலைகள் பற்றிய தகவல் போதியளவில் கிடைப்பதாகக் கருதுகின்றனர். ஆனால், வாழ்க்கையின் சிக்கலான தன்மைகளால் இவை பற் றாக்குறையானதாக மாறுகின்றன. நடைமுறையில் பொருட்கள் எவ்வாறு, என்ன அளவில், என்ன செலவில் உற்பத்தி செய்யப் படுகின்றன? சூழலின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்து கின்றன? மனித சுதந்திரத்தின் மீது என்ன பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன? எவ்வளவு தூரம் விளம்பரங்கள் உண்மையாக இருக்கின்றன? எவ்வளவு தூரம் உற்பத்தியாளர்களின் உரிமை கோரல்கள் சரியாக இருக்கின்றன? என்பன மிகவும் முக்கிய மானவையாகும்.

தகவல் வழங்கும் இவ்வேலையானது, கைத்தொழில் ரீதியாக முன்னேறிய நாடுகளில் ஆரம்ப மட்டத்தில் ஊடக அறிக்கை

களால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால், இரண்டு காரணி களின் அடிப்படையில் இது பற்றாக்குறையாக உள்ளது. ஒன்று, ஊடக மக்கள் அனைத்து வகையான தகவல்களை ஆய்வு செய்ய, பரிசோதிக்க மற்றும் உறுதி கூறுவதற்கு நுட்ப முறையில் பயிற்சி யளிக்கப்பட்டில்லை. இதனால், தகவல்களுக்குள் போதியளவு ஆழமாகச் செல்ல முடியாதுள்ளது. இரண்டாவது, விளம்பர வரு வாய்களைப் பெறச்செய்வதைக் கொண்டு ஊடகத்துக்கு கூட்டுத் தாபனத் துறை ஆதரவாகவுள்ளது. இதனால், தகவல் சேகரிப்பு, ஆய்வு, அதனைப் பரவச்செய்தல், பொருத்தமான மற்றும் போதிய தகவல் என்பவற்றுக்கான பொறுப்பையுடைய சுதந்திரமான நிறுவனங்கள் எமக்குத் தேவையாகவுள்ளன.

இந்நிறுவனங்கள் எமது விண்ணாராய்ச்சிக்கான அவதானிப் பாளர்களைப் போல் இருக்க வேண்டும். எம்மிடம் சமூக மற்றும் பொருளாதார தகவல் ஆய்வுக்கான அவதானிப்பாளர்கள் இருக் கிறார்கள். இந்நிறுவனங்கள் அரசாங்கத்திலிருந்து சுதந்திரமான தாக இருக்க வேண்டும். இவை பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படுவது பெரிதும் விரும்பப்படுவதாக இருக்கும். அவை சிறந்த கணனிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவை தவறான தகவல்கள் மற்றும் தவறான அறிக்கைகளுக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாக்கவும் வேண்டும்.

## 2.6 பொதுக் கொள்கையின் வகிபாகம்

பின்பழம் பொருளியல், வரி மற்றும் தீர்வைத் தூண்டுதல்கள், மானியங்கள், வெளிநாட்டுப் பரிமாற்ற (கோட்டா) அனுமதிப் பங்குகள் போன்ற பொதுக் கொள்கைகள் ஒரு பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவரத்தக்கவை என நம்புகின்றது. இப் பொதுக் கொள்கைகளுக்கு தனிநபர்கள் இலக்கை அடைவதற் கான போதிய பிரதிபலிப்பைக் காட்டவேண்டுமென இவ்வுபா யம் எதிர்பார்க்கின்றது. உண்மையில், தனிநபர்கள் அத்தகைய பிரதிபலிப்பைக் காட்டுவார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு எந்தவொரு பொறிமுறையும் இல்லை. இதன் விளைவாக,

அரசாங்கமும் ஒரு திருப்திகரமான பதிலை உறுதிப்படுத்து வதற்கு முடியாதுள்ளது. அது ஒரு பொதுக்கொள்கையின் வெளி யீட்டை சரிநுட்பமாக எதிர்வு கூறுவதற்குக் கூட முடியாது. இதற்கு ஓர் உதாரணம் போதுமானது. வியாபாரம் புரிபவர்கள் முதலீட்டை இலாபகரமானதாக உணராதிருப்பின் அல்லது மொத்த சுற்றாட லும் அதனைச் செய்வதற்கு இணக்கமானதாக மாறும் வரை முதலீட்டை ஊக்குவிப்பதற்காக வரித் தள்ளுபடிகளை வழங்கு வது மட்டும் ஓர் அரசாங்கத்துக்குப் போதுமானதாகி விடாது. இதனால், அரசாங்கம் மக்களிலிருந்து அதன் இலக்கை அடை வதற்கான போதிய நடத்தையை வெளிக்கொணர்வதற்கு ஒரு கல்விசார் செயற்பாட்டிலும் ஈடுபட வேண்டியது அவசியமாகும்.

இக்கட்டுப்பாடுகள் மக்கள் சரியான நடத்தை முறையை நடை முறைப்படுத்துவதற்காக அவர்களை இணங்கச் செய்வதற்குரிய செயற்பாடுகளை வடிவமைக்கும் வகையில் அல்லது எதிர்காலம் பற்றிய தனிநபர்களின் அறிவை அதிகரிப்பதற்குரிய பரந்தளவு தகவல்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். உதாரணமாக, மேலே கூறப்பட்ட வரித் தள்ளுபடிகள் தனியாரிடம் திருப்திகரமான போதிய பிரதிபலிப்புகளை ஏற்படுத்தாத போது முதலீட்டை ஏற்றுக் கொள்வதற்கான அரசாங்கத்துடைய நோக்கம் பரவலான விளம்பரப் பிரசாரங்களோடு முன்னெடுக்கப்படும். அத்தகைய தொரு செயற்பாடே மக்களிடமிருந்து இவ்விலக்கை அடைவ தற்குரிய போதிய பிரதிபலிப்பை வெளிக்கொணர்வதற்கான ஒரு கருவியாக இருக்கமுடியும்.

சில ஐரோப்பிய நாடுகளில் அத்தகைய நுட்பங்கள் நடை முறை வழக்கில் இருந்தாலும் பின்பழம் பொருளியல் அவற்றை இன்னும் இனங்காணாததோடு, விரும்பத்தகு நடத்தைக் கோலங் களை நோக்கி மக்களைத் தூண்டுவதற்குரிய முறைகளை உரு வாக்கவுமில்லை. இக்கட்டுப்பாடுகளின் களம் மிகவும் பரந்தது. எவ்வாறிருப்பினும், இக்கட்டுப்பாடுகள் சுதந்திரம் மற்றும் மனி தனது கண்ணியத்தின் ஒட்டுமொத்த வரைசட்டத்துக்குள் முன் செல்லாமல் அதே இடத்தில் இருக்கின்றன.

இம்முறையில் பார்க்கும் போது இஸ்லாமிய பொருளியலிடம் பின்பழம் பொருளியலுக்கும் மேலாக ஒரு கூர்மை காணப்படுகின்றது. இஸ்லாமிய பொருளியலானது தனிநபர்களின் நடத்தை பற்றிய கற்கை மட்டுமல்ல. அது இலக்கை அடைவதற்கேற்ற திசையில் மனித நடத்தையை மாற்றுவதையும் நோக்காகக் கொண்டுள்ளது. முஸ்லிம் பொருளியலாளர்களின் தொழில், அவதானிப்பதும் எதிர்வுகூறுவதும் மட்டுமல்ல. மக்களை உற்சாகப் படுத்தும் வகையில் பொதுக் கொள்கைகளை வடிவமைத்து முன்மொழிவதும் அவர்களது நடத்தையைச் சீரமைப்பதற்கு அவர்களை இணங்கச் செய்வதுமாகும். இலக்கை பொருந்திக் கொள்ளும் நடத்தையை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி, பெரும்பாலான முஸ்லிம் பொருளியலாளர்கள் இம்மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு கல்விச் செயன்முறையை அரச இயந்திரம் கேட்டுக் கொள்ளும் ஒரு முன்னேற்பாட்டுடன் கொண்டுவர வேண்டும் என்கின்றனர். முஸ்லிம் பொருளியலாளர்கள் இப்புள்ளிக்கு அப்பால் போகாதமை துரதிஷ்டவசமானது.

ஆக, நாம் இஸ்லாமிய பொருளியல் ஒரு வாக்குறுதியைக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அது மரபுசார் பொருளியல்களில் காணப்படுவதில்லை. இறுதி ஆய்வில், பொருளியல் அறிவு இலக்கை அடைவதற்கேற்றவாறு சமூக, சூழல் நிலைமைகளில் வழிகாட்டிச் செல்வதற்கு உதவாவிட்டால், அது பொருளியலாளர்களின் ஒரு புலமைசார் ஆடம்பரத்தை தவிர வேறெதுவுமாக இருக்காது.

## 3. முடிவான கருத்துக்கள்

நாம் இவ்வத்தியாயத்தில் இஸ்லாமிய பொருளியலினது அடிப்படை எண்ணக்கருக்களை முக்கியப்படுத்திக்கூறியிருந்தோம். இஸ்லாமிய பொருளியலிடம் சில முக்கியமான பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான சாத்தியம் காணப்படுவதோடு, இச்சாத்தியம் எதிர்காலத்தில் உலகம் அதிலிருந்து நலனை பெறவும் இட்டுச் செல்லும்.

எவ்வாறிருப்பினும், இஸ்லாமிய பொருளியல் போதனைகளின் ஒரு கோட்பாட்டு ரீதியான அமைப்பு இதுவரை அபிவிருத்தி செய்யப்படவில்லை. பொதுத் தத்துவங்களில் காணப்படுகின்ற வாறும் ஓர் இலட்சிய இஸ்லாமிய பொருளாதாரத்தின் வரை சட்டத்துக்குள்ளும் பார்க்கும் போது இது உலகில் எங்குமே காணப்படுவதில்லை என்றே பலர் எழுதியுள்ளனர். இதன் ஒரு சில கருத்துக்கள் மட்டுமே யதார்த்த உலகில் பகுதியளவில் ஓர் இடத்தைப் பிடித்துள்ளன. ஏனெனில், இதன் சாத்தியத்தன்மை பரவலாக அறியப்படாததாக உள்ளது. எனவே, முஸ்லிம் பொரு ளியலாளர்கள் அவர்களது வட்டத்திலிருந்து வெளிவர வேண்டும் என்பதோடு, பரந்தளவில் மனித நேயத்தை அறிமுகம் செய்வ தற்கு ஆரம்பிக்க வேண்டிய நேரமுமாகும். அவர்கள் இஸ்லாமிய பொருளாதாரத்துடன் தனியே அவர்களை கட்டுப்படுத்திக் கொண் டிருக்கத் தேவையில்லை. அவர்களது உடனடி அக்கறை இஸ்லா மிய பொருளியல் சமகால உலகின் பொருளாதார பிரச்சினை களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வுகளை முன்வைக்க முடியும் என்பதை உலகிற்குக் காட்டுவதாக இருக்க வேண்டும். அவர்கள் இஸ்லாமிய பொருளியலுக்காக ஓர் உறுதியான வாதத்தை முன் வைக்க வேண்டியுள்ளது.

உலகப் பொருளியலாளர்களை இதில் இணங்கச் செய்வதற் கான இயலுமை இஸ்லாமியப் பொருளியலிடம் உள்ளது. ஏனெ னில், முதலாவதாக இஸ்லாமிய பொருளியலின் அனைத்து கருத்துக்களும் பகுத்தறிவானதாகவே இருக்கின்றது. இன்றைய யுகம் பகுத்தறிவான வாதங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே யுள்ளது. இரண்டாவதாக, பின்பழம் பொருளியலின் எடுகோள் கள், கோட்பாட்டு ரீதியான வரைசட்டங்கள் மற்றும் முடிவுகள் என்பன பற்றி பொருளியலாளர்கள் மத்தியில் பல திருப்தி யின்மைகள் காணப்படுகின்றன. அவர்கள் ஏற்கனவே ஒரு மாற்று மாதிரியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இஸ்லாமிய பொருளியல் இவ்வெதிர்பார்ப்புக்கான ஓர் ஒளிக் கதிரினை வீசுகின்றது.

முஸ்லிம் பொருளியலாளர்கள் ஓர் இலட்சிய இஸ்லாமிய சமூகத்தின் வரைசட்டத்துக்குள் ஒரு கோட்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கு முன் அவர்கள் உண்மையான வாழ்க்கைத் தரவு களின் அடிப்படையில், ஒரு சமகால பொருளாதாரத்தைத் தெரிவு செய்து தற்போது நிலவுகின்ற பொருளாதார பிரச்சினைகளின் ஆரம்ப காரணியாக இருப்பது, அவை பொருளாதார முகாமைத் துவத்தின் இஸ்லாமிய தத்துவங்களிலிருந்து விலகியுள்ளமையே என்பதைக் காட்ட வேண்டும்.

பொருளியலானது ஏற்றுக்கொள்ளப்படும் எடுகோள்கள், முறை யியல் என்பவற்றுடன் வளர முடியும் என்பதோடு, ஒரு கருணை மிக்க சமூகத்திற்கு வழிகாட்டிச் செல்லும் இயலுமையையுடைய பொருளாதார கோட்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும். இஸ்லாமிய பொருளியலிடமே இச்சவால்களை எதிர்கொள்வதற் கான சாத்தியம் காணப்படுகின்றது. முஸ்லிம் பொருளியலா ளர்களுக்கான தேவைப்பாடு யாதெனில், அவர்களது விடயத்தை ஓர் அறிவுறுத்தும் பாணியில் முன்வைப்பது மட்டுமேயாகும்.

இஸ்லாமிய பொருளியலின் அடிப்படை கொள்கை, கோட் பாடுகள் உலகால் பொருளியலாக ஏற்கப்படும் நேரம் வரும். இன்றைய பொருளியல் இஸ்லாமிய பொருளியலுக்குள் உள் வாங்கப்படும் அல்லது தூரமாக்கப்படும். எவ்வாறிருப்பினும், இது சாத்தியமானதே. இஸ்லாமிய பொருளியல் என்ற தலைப்பு மத எதிர்ப்பைக் காட்டும் பக்கச்சார்பானவர்களால் ஏற்கப்படத் தயாராக இல்லாதிருக்கலாம். 'இஸ்லாமிய' என்ற பெயர் கூட மக்களுக்கு சுவையற்றதாக இருக்கக்கூடும். எவ்வாறிருப்பினும், இஸ்லாமிய பொருளியலின் உள்ளடக்கமானது, அதனை தமது எதிர்பார்ப்பு மற்றும் விடுதலைக்கான ஒரு மூலமாக காணும் மனிதத் தன்மையுடைய ஒரு பெரும் பிரிவினரால் வரவேற்கப் படுகின்றது.

அத்தியாயம்

06

# எதிர்கால ஆய்வின் திசை

பொருளியலுக்கான எதிர்கால ஆய்வு, முன்னுரிமையளிக்க வேண்டிய சில விடயங்களைச் சுட்டிக்காட்டுவதே இவ்வத்தியா யத்தின் நோக்கமாகும். இஸ்லாமிய பொருளியலின் ஒட்டுமொத்த வரைசட்டமும் எதிர்கால சவால்களுக்குப் பொருத்தமானதாகவும் அர்த்தமுள்ளதுமாகவும் இவ்விடயதானத்தை உருவாக்குவதனூ டாக, பொருளியல் அபிவிருத்திக்குப் பங்காற்ற முடியும் என்பதே இதன் முடிவாகும்.

உண்மையில், எதிர்கால மக்களின் வாழ்க்கையில் எழக்கூடிய யதார்த்தமான பிரச்சினைகள் இஸ்லாமிய தீர்வுமுறைகளையே வேண்டி நிற்கும் என்பதே எமது எதிர்வு கூறலாகக் காணப்படு கின்றது. ஆனால், காலத்துக்குப் பொருந்தாத அல்லது திடீரென வெற்றியடைந்த விடயங்களில் இத்தீர்வுகள் அடையப்பட அதிக காலம் செல்லும். இஸ்லாமிய பொருளியல் மனித இனத்துக்கு அவசியமான இத்தீர்வுகளைக் கண்டுகொள்ளும் செயன்முறையை விரைவுபடுத்துகின்றது. இங்கு, முன்நிபந்தனையாகக் காணப்படு வது உலகம் மதத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் கொண்டுள்ள ஆதாரமில்லாத கருத்துக்கள், தப்பெண்ணங்கள் விலக்கப்பட வேண்டுமென்பது மட்டும்தான். அனைத்து விடயங்களிலுமே, நாகரிகமடைந்த உலகம் அதன் அதிகமான அறிவிற்கு மத மூலா தாரங்களுக்குக் கடமைப்பட்டிருக்கின்றது.

முதலாளித்துவ முறைமையின் வெற்றி கூட கிறிஸ்தவ பண்பு களுடன் குறித்துக் காட்டப்பட்டது. இங்கு நாம், சில அவசிய மானதும் அவசரமானதுமான ஆய்வு இலக்குகளை அடைவதில் இஸ்லாமிய அணுகுமுறையை பொருளியலுக்கு நெருக்கமாக்கு வது பற்றியே கலந்துரையாடவுள்ளோம்.

## 1. முழுதளாவிய அணுகுமுறை

பொருளியல் மனிதனது எதிர்காலத்தை வழிப்படுத்துவதில் பயனுள்ள வகிபங்கினை ஆற்ற முடியுமாயின், அது வீட்டுத்துறை, சந்தை, அரசாங்கம், சுற்றாடல் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையில் உண்மையான ஒரு தொடர்பு நிலவுவதைப் புரிந்துகொள்ளும். அது மனித இனத்தை வெறுமனே பொருளிய லோடு மட்டுமன்றி, சமூக, அரசியல் மற்றும் உளவியல் என்ப வற்றோடும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். அவர்களது வாழ்க்கைத் தரம் மற்றும் தப்பித்தல் என்பன மேற்கூறப்பட்ட சகல காரணிகளிலும் அதன் இடைத்தங்கியிருப்புகள் மீதுமே தங்கியுள்ளன.

பொருளியலாளர்கள், நிறுவனங்கள் இலாபகரமாக இயங்கு கின்றனவா? நிறைதொழில் மட்டம் காணப்படுகின்றதா? விலை மட்டம் உறுதியாக காணப்படுகின்றதா? வளர்ச்சி வீதம் திருப்தி கரமாக உள்ளதா? போன்ற கேள்விகளை உள்ளடக்கத் தேவை யில்லை. மாறாக, அவர்கள் மனிதனது உளவியல், ஊக்கமூட்டும் மற்றும் சுற்றாடல் தேவைகள் தொடர்பான கேள்விகளையே கேட்க வேண்டும். மேலும், அவர்கள் பொருளாதாரம் எவ்வழியில் மனித ஃபலாஹின் பாதையிலிருந்து விலகுகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். மனிதனின் பொருளாதாரப் பிரச்சினை மீது மட்டுமே கவனத்தை ஒருமுகப்படுத்துவது ஒரு குறுகிய அணுகு முறையாகப் பார்க்கப்படுகின்றது. அது மனித இனத்தின் மனிதப் பண்புகள் மற்றும் ஆளுமை என்பவற்றின் பெறுமதியை வெறு மனே பொருளாதார விடயங்களுக்கு நிகராக்குவதாக அமையும்.

உண்மையில், உலகில் பொருளாதாரப் பிரச்சினைகள் என்று எதுவும் இல்லை. மனிதப் பிரச்சினைகள் மட்டுமே காணப்படு கின்றன. மனித இனமே பிரதான, மத்திய இடத்தைப் பெற வேண்டும். உதாரணமாக, தொழில்நுட்பத்துடன் தொடர்பான கேள்விகளும் பின்வருமாறு அமைவதே பொருத்தமானதாக இருக்கும்: இது ஏற்கனவே தொழில் வாய்ப்பிலுள்ளவர்களின் தொழில்களை எவ்வாறு பாதிக்கும்? தொழில் தேடுவோரை தொழில் சந்தைக்குள் நுழையாது எவ்வாறு தடுக்கும்? புதிய தொழில்நுட்பத்தால் இடம் மாற்றப்பட்ட அத்தகையோரின் மீள் பயிற்சி மற்றும் மறு சீரமைப்புக்காக யார் செலவிடுவது? புதிய நிலைமையின் கீழ் வேலை செய்வோரினுடைய வாழ்க்கைத் தரத்தை இப்புதிய தொழில்நுட்பம் எவ்வாறு பாதிக்கும்? இது எவ்வாறான அழுத்தங்களை மற்றும் திரிபுகளை ஏற்படுத்தும்? புதிய தொழில்நுட்பம் சர்வதேச சந்தையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்? இதனால் புதிய தீர்வை முறைமை என்னவாக இருக்கும்? மற்றும் அத்தீர்வை முறைமை ஏனைய நாடுகளுடன் இருக்கின்ற ஒப்பந்தங்களை எவ்வாறு பாதிக்கும்? இத்தகைய கேள்விகளின் கணிப்பே உண்மையில் கலந்துரையாடலை அனுகூலமாக்கும்.

மரபுசார் பொருளியலானது இத்தகைய பெரும்பாலான கேள்வி களை ஒரு புறம்பான விடயமாகவே பார்க்கின்றது. இவ்வணுகு முறையை ஏற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுவதற்கான கார ணங்களில் ஒன்று தான், இஸ்லாமிய பொருளியல் கோட்பாட்டுக் குள் பண்புசார் மாறிகளை அறிமுகப்படுத்துவதாகும். பண்புசார் மாறிகள் ஆய்வை கடினப்படுத்துவதால் அனைத்தையும் தொகை சார் ஆய்வாக மாற்றிவிடுவதற்கு அவர்களுக்குள்ள ஆவல் இவ் வணுகுமுறையை நடைமுறைப்படுத்துவதிலிருந்து அவர்களைத் திருப்பி விடுகின்றது. உண்மையில், பொருளியல் ஒரு யதார்த்த பூர்வமான சமூக விஞ்ஞானங்களில் ஒன்றாக வர முடியாதிருப்ப தற்கான காரணம் அது மனித பிரச்சினைகளின் சிக்கல் தன்மையை வெறுமனே பொருளாதார பிரச்சினையாக மட்டுமே காண்பதாகும்.

இதன் விளைவாக, ஒரு மனித விஞ்ஞானத்தின் பரந்த தன்மையை அது இழந்துவிடுகின்றது.

இஸ்லாமிய பொருளியல் மனித பிரச்சினைக்கான ஒரு பரந்த பார்வையையே கொண்டுள்ளது. அது இப்பிரச்சினைகளுக்கு பல்-பாடவிதான அணுகுமுறையையே பயன்படுத்துகின்றது.

## 2. வட்டியில்லா ஓர் உலக பொருளாதார ஒழுங்குக்கான தேடல்

21 ஆம் நூற்றாண்டுக்கான மிகப் பெரிய சவால்களில் ஒன்றாகக் காணப்படுவது மூலதனம் மீதான வட்டியில்லா ஒரு மாற்றுப் பொருளாதார ஒழுங்கை அபிவிருத்தி செய்வதாக இருக்கின்றது. இன்று உலகில் ஏற்பட்டு வருகின்ற அனைத்து பொருளாதார நெருக்கடிகளினதும் பின்னணியில் இருப்பது வட்டியே ஆகும். எனவே, இஸ்லாமிய பொருளியல் வட்டியில்லா அமைப்பில் நிதி நிறுவனங்களை எவ்வாறு நிலைநிறுத்த முடியும் என்பதற்கான முயற்சியை மேற்கொள்ளும் அறிவை வழங்குகின்றது. ஆனால், இன்னும் எவ்வளவோ தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருக்கின் றன. உலகம் வட்டியை ஒழிப்பதற்கு ஒட்டு மொத்தமாக இணங்கு மாயின் அத்தகைய ஒரு முறைமை உண்மையாக வெற்றி பெறும்.

மனித அபிவிருத்தியானது மனிதனின் அரசியல் சுதந்திரத்தை ஒரு சரியான எண்ணக்கருவாக ஏற்றுக்கொண்டாலும், மனிதனது பொருளாதார சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை ஒரு விரும்பத்தகு இலக்காக முழுமையாக இனங்காணவில்லை. மனிதனின் பொரு ளாதார சுதந்திரத்தைப் புரிந்துகொள்ள முடியாதிருக்கும் வரை ஒருவருடைய ஊழியத்தின் பலன்கள் வட்டியமைப்பில் முதலீட் டாளர்களால் அறுவடை செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கும். வட்டியில்லா நிதியை வழங்கும் ஒரு தாபன ரீதியான பொறி முறையை கண்டுகொள்வதே உலகப் பொருளியலாளர்களுக்கு முன்னாலுள்ள சவாலாகக் காணப்படுகின்றது. அது உலகின் பயன் படுத்தப்படாத வளங்களை மனித இனத்தின் நலனுக்காக பயன் படுத்தச் செய்யும். பொருளியலாளர்கள் இதுவரை இப்பிரதான

சவாலுக்கு குறைந்தளவு முக்கியத்துவத்தையே வழங்கியுள்ளார் கள். மனித இனம் விடுதலை பெறும் நாளாக இருப்பது அது வட்டியை செயற்றிறனாக அழிக்கும் நாளாகும். அரசியல் சுதந்திரம் என்பது வீட்டின் பாதிவழி மட்டுமேயாகும். வட்டியின் அழி வானது கெயின்ஸ் குறிப்பிட்டதைப் போன்று ஒரு ‘கடல் மாற்றம்’ ஆக இருக்கும். எதிர்கால ஆய்வு நிரலுக்கான முதன்மையான விடயமாக இருப்பது சாத்தியமானதும் பொருத்தமானதுமான வட்டியில்லா ஒரு சர்வதேசப் பொருளாதார ஒழுங்கைக் கண்டு கொள்வதாகும்.

## 3. தொழில்நுட்பம்

பொருளியலாளர்கள் தொழில்நுட்பம் என்ற விடயத்துக்கு போதிய கவனம் செலுத்துவதில்லை. இன்று தொழில்நுட்பப் புரட்சி முழு உலகையுமே ஆக்கிரமித்துள்ளது. தகவல் தொழில் நுட்பமானது எமது வாழ்க்கை முறைகள், உற்பத்தி முறைகள், உற்பத்தி ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகள் என்பவற்றில் செல்வாக்கு செலுத்துகின்றன. பொருளியலாளர்கள் வெறுமனே இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளர் களாக இருக்க முடியாது. அவர்களால் விடயங்கள் சாதிக்கப்பட வேண்டும். அவர்கள் மனித வாழ்வின் மீதான தொழில்நுட்பத் தின் தாக்கத்தை ஆய்வு செய்ய வேண்டும். இது விடயத்தில் இஸ்லாமிய பொருளியலே பங்காற்ற முடியும் என்பதை உலகறியச் செய்ய வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறான கேள்வி களை இஸ்லாமிய பொருளியல் எழுப்புகின்றது:

- பொருளாதார நீதிக்கான தொழில்நுட்பத்தின் சாதகமான தும் பாதகமானதுமான அம்சங்கள் எவை? இதன் கருத்து தேசிய விற்பனையில் பொருளாதாரத்தின் வேறுபட்ட துறைகளின் சார்பான பங்குகளில் தொழில்நுட்பம் எவ்வா றான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதாகும். அல் லது கிராம-நகர, பின்தங்கிய- அபிவிருத்தியடைந்த பிராந் தியங்கள் மற்றும் வறிய-செல்வந்த நாடுகளுக்கிடையிலான

பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு எவ்வாறு தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடியும் என்பதாகும்.

- மனித புலமை சார் முயற்சிகளின் பலாபலன்களை 'இலவச சவாரி' பிரச்சினையின்றி பகிர்ந்து கொள்வதற்கு சர்வதேச பொறிமுறையாக என்ன செய்ய முடியும்?
- புதிய தொழில்நுட்பத்தின் சாத்தியமான ஒழுக்க அம்சங்கள் எவை? மற்றும் அது எவ்வாறு மனித இனத்துக்குப் பயனளிக்க முடியும்?
- வேறுபட்ட தேசங்களுக்கான, முழு உலகுக்குமான தொழில் நுட்ப ரீதியான ஆய்வு முறைமைகள் எவை?

இந்த மற்றும் இதையொத்த கேள்விகளே வருகின்ற வருடங்களில் பொருளியலாளர்கள் முன்னுரிமையளிக்க வேண்டியவையாக இருக்கும்.

## 4. பொருளாதார அதிகாரம்

பொருளியலில் குறைவாக கவனம் செலுத்தப்படும் மற்றொரு பகுதிதான் பொருளாதார அதிகாரம் பற்றிய கேள்வியாகும். இஸ்லாமிய பொருளியல் பொருளாதார நீதிக்கே மையஸ்தானத்தை வழங்க உடன்படுகின்றது. பொருளாதார நீதியின் அனைத்துக் கேள்விகளுமே எவ்வாறு சமூகம் பலவீனர்களை பலமானவர்களிடமிருந்து பாதுகாக்கும் என்ற அடிப்படைக் கேள்வியையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. இது சர்வதேச மட்டத்திலும் பொருத்தமானதாகும்.

பொருளியல் களத்தில் உலக ஒழுங்கமைப்பானது தானாகவே எவ்வாறு பலமானவர்களின் கொடுங்கோண்மையிலிருந்து பலவீனமான நாடுகளை காக்கும்? இது பலவீனர்களுக்கெதிராக அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் வேறுபட்ட வடிவங்களைக் காட்டுவதற்குரிய உண்மையான நிலைமைகளின் ஓர் ஆய்வையே கோருகின்றது. அப்போது அது அத்தகைய பொதுக் கொள்கை

களின் உருவாக்கத்தை அல்லது அத்தகைய நிறுவனங்களின் அபிவிருத்தியை பலமானோரிடமிருந்து பலவீனர்களை காப்ப தற்காக தேவைப்படுத்தும். சட்டங்கள் மட்டுமே தனியே உதவி செய்திட முடியாது. அதிகாரமும் கூட கட்டுப்படுத்தப்பட வேண்டி யுள்ளது. தீர்மானம் மேற்கொள்வதில் தனிநபர்களின் பங்குபற்று தலை உருவாக்குவதன் மூலம் பொறுப்புக்கூறும் தன்மையை உருவாக்க வேண்டும். கிலாஃபத் (பிரதிநிதித்துவம்), ஷூறா (ஆலோசனை), உஹுவ்வா (சகோதரத்துவம்), அத்ல் (நீதி) மற்றும் இஹ்ஸான் (உபகாரம் புரிதல்) என்ற இஸ்லாமிய எண்ணக் கருக்கள் பொருளாதார அதிகாரத்தின் பிரச்சினைகளைச் சமாளிப் பதற்குரிய சாத்தியமான பங்களிப்பை உருவாக்குகின்றன.

எனவே தான், இஸ்லாமிய பொருளியலே உலக மக்களுக்கான முழுமையான விமோசனமளிக்கக் கூடிய ஒரு பொருளாதார முறைமையாகும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

# இணைப்புக்கள்

## இணைப்பு:1

# பங்குடைமையாளர்களின் பொறுப்பு

*சில முஸ்லிம் பொருளியலாளர்கள், இஸ்லாமிய வரைசட்டத்திலுள்ள ஓர் இணைந்த பங்குப் பொருளாதாரத்தில் பங்குடைமையாளர்களின் பொறுப்பானது அவர்களது சொந்த மூலதனத்தின் அல்லது உத்தரவாதப்படுத்துபவரின் பரப்பு வரை வரையறுக்கப்பட்டுள்ளது என வாதிடுகின்றனர். அவர்களது வாதம் இவ்வாறு அமைகின்றது: சிலரால் ஒரு தொகையாக பெறப்படும் பணம் கட்டாயம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. (நபி (ஸல்) அவர்கள் கடன்பட்ட ஸஹாபியொருவரது மைய்யித்தை தொழுவிக்க மறுத்து, அக்கடனினை மீளளிக்க ஒருவர் பொறுப்பேற்ற பின்னரே அதனை தொழுவித்தார்கள் என்பதிலிருந்து இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.)*

*ஆனால், இணைந்த கம்பனியைப் பொறுத்தவரை பங்குடைமையாளர்கள் கடன் பெறுபவர்களல்லர். மாறாக, கம்பனி ஒரு 'சட்ட நபராக' கடன் பெறுபவர் ஆவார். இதனால், கம்பனியின் பொறுப்பே வரையறுக்கப்படாதுள்ளது. அது, தனது கடன்களை அதன் சகல சொத்துக்களையும் விற்பனை செய்தாவது மீளச் செலுத்த வேண்டும். எவ்வாறிருப்பினும், பங்குடைமையாளர்களின் பொறுப்பானது கம்பனியின் மூலதனச் சொத்துக்களில் அவர்களது பங்குகளின் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.*

சுருக்கமாக, இவ்வனைத்து விவகாரமும் ஒரு கேள்வியை உருவாக்கின்றது; அதாவது, 'இணைந்து செயற்படுதல்' எண்ணக் கருவை இஸ்லாமாக ஏற்க முடியுமா? நடைமுறை பதிலாக அமைவது, இஸ்லாத்தின் ஆரம்ப மூலாதாரங்கள் 'சட்ட நபர் களை' அடையாளம் காட்டுவதோடு, அதற்கான ஆதாரத்தையும் கொண்டுள்ளன. சட்ட நபர்களுக்கு சில உதாரணங்கள் பைதுல் மால் (பொதுத் திறைசேறி), மஸ்ஜித், அவ்காஃப் போன்றவை யாகும். இதனால், கம்பனியும் கூட ஒரு சட்ட நபராக கருதப்பட முடியும். இது வியாபாரத்தில் தொடர்ச்சியாக இயங்குவதற்குரிய ஒரு பொறிமுறையை வழங்குகின்றது.

இவ்வாதமானது குறிப்பிட்ட சில பலவீனங்களைக் கொண் டுள்ளது. முதலாவது, இணைந்து செயற்படுவது இஸ்லாத்தில் சட்ட ரீதியானது என நாம் கூறினாலும் கூட, அதனால் நாம் வர்த் தக உண்மைகளுக்கு ஒத்துழைக்காமலிருக்க முடியும் என்பது கருத்தாகாது. இதன் ஆதாரமானது பொது அலுவலகங்களுடன் தொடர்புடையது. இவை வணிக செயற்பாடுகளில் முக்கியமாக, பணத்தைக் கடனாகப் பெற்றுக் கொள்ளல், கடனாகக் கொடுத்தல் என்பவற்றில் ஈடுபடுவதில்லை. கடன் வாங்குவதைப் போலவே கொடுப்பதையும் ஓர் 'இணைந்து செயற்படுதல்' தொடர்பிற்குள் நுழைவிக்க முடியும் என்பதை நிரூபிப்பதற்கு இஸ்லாத்தின் ஆரம்ப மூலாதாரங்களில் அதிகம் வெளிப்படையான ஆதாரத்தை நாம் தேட வேண்டும். இரண்டாவது, ஒட்டுமொத்த வாதமும் நியாயமான கருத்தைக் கொண்டில்லை. உதாரணமாக, உண்மை யாக கடன் பெற்றவர் கம்பனியேயன்றி, பங்குடைமையாளர் களல்ல எனில், பங்குடைமையாளர்களின் பொறுப்பென்று எதுவு மில்லை, பூச்சியமாகும். அப்போது பங்குடைமையாளர்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பாவது இருக்க வேண்டுமா? ஏன்? மேலும், இங்கு எழுகின்ற அடிப்படை கேள்வியானது: கம்பனியின் சொத்துக்கள் யாருக்கு உடைமையானது? கம்பனிக் கேயா அல்லது பங்குடைமையாளர்களுக்கா? ஒருவேளை, ஒரு கம்பனி கலைக்கப்படுமாயின், யார் அந்த பணத்தொகையைப்

பயன்படுத்துவது? நிச்சயமாக, பங்குடைமையாளர்கள் தேறிய தொகையையே பெறுவார்கள். அது அவர்களது சொந்த மூலதனத்தை விட உயர்வாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் சரியே. அவ்வாறே, அது அவர்களது சொந்த மூலதனத்தை விட அதிகமாகக் காணப்படின், எவ்வாறு பங்குடைமையாளர்கள் கம்பனியினுடைய கடன்களின் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியும்? மூன்றாவது, கம்பனியின் இலாபத்துக்கு பங்குடைமையாளர்களின் உரிமையளிப்பானது வரையறுக்கப்பட்டதாகும். கம்பனி உழைக்கும் எதுவானாலும் அவை பங்குடைமையாளர்களின் சொத்தாகும். அவ்வாறே, கம்பனி ஒரு நட்டத்தால் துன்பப்படுமாயின், பங்குடைமையாளர்களின் பொறுப்பானது அவர்களது சொந்த மூலதனம் வரை மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்கும் என நாம் எவ்வாறு கூறமுடியும்?

நாம் வரையறுக்கப்படாத பொறுப்புத் தத்துவத்தை ஏற்றுக்கொள்வோமாயின், அது ஒரு கம்பனியின் கடன்களுக்கான ஒரு குறித்த திகதியினுடைய பொறுப்பின் மீது இருக்கின்ற பங்குடைமையாளர்களை உருவாக்குவதோடு, தமது பங்குகளை விற்ற அதிகமான பங்குடைமையாளர்களின் பிழையான கொள்கைகள் நட்டத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்றாலும் அப்பங்குடைமையாளர்கள் கடந்த காலத்தில் அவர்களது பங்குகளை விற்றுப் பெற்றுக்கொண்ட இலாபங்கள் இல்லாமல் போய்விடாது. இஸ்லாத்தின் பார்வையில் பார்க்கும் போது கடன் பெற்ற நிதியைக் கொண்டு வர்த்தகம் செய்வதென்பது இஸ்லாத்தின் ஆன்மீகத்துக்கு நெருக்கமானதே. எனினும், அது கடன்களின் மீதான வட்டியை அடையாளப்படுத்தவில்லை; அங்கீகரிக்கவில்லை. அது வட்டியில்லா கடன்களை மட்டுமே அனுமதிக்கின்றது.

ஓர் இஸ்லாமிய பொருளாதார முறைமையின் கீழ், அனைத்து நிலைகளிலுமே இவ்வகையான (வட்டியற்ற) நிதியிடல் பெரியளவில் கிடைக்கக்கூடியதாக இருக்காது. ஏனெனில், மக்கள் தமது பணத்தை வட்டியற்ற அடிப்படையில் ஏனையோருக்கு வழங்க முன்வரமாட்டார்கள். பின்னர் அதனை முதலிட்டு இலாபம்

உழைக்கவே கருதுவர். எனினும், வட்டியில்லா கடன்கள் தேவை யுடைய மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் வகையில் ஊக்குவிக்கப்படுகின்றன. உதாரணமாக, வர்த்தக நோக்கத்துக்காக யாருக்காவது மேலதிகமாக நிதி தேவைப் படுமானால், அவர் அதனை இலாப-நட்டப் பகிர்வின் அடிப் படையிலேயே பெற வேண்டும். அது அவரது மூலதனம் மீதான இடரினைத் தாங்கச் செய்யும். யாரிடமாவது ஏதாவது மிகை மூலதனம் காணப்படுமானால், அவர் அதனை எப்போதும் யாருக் கும் வட்டியில்லா அடிப்படையில் கொடுப்பதை விட அதனைக் கொண்டு வருவாயை உழைக்கவே விரும்புவார். இதனால், இஸ்லாமிய பொருளாதாரத்தில் வட்டியில்லா கடனானது மிகக் குறைந்தளவே கிடைக்கக் கூடியதாகவிருக்கும். மேலும், இக்கட னானது அநேகமாக குறுங்காலத்திற்கான நாளாந்த வர்த்தகக் கடனமைப்பிலேயே காணப்படும். இதனால், நடுத்தர மற்றும் நீண்டகாலத்திற்கான இலாப-நட்டப் பகிர்வின் சில பொறிமுறை யானது இஸ்லாமிய பொருளாதாரத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டியதாகவிருக்கும்.

எமது கண்ணோட்டத்தில், மூலதனமானது பங்காக மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருக்குமாயின், பங்குடைமையாளர்களின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு என்ற கேள்வி பொருத்தமற்றதாக மாறுகின்றது. எங்கு வட்டியைச் செலுத்துவதற்கு உடன்படுகின்ற வாக்குறுதியின் மீது பெரியளவான பணத்தொகை (கம்பனியின் மூலதனத்தை விட அதிகம்) பெறப்படுகின்றதோ, அப்போதே பங்குடைமையாளர்களின் பொறுப்பானது ஒரு விவகாரமாக உருவாகின்றது. அப்போது, மிகை வர்த்தகம் அல்லது கவனமற்ற முகாமைத்துவத்தின் ஒரு விளைவாக கம்பனியானது அதன் கடன்களை மீளச்செலுத்த இயலாமலாகுமாயின், பங்குடைமை யாளர்களின் சொந்த செல்வம் ஒரு பாதுகாப்பை வழங்குகின்றது. ஆனால், இவ்வனைத்து கேள்விகளும் இஸ்லாமிய பொருளா தாரத்தில் ஒரு விவகாரமல்ல. எவ்வாறிருப்பினும், ஒரு கம்பனி மிகக் குறைவான சந்தர்ப்பங்களிலேயே அதிகமான வர்த்தகக்

கடன்களை குவிக்கின்றது அல்லது அதன் சொந்தக் கடன்களை சேகரிப்பதற்கு இயலாமலாகி, வங்குரோத்து நிலைமைக்குச் செல் கின்றது. பங்குடைமையாளர்கள் கம்பனியை கொண்டு நடாத்தும் பொருட்டு கடன்களின் மீள் கொடுப்பனவுக்கான பொறுப்பினைக் கொண்டிருக்க வேண்டும். முகாமைத்துவமானது கம்பனியின் பங்குடைமையாளர்களிடம், அத்தகைய ஒரு கொள்கைக்கான சட்ட அடிப்படையை வழங்குவதற்குரிய வட்டியில்லா அடிப் படையில் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தானாக வரும் வர்த்தகக் கடன்கள் அல்லது அதன் பொருட்களை கடனுக்கு விற்பதற்காக வேண்டி, அதனை அனுமதிப்பதற்கான வெளிப் படைத் தன்மையைக் கோர வேண்டும். பங்குடைமையாளர்கள் அனுமதி வழங்குவார்களானால், அப்போது அவர்களது தீர்மா னங்களின் பலன்களுக்கான பொறுப்பையும் அவர்கள் கொண்டி ருக்க வேண்டும்.

எஞ்சியிருக்கும் ஒரு வருந்தத்தக்க பிரச்சினை யாதெனில், 'கம்பனியை விட்டு விலகிய பங்குடைமையாளர்கள்' மட்டுமே யாகும். அதன் பதிலாக, ஒரு குறித்த பங்குடைமையாளர் விலகு கின்ற போதும் கூட கம்பனியுடன் எஞ்சியிருக்கும் அதன் கடந்த கால இலாபங்களை உள்ளடக்கியிருக்கும் கம்பனியின் ஒதுக்கீடு கள் இருக்க முடியும். இதனால், இருக்கின்ற பங்குடைமை யாளர்கள் கடந்தகால இலாபங்களை உடைமையாகக் கொண்டி ருப்பதைப் போல கடந்தகால கடன்களுக்கான பொறுப்பினை யும் கட்டாயம் ஏற்றாக வேண்டும். ஆனால், எமது மனநிலைக்கு இது ஒரு கோட்பாட்டு ரீதியான சாத்தியம் மட்டுமே. எனினும், இஸ்லாமிய பொருளாதாரத்தில் வட்டியுடனான கடன்கள் இன் மையால் பங்குடைமையாளர்களின் பொறுப்பு என்ற விடயம் ஒரு பிரதான விவகாரமாகாது.

*இணைப்பு: 2*

# கருத்திட்ட மதிப்பீட்டுக்கான கழிவிடல்

*கருத்திட்ட மதிப்பீட்டுக்கான கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்ச லிற்கு* (DCF) *சார்பான நுட்பங்கள், 1884ல் ஆஸ்திரிய பொருளிய லாளரான யூஜின் வொன் பொம் போவெர்க்* (Eugene Von Bhom Bawerk) *என்பவரால் விருத்தி செய்யப்பட்ட வட்டிக் கோட்பாட்டி லிருந்து பெறப்பட்டவையாகும்.*

*இவர் பெறப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டியை நியாயப் படுத்தும் கோட்பாடுகளை விமர்சன ரீதியாக பரீட்சித்தார். அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக ஆராய்ந்துவிட்டு, மூலதனத்தின் மீதான வட்டியை நியாயப்படுத்துவதற்குரிய போதிய அடிப்ப டையை அக்கோட்பாடுகள் எதுவுமே வழங்கவில்லை என பகுத்தறிவு அடிப்படையிலே முடிவு கூறினார். இதனடிப்படை யில் அவர் ஒரு கேள்வியை எழுப்பினார். அதுவே, மூலதனத்தின் மீதான வட்டியின் நியாயப்படுத்தல் யாது? என்பதாகும்.*

*அவரது பணத்தின் காலப் பெறுமதிக் கோட்பாட்டை முன் வைத்தே இக்கேள்விக்கு அவர் பதிலளிக்கிறார். ஒருவருக்கு எதிர்கால பொருட்களின் பயனை விட நிகழ்கால பொருட்களின் பயன் அதிகம் என இவர் வாதிடுகின்றார். இதனால்,* x *என்பவர்* y *என்பவரிடமிருந்து பணத்தைப் பெறும்போது ஒரு வருடத்துக்குப் பிறகு மீளளிப்பதாக வாக்களிக்கின்றார்.* y *என்பவருக்கான இப் பணத்தின் பயன் ஒரு வருடத்திற்குப் பிறகு நிகழ்காலத்தில் அவ ருக்கான அதன் பெறுமதியை விடக் குறைவாக இருக்கும். இதனால்,* y *என்பவரின் பணப் பெறுமதியில் ஏற்படும் குறைப்பை*

ஈடுசெய்வதற்காக x என்பவர் சில மேலதிக பணத்தை (இதுவே வட்டியாக அழைக்கப்படுகின்றது) y என்பவருக்குச் செலுத்த வேண்டும். இந்த வகையில், y என்பவரால் ஒரு வருடத்திற்குப் பிறகு பெறப்படும் பணத்தின் பெறுமதி அவருக்கான இப்பணத்தின் நிகழ்காலப் பெறுமதிக்குச் சமனாக இருக்கும்.

இவ்வாறு பெறப்பட்ட பணத்தின் நிகழ்காலப் பெறுமதி என்ற எண்ணக்கருவானது நிகழ்கால சந்தர்ப்பத்திலுள்ள பணத்தின் பெறுமதியைக் குறிக்கும். நிகழ்காலமும் (உதாரணம்: பூச்சிய வருடம்) உள்ளடக்கப்பட்ட பல வருடங்களுக்கான எதிர்காலப் பெறுமதியை கழிவு செய்வதால் பணத்தின் அனைத்து எதிர்காலத் துறைகளின் நிகழ்காலப் பெறுமதியும் தீர்க்கப்பட முடியும் என்பதை ஒரு கோட்பாடாக ஏற்கிறார். ஆக, நிகழ்காலத்துக்கு எதிர்கால பெறுமதியின் கழிவிடலானது வட்டியினுடைய கூட்டலின் பின்புறத்திலிருந்தான ஒரு செயன்முறையில் ஈடுபடுகின்றது.

பணத்தின் காலப்பெறுமதி எண்ணக்கருவானது பொருளியலாளர்களால் பரவலாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அது உலகின் அநேக நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டமிடல் முகவர்களால் மூலதனச் செலவின் முன்மொழிவை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. அது, அநேக பல்கலைக்கழகங்கள் மற்றும் வர்த்தகக் கல்லூரிகளில் முதலீட்டு மதிப்பீட்டுக்கான அடிப்படையாகக் கற்பிக்கப்படுகின்றது. இவ்வெண்ணக்கருவை பரந்தளவில் ஏற்றுக்கொள்வோர் வள ஒதுக்கீட்டுக்கான ஒரு கருவியாக வட்டியை உறுதியாக நம்பலாம் என்கின்றனர்.

ஆனால், உண்மையில் இவ்வெண்ணக்கருவானது ஆழமாகப் பரீட்சிக்கப்படவில்லை. பணத்தின் நிகழ்காலப் பெறுமதியின் உறுதியுரையானது எதிர்காலப் பெறுமதியை விட உயர்வாகக் காணப்படும் என்பது வரையறுக்கப்பட்ட நிலைமைகளில் மட்டுமே உண்மையாக இருக்கும். வளங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பார்ப்போமானால், அனைவரும் அவற்றைப்

பிந்திப் பெறுவதை விட முன்னதாகப் பெறவே விரும்புவர். ஏனெனில், அவ்வளங்களின் பெறுமதி எதிர்காலத்தை விட நிகழ்காலத்தில் அதிகமாவுள்ளது. ஆனால், வளங்களை நுகர்வது தொடர்பில் கவனத்தைச் செலுத்துவோமானால், வளங்களின் நிகழ்காலப் பெறுமதி அதன் எதிர்காலப் பெறுமதியை விட உயர்வாகவோ அல்லது குறைவாகவோ இருக்க முடியும். அது, உயர்வாக காணப்படுமாயின் ஒரு தனிநபர் அவ்வளங்களை நிகழ்காலத்தில் அத்தருணத்திலேயே நுகர விரும்புவார்.

ஆனால், எதிர்காலப் பெறுமதியானது நிகழ்காலத்தை விட உயர்வாகக் காணப்படுமாயின் அப்போது அவர்கள் அவ்வளங் களை எதிர்காலத்துக்காக சேமிக்கவே விரும்புவர். இதனால், உலகெங்கும் காணப்படும் சேமிப்பின் அனைத்து நடவடிக்கை களும் ஓர் உண்மையை வெளிப்படுத்தும் தீர்மானமான ஓர் ஆதாரமாகவுள்ளது. அதாவது, பணத்தின் எதிர்காலப் பெறுமதி யானது அதன் நிகழ்காலப் பெறுமதியை விட உயர்வாக இருக் கும் அளவுவரை சேமிக்கப்படுகின்றது என்பதே அவ்வுண்மை யாகும். மேலும், பணத்தின் எதிர்காலப் பெறுமதியானது அதன் நிகழ்காலப் பெறுமதியை விட உயர்வாகக் காணப்பட்டதால் கடந்த காலத்திலிருந்து சேமிக்கப்பட்ட பணமே ஒரு கருத்திட் டத்தில் முதலிடப்படுகின்றது என்பது தெளிவான விடயம். இதி லிருந்து, கழிவிடலுக்கான அடிப்படை, பகுத்தறிவு ரீதியாக சரியானதன்று என்பது தெளிவாகின்றது.

கழிவிடல் எண்ணக்கருவானது ஏனைய பக்கச்சார்பானதும் உண்மையற்றதுமான எடுகோள்களையும் மறைமுகமாக ஒன்றி ணைக்கின்றது. உதாரணமாக, அது எதிர்காலத்தை விட தற்போ தைய ஒரு குறித்த கழிவு வீதத்திலேயே வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புகின்றது. அவ்வீதம் எவ்வாறு நிர்ணயிக்கப் படுகின்றது? அது மறைமுகமாக, முதலீட்டுக்கான நிதியைப் பெறுவதற்கு செலுத்தப்படும் வட்டி வீதம் அல்லது நலன்களைப் பெறுவதற்கு முடியுமாக எதிர்ப்பார்க்கப்படும் வட்டி வீதமாகும். ஆனால், எதிர்காலத்தை விட தற்போதே வளங்களை ஒரு குறித்த

கழிவு வீதத்தில் பெற்றுக்கொள்வதற்கான எமது விருப்பத்தை நாம் எந்த நியாயத்துடன் மாற்ற முடியும்? ஒரு குறித்த கழிவு வீதத்திற்கு இவ்விருப்பத் தேர்வானது சமமானது என எவ்வாறு எமக்குத் தெரியும்?

உண்மையில், எதிர்காலத்தை விட நிகழ்காலத்தில் வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு நபரிடம் சாதாரண முன்னறிவே காணப்படுகின்றது. ஆனால், ஒரு குறித்த கழிவு வீதத்துக்கு இவ்விருப்பத் தெரிவை மாற்றுவதற்கு எந்த நியாயமும் இல்லை. இங்கு ஒரு கேள்வி எழுகின்றது: அப்போது, கீழ் குறிப்பிட்ட வாறான ஒரு நிலைமையில் வேறுபட்ட மாற்றுத் தெரிவுகளுக் கிடையே ஒரு முயற்சியாளர் மேற்கொள்ளும் தீர்மானம் எவ் வாறிருக்கும்?

ஒவ்வொரு நிலைமையிலும் ஆரம்ப முதலீடு = $50,000 ஆக இருக்குமாயின்,

**தேறிய காசுப் பாய்ச்சல்**

**கருத்திட்டத்தின் ஆயுட்காலம்: 4 வருடங்கள்**

| **காலம்** | **கருத்திட்டம் A** | **கருத்திட்டம் B** | **கருத்திட்டம் C** |
|---|---|---|---|
| 1ம் வருடம் | $ 30,000 | $ 16,250 | $ 5,000 |
| 2ம் வருடம் | $ 20,000 | $ 16,250 | $ 10,000 |
| 3ம் வருடம் | $ 10,000 | $ 16,250 | $ 20,000 |
| 4ம் வருடம் | $ 5,000 | $ 16,250 | $ 30,000 |
| மொத்தம் | $ 65,000 | $ 65,000 | $ 65,000 |

ஒரு சாதாரண முயற்சியாளர் பிந்திய காலத்தை விட முந்திய காலத்திலே வளங்களை பெற்றுக்கொள்வதற்கு விரும்புவதால் அவர் கருத்திட்டம் Bயை விட Aஐயும், Cயை விட Bஐயும் விரும்புவார். இது எந்தவொரு கழிவிடலும் இல்லாத நிலையில் சொல்லப்பட முடியும். காசுப் பாய்ச்சல்களின் ஒரு பரீட்சிப்பானது இப்பொதுவான பதிலுக்கே இட்டுச் செல்கின்றது.

இது எம்மை மேலும் ஒரு வினாவுக்கு இட்டுச் செல்கின்றது. காசுப் பாய்ச்சல்களானவை பின்வருமாறு அமையுமாயின் தீர்மானம் என்னவாக இருக்கும்?

**தேறிய காசுப் பாய்ச்சல்**

**கருத்திட்டத்தின் ஆயுட் காலம்: 4 வருடங்கள்**

| **காலம்** | **கருத்திட்டம் A** | **கருத்திட்டம் B** | **கருத்திட்டம் C** |
|---|---|---|---|
| 1ம் வருடம் | $ 30,000 | $ 16,250 | $ 5,000 |
| 2ம் வருடம் | $ 20,000 | $ 16,250 | $ 10,000 |
| 3ம் வருடம் | $ 10,000 | $ 16,250 | $ 20,000 |
| 4ம் வருடம் | $ 5,000 | $ 16,250 | $ 35,000 |
| மொத்தம் | $ 65,000 | $ 65,000 | $ 70,000 |

இத்தகைய ஒரு சூழ்நிலையில் முயற்சியாளர் ஒரு முடிவிலே தான் இருப்பார். அவர் கருத்திட்டம் Cயிற்கு பதில் Aஐ விரும்புவாராயின் அவர் தெளிவாக 5,000 டொலரை இழக்க வேண்டியிருக்கும். அவர் இந்த 5,000 டொலரினை விட்டுக் கொடுத்து ஆரம்ப காலத்தில் உயர் காசுப் பாய்ச்சலை கொண்டுவரும் கருத்திட்டம் Aயினை தெரிவு செய்ய வேண்டுமா? எளிமையான பதில், அவர் மூலதனத்தின் மீதான சராசரி வருவாய் வீதத்தையே Average Rate of Return) பார்ப்பார். கருத்திட்டம் Aயில் அது வருடாந்தம் 32.5 வீதமாகவும், கருத்திட்டம் Cயில் 35 வீதமாகவும் காணப்பட்டது. ஆகவே, அவர் கருத்திட்டம் Cயினையே தெரிவு செய்வார். ஆனால், கழிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் நுட்பங்களை ஆதரிப்போர், கீழே காணப்படுகின்றவாறு 10 வீதத்தில் காசுப் பாய்ச்சல் கழிவிடப்படுமாயின் அவர் கருத்திட்டம் A யினையே தெரிவு செய்வார் என்கின்றனர்.

| வருடம் | *10% இற்கான நிகழ்காலப் பெறுமதி* | | *காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதி* | |
|---|---|---|---|---|
| 1ம் வருடம் | 0.909 | $ 27,270 | $ 16,250 | $ 4,545 |
| 2ம் வருடம் | 0.826 | $ 16,250 | x 3.170 | $ 8,260 |
| 3ம் வருடம் | 0.751 | $ 7,510 | | $ 15,020 |
| 4ம் வருடம் | 0.683 | $ 3,415 | | $ 23,905 |
| மொத்தம் | | $ 54,445 | $ 51,513 | $ 51,730 |
| ஆரம்ப முதலீடு | | $ 50,000 | $ 50,000 | $ 50,000 |
| தேறிய நிகழ் காலப் பெறு மதி (N.P.V) | | $ 4,445 | $ 1,513 | $ 1,730 |

இதனால், அவர்கள் சராசரி வருவாய் வீதமானது (ARR) ஒரு ‘வினைத்திறனற்ற’ கருத்திட்டத்தை தெரிவு செய்வதற்கு இட்டுச் செல்லும் என வாதிடுகின்றனர். அதேநேரம், ஒரு கருத்திட்டத் தைத் தெரிவு செய்வதற்குரிய தகுதிவிதியானது காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதியே என்கின்றனர். இதனால், அவர்களது சாத் தியங்களை நிர்ணயிப்பதற்கு இந்தத் தகுதிவிதியின் அடிப்படை யிலேயே ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். ஆனால், தெரிவு செய்வதற் கான தகுதிவிதியாக நிகழ்காலப் பெறுமதியை ஏற்றுக்கொள் வதின் நியாயம் என்ன? நேர் கால விருப்பத் தெரிவுகளின் எண்ணக்கருவிலே இக்காரணம் தங்கியுள்ளது எனவும் அவ்வாதம் தொடர்கின்றது. எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் வளங் களை விட ஆரம்பத்தில் பெற்றுக்கொண்ட வளங்களில் மீள் முதலீடு செய்வதற்கு அதிக வாய்ப்புள்ளது எனக் கருதுகின்றது. ஆனால், எதிர்காலத்தில் ஒரு குறித்த சதவீத வருவாயைப்

பெற்றுக்கொள்ளும் சாத்தியத்தை நாம் எவ்வாறு அறிந்துகொள்வது (உதாரணமாக கழிவு வீதம்)?

வேறுபட்ட காசுப் பாய்ச்சல்களில் நிச்சயமற்ற தன்மையானது வேறுபட்ட மட்டங்களில் காணப்படுவதால் கழிவிடல் அவசியமானது என அது மேலும் வாதிடுகின்றது. மேற்கூறப்பட்ட மாதிரியில் கருத்திட்டம் Aயினுடைய காசுப் பாய்ச்சலில் கருத்திட்டம் Cயினுடையதை விட ஓர் உயர் நிச்சயத்தன்மைக்கான சாத்தியம் காணப்படுகின்றது. ஆனால், இந்த நியாயமானது நாம் தன்னிச்சையாக செய்தாலே தவிர, எவ்வாறு 'நிச்சயமற்ற தன்மையை' நிச்சயமான ஒரு கழிவு வீதத்துக்கு மாற்ற முடியும் என்பதைக் கூறுவதில்லை. மேலும், இந்த நியாயம் கூட நடைமுறைக் கோட்பாட்டிலிருந்து வேறுபடுகின்றது. நடைமுறையில் அதே கழிவு வீதமானது அனைத்து கருத்திட்டங்கள் மற்றும் அனைத்து காசுப் பாய்ச்சல்களுக்குமாக (உட்பாய்ச்சல்கள் அதைப்போல் வெளிப்பாய்ச்சல்கள்) பிரயோகிக்கப்படுகின்றது. எங்கு நாம் மேற்கூறப்பட்ட வாதத்தின் நியாயத்தை ஏற்போமோ அங்கு நாம் வேறுபட்ட கருத்திட்டத்துக்கு வேறுபட்ட வீதங்களையும், காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கு (அவற்றின் நிச்சயமற்ற தன்மைக்கேற்ப) வேறுபட்ட வீதங்களைப் பிரயோகிக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் இந்த நியாயம் பின்பற்றப்படுவதில்லை.

இன்னும் பதிலளிக்கப்பட வேண்டிய ஒரு கேள்வி உள்ளது. நாம் எவ்வாறு வேறுபட்ட வாழ்க்கை வட்டங்களைக் கொண்ட இரு வேறு கருத்திட்டங்களிடையே தீர்மானம் மேற்கொள்வது? ஓர் எளிமையான பதில், மூலதனத்தின் மீதான சராசரி வருவாய் வீதத்தைக் (ARR) கொண்டேயாகும். ஆனால், உயர் வருமானத்துடன் கூடிய ஒரு கருத்திட்டத்தில் உற்பத்தி நடைபெறும் காலமானது குறைந்த வருமானத்துடன் கூடிய ஒரு கருத்திட்டத்தின் உற்பத்தி நடைபெறும் காலத்தை விட நீளமானதாயின் என்னவாகும்? இதற்கான பதில் அன்றாட நிகழ்ச்சிகளைச் சார்ந்துள்ளது. அதாவது, சாதாரண வாழ்விலும் குறுகிய காலத்தில் சொற்ப

இலாபம் உழைப்பதை விட உயர் வருமானத்துக்காக அதிக காலத்தை செலவிட மக்கள் தயாராக இருப்பர். றொபின்ஸன் குரூஸோ கூட ஓர் உயர் வருவாய்க்காக ஒரு நீண்ட உற்பத்தி நடைபெறும் காலத்தை ஏற்க வேண்டியிருந்தார். எஞ்சியிருக்கும் கேள்வியானது ஒரு வியாபாரி உற்பத்தி நடைபெறும் காலத்தில் ஒரு வருடத்தினுடைய அதிகரிப்பை ஏற்பதற்கு வருவாய் வீதம் எவ்வளவால் அதிகரிக்கப்பட வேண்டியதாயிருக்கும்?

உதாரணமாக, ஒருவேளை, கருத்திட்டம் Aயில் வருவாய் வீதம் 15 ஆகவும் உற்பத்தி நடைபெறும் காலம் 4 ஆகவும் மற்றும் கருத்திட்டம் B யில் வருவாய் வீதம் 10ஆகவும் ஆனால், உற்பத்தி நடைபெறும் காலம் 3 ஆகவும் இருக்கின்றது. வியாபாரி வருவாய் வீதத்தில் ஒரு 5 வீதத்தை அதிகரிப்பதற்காக அடுத்த ஒரு வருடத் தினுடைய உற்பத்தி நடைபெறும் காலத்தை ஏற்க வேண்டுமா? நாம் பின்வரும் முறையில் இக்கேள்வியை அணுக முடியும். ஒருவேளை, அவர் கருத்திட்டம் Aயினை தெரிவு செய்வாராயின் அவர் எதனை இழந்திருப்பார்? அவர் கருத்திட்டம் Bயின் மூலம் 3 வருடத்தின் பின் பெற்றிருக்க முடியுமான 10 வீதத்தையும் இழந்திருப்பார். ஆனால், நீண்டகாலத்தில் கருத்திட்ட ஆயுட்காலத் துக்கு பின் பெறும் ஓர் உயர் வருவாய் (உதாரணம்: 15 வீதம்) வீதத்தால் நட்டத்தை ஈடுசெய்திருப்பார். இதனால், குறுங்கால உற்பத்தி நடைபெறும் காலத்தின் மீதான வருவாய் வீதமானது, நீண்டகால உற்பத்தி நடைபெறும் காலத்தின் மீதான வருவாய் வீதத்தை விட குறைவாகவே எஞ்சியிருக்கும் வரை அவர் நீண்ட கால உற்பத்தி நடைபெறும் கருத்திட்டங்களையே தெரிவு செய்வார்.

இது மேலும் விளக்குவது யாதெனில், உண்மையில், ஒரு கருத்திட்டத்தின் மீது எதிர்ப்பார்க்கப்படும் சராசரி இலாபமானது அதன் வாழ்க்கை வட்டத்தில் பெறப்படுவதாக இருக்குமேயன்றி, உற்பத்தி நடைபெறும் காலம் அல்லது காசுப் பாய்ச்சலின் காலத் தில் பெறுவதாக இருக்காது. இவ்விரு கருத்திட்டங்கள் மீதான சராசரி வருவாய் வீதமானது (ARR) எப்போது காசுப் பாய்ச்சலின்

காலங்கள் தொடர்பான கேள்விக்கு சமனாக அமைகின்றதோ அப்போதே இது நடைபெறும். அத்தகைய ஒரு நிலைமையில், ஒரு பகுத்தறிவான மனிதன் விரைவாக உயர் காசுப் பாய்ச்சலை அதன் ஆயுட்காலத்திற்குள் தருகின்ற ஒரு கருத்திட்டத்தையே விரும்புவார்.

***இணைப்பு: 3***

## ஸகாத் விதியாகும் பொருட்களின் நிஸாபும் அது வழங்கப்பட வேண்டிய விகிதமும்

| **ஸகாத் விதியான பொருட்களின் நிஸாப்** | **ஸகாத்தாக வழங்க வேண்டிய விகிதம்** |
|---|---|
| ***கால்நடை:*** | |
| ஆடு - ஆரம்ப நிஸாப் 40 | 2 வயதுள்ள 1 பெண் ஆடு |
| 121 ஆடுகளுக்கு | 2 வயதுள்ள 2 பெண் ஆடு |
| 201 ஆடுகளுக்கு | 2 வயதுள்ள 3 பெண் ஆடு |
| 400 ஆடுகளுக்கு | 2 வயதுள்ள 4 பெண் ஆடு |
| இதற்கும் மேற்படின் 100 ஆடுகளுக்கு | 2 வயதுள்ள 1 பெண் ஆடு என வழங்க வேண்டும் |
| மாடு ஆரம்ப நிஸாப் 30 | ஒரு வயதுள்ள ஒரு காளை மாடு |
| 40 மாடுகளுக்கு | 2 வயதுள்ள ஒரு பசு மாடு |
| இதற்கு மேற்படின் இவ்விரு இலக்கங்களினதும் தனித் தனி பெருக்கங்களுக்கோ அல்லது கூட்டுத்தொகைகளின் பெருக்கங்களுக்கோ ஸகாத் கணிக்கப்படும். | |
| ஒட்டகம் - ஆரம்ப நிஸாப் 05 | ஒரு ஆடு |
| 200 ஒட்டகங்கள் | 3 வயதுள்ள ஒட்டகம் நான்கு |

| | |
|---|---|
| ***தானியம்:***<br>(பிரதான உணவுப் பொருளாக இருப்பதோடு, உற்பத்தி செய் யப்பட்டதாகவும் சேமித்து வைக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.)<br>உமி நீக்கிய தானியம் - ஆரம்ப நிஸாப் 5 வஸ்குகள் (686.5 கிலோ கிராம்)<br>உமியுடன் சேமிக்கப்படும் தானியம் - ஆரம்ப நிஸாப் 10 வஸ்குகள் (1379 கிலோ கிராம்)<br>மழையை நம்பியதாயின்<br>பாசனச் செலவுடனாயின் | 10 / 100 விகிதம்<br>05 / 100 விகிதம் |
| ***பழவகை:***<br>(நன்கு உலர்ந்த பேரீச்சை, திராட்சை)<br>நிஸாபும் விகிதமும் தானியத்துக்குரியதே | |
| ***கனிப்பொருள்:***<br>தங்கம் - ஆரம்ப நிஸாப் 20 மிஸ்கால் (85 கிராம்)<br>வெள்ளி - ஆரம்ப நிஸாப் 200 திர்ஹம் (595 கிராம்) | 2.5 / 100 விகிதம்<br>2.5 / 100 விகிதம் |

| | |
|---|---|
| சுரங்கத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்படும் தங்கம், வெள்ளி நிஸாபை அடைந்திருப்பின் உடனடியாக ஸகாத் வழங்கப்பட வேண்டும். | 2.5 / 100 |
| புதையலிலிருந்து தங்கம், வெள்ளி பெறப்படின் உடனடியாக வழங்கப்பட வேண்டும். | 20 / 100 |
| ***பணம் மற்றும் வர்த்தகப் பொருட்கள்:*** ஆரம்ப நிஸாப் தங்கத்தின் அல்லது வெள்ளியின் நிஸாப் | 2.5 / 100 |

## அடிக்குறிப்புகள்

1. இலாப-நட்ட அடிப்படையில் மூலதனத்தையுடையவரும் உழைப்பாளியும் இணைந்து செயற்படும் பங்குடமை.
2. மூலதனத்தையுடையோரும் உழைப்பு மற்றும் முயற்சியாண்மையை உடையோரும் பரஸ்பரம் இணைந்து செயற்படும் கூட்டுப் பங்காண்மை; இங்கு நட்டம் நிதியாளரால் மட்டும் ஏற்கப்படும்.
3. இவ்விகிதம் தங்கம், வெள்ளி, பணம் மற்றும் வர்த்தகப்பொருள் என்பவற்றுக்காகும். கால்நடை, பழவகை, தானியம் என்பவற்றின் ஸகாத் விகிதம் வித்தியாசப்படும். அவை இணைப்பு மூன்றில் தரப்பட்டுள்ளன.
4. பிறரின் முயற்சி அல்லது உழைப்பின் மூலம் நலன் பெறுவோர்: வேறு யாரோ செலுத்தும் வரியில் அதிக பயனை அடைவோரும் இதே விதத்தில் கருதப்படுவர்.

# உசாத்துணைகள்

## இஸ்லாமிய பொருளியலின் தன்மை

ARIFF, M., “Towards a Definition of Islamic Economics: Some Scientific Considerations”, *JRIE*, Jeddah, (2:2), Winter 1985, pp. 87-103.

………, “ The Islamisation of Knowledge and Some Methodological Issues in Paradigm-Building”, *AJISS*, Washington, (4:1), September 1987, pp. 51-71.

CHOUDHARY, M.A., “Policy-Theoretical Foundations of Ethico-Economics”, *Humanomics,* Cape Breton, (IV:3-4), 1988, pp. 1-7.

..........., “Towards a Definition of Islamic Economic Theory and Development”, *Contemporary Review,* London, August, 1981, pp. 76-82.

FARUQI, I. RAJI, AL-, “Islamising the Social Sciences”, *al-Nahda, Malaysia,* (2:2), 1982.

KHAN, TARIQULLAH, *Islamic Economics: A Bibliography,* Jeddah: IRTI, 1984, pp. 156.

MANNAN, M.A., *Why is Islamic Economics Important? Seven Reasons for Believing,* Jeddah: ICRIE, 1982, pp. 26.

NIENHAUS, V., “Islamic Economics – Policy between Pragmatism and Utopia”, *Economics,* Tubingen, (25), 1982, pp. 80-100.

………., “Restatement of Normative Economics: Western Approaches and Islamic Perspective”, *Humonomics,* Cape Breton, (IV:3-4), 1988, pp. 27-65.

………., *Literature on Islamic Economics in English and German,* Koln: Al-Kitab Verlag, 1982, pp.150.

……….., “Monetary, Social and International Economics: Some Thoughts on the Islamic View”, *Economics,* Tubingen, (28), 1983, pp. 71-91.

WEISS, DIETER, “Towards as Islamic Economy”, *Economics, Tubingen,* (33), 1986, pp. 21-37.

## நுண்பாக மற்றும் பேரினப் பொருளியல்

ANWAR, M., *Modelling Interest-Free Economy,* Herndon, VA: International Institute of Islamic Thought, 1987, pp. 120.

ARIFF, M., "Towards Establishing the Microfoundations of Islamic Economics: The Basis of the Basics", *The Islamic Quarterly,* London, (28:2), 1984, pp. 61-72.

ASHKER, AHMAD A., AL-, *On the Islamic Theory of Consumer Behavior: An Empirical Study in a Non-Islamic Country,* Durham: Centre for Middle Eastern and Islamic Studies, 1985, pp. 18.

CHOUDHURY, M.A., "The Micro-Economic Foundations of Islamic Economics: A Study in Social Economics", *AJISS,* Washington, (3:2), December 1986, pp. 231-245.

HASAN, ZUBAIR, "Theory of Profit: the Islamic Viewpoint", *JRIE,* Jeddah, (1:1), 1983, pp. 1-16.

………., *Macro Consumption Function in an Islamic Framework, JRIE,* Jeddah, (2:2), Winter 1985, pp. 79-81.

JARHI, M.ALI, AL-, "Towards an Islamic Macro Model of Distribution", *JRIE,* Jeddah, (2:2), Winter 1985, pp. 1-30.

KHAN, M. AKRAM, "Islamic Economics: The State of the Art" in *Challenge of Islamic Economics,* Lahore: All Pakistan Islamic Education Congress, 1986, pp. 31.

MANNAN, M.A., *Islamic Perspectives on Market Prices and Allocation,* Jeddah: International Centre for Research in Islamic Economics, 1982, pp. 30.

……….., *The Frontiers of Islamic Economics,* Kuala Lumpur, July 1984, pp. 31.

NIENHAUS, V., "Epistemology, Methodology and Economic Policy: Some Thoughts on Mainstream", *Humanomics,* Cape Breton, (1:2), 1985, pp. 10-38.

### இஸ்லாத்தின் ஆரம்ப கால பொருளியல் வரலாறு

HASAN-UZ-ZAMAN, S.M., The Economic Functions of Early Islamic State, Karachi: International Islamic Publishers. pp. 407.

HERSHLAG, Z.Y., Introduction to the Modern Economic History of the Middle East, Leiden: E.J.Brill, 1980, pp. 431.

UDOVITCH, A.L., "The Constitution of the Traditional Islamic Marketplace" in S.N.Eisensradt, (ed.), Patterns of Modernity, London: Frances Pinter, 1987, pp. 150-171.

### இஸ்லாத்தின் பொருளியல் முறைமை

AWAN, AKHTAR A., Equality, Efficiency and Property Ownership in the Islamic Economic System, London: University Press of America, 1983, pp. 111.

GHAUSSY, A., GHANIE, "Attempt at Defining an Islamic Economic Order", Economics, Tubingem, (37), 1988, pp. 9-39.

………., "The Islamic Economic Ethic and Economics", Economics, Tubingen, (31), 1985, pp. 71-96.

ISHAQUE, K.M., Islamic Principles of Economic Management, Karachi: Economic Research Unit, 1982, pp. 57.

KURAN, TIMUR, "The Economic System in Contemporary Islamic Thought: Interpretation and Assessment", IJMES, 1986, pp. 135-163.

MANNAN, M.A., The Making of Islamic Economic Society: Islamic Dimensions in Economic Analysis, Cairo: International Association of Islam Banks, 1984, pp. 535.

NAQVI, S.N.H., Individual Freedom, Social Welfare and Islamic Economic Order, Islamabad: Pakistan Institute of Development Economics, 1981, pp. 40.

NASR, S.V.R., "Whither Islamic Economics?" Islamic Quarterly, London, (4), 1986, pp. 211-20.

RA'UF, M.A., A Muslim's Reflections on Democratic Capitalism, Washington D.C.: American Enterprise Institute for Public Policy Research, 1984, pp. 75.

SARDAR, Z., Islamic Futures: The Shape of Ideas to Come, London: Mansell Publishing, 1985, pp. 360.

TALEGHANI, S.M., Society and Economics in Islam, tr., R. Campbell, Berkeley: Mizan Press, 1982, pp. 230.

ZAIM, SABAHADDIN, "Islamic Economics as a System based on Human Values" in M. Ali, Islamic Banks and Strategies for Economic Cooperation, London: New Century Publishers, 1982, pp. 15-25.

### பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி

CHISTI, SALIM, "Relative Stability of Interest-free Economy", JRIE, Jeddah, (3:1) 1985, pp. 3-12.

HASAN-UZ-ZAMAN, S.M., "Indexation – An Islamic Evaluation", JRIE, Jeddah, (2:2), Winter 1985, pp. 31-54.

KHAN, M. AKRAM, "Economic Growth and Development in Islam", The Search, (6), Winter 1985, pp. 142-166.

………, "Resource Allocation in Islamic Economy", Islamic Quarterly, London, (29:4), 1985, pp. 240-250.

MIRAKHOR, A., and ZAIDI, IQBAL, Stabilization and Growth in an Open Islamic Economy (typescript), 1987, pp. 36.

MANNAN, M.A., Allocative Efficiency, Decision and Welfare Criteria in an Interest-free Islamic Economy, London: The Muslim Institute for Research and Planning, 1980, pp. 32.

SIDDIQI, M.N., An Islamic Approach to Economic Development, London: The Muslim Institute for Research and Planning, June 1979, pp. 8.

ZARQA, M. ANAS, "Capital Allocation, Efficiency and Growth in an Interest-free Islamic Economy", Journal of Economics and Administration, Jeddah, (16), Nov 1982, pp. 43-55.

### பணவியல் மற்றும் அரச நிதி

ARIFF, M. (ed), Monetary and Fiscal Economics of Islam, Jeddah, ICRIE, 1982, pp. 412.

………., "Islamic Banking: A Southeast Asian Perspective" in Islamic Banking in Southeast Asia, Singapore: ISEAS, 1988, pp. 194-212.

AHMED, SHAIKH MAHMUD, Towards Interest-free Banking, Lahore: Institute of Islamic Culture, 1989, pp. 147.

AHMAD, ZIAUDDIN, IQBAL, MUNAWAR, and KHAN, M.F., Money and Banking in Islam, Islamabad: Institute of Policy Studies, 1983, pp. 300.

………., "Profitability of Islamic PLS Banks Comparing with Interest Banks", JRIE, Jeddah, (1:1), Summer 1983, pp. 66-68.

………., Some Misgivings about Islamic Interest-free Banking, Khartoum: Faysal Islamic Bank, 1985, pp. 23.

………..., Prohibition of Interest in Islam: Its Economic Implications and modes of Interest-free Banking and Finance, Islamabad: The Third Pak-French Colloquium, 1982, pp. 10-11.

…………, Framework of Islamic Banking, JIBF, Karachi, (1:2), Spring 1984, pp. 45-50.

ALI, MUAZZAM, Islamic Banks and Strategies of Economic Cooperation, London: New Century Publishers, 1982, pp. 120.

.......…...., Banking Structure and Sources of Finance in the Middle East, London: The Financial Times Business Publishing, 1983, pp. 220.

CHAPRA,M.U., Towards a Just Monetary System, Leicester: The Islamic Foundation, 1985, pp. 292.

…………, "The Prohibition of Riba in Islam: An Evaluation of Some objections", The American Journal of Islamic Studies, Washington, (2:1), July 1985, pp. 23-40.

.............., Elimination of Interest from the Banking System in Pakistan, Karachi: State Bank of Pakistan, 1985.

HASAN, IBNUL, In Search of an Islamic Economic Model, London: New Century Publishers, 1983, pp. 106.

HOMOUD, S.H., Islamic Banking, London: Arabian Information, 1985, pp. 300.

KAFF, S.H.A.R., AL-, Organization of the Credit Operations under the Islamic Banking System, Karachi: Islamic Research Academy, 1985, pp. 70.

KHAN, M. AKRAM, "Islamic Banking in Pakistan", International Journal of Islamic and Arabic Studies, Indiana, (2:2), 1985, pp. 21-34.

KHAN, WAQAR, MASOOD, Towards an Interest-free Islamic Economic System, Leicester: The Islamic Foundation, 1985, pp. 126.

MEENAI, S.A., "The Problem of Riba" in Money and Banking in Pakistan, Karachi: Oxford University Press, 1984, pp. 279-283.

NAQVI, S.N.H., On Replacing the Institution of Interest in a Dynamic Islamic Economy, Islamabad: Pakistan Institute of Development Economics, 1981, pp. 45.

NIENHAUS, V., "Islamic Economics, Finance and Banking – Theory and Practice" in Islamic Banking and Finance, London: Butterworth, 1986, pp. 1-17.

..........., "Principles, Problems and Perspective of Islamic Banking", Intereconomics, September 1985, pp. 233-238.

PRESLEY, J.R., Directory of Islamic Financial Institutions, London: Croom-Helm, 1988, pp. 360.

SALEH, NABIL A., Unlawful Gain and Legitimate Profit in Islamic Law, London: Cambridge University Press, 1986, pp. 130.

SIDDIQI, M.N., "Monetary Theory of Islamic Economics" in Issues in Islamic Banking, Leicester: The Islamic Foundation, 1983, pp. 125-132.

ZAIDI, N.A., "Islamic Banking: Perspective and Problems", JIBF, Karachi, (1:3), July 1984, pp. 55-64.

ZAIDI, N.A., "An Alternative Model of Islamic Banking", JIBF, Karachi, (1:4), October 1984, pp. 27-38.

### இஸ்லாமிய பங்குப் பரிவர்த்தனை

CHAPRA, M.U., "The Role of the Stock Exchange in an Islamic Economy", JRIE, Jeddah, (3:1), 1985, pp. 75-82.

KHAN, M. AKRAM, "Commodity Exchange and Stock Exchange in Islamic Economy", AJISS, Herndon, (5:1), 1988, pp. 91-114.

METAWALLY, M.M., "The Role of the Stock Exchange in an Islamic Economy", JRIE, Jeddah, (2:1), Summer 1984, pp. 21-30.

QURESHI, D.M., "The Role of Stock Exchange in Islamic Financial System", JIBF, Karachi, (5:3), July 1988, pp. 9-19.

**முதலீட்டின் மதிப்பீடு**

KAFF, S.H.A.R., AL-, Does Islam Assign any Value/Weight to Time Factor in Economic and Financial Transactions?, Karachi: Islamic Research Academy, 1986, pp. 116.

………., "Investment Leading to Ownership", Universal Message, Karachi, (4:10), march 1983, pp. 10-20.

………..., "Islamization of Credit Card Business", Universal Message, Karachi, (7:4), September 1985, pp. 15-27.

**ஸகாத்**

ABU-SAUD, M., Contemporary Zakat, Cincinnati: Ohio, 1988, pp. 208.

BASAR, HASMET, Management and Development of Awqaf Properties, Jeddah: Islamic Research and Training Institute, 1987, pp. 161.

HASAN, NAJMUL, Social Security of Islam with Special Reference to Zakah, Jeddah: ICRIE, 1984, pp. 57.

IMTIAZI, I.A., MANNAN, M.A. NIAZ, and M.A. DERIA, A.H., Management of Zakah in Modern Muslim Society, Jeddah: IRTI, 1989, pp. 236.

IQBAL, MUNAWAR and KHAN, M.F., Fiscal Policy and Resource Allocation in Islam, Islamabad: Institute of Policy Studies, 1983, pp. 385.

ISHAQUE, K.M., "Islamic System of Taxation", Pakistan & Gulf Economist, Karachi, (4:7), April 1985, pp. 23-26.

OSMAN, M. FATHI, The Juristic Rules of Conquered Land and Land Taxation: Fay' and Kharaj. Their Origins and Development in Medieval Islam. Unpublished., 1976, pp. 626.

SIDDIQI, M.N., Insurance in an Islamic Economy, Leicester: The Islamic Foundation, 1985.

TABATABAI, HOSSEIN M., Kharaj in Islamic Law, London: Anchor Press, 1983, pp. 276.

### பொருளாதார ஒருங்கிணைப்பு


ABDELMONEIM, M., "UNIDO Activities in Developing Countries" in Muazzam Ali (ed.), Islamic Banks and Strategies of Economic Cooperation, London: New Century Publishers, 1982, pp. 32-36.

AHMAD, ZIAUDDIN, Role of Islamic Banks in the Economic Integration of the Muslim World. Unpublished., October 1986, pp. 15.

ATAS, S. FARID, AL-, "An Islamic Common Market and Economic Development", Islamic Culture, Hyderabad, (LXI:1), January 1987, pp. 28-38.

AWAN, K.R., Prospects for Cooperation through Trade Among OIC Member Countries, Jeddah: IRTI, 1985.

CARIKCI, EMIN, Comments on V. Nienhaus's Economic Development through Regional Cooperation: A CDU of Islamic Countries. Unpublished, July 1986, pp. 15.

CHOUDHURY, M.A., "Resource Endowment and Allocation in Islamic Countries for Economic Cooperation", Orient: German Journal for Policies & Economics of Middle East, Opladen, (29:4), 1988, pp. 32-36.

CINDORUK, S., "International Economic Integration and Prospects for an Islamic Common Market", JIBF, Karachi, (5:1), January 1988, pp. 113-118.

............., "Financial Cooperation among Islamic Countries", Cooperation, (III/2:10), January 1982, pp. 9-27.

GAYE, A. KARIM, "The Muslim World and the International Economic Perspective" in The Muslim World and the Future Economic Order, London: Islamic Council of Europe, 1979, pp. 6-12.

HUQ, ATAUL, Economic Integration as a Strategy of Development of the Muslim Countries under the Islamic Framework, (typescript), Nigeria: Sokoto University, February 1985, pp. 38.

KEMAL, A.R., Comments on V. Nienhaus's 'Economic Development through Regional Cooperation: A CDU of Islamic Countries'. (typescript), July 1986, pp. 6.

KHAN, TUFAIL AHMAD, "Economic Integration of Islamic States", Pakistan Horizon, Karachi, (1:1), 1983, pp. 29-43.

MATIN, A., "Industrial Cooperation Among Muslim States", Science and Technology in the Muslim World, Islamabad, (1:1), January-March 1983, pp. 1-19.

MOINUDDIN, HASAN, The Charter of the Islamic Conference and Legal Framework of Economic Cooperation among its Member States, Oxford: Claredon Press, 1987, pp. 322.

NASSER, EL-GHARIB, "The Role of Islamic Banks for Initiating an Islamic Common Market", JIBF, Karachi, (5:1), January 1988, pp. 32.

NIENHAUS, V., Economic Development through Regional Cooperation: A Customs Drawback Union of Islamic Countries, Islamabad: I.I.I.E., July 1986.

.............., "Inter-Islamic Economic Cooperation and Integration" in Erol Manisali (ed.), Outward Oriented Policies in NIC, Istanbul: Granti Bankasi, 1986, pp. 51-65.

…………, "An Islamic Common Market: Problems and Strategies of Economic Cooperation among Islamic Countries", Economics, Tubingen, (35), 1987, pp. 21-41.

…………, Economic Cooperation and Integration among Islamic Countries: International Framework and Economic Problems, Jeddah: IRTI, 1987, pp. 163.

SHALABY, I., "The Islamic Common Market", JIBF, Karachi, (5:1), January 1983, pp. 83-111.

### இலாப நட்டப் பகிர்வு

ASHKER, A.A.F., AL-, The Islamic Business Enterprise, London: Croom-Helm, 1987, pp. 242.

HASAN, ZUBAIR, "Determination of Profit and Loss Sharing Ratios in Interest-free Business Finance", JRIE, Jeddah, (3:1), 1985, pp. 13-29.

KARSTEN, INGO, "Islam and Financial Intermediation", IMF Staff Papers, Washington, March 1982, pp. 108-142.

KHAN, S. RAFI, Profit and Loss Sharing, Karachi: Oxford University Press, 1987, pp. 180.

NIENHAUS, V., "Islamic Banking: Micro-economic Instruments and Macro-economic Implications", Arab Banker, London, (6), November-December 1986, pp. 5-7, 29-39.

QURESHI, D.M., "Mudaraba and its Modern Applications", JIBF, Karachi, (2:1), January 1985, pp. 7-24.

SIDDIQI, M.N., Partnership and Profit-Sharing in Islamic Law, Leicester: The Islamic Foundation, 1985, pp. 110.

ZAMAN, M. RAQUIBUZ, "Business Organizations and the Instruments for Raising Financial Capital for a Modern Islamic Economy", Islamic Culture, Hyderabad, (LX:3), 1986, pp. 1-20.

### பொறுப்புக் கூறும் தன்மை

BADAWI, S.T., "Accounting Policies and Procedures" in Islamic Banking and Finance, London: Butterworth, 1986, pp. 86-100.

IBN TAYMIYAH, Public Duties in Islam, tr. M. Holland, Leicester: The Islamic Foundation, 1982, pp. 160.

KHAN, M. AKRAM, "Role of the Auditor in an Islamic Economy", JRIE, Jeddah, (3:1), 1985, pp. 31-42.

SARDAR, Z., Science, Technology and Development in the Muslim World, London: Croom-Helm, 1977, pp. 215.

TOMKINS, C., ABDUL KARIM, R.A., "The Shari'ah and its Implications for Islamic Financial Analysis", AJISS, Washington, (4:1), 1987, pp. 101-115.

WILSON, R., Islamic Business (Special Report No. 178), London: The Economist Intelligence Unit, 1984, pp. 75.

சமகால பொருளாதார முறைகள் மனித இனத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தக்க தீர்வுகள் காண்பதில் தோல்வியையே தழுவியுள்ளன. சோஷியலிஸ சித்தாந்தம் கண்டு கொண்டுள்ள தோல்வி துலாம்பரமாகத் தெரிகின்றது. முதலாளித்துவச் சிந்தனைகள் விமோசனம் எதனையும் தரக்கூடுமெனத் தெரியவில்லை. மிகவும் சிறிய ஒரு தொகையினர் அளவிடற்கரிய உயர் வாழ்க்கைத் தரத்தையும் வசதிகளையும் கொண்டிருக்க, மிகப் பெரும்பான்மையினர் வறுமையின் கோரப்பிடியிலிருந்து விடுபட்டுக்கொள்ள இயலாதோராகவே உள்ளனர். வேலை வாய்ப்பின்மை, பண வீக்கம், செல்வச் செழிப்பின் மத்தியிலான வறுமை, முறையிழந்த செல்வப் பங்கீடு, மாசடைந்த சூழல் முதலான அனைத்தும் மானுடத்தின் நிகழ்காலத்தை அவஸ்தைக்குள்ளாக்கி வைத்துள்ளன. எதிர்காலமோ அச்சுறுத்துவதாக அமைந்துள்ளது.

இஸ்லாமிய பொருளாதார முறைமையே மானுடருக்கான பொருளாதார விடிவை அளிக்கக்கூடிய வலுவானதொரு திட்டம் என வாதிடும் இந்த நூல், உலகின்கண் வாழும் அனைவருக்கும் சமத்துவமான, சுதந்திரமான, நீதியான ஒரு வாழ்வை அமைத்துக் கொடுப்பதில் இது ஆற்றக்கூடிய பங்கினைத் தெளிவுறுத்துவதாக அமைந்துள்ளது.

*முஹம்மத் அக்ரம் கான்,*

M.Com (Punjab) M.Sc (Aston) கனடாவின் Comprehensive Auditing Foundation உறுப்பினர். பாகிஸ்தானின் கணக்காய்வாளர் திணைக்களத்தின் பயிற்சித் துறைப் பொறுப்பாளர். பிரபல சர்வதேச சஞ்சிகைகள் பல இவரது ஆக்கங்களைப் பிரசுரித்துள்ளன. அவர் வெளியிட்டுள்ள நூல்கள் சில:

Issues in Islamic Economics; Economic Teachings of Prophet Muhammad; Glossary of Islamic Economics; Annotated Bibliography of Islamic Economics; Economics of The Quran: Economic Teachings of Surah Al-Maidah and Surah Al-Nahl; Islamic Economics and Finance: A Glossary.




Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

ISBN : 978 955 8398 54 8